# பல
# சாத்திரம்



இந்திய மருத்துவம் - ஓமியோபதித்துறை
சென்னை - 600 106.

தமிழ் மருத்துவ நூல் வரிசை – 20

# பல சாத்திரம்

**(ஓலைச்சுவடியினின்று பதிப்பிக்கப்பட்ட நூல்)**

## வெளியீடு

சித்த மருத்துவ நூல் வெளியீட்டுப் பிரிவு
இந்திய மருத்துவம் – ஓமியோபதித் துறை
சென்னை – 600 106
–2012–

# பதிப்புத் தகவல்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **பல சாத்திரம்**<br>(தமிழ் மருத்துவ நூல்வரிசை – 20) |
| பதிப்பு | : | சித்தமருத்துவ நூல் வெளியீட்டுப் பிரிவு<br>இந்திய மருத்துவம்–ஓமியோபதி துறை |
| பதிப்புரிமை | : | தமிழ் நாட்டரசு |
| பொருள் | : | சித்த மருத்துவம் |
| பதிப்பாண்டு | : | 2010, முதற்பதிப்பு |
| படிகள் | : | 1000 |
| பக்கங்கள் | : | x + 182 = 192 |
| அச்சுத்தாள் | : | 60 GSM மேப்லித்தோ |
| தாள் அளவு | : | 1 × 8 டெம்மி |
| அச்சுப்புள்ளி | : | 11 புள்ளி |
| விலை | : | |
| கட்டமைப்பு | : | சாதாரண அட்டைக்கட்டு |
| ஒளி அச்சு | : | சென்னை மைக்ரோ பிரின்ட் / 2374 0099 |

| | | |
|---|---|---|
| அச்சிட்டோர் | : | சென்னை மைக்ரோ பிரின்ட் பிரைவேட் லிட்.,<br>நெல்சன் மாணிக்கம் சாலை, அமைந்தகரை,<br>சென்னை – 29. |

## இந்திய மருத்துவம் – ஓமியோபதித் துறை
## சென்னை – 600 106.

### சித்த மருத்துவ நூல் வெளியீட்டுப் பிரிவு

### நூலாக்கப் பணிக்குழு

ஆய்வு மருத்துவ அலுவலர்
**மரு. ச. கௌரி,** பி.ஐ.எம்.,

பதிப்பாசிரியர்கள்
திரு.த. அழகப்பராசு, M.A.,M.A., M.L.I.S., M.phil., B.Ed.
சிறப்பு அலுவலர் – மொழிபெயர்ப்பு (பொ)

திருமதி.செ.இரா. பிரசன்னா, M.A., M.phil., B.Ed.
தமிழ்ப்புலவர்

**சுவடி நகலெடுப்போர்**

திரு.தி. சுபாஷ் சந்திரபோஸ்
திரு.வெ. சாரங்கபாணி
திருமதி.த. லெட்சுமி
திருமதி.நா. பாக்கியசுந்தரி, B.A..

# பதிப்புரை

ஓலைச்சுவடிகளினின்றும் வெளியிடப்படும் நூல் வரிசையில் பலசாத்திரம் எனும் இந்நூல் இருபதாவது நூலாகும். நமது இந்திய மருத்துவ இயக்ககச் சுவடித் தொகுப்பிலிருந்து முதன் முதலாக அச்சேறி வெளிவந்துள்ள இந்நூல் இந்திய மருத்துவ சுவடித் தொகுப்பில் AD 22 என்ற எண்ணைக் கொண்டதாகும்

**பலசாத்திரம்** என்ற பெயரிற்கேற்ப செந்தூரம், தைலம், சூரணம், எண்ணெய், கிருதம், லேகியம், பதங்கம், குழம்பு, வடகம், மெழுகு, பற்பம், களிம்பு, குளிகை, ரசாயனம், திராவகம், மருந்து, புகை போன்ற பல்வேறு மருந்துகளின் வகைகளையும் தெரிவிக்கிறது.

பாடல்கள் அந்தாதி முறையில் அமைக்கப்பட்டுள்ளன. சில இடங்களில் அந்தாதி முறைகள் முழுமை பெறவில்லை. எனவே அந்த இடங்களில் பாடல்கள் சில விடுபட்டுள்ளன என அறிய முடிகின்றது.

சுவடியில் இருந்த பாடல்கள் எல்லாவற்றையும் நாம் அச்சேற்ற முடியவில்லை. சில பாடல்கள் மருந்து தலைப்புகளுடன் தொடர்பின்றிக் காணப்பட்டன. இன்னும் சில பாடல்கள் இடையிடையே சிதைந்து முழுமையான பொருள் கொள்ள இயலாதவாறு இருந்தன. சில பாடல்களில் அந்தக் குறிப்பிட்ட மருந்ததை எந்தெந்த நோய்க்கெல்லாம் எம்முறையில் வழங்க வேண்டும் என்ற குறிப்பின்றி இருந்தன. இவ்வாறு அமையப்பெற்ற பாடல்களில் இயன்ற அளவு திருத்தம் செய்து பதிப்பித்துள்ளோம். சரிசெய்ய இயலாதவை நீக்கப்பட்டுள்ளன.

பாடல்களில் சில 4 அடிகளுக்கு மேல் நீண்டு 5 அடிகளுடன் காணப்படுகின்றன. இன்னும் சில 3 அடிகளுடனேயே முடிந்து விடுகின்றன. ஆனால் அவ்வகைப் பாடல்கள் அவற்றின் பொருள் கொண்டு பார்க்கும் போது முழுமை பெற்றுக் காணப்படுவதால் அந்த அளவிலேயே பதிப்பிக்கப்பட்டுள்ளன.

சில பாடல்களில் பயின்றுள்ள சொற்களை விளங்கிக் கொள்ள இயலவில்லை. சில சொற்களுக்கான பொருளை அறிய முடியவில்லை. அவற்றையும் சேர்த்தே பதிப்பித்துள்ளோம். அதைக் கண்ணுறும் அறிஞர்கள் உரிய திருத்தம் தந்தால் இனிவரும் பதிப்புகளில் அவற்றைச் சேர்த்து வெளியிடலாம் என்ற நோக்கத்தோடு அப்பாடல்களையும் இந்நூலில் இடம் பெறச் செய்து பதிப்பித்துள்ளோம். முழுமை பெறாத சில பாடல்கள் இருந்தாலும் ஓலைச் சுவடியில் இருந்தன அச்சேறியுள்ளது என்று மன அமைதி கொள்வோமாக!

**பதிப்பாசிரியர்**

# பொருளடக்கம்


| வ.எண் | பொருள் | ப.எண் |
|---|---|---|
| 1. | வங்காரச் சஞ்சீவிச் செந்தூரம் | 1 |
| 2. | காளமேக நாராயணச் செந்தூரம் | 3 |
| 3. | துத்த செந்தூரம் | 5 |
| 4. | கௌரி சிந்தாமணிச் செந்தூரம் | 6 |
| 5. | சூலைக்குக் கெந்தி தயிலம் | 12 |
| 6. | சலதாரை உருண்டை | 13 |
| 7. | கிரிச்சரத்துக்குச் சூரணம் | 14 |
| 8. | சன்னிக்கு எண்ணெய் | 15 |
| 9. | சன்னிக்குக் குடோரித் தயிலம் | 17 |
| 10. | புகை காட்ட | 18 |
| 11. | பொன்னாங்காணி கிருதம் | 20 |
| 12. | குன்மத்திற்குக் கொம்மட்டிக் காய் லேகியம் | 21 |
| 13. | பட்டை இரசாயனம் | 22 |
| 14. | பித்தவெட்டை, காந்தலுக்கு தேத்தான்விதை, நெய் | 24 |
| 15. | சிவதை சூரணம் | 28 |
| 16. | வில்வாதி லேகியம் | 30 |
| 17. | சுவாசக் குடோரிச் சூரணம் | 32 |
| 18. | அசுவ கெந்தாதிச் சூரணம் | 33 |
| 19. | பலாசுசூரணம் | 35 |
| 20. | இரசப் பதங்கம் | 37 |
| 21. | நீலகண்ட வாலைப் பதங்கம் | 40 |

22. குழம்பு ---------------------------------------- 42
23. கற்பூரச் சூரணம் ---------------------------------------- 45
24. இலேகியக் குழம்பு ---------------------------------------- 48
25. சாதிலிங்க செந்தூரம் ---------------------------------------- 50
26. பிரம்ம கண்டவலி ---------------------------------------- 53
27. இரசப் பதங்கம் ---------------------------------------- 53
28. மூதண்டக் கிருதம் ---------------------------------------- 55
29. கிரந்தி, சூலைக்குப்புகை ---------------------------------------- 57
30. பூரண லேகியம் ---------------------------------------- 58
31. சீனவல்லாதி ---------------------------------------- 61
32. அமிர்த கெந்தி குக்கில் வல்லாதி ---------------------------------------- 64
33. கெந்தக வல்லாதி ---------------------------------------- 69
34. சாரத்துலாதி சூரணம் ---------------------------------------- 72
35. அயனாதி வடகம் ---------------------------------------- 73
36. திரிலோக வடகம் ---------------------------------------- 75
37. நெல்லி முள்ளி லேகியம் ---------------------------------------- 77
38. சண்டமாருத மெழுகு ---------------------------------------- 79
39. சீனிச் சூரணம் ---------------------------------------- 81
40. இராசாதி மெழுகு ---------------------------------------- 83
41. இரச பற்பம் ---------------------------------------- 83
42. இரசக் களிம்பு ---------------------------------------- 86
43. வாலைரசக் குளிகை ---------------------------------------- 87
44. தாதுவிருத்திக்குக் குளிகை ---------------------------------------- 91
45. சாம்பிராணிப் பதங்கம் ---------------------------------------- 93
46. கபாடக் குளிகை ---------------------------------------- 95
47. கிரந்திக்கு இரசகற்பூரக் குளிகை ---------------------------------------- 97

48. மூலங்களுக்கு வாலைரச பற்பம் -------------------- 99
49. தேற்றான் விதை லேகியம் -------------------- 102
50. திப்பிலி ரசாயனம் -------------------- 104
51. தேற்றான் விதைச் சூரணம் -------------------- 105
52. இஞ்சிச் சூரணம் -------------------- 106
53. அயக்காந்தச் செந்தூரம் -------------------- 108
54. மண்டூரச் செந்தூரம் -------------------- 110
55. சிந்தாதி லேகியம் -------------------- 112
56. திரி திராட்ச சூரணம் -------------------- 115
57. அசுவகெந்தி சூரணம் -------------------- 116
58. கண்டாத்திரி சூரணம் -------------------- 117
59. தாளிசபத்திரி சூரணம் -------------------- 118
60. வல்லாரைச் சூரணம் -------------------- 120
51. வல்லாரைக் கிருதம் -------------------- 121
62. இலவண பற்பம் -------------------- 123
63. சர்வகிராணிக்குக் கபாடச் சூரணம் -------------------- 125
64. பலநோய் போக்கும் தேங்காய் லேகியம் -------------------- 126
65. குக்குடச் சூரணம் -------------------- 128
66. சேங்கொட்டை வல்லாதி -------------------- 131
67. சில்விஷங்களுக்கு அமுக்கிராச் சூரணம் -------------------- 133
68. கறியுப்புத் திராவகம் -------------------- 134
69. உலோகத் திராவகம் -------------------- 135
70. இலவணத் திராவகம் -------------------- 136
71. கெந்திரச மெழுகு -------------------- 140
72. மேகவகைகளுக்கு மருந்து -------------------- 147
73. மிளகு இலேகியம் -------------------- 148

| | | |
|---|---|---|
| 74. | வெள்ளுள்ளி இலேகியம் | 150 |
| 75. | கெந்தகத் தைலம் | 151 |
| 76. | மூலத்திற்கு லேகியம் | 153 |
| 77. | இலிங்கக் குழம்பு | 155 |
| 78. | வாய்வு புத்திரன் குளிகை | 156 |
| 79. | சுரராமபாண உருண்டை | 157 |
| 80. | சுரக்குளிகை | 159 |
| 81. | அரிதாரக் குளிகை | 161 |
| 82. | அரிதார வெள்ளை மாத்திரை | 164 |
| 83 | குடோரித் தைலம் | 165 |
| 84. | தாதுவிருத்திக்கு லேகியம் | 168 |
| 85. | விந்தாதி லேகியம் | 169 |
| 86. | மருந்தீட்டிற்கு மருந்து | 171 |
| 87. | பேதி மாத்திரை | 172 |
| 88. | கண்ணிற்கு மாத்திரை | 173 |
| 89. | நாடி பார்க்கும் முறை | 173 |
| 90. | கரப்பான் புண்ணிற்குத் தைலம் | 174 |

## கடவுள் வாழ்த்து

*பாங்குடன் கணேசன் பாதம்*
*பணிந்துமுக் குணங்க ளாக*
*வாகட சுவடி யெல்லா*
*வகைவகை தேர்ந்து பார்த்து*
*ஆகம விதியின் சூழ்த*
*லருந்திடு நோய்க ளெல்லா*
*போகவும் மருந்தைச் சொல்வேன்*
*புலத்தியா பொருந்தக் கேளும்.*

கணபதியின் பாதங்களைப் போற்றி மருத்துவச் சுவடிகளை ஆய்ந்து நோக்கினேன். விதியின் வசத்தால் மனிதர் நோய்க்குட் பட்டு துன்பம் கொள்வர். அதனை நீக்கும் மருந்துகள் கொண்ட இச்சுவடியைத் தேர்ந்தெடுத்து கொடுத்துள்ளேன். புலத்தியனே! கேட்பாயாக!

## வங்காரச் சஞ்சீவிச் செந்தூரம்

*முத்தான வங்காரச் சஞ்சீ விக்கி*
*முறைசொல்வேன் அரவுப்பொடி உருக்கு தாமிரம்*
*பித்தளைவெங் கலமுமத்திருப் பொடியுங் காந்தம்*
*சிலைதாரம் சூதலிங்கம் திப்பிலி வெண்காரம்*
*சித்தாகப் பதிமூன்று வகைநாற் கழஞ்சு*
*செய்கெந்தி யெட்டுடனே கல்வத் திட்டு*
*கத்தாழம் சோறுவிட்டு பனிரெண்டு சாமம்*
*காணடா அரைத்துவட்டு பிடித்து லர்த்தே* **(1)**

வங்காரச் சஞ்சீவி செய்முறையைச் சொல்வேன். கேட்டுணர்வாயாக. இரும்பு அரப்பொடி, எஃகு, தாமிரம், பித்தளை, வெண்கலம், ஊமத்த இலைப்பொடி (மத்து) காந்தம், மனோசிலை, அரிதாரம், இரசம், லிங்கம், திப்பிலி, வெண்காரம் ஆகிய பதின்மூன்று பொருட்களையும் வகைக்கு 20 கி. வீதமெடுத்து,

கெந்தியை **40** கி எடுத்துக் கற்றாழைச் சோறு விட்டு **36** மணி நேரம் அரைத்து அடைதட்டிக் கொள்ளவும்.

*உலர்த்தியபின் சட்டிக்குள் சேரப் போட்டு*
*ஊன்றிவிட்டு யதின்மேலே சோறு மிட்டு*
*பிலத்தசட்டி மேல்மூடி சீலை யேழு*
*பிசகாமல் மண்செய்து வாலு கத்தில்*
*புலத்தியனே முத்தீயும் மூவெட்டுச் சாமம்*
*பொலிவாக எரித்திறக்கி ஆற விட்டு*
*நலத்துடனே எடுத்துப்பின் சுத்தி செய்த*
*நாவிதிப் பிலிமூலம் நாற்க ழஞ்சு* **(2)**

உலர்த்தியெடுத்ததைச் சட்டிக்குள் போட்டு அதன் மேல் கற்றாழம் சோறு சேர்த்து சரியான மேல் சட்டி, மூடி ஏழு சீலைமண் செய்து அடுப்பேற்றி ஒரு விறகு, இரு விறகு, மூன்று விறகு கொண்டு, 72 மணி நேரம் தொடர்ந்து எரித்து இறக்கி ஆறவிட்டு எடுத்துக் கொள்ளவும். பின்னர் சுத்தி செய்த நாவி, திப்பிலிமூலம் இவை வகைக்கு **20** கி. வீதமெடுத்துக் கொள்ளவும்.

*கழஞ்சுடனே செந்தூரம் கல்வத் திட்டு*
*கட்டாக வெள்ளுள்ளித் தயிலத் தாட்டி*
*வளஞ்சரைத்து யுண்டைகுன்றி நிழலு லர்த்தி*
*மாத்திரையொன் றனுபானத் திட்டா யாகில்*
*இளஞ்சிவிடு சன்னிபதி மூன்று மெட்டும்*
*சேற்றுமமிருபது மூர்ச்சையிவை யெல்லாம் போமே*
**(3)**

இதனைச்செந்தூரமாக்கிக் கல்வத்திலிட்டு பூண்டுத் தைலத்தால் ஆட்டி **130** மி.கி. அளவாகச் சிறுசிறு உருண்டைகள் செய்து காய வைத்தெடுத்து உரிய அனுபானத்தில் சாப்பிட்டு வர பதின்மூன்றுவகைச் சன்னி நோய்களும் எட்டு வகை சேற்றுமமும், **20** வகை மூர்ச்சை நோய்களும் நீங்கி விடும் என்பதாம்.

## காளமேக நாராயணச் செந்தூரம்

*விந்தைதிகழ் குருமுனிவன் சொன்ன காள*
*மேகநாரா யணசெந் தூரம் செய்ய*
*கெந்தகமு மறுபதிடை யதுநேர் சூதம்*
*கெடியான சாதிலிங்கம் வராகன் மூவய்ந்*
*தந்தமுள்ள மால்தேவி வராக னெட்டு*
*ஆனமனோ சிலையுமிரண் டரைய தாகும்*
*பைந்தொடியே சுத்திபண்ணி யிறுத்துக் கொண்டு*
*பண்பாகக் கல்வத்துள் ளேற்று வாயே* **(4)**

குருமுனிவனாம் அகத்தியர் சொன்ன காளமேக நாராயணச் செந்தூரம் சொல்கிறார். கெந்தகம் 60 கி, சூதம் 50 கி, சாதிலிங்கம் 60 கி, அரிதாரம் 32 கி, மனோசிலை 10 கி இவற்றைச் சுத்தி செய்து எடுத்துக் கல்வத்திலிட்டு ஆட்டிக் கொள்ளவும்.

*ஏத்திநன்றாய் எருக்கலம்பால் புரசிலைச் சாறு*
*இனிதும்பைச் செருப்படிச்சார் செம்முள்ளிச் சாறு*
*பூத்தமா துளையின்சா றந்தப் பூச்சாற்*
*புகழ்முருக்கம் பூச்சாறு யிவ்வகை யொன்றில்*
*நேர்த்தியாய் சாமமொவ் வொன்றுறை வாங்கி*
*நினவாக குப்பிக்கு மண்ணேழு செய்து*
*வாய்த்தரவி தனிலுலர்த்தி மருந்தை யூட்டி*
*வலப்பக்கல் கொண்டடைத்து மணஞ்செய் வாயே* **(5)**

இவற்றை ஆட்டும்போது எருக்கம்பால், புரசிலைச்சாறு, தும்பைச் சாறு, செருப்படிச்சாறு, செம்முள்ளிச்சாறு, மாதுளைச்சாறு, மாதுளம்பூச்சாறு, முருக்கம்பூச்சாறு இவற்றில் ஒவ்வொன்றிலும் 3 மணி நேரம் வீதம் அரைத்துக் கொள்ளவும். குப்பியிலிட்டு ஏழு மண் சீலை செய்து சூரியனில் வைத்துப் பின்னர் எடுத்துக் கொள்ளவும்.

*செய்தபின்பு வல்லவாய் சட்டி தன்னிற்*
*சிறக்கநால் விரலுக்கு மணலைக் கொட்டி*
*பைய்யவே குப்பிதனை நாட்டி வைத்து*
*பதரும்கு டமட்டு மணலை மூடி*
*அய்யமற வடுப்பேற்றி நாலாறு சாமம்*
*திருமல முன்போ லெரித்துத் தீர்த்து*
*வெய்யவே வடுகனுக்குப் பூசை செய்து*
*வேண்டியே குப்பியெடுத் துடைத்துக் கொள்ளே* (6)

சட்டியின் அடிப்பகுதியில் மணலைக் கொட்டி குப்பியை உள்ளே வைத்து சட்டி முழுதும் மூடுமாறு மணலைக் கொட்டி அடுப்பேற்றி எரிக்கவும். தொடர்ந்து 72 மணிநேரம் அரைத்தெடுத்துப் பாத்திரத்தில் வைத்து அடுப்பேற்றி முன்போல் எரித்து இறைவனுக்குப் பூசை செய்து ஆறிய பின் குப்பியை எடுத்து உடைத்துக் கொள்ளவும்.

*உடைத்தெடுத்த செந்தூரம் பார்க்கும் போது*
*மொப்பில்லா முருக்கம்பூ நிறமொவ் வாது*
*விடித்ததிரி கடுகுத்தூள் கண்டங் கத்திரி*
*யிலையாடா தோடையிலை தூது பத்திரி*
*திடப்படவே பிட்டவித்துப் பிழிந்து தேனும்*
*செந்தூரம் பண்பாதி திவசம் பத்து*
*துடந்துரெண்டு நேரமுண்ணத் தீரும் வியாதி*
*சொல்லரிய காசமென்ற தெல்லாம் போமே* (7)

உடைத்தெடுத்த செந்தூரம் முருக்கம்பூ நிறத்தில் இருக்கும். திரிகடுகுத்தூள், கண்டங்கத்திரிஇலை, ஆடாதோடைஇலை, தூதுவேளை, இலவங்கப்பத்திரி இவற்றைப் பிட்டவியலாக அவித்துச் சாறு பிழிந்து எடுத்துக் கொள்ளவும். அதனுடன் தேன் சேர்த்து செந்தூரத்தைக் குழப்பி 10 நாட்கள் காலை, மாலை சாப்பிட்டு வர காச நோய்கள் யாவும் நீங்கும்.

*போகுமே விசக்கடியிருமல் சுவாச காசம்*
*பொல்லாத மந்தாரஞ் சேற்றுமம் மூர்ச்சை*
*மேகமென்ற தின்றுகொல்லு மிளைப்பு சன்னி*
*மூர்ச்சையுடன் சயங்காச முறிந்து போகும்*
*வாக்குள்ள திப்பிலியும் தேனிலிருபது நாளுண்ண*
*வண்டுகடி புண்சூலை பதினெண் குட்டம்*
*தேகமெங்கும் புள்ளிகுறை நோவு வீக்கஞ்*
*செவ்வண்டு கடிசிரங்கு சிதறிப் போமே* **(8)**

விசக்கடி, இருமல், சுவாசகாசம், மந்தாரகாசம், சேற்றுமம், மூர்ச்சை, மேகம், உடலை வாட்டி எடுக்கின்ற இளைப்பு, சன்னி, மூர்ச்சை, சயம், காசம் இவை நீங்கும். திப்பிலிப்பொடியிலும் தேனிலும் 20 நாட்கள் சாப்பிட்டு வர வண்டுகடி, புண், சூலை, பதினெண்குட்டங்கள், உடலெங்கும் புள்ளி, புள்ளியாய்ப் படரும் குறைநோவு, வீக்கம், வண்டுகடி, சிரங்கு ஆகிய நோய்கள் நீங்கும்.

## துத்த செந்தூரம்

*காணப்பா குன்மங்க ளதிசார மான*
*கிராணிமுதல் பலவகைக்குங் களங்கம் போகத்*
*தோணப்பா துத்தசெந் தூரந் தன்னை*
*சூட்டுறேன் துத்தமோடு காந்தந் தார*
*மூணப்பா வெண்காரம் நிமிளை தானு*
*மொவ்வொன்றுக் கொவ்வொன்று கழஞ்சு தூக்கிப்*
*பூணப்பா கெந்திரெண்டு பலவகையு மஞ்சு*
*பொருந்தவே பழச்சாற்றா லாட்டி வாங்கே* **(9)**

குன்ம வகைகள், அதிசாரம், கிராணி முதலான நோய்கள் நீங்குவதற்கான துத்தநாகச் செந்தூரத்தைச் சொல்கிறார். துத்தநாகம், காந்தம், அரிதாரம், வெண்காரம், நிமிளை இவை வகைக்கு 5 கி. வீதமெடுத்து கெந்தி மட்டும் 10 கி வீதம் எடுத்துக்

கொள்ளவும். இவற்றையெல்லாம் எலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்துக்கொள்ளவும்.

*வாங்கிநீ குகையிலிட்டுச் சிறுபுடத்தைப் போடு*
*மைந்தனே செந்தூர மாக நிற்கும்*
*வாங்கியே காசளவு சீனிக் குள்ளே*
*மாட்டடா செந்தூரம் பணந்தான் தூக்கி*
*வாங்கியே வயிற்றுவலி கிராணி போகும்*
*வரகுட்டஞ் சலக்கழிச்சல் மரண மாகும்*
*வாங்கியே சாதிக்காய் பொடியி லூட்டி*
*மாந்தமாய் கழியுகிற மயக்கம் போமே.* **(10)**

இதை எடுத்துக் குகையில் வைத்து சிறுபுடம் ஒன்று போட்டெடுக்கவும். இப்போது எல்லாம் சேர்ந்து செந்தூரமாகி இருக்கும். 488 மி.கி. செந்தூரத்தை 488 மி.கி. சர்க்கரை சேர்த்துச் சாப்பிட்டு வர வயிற்றுவலி, கிராணி இவை நீங்கும். மேலும் குட்டம், நீர்ப்பேதி இவை நீங்கும். சாதிக்காய்ப் பொடியில் சாப்பிட்டு வந்தால் மாந்தத்தோடு கழிச்சல் உண்டாகிற மயக்கம் நீங்கும்.

## கௌரி சிந்தாமணிச் செந்தூரம்

*பாரப்பா கௌரிசிந்தா மணிச்செந் தூரம்*
*பாடுகிறேன் இரசம்கெந்தி வெண்காரம் மூன்றும்*
*சீரப்பா வகைக்குயிரு பலந்தா னாகச்*
*செய்கின்ற சுத்தியிலே தெளிந்த பின்பு*
*வாரப்பா கல்வத்தி லிட்டு வாட்ட*
*மயனமென்ன வெங்காரத் தாலே மாளும்*
*நேரப்பா வரப்பொடிபோற் கருத்தி ருக்கும்*
*நேர்த்தியாம் பொடியதனைக் கிழிபோற் கட்டே* **(11)**

கௌரி சிந்தாமணி செந்தூரம் இனிச் சொல்கிறார். கெந்தி, வெண்காரம், இரசம் இம்மூன்றையும் வகைக்கு 70 கி. வீதமெடுத்து

முறைப்படி சுத்திசெய்து கொண்டு அதனைக் கல்வத்திலிட்டு நேகாக அரைக்கவும். இதனுடன் வெங்காரம் சேர்த்து அரைக்க எளிதில் அரைபடும். அரைத்த இப்பொடி அரப்பொடிபோல் கறுப்பு நிறமாக இருக்கும்.

*கிழிபோலக் கட்டியதே வண்ண மப்பா*
*கெட்டியாய் மிரெட்டிலே கொட்டைப் பாக்காய்*
*வளிபோலக் கிழிகளெல்லாம் வெவ்வே றாக*
*வரிசைபெறக் கட்டியொரு தாளி தன்னில்*
*வொளிவான மணல்கொட்டி முக்கால் மட்டு*
*மொவ்வொன்று கிளிமணலிற் றூன்றிப் பின்பு*
*தெளிவாக மணல்நிரம்ப விட்டு மப்பா*
*சிறப்பாக வொருமூடி கொண்டு மூடே.* (12)

கொட்டைப் பாக்களவு உருட்டி கிழிகட்டிக் கொள்ள வேண்டும். கிழிகட்டியதைத் தனித்தனியாக வெவ்வேறாக அடுக்கிக் கொள்ளவும். ஒரு தாழியில் முக்கால் அளவு மணல் கொட்டி அதில் தனித்தனியே கிழிகளைப் புதைக்கவேண்டும். அதன் மேலும் மண்ணைக் கொட்டி மூடி கொண்டு மூடவும்.

*மூடப்பா பரிசைபெற அஞ்சானாள் குழியு*
*முடக்கவெரு வடுக்கி மேற்றாழி கவிழ்த்திப்*
*போட்டா யெருவடுக்கி கெசபுடத்தை நன்றாய்*
*பொலிவாகக் கணேசனுக்குப் பூசைதனை நடத்தி*
*நாட்டடா வக்கினியை மூட்டஒரு நாளும்*
*நயமாக ஒருநாளு மாறிப்பின் னப்பா*
*சூட்டடா தேவிமுதல் வடுகனை நன்றாகத்*
*தொழுவதுக்குப் பூசைவிதி துடங்கு வாயே* (13)

குழிதோண்டி அந்தக் குழியில் முழுதும் வறட்டி அடுக்கிக் கொள்ளவும். அதன் மீது ஐந்தாம் நாள், மூடிய சட்டியைக் கவிழ்த்துப் போட்டு மேலும் **1000** எருவடுக்கிப் புடமிட கணேசனுக்குப் பூசை

செய்து அடுப்பு மூட்டுவதற்கு ஒரு நாளும், மேலும் ஒரு நாளும் மாறி மாறி தேவி முதலான தெய்வங்களைத் தொழுது புடமிடத் தொடங்குவாயாக.

*துடங்குவாய் பலவகையும் நன்றாய்ச் செய்து*
*துதித்துவந்த புடம்பிரித்துச் சூட்டிப் பாரு*
*வடங்கினதோர் செந்தூர மால்பழம்போல் கறுத்து*
*வப்பனே இருக்குமதி லைய்ய மில்லை*
*மடங்காதே மறுபுடமும் போட வேண்டா*
*மகத்தான நோயான தெல்லாம் வாங்கும்*
*புடங்காணப் போகாது வனுபானந் தன்னைப்*
*பூட்டுறேன் வகையாகப் பூட்டு றேனே* **(14)**

முறைப்படியான இந்தப் புடத்தை முறையாகப் போட்டு இறைவனைத் தொழுது புடத்தைப் பிரித்துப் பார்க்க அந்தச் செந்தூரமானது விஷ்ணு கரந்தைப்பழம் போன்று கறுத்துக் காணப்படும். இதில் சந்தேகம் ஒன்றும் கொள்ள வேண்டாம். மறுபுடமும் போட வேண்டாம். இச்செந்தூரம் பலவகையான நோய்களைப் போக்கும். அதற்குத் தேவையான அனுபானங்களை இனிச் சொல்வேன்.

*பூட்டடா திரிகடுகு வெதுப்பித் தூளிற்*
*புகட்டடா வெருகடியிற் றேனுங் கூட்டி*
*பூட்டடா பணவிடைசெந் தூரமந் திசந்தி*
*பிலத்ததற்கு மண்டலந்தான் பேணி பார்த்துப்*
*பூட்டடா சூலை பதினெட்டு மல்லார்*
*பொல்லாத வாய்வு விருபத்தாறு மகலும்*
*பூட்டடா பதினாறு குன்ம முளமாந்தை*
*பொல்லாத சுரங்களெலிக் கடியும் போமே.* **(15)**

பதினெண் வகை சூலை நோய்களும், வாயுக்கள் இருபத் தாறும் நீங்குவதற்கு, இந்தச் செந்தூரத்தை 488 மி.கி. எடுத்து

வறுத்துப் பொடித்த மூவிரலளவு திரிகடுகுத் தூளில் கலந்து தேன் சேர்த்துக் குழப்பி 40 நாட்கள் தொடர்ந்து உட்கொண்டு வர வேண்டும். மேலும் இதனை உட் கொள்வதால் பதினாறு வகைக் குன்மங்கள், உளமாந்தை, சுரநோய்கள், எலிக்கடி இவையாவும் நீங்கும் என்பதாம்.

*போமப்பா மந்தார காசமோ டீளை*
*பொருமியதோ ரிருமற்சய காச சுவாசம்*
*போமப்பா சுரமாந்தை மூலமரை யாப்புப்*
*புகளாறு காமாலை யோனி சூலை*
*போமப்பா யச்சூலை அண்ட வாதம்*
*பொல்லாத துடைவாழை விப்புருதி பலது*
*போமப்பா நாவில்வருஞ் சூலைபக்க சூலை*
*பரிசுத்தி வருங்கண்ட மாலையும்போய் விடுமே* **(16)**

இச்செந்தூரத்தை 488 மி.கி. அளவெடுத்து, திரிகடுகுத் தூளுடன் சேர்த்துத் தேனில் குழப்பி 40 நாட்கள் சாப்பிட்டு வர மந்தாரகாசம், ஈளை, இருமல், சயகாசம், சுவாசகாசம், சுரமாந்தை, மூலம், அரையாப்பு, ஆறுவகைக் காமாலை, யோனிசூலை, சூலை, அண்டவாதம், துடைவாழை, விப்புருதி, நாச்சூலை, பக்க சூலை, கண்டமாலை போன்ற நோய்களும் குணமாகும்.

*போய்விடுமே கரப்பான்புண் கண்டவிப் புருதி*
*புகைதீரு முங்குவளை விப்புருதி கூடப்*
*போய்விடுமே கூட்டு விப்புருதி தானும்*
*பூட்டுறேன் அனுபானம் புகழ்ந்து கேளு*
*போய்விடுமே செந்தூரம் பணவிடையி னோடு*
*புனிதமுடன் சாதிக்காய் பத்திரி கிராம்பு*
*போய்விடுமே அதிவிடையம் வெதுப்பித்தூ ளப்பா*
*போக்குடனே வெருகடியிற் றேனும் கூட்டே.* **(17)**

கரப்பானால் ஏற்பட்ட புண்கள், கண்டத்தில் தோன்றும் விப்புருதி, குவளைவிப்புருதி போன்றவை நீங்குதற்குச் சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, அதிவிடையம் இவற்றை வறுத்து இடித்துத் தூளாக்கி மூவிரலளவு எடுக்கவும். அத்துடன் தேன் கலந்து **488** மி.கி செந்தூரத்தைக் குழைத்துச் சாப்பிட வேண்டும்.

*கூட்டியே அதிசாரம் பனிரெண்டு வகையும்*
*கூறிய கடுப்புமுதல் கூறு கூறாய்*
*நீட்டியே செய்கின்ற கிராணிவகை யாறு*
*நின்றுபோ மின்னமொரு பணவிடைசெந் தூரம்*
*காட்டிலே வளர்கருணைக் கிழங்குலர்த்திப் பொடியும்*
*கடுகுசுக்குத் திப்பிலியும் பொடியுங் கூட்டி*
*மூட்டியே வெருகடியிற் தேனும்சேர்த் துண்ண*
*மூலவகை ஒன்பதுபவுத் திரங்கள் போமே.* **(18)**

காட்டுக்கருணைக்கிழங்குப்பொடி, கடுகு, சுக்கு, திப்பிலிப் பொடி இவற்றைச் சேர்த்து வெருகடியளவு தூளில் **488** மி.கி. செந்தூரம் சேர்த்துத் தேனில் குழைத்துச் சாப்பிட பனிரெண்டு வகைக் கழிச்சல் நோய்கள், கடுப்பு நோய்கள், ஆறு வகைக் கிராணி நோய்கள் ஆகியவை தீரும். இவ்வகை நோய்களுடன் மூல நோய்களும் ஒன்பது வகை பவுத்திரங்களும் நீங்கும்.

*போமப்பா பவுத்திரங்க ளிருப தல்லால்*
*பூட்டுறேன் செந்தூரம் பணவிடையி லின்ன*
*மாமப்பா வாவரையின் தயிலத் தூட்டி*
*யப்பனே சதையடைப்பன் பதினெட்டு வகையும்*
*வேமப்பா நீரிழிவு மிருப தோடு*
*மேன்மேலு முள்ளுருக்கி பனிரெண்டுங் கூட*
*நாமப்பா யின்னங்கேள் மூத்திர மஞ்சு*
*நலங்கெடுக்கு மூத்திரப்பாளை யினந்தா னாறே.* **(19)**

பவுத்திரநோய்கள் **20** மட்டுமின்றி, **488** மி.கி செந்தூரத்

தூளுடன் ஆவரையின் தைலமும் சேர்த்துச் சாப்பிட்டு வர 18 வகையான சதையடைப்பு நோய்கள், 20 வகையான நீரிழிவு நோய்கள், உடம்பை மென்மேலும் உருக்கி எடுக்கும் எலும்புருக்கி நோய் பன்னிரண்டு, மூத்திரக் கிரீச்சரங்கள் ஐந்து, மூத்திரப்பாளை ஆறு இவையும் நீங்கும்.

*ஆறாக வருமேக மிருபத் தொன்று*
*மத்திசுர மெட்டுவகை உட்டிணமு மாறும்*
*நீறாகும் செந்தூரம் பணந்தான் கூட்டி*
*நெத்திபிற வழிஞ்சில்விதைத் தயிலத்தி லூட்ட*
*பேரான வயிற்றுநோ யறுபதுடன் வாயுப்*
*புரண்டுதிரண் டிருத்திரு முப்பத்தி ரெண்டுங்*
*கூரான விப்புருதி யெல்லாந் தீரும்*
*கூறுகிறே னின்னமனு பானம் கேளே* (20)

மேகநோய்கள் இருபத்தொன்று, எலும்பு சுரம் எட்டு, உஷ்ண நோய்கள் ஆறு இவையும் நீங்கும். 488 மி.கி. செந்தூரத்தை அழிஞ்சில் தைலத்தில் கொடுக்க வயிற்று நோய்கள் 60, வாயு நோய்கள் 32, விப்புருதி நோய்கள் ஆகியன நீங்கும். நான் இனி மேலும் சில அனுபானங்களைச் சொல்வேன்.

*கேளப்பா செந்தூரம் பணவிடையி லின்னங்*
*கெடியான வெருக்கிலையின் பழுத்தலதனை வாட்டி*
*நாளப்பா வொருசேரைத் தண்ணியிலே யூட்ட*
*நலமாக வயிறெடுக்க மோருஞ்சோ றுண்ணு*
*கோளப்பா ஒன்றுமில்லை யொன்றைவிட்டு யொருநாள்*
*கொண்டிடவே விஷபாகஞ் சோகை காமாலை*
*நீளப்பா சாபமொடு பயித்திய பாண்டு*
*நீர்க்கோர்வை யகவையோடு சுரமும்போய் விடுமே* (21)

எருக்கிலைப் பழுப்புகளைத் தணலில் வாட்டி அதனைக் குடிநீரிட்டு 280 மி.கி. எடுத்து, 488 மி.கி. செந்தூரத்துடன் சேர்த்து

ஒன்று விட்டு ஒரு நாள் சாப்பிட்டு வந்தால் விஷபாகம், சோகை, காமாலை, பித்தம், பாண்டு, நீர்க்கோவை, சுரம் இவை நீங்கும். கழிச்சலானால் மோருஞ் சோறுஞ் சாப்பிடவும்.

*சுரம்போகு மிந்தசெந் தூரத் தாலே*
*சொல்லரிது அனுபானஞ் சூட்டப் பாரு*
*வரம்போலே நோயறுக்கு மப்பா சொன்னே*
*னாச்சரியம் பத்தியத்தை அறையக் கேளு*
*பரம்பரைக்கு யானுரைத்த படிநான் சொன்னோம்*
*பத்தியந்தான் வெள்ளாட்டுப் பாலைக் கொள்ளு*
*திரம்படுத்தி விட்டப்பாச் சிறப்புக் கறிகள்*
*சீராட கெண்டமுதன் டேற லாமே* **(22)**

இதுவரை நோய்க்கேற்ப அனுபானங்களைச் சொல்லி வைத்தேன். இனி நோயுண்ணும் காலத்தில் நீக்க வேண்டிய உணவுப் பண்டங்களைச் சொல்வேன். வெள்ளாட்டுப்பாலை இக்காலங்களில் உண்ணலாம். ஆங்கிலக் காய்கறிகளைத் தவிர்த்து மற்ற காய்கறிகள் எல்லாம் உண்ணலாம்.

## சூலைக்குக் கெந்தித் தைலம்

*ஒவ்வாத சூலை மூவாறுந் தீர*
*உரைக்கிறேன் கெந்தகத்தின் தயிலந் தானும்*
*செவ்வான கெந்தகமோ கழஞ்சு பத்து*
*சிவந்தபசு நெய்தனிலே சாம மொன்று*
*சவ்வாது போலாட்டித் திரியி லூட்டி*
*தலைகீழாய்ப் பிடித்திடவும் தயிலம் வீழும்*
*கவ்வாத தயிலத்தில் சூத மூன்று*
*கழஞ்சிட்டுச் சாமமொன்று வாட்டு வாட்டே* **(23)**

உடம்பிற்குத் தீங்கைக் கொடுக்கின்ற பதினெட்டு வகைச் சூலை நோய் நீங்குவதற்குக் கெந்தகத் தயிலம் சொல்கிறார். 50 கி

கெந்தகத்தைச் சுத்தி செய்து எடுத்துக் கொண்டு பசுநெய்யிட்டு 3 மணி நேரம் ஆட்டி எடுத்துத் திரியிலூட்டித் தலைகீழாகப் பிடித்தால் தைலம் விழும். அந்தத் தைலத்தில் 15 கி பாதரசம் சேர்த்து 3 மணி நேரம் ஆட்டி எடுக்கவும்.

*ஆட்டியதோர் தயிலத்தைக் குப்பிக் கூட்டி*
*ஆயிபதம் பூசித்து அருள்தா வென்று*
*நீட்டியொரு காசிடைதான் தினமுங் கூட்டு*
*நினவோட தினம்பத்துக் கொண்ட பேர்க்கு*
*நாட்டில்வளர் சூலையென்ற தனைத்தும் போகும்*
*நலமான பத்தியந்தான் பால்தயிர்நெய் யாகும்*
*தீட்டியே நல்லெண்ணெய் முழுக லாகா*
*செப்புகிறே னின்னமொரு சூதத் தாட்டே* (24)

ஆட்டியெடுத்தத் தைலத்தைக் குப்பிக்கேற்றி தாயின் பாதம் போற்றிப் பூசித்துத் தினமும் 488 மி.கி வீதம் 10 நாட்கள் உட்கொண்டு வந்தால் அனைத்து வகையான சூலை நோய்களும் நீங்கும். பால், தயிர், நெய் இவை பத்தியமாகும். நல்லெண்ணெயில் தலை மூழ்க வேண்டாம்.

## சலதாரை உருண்டை

*போமென்ற கிரீச்சரங்கள் ஆறு முண்ணப்*
*பூட்டுறேன் சலதாரை யுண்டை தன்னை*
*ஏமென்ற நாவிகெந்தி சூத மிந்து*
*எனகவுரி பெருங்காயம் சவுக்காரந் துருசு*
*ஏமென்ற நேர்வாளம் நஞ்சைப் போக்கி*
*இவையெல்லாம் சமனாகத் தூளா யாட்டி*
*ஏமென்ற கல்வத்தில் பழச்சாறு வார்த்து*
*வெண்ணெய்போ லாட்டிநீ வாங்கு வாயே.* (25)

ஆறு வகையான கிரீச்சரங்கள் நீங்குவதற்கான சலதாரை

உருண்டையைச் சொல்கிறார். பச்சை நாவி, கெந்தகம், இரசம், இந்துப்பு, கௌரி, பெருங்காயம், சவுக்காரம், துருசு, நஞ்சு நீக்கிய நேர்வாளம் இவற்றையெல்லாம் சம அளவெடுத்து இடித்துத் தூளாக்கிக் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாறு சேர்த்து வெண்ணை பதம் வரும்வரை நேகாக அரைத்தெடுக்கவும்.

*வாங்கியதோர் மருந்துதன்னை மிளகு போல*
*மணியாக்கிக் குழலிலே வைத்துக் கொண்டு*
*வாங்கியதோர் அனுபானம் வெல்லம் நெய்யாம்*
*உற்றபழச் சாறாகும் சுருக்கிச் சொன்னேன்*
*ஏங்கியதீ ருகிறவி யாதிகேள் தூலகா*
*யந்திரம்பெரிய வயற்றுநோய் கண்ம வெண்ணோய்*
*பாங்கியதோர் பெருவயிறு கெண்டை குன்மம்*
*பறந்தூரும் நீர்க்கோர்வை தீரும் பாரே.* (26)

இதனை மிளகளவு உருண்டைகளாகச் செய்து கொண்டு குழலில் அடைத்துக் கொள்ளவும். இதற்கு வெல்லமும், நெய்யும், எலுமிச்சம் பழச்சாறும் அனுபானமாகும். இம்மருந்துண்டால் பெரிய நோயான குட்டநோய், பெருவயிறு, கெண்டை நோய், குன்மம், தொடர்ந்து துன்பந்தரும் நீர்க்கோவை போன்றன நீங்கும்.

## கிரீச்சரத்துக்குச் சூரணம்

*பாரப்பா முந்திரிகை பேரீச்சம் பழமும்*
*பருநெல்லி யதிமதுரம் ஏலம் கல்நார்*
*நேரப்பா திப்பிலியும் சிறுபூளை வேரும்*
*நேரான சந்தனமும் கொத்து மல்லி*
*வேரப்பா வெள்ளரியின் வித்துங் கூட*
*மீறாமல் சமனாகச் சூரணத்தைச் செய்து*
*வாரப்பா வெருகடிதான் கழுநீரில் கொள்ள*
*மைந்தனே கடுப்பெரிவு கிரீச்சரங்கள் தீரும்* (27)

முந்திரிப்பழம், பேரீச்சம்பழம், நெல்லி, அதிமதுரம், ஏலம், கல்நார், திப்பிலி, சிறுபீளை, சந்தனம், கொத்துமல்லி, வெள்ளரி வித்து இவற்றைச் சம அளவாகக் கூட்டிச் சூரணம் செய்து, அதில் மூவிரலளவு எடுத்துக் கஞ்சித் தண்ணீரில் உட்கொள்ள வயிற்றுக் கடுப்பு, எரிவு, கிரீச்சரங்கள் இவை தீரும்.

## சன்னிக்கு எண்ணெய்

*பாரப்பா சன்னிக்கு அஞ்செண்ணெய்த் தயிலம்*
*பாடுகிறேன் புங்கெண்ணெய் புன்னை ஒருபங்கு*
*பாரப்பா வேப்பெண்ணை யாமணக்கு எண்ணெய்*
*பரிவான யிலுப்பெண்ணை யோரளவாய்ப் பகர்ந்தோம்*
*பாரப்பா ஆறுவகை ஐங்காலு மொன்றாய்*
*பாத்திரத்தில் வைத்தபின்பு பகரக் கேளு*
*பாரப்பா மேல்மருந்து ரசகெந்தி சிலையும்*
*பாங்கான லிங்கமோடு தாளகமும் சேரே* **(28)**

சன்னிக்கு ஐந்தெண்ணெய்த் தைலம் சொல்கிறார். புங்கெண்ணெய், புன்னையெண்ணெய், இவ்விரண்டும் ஓரளவாகவும், வேப்பெண்ணெய், இலுப்பெண்ணெய், ஆமணக்கெண்ணெய் இம்மூன்றும் ஓரளவாகவும் சேர்த்து எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து ஒரு பாத்திரத்தில் ஊற்றிக் கொள்ளவும். இதில் மேல்மருந்தாக இரசகெந்தி, மனோசிலை, லிங்கம், தாளகம் இவற்றையும் சேகரித்துக் கொள்ளவும்.

*சேரடா வகைக்கிரு கழஞ்ச தாகச்*
*சேர்த்ததனைப் பழங்காடி யூட்டி யாட்டி*
*சேரடா பழஞ்சீலை தன்னி லூட்டித்*
*திறமாக வுலர்த்தினதைக் குருங்கோல் தன்னில்*
*சேரடா திரிப்பந்த மாகக் கட்டித்*
*தீக்கொளுத்தி யெண்ணெயைச் சிறுகரண்டி கொண்டு*

*சேரடா வார்த்தெரிக்க தயிலமெல்லா மிறங்குஞ்*
*சித்திரமாய் மூன்றுதரத் தால்தயில மாமே.* **(29)**

இம்மேல்மருந்துகளை வகைக்கு 10 கி வீதமெடுத்துப் பழங்காடி விட்டு ஆட்டி சுத்தமான பழைய சீலைத் துணியில் தடவவும். இதனை உலர வைத்துத் திரியாகத் திரித்துக் கொள்ளவும். பின் கோலில் சுற்றித் தீப்பந்தம் கொளுத்தி எண்ணெயை வார்த்து வார்த்து வடிக்கத் தைலம் வடியும். இவ்வாறு மூன்று முறை செய்து அந்தத் தைலத்தைச் சேகரித்துக் கொள்ளவும்.

*ஆமப்பா அஞ்செண்ணெய் தயிலத் தாலே*
*அனேகநோய் தீருமடா அறையக் கேளு*
*ஆமப்பா காசிதமோடு சயித்தியங்கள் பலதும்*
*அண்டாது வாதமென்ற தனைத்தும் போகும்*
*ஆமப்பா உளைச்சலோடு திமிரம் வாங்கும்*
*அப்பனே முகவாத முசலகனும் போமே* **(30)**

இந்த ஐந்தெண்ணெய் தயிலத்தினால் பலவகையான நோய்கள் தீரும். சயித்திய நோய்கள், வாத நோய்கள், உளைச்சல் நோய்கள், திமிர்வாதம், முகவாதம், முயல்கண்டவாதம் இவையும் நீங்கும்.

*போமப்பா குமரகண்ட னிளம்பிள்ளை வாதங்கள்*
*பொல்லாத காக்கைவலிப் பானதுவும் போகும்*
*போமப்பா குதிரைவலிப் பானதுவும் போகும்*
*புரிவில்லாத தனுர்வாதம் பட்ச வாதம்*
*போமப்பா யுள்வீச்சு புறவீச்சும் போக்கும்*
*பிள்ளையளா லாந்திரமாம் பீடைவலிப் பொழியும்*
*போமப்பா இந்தவகை நோய்க ளெல்லாம்*
*போக்குவிக்கும் புலத்தியனே புகழ்ந்து செய்யே.* **(31)**

குமரகண்டன் வலி, இளம்பிள்ளை வாதங்கள், காக்கை வலிப்பு, குதிரை வலிப்பு, கடினமான தனுர்வாதம், பட்ச வாதம்,

உள்வீச்சு, புறவீச்சு, வலிப்பு போன்ற துன்பம் தருகின்ற நோய்கள் நீங்கும் என்பதைப் புலத்தியனுக்கு உணர்த்துகின்றார் ஆசிரியர்.

## சன்னிக்குக் குடோரித் தயிலம்

*போமடா குமரகண்ட முசவலியி னோடு*
*பிணங்குகின்ற காக்காயின் குறவலியி னுடனே*
*ஒகுமே யுள்குத்து புறவீச்சு மல்லால்*
*யெழுந்திரிக்கும் நாவலறும் சன்னிகளுக் கெல்லாம்*
*ஆமென்ற சுக்குநால் கழஞ்சு வாங்கி*
*அப்பனே நாலுபடி சலந்தான் விட்டு*
*எட்டொன்றாய்க் காய்ச்சி யிறுத்துக் கொண்டு*
*தண்ணீர் கண்டத்தட்டி யிஞ்சிச் சாறே.* **(32)**

குமரகண்டன் வலி, முயல்கண்டவலி, உடலை வருத்துகின்ற காக்காய் வலிப்பு, குறக்குவலி, உள்வீச்சு, புறவீச்சு, பலவகையான சன்னிகள் யாவும் நீங்குவதற்குத் தைலம் வருமாறு. சுக்கு 20 கி, எடுத்து இடித்து 5.2 லி தண்ணீர் விட்டு அது எட்டில் ஒன்றாகச் சுருங்கக் காய்ச்சி இறுத்து அதனுடன் இஞ்சிச் சாற்றைக் கலந்து கொள்ளவும்.

*சாறான அண்டத்தின் தயிலங் கொஞ்சம்*
*சன்னடா வெள்ளுள்ளித் தயிலந் தானு*
*மயிற்பீலி நிலவேரு ஆகாசத் தூளும்*
*வேப்பெண்ணெய் கால்படிதான் விட்டுக் காய்ச்சி*
*பதமாகத் துட்டெடைதான் கொள்ளே.* **(33)**

முட்டையோட்டுத் தைலம் சிறிதளவு, பூண்டுத் தைலம் சிறிதளவு, மயில்தோகை, பூநாகம், ஆகாசத்தாமரை இடித்த தூள் இவற்றை 650 மி.லி. வேப்பெண்ணெயில் சேர்த்துக் காய்ச்சி இறக்கி வடிகட்டி வேளைக்கு 488 மி.லி. அளவு உட்கொண்டு வரவும். சன்னி நீங்கும்.

## புகைகாட்ட

*அறிந்துகொள் செய்தியொன்று சொல்லக் கேளு*
*அரிதாரம் ஐங்கழஞ்சு வெள்ளை யஞ்சு*
*செறிந்ததொரு சாதிலிங்கம் முக்க ழஞ்சு*
*திறமான கெவுரியது யிருக ழஞ்சு*
*பிறிந்தமனோ சிலையும் கெந்தி கூட்டி*
*பேரான துரிசுதுத்தம் கழஞ்சுரெண்டு கூட்டி*
*முறிந்தகருஞ் சீரகமும் கழஞ்சு நாலு*
*முளுந்தவெள்ளை குந்திரிக்கம் கழஞ்சு யொன்றே* **(34)**

அரிதாரம் 25 கி. வெள்ளை எனும் வெள்ளைப்பாடாணம் 25 கி. சாதிலிங்கம் 15 கி. கௌரி 10 கி. மனோசிலை 5 கி. கெந்தி 5 கி. துருசு, துத்தம் வகைக்கு 10 கி. கருஞ்சீரகம் 20 கி. வெள்ளைக் குந்திரிக்கம் 5 கி. இவற்றையெல்லாம் சேகரித்துக் கொள்ளவும்.

*ஒன்றான மிளகுடன் சவ்வீரம்*
*உரைப்பான காரீயம் கழஞ்சி ரெண்டு*
*பன்றான சூதமது கழஞ்சி ரெண்டு*
*பண்பாக யுருக்கியதில் சேர்த்துக் கொண்டு*
*நன்றாக மருந்தெல்லாம் சுத்தி செய்து*
*நலமான குழிக்கல்லி லொன்றாய் விட்டு*
*கன்றாமல் அதையரைக்கக் கசாயங் கேளு*
*கரிசாலை மேனியோடு பருத்திச் சாறே* **(35)**

மிளகு, சவ்வீரம், காரீயம் இவை வகைக்கு 10 கி, இரசம் 10 கி இவற்றையெல்லாம் உருக்கி ஒன்றாகச் சேர்த்துக் கொள்ளவும். எல்லாவற்றையும் முறைப்படி தனித்தனியே சுத்தி செய்து கொண்டு குழிக்கல்லில் போட்டு அவற்றைக் கரிசாலைச் சாறு, குப்பைமேனிச் சாறு, பருத்திச்சாறு ஆகிய மூன்று சாற்றையும் விட்டு 9 மணி நேரம் தொடர்ந்து அரைத்துக் கொள்ளவும்.

*சாறுவிட்டு முச்சாறு மூன்று சாமம்*
*தனையரைத்து யேழுவில்லை தட்டிக் கொண்டு*
*வீறுடைய வெயில்தனிலே காய வைத்து*
*வெந்தணலில் யோருண்டை புகைத்து வைத்து*
*அறுபொழுது புகைத்து தண்ணீர் மூழ்கி*
*அப்பனே யோருண்டை புகைத்து*
*கூறுடனே மூன்றுநா ளாறு போது மூழ்கில்*
*குவலயத்து சூலையெல்லாந் தீர்ந்து போமே.* **(36)**

விழுதை வழித்தெடுத்து ஏழுவில்லைகளாகத் தட்டி வெயிலில் காயவைத்து எடுத்துக் கொள்ளவும். ஒன்றை வெந்தணலில் புகைத்து எடுத்துப் பின் தண்ணீரில் குளிக்கவும். இவ்வாறு மூன்று நாள் ஆறு போது (தினம் இரண்டு வேளை) புகைத்துத் தண்ணீரில் மூழ்கி வர சூலை நோய்கள் எல்லாம் தீர்ந்து போகும்.

*தீர்ந்துபோம் கிராணியோடு கரப்பான் கட்டும்*
*செய்லிங்க சூலையொடு சேர்ந்த நோயும்*
*சாறுகின்ற புண்புரைக ளெல்லாம் தீரும்*
*தளமாகும் மோர்பாலுந் தயிரு மாகும்*
*காணுமே பத்தியந்தா னேழு நாளும்*
*கட்டாது வயறதனில் கண்டு மாறு*
*ஊறுகின்ற புகையைச் செய்தால்*
*உறவாக வாய்வெந்து ஆறும் பாரே.* **(37)**

மேற்சொன்னவாறே கடைப்பிடிக்க கிராணி, கரப்பான், லிங்க சூலையோடு பல நோய்களும் நீங்கும். புண்புரைகள் எல்லாம் தீரும். மோர், பால், தயிர் உண்ண வேண்டும். ஏழு நாட்கள் பத்தியம் காக்க வேண்டும். புகையைக் காட்டும் பொழுது வாய் வேக்காடடைந்து பின்னர் ஆறும் என்பதாம்.

## பொன்னாங்காணி கிருதம்

*ஊணியே யின்னமொரு செய்தி கேளு*
*உள்ளுக்குத் தயிலமோடு கிருதம் சொல்வேன்*
*காணியாம் பொன்னாங்காணி வேர்பலந்தா னொன்று*
*கனமான வெட்டிவேரி லாமிச்சம் வேரு*
*பூணியே ஓரிதழ்வேர் சிறுகீரை வேரு*
*புகழாக வகைக்குமொரு பலம தாக*
*பாணியே பால்வார்த்து அரைத்து நெய்யில்*
*படிரெண்டுக் குள்ளிட்டு காய்ச்சு காய்ச்சே* **(38)**

உள்ளுக்குச் சாப்பிடுகின்ற தயிலமும், கிருதமும், இனிச் சொல்கிறார். பொன்னாங்காணி வேர் **35** கி, வெட்டிவேர், விலாமிச்சம் வேர், ஓரிதழ்வேர், சிறுகீரைவேர் இவை வகைக்கு **35** கி வீதமெடுத்து ஒன்று சேர்த்துப் பால்விட்டு அரைத்து **2.6** லி நெய்யில் விட்டுக் காய்ச்சிக் கொள்ளவும்.

*காய்ச்சியே யுட்கொள்ள கரண்டி வீதம்*
*கணைரோகம் பதினெட்டும் காணா தோடும்*
*மாச்சுதே உட்சுரங்கள் உட்டி ணங்கள்*
*மணுகாது பிரமேகம் காந்தல் போகும்*
*ஏச்சுதே யெண்ணாதே யினிதான் ----*
*அதிமதுர மாச்சக் காயே*
----- ------ ----- -----
----- ------ ------- **(39)**

இதனை வேளைக்கு ஒரு தேக்கரண்டி வீதம் உண்டு வந்தால் கணைநோய் பதினெட்டும் நீங்கிவிடும். மேலும் உட்சுரங்கள், உஷ்ணங்கள், பிரமேகம், உடல் காந்தல் ஆகியனவும் நீங்கும். இனி அடுத்த மருந்திற்கான பொருட்களைச் சொல்கின்றார்.

## குன்மத்திற்குக் கொம்மட்டிக்காய் லேகியம்

*சேராத குன்மங்க ளனைத்தும் போகச்*
*செப்புகிறேன் கொம்மட்டிக் குழம்பு தன்னை*
*அறவே கொம்மட்டிக்காய் சாறு நாழி*
*அப்பனே சம்பீரச் சாறு நாழி*
*வார்முனும் வெள்ளுள்ளி நொச்சி யிஞ்சி*
*வகைக்குநீ சாறுபடி நாழி வாங்கி*
*பார்புகழ் அஞ்சுபடி யொன்றாகக் காய்ச்சு*
*பாய்ச்சுதற்கு சூதமோடு லிங்கந் தானே* (40)

**3** லி. கொம்மட்டிக்காய்ச் சாறு, எலுமிச்சம் பழச்சாறு **1.3** லி, வெள்ளுள்ளி, நொச்சி, இஞ்சி இவை முறையே வகைக்கு **1.3** லி எல்லாவற்றையும் மொத்தமாகச் சேர்த்துக் காய்ச்சவும். இதனுடன் இரசமும் லிங்கமும் சேர்க்க வேண்டும்.

*இலிங்கமொடு பெருங்காயம் இந்து ஓமம்*
*நேரான வெண்காரமும் கடுகு மஞ்சள்*
*இலிங்கமெனும் வெந்தயமும் மிளகு காந்தம்*
*நேர்வாள மோரொன்று கழஞ்சு மூன்று*
*இலிங்கமுறை ஆட்டியே பாகில் சேர்த்து*
*நெருங்கவே விடாமல்நீ கிண்டி கிண்டி*
*இலிங்கமோடு பழம்புளிபோ லிறக்கி மைந்தா*
*நினைவறிந்து உடலறிந்து உண்ணச் சொல்லே* (41)

பெருங்காயம், இந்துப்பு, ஓமம், வெண்காரம், கடுகு, மஞ்சள், வெந்தயம், மிளகு, காந்தம், நேர்வாளம் இவை வகைக்கு 15 கி. வீதமெடுத்து நன்றாக மசிய அரைத்துப் பாகில் சேர்த்துத் தொடர்ந்து கிண்டி பழம்புளி போல் வரும் பதத்தில் இறக்கி நோயாளியின் வன்மை மென்மை அறிந்து வழங்கலாம்.

*உண்ணுவது பனைவெல்லம் நல்ல வெல்லம்*
*மூட்டுவாய் தூதுளங்காய் பிரமா ணத்தி*
*லுண்ணயிலே குன்மம்போம் பெருவயிறு போகு*
*முதரத்தில் நீராமை மகோதரமும் போகும்*
*முண்ணயிலே பீலிகையும் வெப்புப் பார்வை*
*உயர்க்கவே வல்லியமும் கவுசி தானு*
*முண்ணயிலே வாய்வுவென்ற தெல்லாம் போகும்*
*உரைக்கிறேன் கொம்மட்டிக்காய் சூரணத்தைக் கேளே*
**(42)**

பனைவெல்லம், நல்லவெல்லம் இவற்றுடன் சேர்த்துத் தூதுளங்காய் அளவு உண்டு வந்தால் குன்மம், பெருவயிறு குணமாகும். வயிற்றுள் உண்டாகும் நீராமை, மகோதரம் நீங்கும். பீலிகை, வெப்புப்பார்வை, வல்லியம், கவிச்சி நாற்றம், வாயு போன்ற யாவும் நீங்கும். இனி கொம்மட்டிக்காய் சூரணத்தை சொல்வதாகச் சொல்கிறார். ஆனால் பட்டை இரசாயனம் சொல்லப்படுகிறது.

## பட்டை இரசாயனம்

*பகரக்கேள் பட்டையிலே ரசாயனத்தைச் சொல்வோம்*
*பட்டையஞ்சு பலம்வாங்கு வெள்ளைப் பாகே*
*பட்டைதனைத் தூளாக்கி யெடுத்துக் கொண்டு*
*பகரோம லதிவிடையம் குரோசாணி ஓமம்*
*கட்டையெனும் சாதிக்காய் பத்திரி கிராம்பு*
*சுக்குதிரி பாலைநன் மிளகு சேர*
*தாட்டவே வகைக்கினி பலமும் கால்தான்*
*தளராட்டி பாண்டத்தில் வழித்து நீயு*
*மிட்டமுடன் பட்டைத்தூள் கூடச் சேர்த்து*
*இவைகளையு மாவின்பால் மிதமா யூற்றே.* **(43)**

பரங்கிப்பட்டையை 175 கி எடுத்து, தூளாக்கிக் கொள்ளவும். ஓமம், அதிவிடையம், குரோசாணி ஓமம், சாதிக்காய், சாதிபத்திரி,

கிராம்பு, சுக்கு, திரிபலை, மிளகு இவை வகைக்கு 9 கி வீதமெடுத்து நன்றாக ஆட்டி எடுத்துப் பாண்டத்தில் வழித்து அதனுடன் முன் சொன்ன பட்டைத்தூளைச் சேர்த்துத் தேவையான அளவு ஆவின் பால் சேர்த்துக் கொள்ளவும்.

*இதங்கேள் பசுவின்நெய் யோர்படியு மிட்டு*

*---- ---- ---- ----*

*விதங்கேளு கமலவன்னி கடிகை யொன்று*

*வெந்திடவும் விடாமலே கிண்டிக் கிண்டிப்*

*பதங்கேளு மயனம்போல் பக்கு வத்தைப்*

*பாரத்தைப் பதறாமல் வணக்கி மைந்தா*

*பதங்கேளு வாறுபலம் சீனி தூவி*

*மறுபடியு மகப்பையால் சீனி கிண்டே* **(44)**

இவற்றுடன் பசுவின் நெய் சேர்த்து அடுப்பேற்றி இரண்டு விறகினால் 24 நிமிடங்கள் எரித்து வெந்தபின்னர் விடாமல் தொடர்ந்து கிண்டி மை போன்ற பதம் வரும் போது 210 கி சீனியைத் தூவி மீண்டும் கிண்டி இறக்கிக் கொள்ளவும்.

*சீனியிட்டுக் கிண்டியொரு கலசத் திட்டு*

*தினமூன்று சென்றபின்பு தான்றிக்காய் போல*

*சீனியிட்டு வைத்திருந்த மருந்தை வாங்கி*

*திரட்டுவா யிருவேளை தின்ற போது*

*சீனியிட்டு மண்டலந்தா னருந்தி னாற்காற்*

*தீருகிற நோய்கேளு கிராணி சூலை*

*சீனியிட்டுப் பரங்கிப்புண் குட்டம் வெட்டை*

*சிரசில்வரும் சூலைமுதல் கரப்பான் போமே.* **(45)**

சீனிவிட்டுக் கிண்டி எடுத்ததைக் கலசத்திலிட்டு 3 நாட்கள் கழிந்த பின்னர் தான்றிக்காய் அளவாக உருட்டி காலை, மாலை இரண்டு வேளை 4 நாட்கள் உண்டு வந்தால் கிராணி, சூலை,

பரங்கிப்புண், குட்டம், வெட்டை, சிரசில் வருகின்ற சூலை, கரப்பான் போன்ற நோய்கள் நீங்கும்.

*போகின்ற வியாதிகளுக்குப் பத்தியத்தைச் சொல்ல*
*புலத்தியனே கண்மணியே ஞான மூர்த்தி*
*வாகின்ற சரீரங்கள் பலமறிந்து வற்றின்*
*முன்வாத வெட்டைபித்த வெட்டை யானால்*
*பாகின்ற புளியுப்பை மாற்றச் சொல்லு*
*பருங்கோழி முருங்கைக்காய் துவரை யாகும்*
*மாகின்ற முயலுடும்புக் கீரைத் தண்டு*
*அப்பனே சிறுபயிறு பாகங் கேளே.* **(46)**

இம்மருந்துண்ணும் காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய பத்தியத்தை இனிச் சொல்வேன். மருந்தை நோயாளியின் உடம்பின் வன்மை, மென்மை அறிந்து வழங்கவேண்டும். வெட்டை, பித்த வெட்டை நோய்களுக்கு புளியையும், உப்பையும் நீக்கிவிட வேண்டும். கோழிக்கறி, முருங்கைக்காய், துவரை இவற்றைச் சேர்க்கலாம். முயல், உடும்பு, கீரைத்தண்டு, சிறுபயிறு இவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம்.

## பித்தவெட்டை காந்தலுக்கு தேற்றான் விதை நெய்

*மறையாத பிரமேக மீறு மீளை*
*மதிமயக்கம் காந்தலுட லெரிவு தாக*
*முறையான நெஞ்செரிப்பு வயிற்று மிரைச்ச*
*லுட்டணமும் கால்கைகள் காந்தல் போக*
*நிறையாக ஒருநெய்யே சொல்லக் கேளு*
*நிமிஷத்தில் நிற்பதற்கு தேற்றான் வித்தை*
---------------------------------
--------------------------- **(47)**

மறையாத பிரமேகம் மாறுவதற்கும், ஈளை, மயக்கம், உடல்

காந்தல், எரிவு, நெஞ்செரிப்பு, வயிற்று வலி, வயிற்றிரைச்சல், உட்டிணம், கால்கைகள் காந்துதல் போன்றவை நீங்குவதற்கும் தேற்றான் விதை நெய்யைச் சொல்கிறார்.

*தேற்றா விரைகால் படிதன்னைத்*
*தேய்த்துக் கழுவி யுலரவைத்து*
*நேர்த்தி பசுவின் பால்தன்னில்*
*நிலைக்க மூன்று தினமூறிப்*
*பார்த்தே வதனை யிருகூறாய்*
*வெட்டிப் பால்விட் டாட்டியபின்*
*சேர்த்துத் திரட்டி யதினளவு*
*பசுவின் வெண்ணெய் சேர்த்திடுமே* **(48)**

325 கி தேற்றான் விதையை நன்றாகத் தண்ணீரிலிட்டுக் கழுவியெடுக்க வேண்டும். அதனை உலரவிட்டெடுத்து பசுவின் பாலில் மூன்று நாட்கள் ஊறப்போட வேண்டும். அதனை இரண்டிரண்டாக வெட்டி பால்விட்டாட்டி அதே அளவு பசுவெண்ணை சேர்த்துக் கொள்ளவும்.

*சேர்த்த பின்புநெய் சட்டிதனிற்*
*சிறக்கப் போட்டு யடுப்பேற்றி*
*போர்த்தி டாதே தீயைமூட்டி*
*எரிக்கக் கடுகு பொன்னிறமாங்*
*கூர்ந்து பார்த்துக் கடைமருந்து*
*கூறக் கேளு சீரகமேலம்*
*எரித்தது தானி ருகழஞ்சு*
*யின்ன யியம்பு வகைகேளே* **(49)**

இதனை நெய்ச்சட்டியிலிட்டு அடுப்பேற்றிச் சிவக்க வறுத்து ஒடுமூடி எரித்தெடுக்க அக்கடுகு பொன்னிறமாகும். அதனுடன் சேர்க்க வேண்டிய மேல் மருந்துகளைச் சொல்கிறார். சீரகம், ஏலம் இவை தனித்தனியே வகைக்கு 10 கி வீதம் எடுக்கவும்.

*கேளீர் சாதிக் காய்பத்திரி*
*கிராம்பு சிறுநா கப்பூவும்*
*நீளும் தாளிச பத்திரியும்*
*நிதியு விடைய மதிமதுரம்*
*வாளுங் கருஞ்சீ ரகமுமில*
*வங்கப் பட்டை சதகுப்பை*
*வாழு திரிகடு குடனஞ்சு*
*ராகன் வகைக்கிக் கூட்டிமே* **(50)**

சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, சிறுநாகப்பூ, தாளிசபத்திரி, அதிவிடையம், அதிமதுரம், கருஞ்சீரகம், இலவங்கப்பட்டை, சதகுப்பை, சுக்கு, மிளகு, திப்பிலி இவை வகைக்கு 20 கி வீதமெடுத்துச் சுத்தி செய்து கொள்ளவும்.

*கூட்டு மீரேழு மருந்துங்*
*குறுக்கி நறுக்கி யேயுலர்த்தி*
*நாட்ட முடனே யிடித்துத்*
*தூளாக்கி யதையும் வடிகட்டி*
*வாட்ட மில்லா நெய்சட்டி*
*மகிழ்ந்தே நெய்யில் பொடிகளுடன்*
*சூட்டாய் மூன்று பலச்சீனி*
*கலந்து பொடியில் தூவிடுமே* **(51)**

மேற்கூறிய மருந்துகளை ஒன்றாக்கி நறுக்கி உலர்த்தி இடித்துத் தூளாக்கி சலித்தெடுத்துக் கொள்ளவும். நெய்ச் சட்டியை அடுப்பேற்றி அதில், இந்தப் பொடிகளையும் அதனுடன் 105 கி சீனியையும் சேர்த்துக் கலந்து கிண்டி வரவும்.

*தூவிக் கிண்டி வெதுப்புடனே*
*துணிவா யடுக்கி வண்டுகட்டி*
*ஆவிக் கேற்ற தினம்பார்த்து*
*அப்பா கொட்டைப் பாக்களவு*

*மேவி யிருபோ தென்னஞ்சு*
*தினமே விரும்பிக் கொள்வீராய்*
*கோவித் தெழுந்த பித்தவெட்டைக்*
*கூப்பிட் டோடுங் கண்டாயே.* (52)

நன்றாகக் கிண்டி ஒரு பதமானவுடன் வேடுகட்டி வைத்துக் கொள்ளவும். மருந்துண்ணும் காலம் அறிந்து வேளைக்குக் கொட்டைப் பாக்களவு காலை, மாலை இரண்டு வேளை **40** நாட்கள் தொடர்ந்து உட்கொண்டு வர பித்தவெட்டை நீங்கும்.

*கண்டா யத்திச் சுரம்வெட்டைக்*
*கால்கை யெரிப்பு காந்தலோடு*
*மண்டோ யெளுந்த சூடுமதில்*
*பனைத்த இருமல் புகைச்சலோடு*
*துண்டாய் வந்த சயரோகம்*
*தொட்ட வியாதி யத்தனையும்*
*வண்டா குழலா யயந்தோடும்*
*வச்சிர தேக மாகிடுமே* (53)

அத்திசுரம், வெட்டை, கால்கை எரிச்சல், காந்தல், உடல் சூடு, காங்கை இருமல், புகைச்சல், உடம்பை வருத்துகின்ற சய ரோகம் போன்ற பலவகையான நோய்கள் குணமாகும்.

*ஆக்கிய யிந்த நோய்க்கி*
*அசடில்லைப் பத்தி யங்கள்*
*நீக்கிய புளிக்கசட்டி நிறுத்தி*
*நால மெத்த நன்றுப்*
*போக்கி வேக கொள்வீராகில்*
*பொறுப்பது நெடுநாள் செல்லும்*
*சீக்கிரம் நிமத்தி யாக*
*செய்காந்த லெரிவைக் கேளே.* (54)

மேற்சொன்ன நோய்களுக்கு இந்த மருந்தை உட்கொள்ளும் போது பத்தியம் கடைப் பிடிக்க வேண்டும். புளிப்பு நீக்க வேண்டும். இந்த மருந்தை நீண்ட நாட்கள் உட்கொண்டால் இந்நோய்கள் தீரும். விரையில் நோயிலிருந்து நிவாரணம் கிடைக்கவும், காந்தல், எரிச்சல் நீங்கவும் மருந்து வருமாறு:–

*காந்த லெரிவு யெடுத்ததற்குக்*
*கசாய மொன்று கழறக்கேள்*
*சேர்ந்த மிளகு அறுகம்வேர்*
*சீராய்ச் சமமாய் தாக்கியதிற்*
*பந்த மாக நன்னீர்விட்டு*
*யெட்டொன் றாய்க் குறுக்கியபின்*
*வார்ந்து வடித்து ஆவெண்ணெய்*
*விட்டுக் கொள்ள வாங்கிடுமே* **(55)**

அக்காந்தல் எரிவு நீங்குவதற்கான குடிநீரொன்றைச் சொல்வேன். மிளகு, அறுகன்வேர் இரண்டையும் சம அளவு எடுத்திடித்துத் தண்ணீர் விட்டு எட்டில் ஒன்றாகச் சுருங்கக் காய்ச்சி வார்த்து வடித்து, ஆவின் வெண்ணெய் சேர்த்துக் குடிக்க காந்தல் நீங்கும்.

## சிவதை சூரணம்

*பாரப்பா சிவதைசூ ரணத்தைத் தானும்*
*பாடினோஞ் சிவதையொரு பலந்தா னப்பா*
*பாரப்பா திரிபலையுங் கொத்துமல்லி ரோகணி*
*பகர்தேசா வரம்இந்து செவ்வியம் முத்தக்காசு*
*பாரப்பா திரிகடுகு சீரகங்க ளிரண்டும்*
*பண்பான சிறுநாகம் அன்ன பேதி*
*பாரப்பா விலாமிச்சு வகைக்குமுக் கழஞ்சு*
*பளதேவ தாரமில வங்க பத்திரி* **(56)**

சிவதை 35 கி, திரிபலை, கொத்துமல்லி, கடுகுரோகணி, தேசாவரம், இந்துப்பு, செவ்வியம், முத்தக்காசு, திரிகடுகு, நற்சீரகம், பெருஞ்சீரகம், சிறுநாகப்பூ, அன்னபேதி, விலாமிச்சு இவை வகைக்கு 15 கி சேகரித்துக் கொள்ளவும். தேவதாரம், இலவங்கபத்திரி இவற்றையும் சேகரித்துக் கொள்ளவும்.

*பத்திரியும் கோஷ்டமொடு நல்ல கெந்தம்*
*பரிவான பொரிகாரம் கஸ்தூரி மஞ்சள்*
*முத்தியா சடாமாஞ்சி வாய்வி ளங்கம்*
*முறையாக வகையொன்றுக் கொன்றரையாங் கழஞ்சி*
*இத்தனையும் நாலேழு சிறந்துலர்த்தி யிடித்து*
*என்மகனே வடிகட்டிச் சீனியந் தெடைக்கு*
*அத்தனையும் ஒன்றாகக் கலந்துசூ ரணித்து*
*அருந்துவாய் வெருகடிதான் அபானவாய் வுக்கே* **(57)**

கோட்டம், சந்தனம், பொரிகாரம், கஸ்தூரி மஞ்சள், சடாமாஞ்சில், வாய்விளங்கம் ஆகிய 24 சரக்குகளையும் வகைக்கு 7 கி வீதமெடுத்து ஒன்றாக்கி இடித்து வெள்ளைத்துணியில் சலித்து எடுத்துக் கொள்ளவும். அதே அளவு சீனி சேர்த்துக் கலந்து மூவிரலளவு உட்கொண்டு வர அபான வாயு நீங்கும்.

*வாய்வென்ன பட்டதற்கு தேனிஞ்சிச் சாற்றில்*
*வளமாக ஒருபோது கொள்ளத் தீரும்*
*தேயுமுதல் கலக்கியது பழமல நீர்க்கட்டு*
*தீர்ந்துவிடு மல்லாது தேகசுத்த முண்டாம்*
*நேயமுள்ள போக்காகு மலக்கட் டுவலி*
*நினைவுகெட்ட மாந்தருக்கு நீசெய்ய வேண்டாம்*
*மோயமுள்ள மருந்தெல்லா மடக்க விட்டு*
*மோப்பில்லை யனேகநோய் பறக்குந் தானே* **(58)**

வாயுவிற்குத்தேன், இஞ்சிச்சாற்றில் தினம் ஒரு வேளை சாப்பிட்டு வர நீங்கும் என்பதாம். வாயுவைப் பிரித்து தேங்கியிருந்த

பழ மலத்தை நீக்கி நீர்க்கட்டையும் நீக்கிவிடும். தேகத்தைச் சுத்தம் செய்யும். மலக்கட்டால் ஏற்படும் வலியை நீக்கும். இம்மருந்தைச் சுருக்கமாகச் சொன்னேன். இந்நோய்களை மட்டுமன்றி இது இன்னும் பல நோய்களை நீக்கும் என்பதாம்.

*பறந்திடு பத்தஞ்சுக்குள் பழமலங் கழியும் வாய்வு*
*விளைந்திடு முஷ்ணம் போக்கும் இருமலீ ளைநிற்கும்*
*சிறந்திடும் தேகம் காந்தி செய்திடுந் திமிரை வாங்கும்*
*நிறைந்ததை யுண்டுவந்தா லபினியண்டொட் டாதே* **(59)**

மருந்துண்ட சிறிது நேரத்தில் பழமலங்கழியும். வாயுக்கள் பரியும், உஷ்ணம், ஈளை, இருமல் நீங்கும். தேக காந்தல், உடல் திமிர் இவை விலகும். அபினி, முட்டை இவற்றை நீக்கவும்.

## வில்வாதி லேகியம்

*மகிமைக்கு வில்வாதி லேகி யத்தை*
*வகையாகச் சொல்லுகிறேன் மைந்தா கேளு*
*மகிமையுள்ள வில்வவே ரீரஞ்சு பலந்தான்*
*வாகாக நொறுக்கியே யிருதூணி நீரில்*
*மகிமையுள்ள பாண்டத்தில் விட்டுத்தீயை மூட்டி*
*வளம்பெறவே நாலொன்றாய்க் குறுக்கி வடிகட்டி*
*மகிமையுள்ள சர்க்கரைதா னய்யாறு பலத்தை*
*வத்திநின்ற கசாயத்தில் மாட்டு வாயே.* **(60)**

மகிமைமிக்குள்ள வல்வாதி லேகியத்தை வகையாகச் சொல்லுகிறேன் கேட்பாயாக! வில்வவேர் **350** கி எடுத்து இடித்துத் தூளாக்கிக் கொள்ளவும். இதனைப் பாத்திரத்திலிட்டு **43** லி தண்ணீர் ஊற்றி நான்கிலொன்றாகக் குறுக்கி காய்ச்சி இதனுடன் **1050** கி சர்க்கரை சேர்த்துக் கலக்கிக் கொள்ளவும்.

*மாட்டுவாய் போட்டதிலே கரைத்துக் காய்ச்சு*
*வற்றியது குழம்பாகிப் பாகாய் நிற்கும்*

*மாட்டுவாய் மிளகுப்பொடி செவ்வியம் திப்பிலியும்*
*வகையொன்று படிகாலாய் வகுக்கக் கேளு*
*மாட்டுவாய் ஏலமில வங்கம் இஞ்சி*
*மகத்தான சிறுநாவல் தாளிசபத் திரியே* (61)

கலக்கியதைக் கரைத்துக் காய்ச்சி வற்றிக் குழம்பாக்கிக் கொள்ளவும். மேலும் மிளகுப்பொடி, செவ்வியம், திப்பிலி இவை வகைக்கு 325 மி.லி சேர்த்து ஏலம், இலவங்கம், இஞ்சி, சிறுநாவல், தாளிசபத்திரி இவற்றையும் சேர்த்துக் கொள்க.

*பத்திரியோ டிவையெல்லாம் வகைக்கொரு பலம்தான்*
*பகர்சாதிக் காய்பத்திரி கிராம்புபல மரையாம்*
*இத்தனையும் காயவைத்துத் தூளா யாட்டி*
*இயல்பான சாபாகியது பருவம் குழம்பாய்*
*வத்திவரும் பதத்திலே கடைமருந்துத் தூளை*
*வடிகட்டித் தூவியதை யளவாய்க் கிண்டு*
*வெத்தியாம் லேகியமதில் தேன்நெய் வார்த்து*
*விட்டிடுவா யாழாக்கு விரவியதைக் கிண்டே.* (62)

பத்திரியுடனான எல்லாப் பொருட்களையும் வகைக்கு 35 கி வீதமெடுத்து, சாதிக்காய், பத்திரி, கிராம்பு இவை வகைக்கு 18 கி எடுத்து எல்லாவற்றையும் காயவைத்துத் தூளாக்கிக் கொண்டு அடுப்பேற்றிக் குழம்பு பதத்தில் இறக்கிக் கொள்ளவும். கடை மருந்துகளைத் தூவிக்கிண்டி தேன், நெய்விட்டுக் கிண்டி இலேகியம் இறக்கிக் கொள்ளவும்.

*கிண்டிய லேகியந்தான் உண்ணக் கேளு*
*கேடில்லை பாக்களவு அந்தி சந்தி*
*கிண்டிய லேகியமருந்து வயிற்றுவலி குன்மம்*
*கிண்கிணித்த யிருமலொடு யீளை காசம்*
*கிண்டிய லேகியத்தில் நெஞ்செரிப்பு வாய்வு*
*கிராணியதி சாரமொடு பித்தம்கா மாலை*

*கிண்டிய லேகியத்தால் தேக காந்தல்*
*சீயிதாம் சோபமொடு வாததொந் திப்பே* **(63)**

கொட்டைப் பாக்களவு காலை, மாலை உண்டுவர வயிற்று வலி, குன்மம், இருமல், ஈளை, காசம், நெஞ்செரிப்பு, வாயு, கிராணி, அதிசாரம், பித்தம், காமாலை, உடல் காந்தல், சோபம், வாதம் நீங்கும்.

*தொந்தித்த பலரோகம் உஷ்ண ரோகம்*
*சோபமொடு விஷப்பாண்டு சுரங்களுப் பிசங்கள்*
*தொந்தித்த வயிற்றுளைச்சல் தோசம் வாந்தி*
*துடர்ச்சியாய் வருத்தமொடு பித்த ரோகம்*
*தொந்தித்த நீரேற்றம் வீக்கமலக் கட்டுந்*
*துலையாத தலைநோவுந் துயர்தீர மண்டலங்கொள்* **(64)**

பலவகையான நோய்கள் உட்டிணரோகம், சோபம், விஷப் பாண்டு, சுரங்கள், உப்பிசங்கள், வயிற்றுளைச்சல், தோஷம், வாந்தி, பித்தநோய்கள், நீரேற்றம், வீக்கம், மலக்கட்டு, தலைநோய் இவை நீங்குவதற்கு 40 நாட்கள் தொடர்ந்து இந்த மருந்தை உட்கொள்ள வேண்டும்.

## சுவாசக்குடோரி சூரணம்

*சூரணமாஞ் சுவாசமென்ற குடோரி தன்னை*
*சூட்டுகிறேன் திரிகடுகு சிற்ற ரத்தை*
*சூரணமா மக்கிரா காரம்வால் மிளகு*
*சொல்லரிய தோவரம் பொரிகா ரம்சமன்*
*சூரணமாந் தாளிசபத்திரி ரட்டி கூட்டி*
*சூரிய புடத்துலர்த்தித் தூளா யாட்டி*
*சூரணமாம் வடிகட்டி கலந்துபுதுக் கலசத்*
*தூட்டுவாய் அனுபானம் சொல்லக் கேளே* **(65)**

சுவாசத்திற்குத் துணை நிற்கின்ற சுவாசக்குடோரி

சூரணத்தைச் சொல்வேன். திரிகடுகு, சிற்றரத்தை, அக்கிராகாரம், வால்மிளகு, தேசாவரம், பொரிகாரம் சமன் சேர்க்கவும். தாளிச பத்திரி இரண்டு மடங்கு கூட்டி அனைத்தையும் சூரிய ஒளியிலிட்டு உலர்த்தவும். மெல்லிய துணி கொண்டு சலித்துக் கலந்து புதுக் கலசத்தில் வைக்கவும்.

*சொல்லக்கே ளனுபானம் தேனிஞ்சிச் சாற்றில்*
*சுகமான நறுநெய்யுஞ் சுட்டப் பாரு*
*சொல்லக்கேள் தீர்க்கிற தென்ன வென்றால்*
*சுவாசமென்ற தொண்ணூற் றாறும் போகும்*
*வொல்லக்கே ளீளையோ டிருமல் காசம்*
*சூட்டுவெட்டை தாகமுதல் தூளாய்ப் போகும்*
*சொல்லக்கே ளிதற்கேற்ற செந்தூர மிருந்தால்*
*தொல்லைவினை விழுந்தோடும் சுருதி தானே* (66)

இம்மருந்துண்பதற்கு அனுபானமாகத் தேனிஞ்சிச் சாற்றையும் தூய்மையான நெய்யையும் வழங்கலாம். இதனால் தொண்ணூற்றாறு வகை சுவாச நோய்கள் யாவும் தீரும். ஈளை, இருமல், சுவாசகாசம், சூட்டுவெட்டை, தாகம் போன்றவை நீங்கும்.

## அசுவகெந்தாதிச்சூரணம்

*அறிவா லரிய அசுவகெந் தாதிச்*
*சூரணந் தன்னை அறையக்கேள்*
*பிரிவால் வந்த பலரோகம்*
*போகும் படிக்கே அமுக்குராவேர்*
*குரியா யிடித்து வடிகட்டி*
*கூட்டு மருந்து திரிகடுகு*
*நெரியாஞ் சாதிக் காய்பத்திரி*
*நீதி மதுரம் கிராம்பாமே.* (67)

பலவகையான நோய்களை நீக்குகின்ற அசுவ கெந்தாதிச்

சூரணத்தைச் சொல்கின்றார். அமுக்குராவேர் எடுத்து வெயிலில் உலர்த்திப் பொடித்து வடிகட்டிக் கொள்ள வேண்டும். கூட்டு மருந்தாக திரிகடுகு, சாதிக்காய், சாதிபத்திரி, அதிமதுரம், கிராம்பு போன்றவற்றை வகைக்கு 15 கி சேகரிக்கவும்.

*ஆமே கடுகு ரோகணியும்*
*அசம தாகம் குரோசாணி*
*ஆமே வகைக்கு முக்கழஞ்சு*
*யனலில் வெதுப்பித் தூளாக்கி*
*ஆமே யிருவத் தஞ்சுகழஞ்சி*
*அதிக சீனி மிகவொக்க*
*ஆமே ரட்டி அமுக்குராவேர்*
*பொடியுஞ் சேர்சூ ரணமாச்சே* **(68)**

கடுகுரோகிணி, அசமதாகம், குரோசாணிஓமம் இவையும் வகைக்கு 15 கி. எடுத்து அனலில் வெதுப்பித் தூளாக்கிக் கொள்ளவும். இதனுடன் 125கி சீனி சேர்த்து மேற்சொன்ன அமுக்குராவேர்ப் பொடி 250 கி சேர்த்துச் சூரணமாக்கிக் கொள்ளவும்.

*சூரணமாச் சதிலே வெருகடி நெய்யில்*
*துடர்ந்துயிரு போதுஒரு மண்டலந்தா னுண்ண*
*காரணமாய் வறண்டுவற்றி இருந்த தேகம்*
*கனத்தவுடல் பூரித்தே பறக்கு மப்பா*
*பூரணமாய் பூரித்துத் தூளித் தோர்க்குப்*
*பூட்டடா தேனிலே மண்டலந்தா னருந்து*
*வாரணமாய் பித்தமொடு பாண்டு தீர*
*வாளமேதி புளியாத மோரி லூட்டே* **(69)**

இந்தச் சூரணத்தில் மூவிரலளவு, நெய்யில் குழப்பித் தொடர்ந்து காலை, மாலை இருவேளை, 40 நாட்கள் உண்டு வர வறண்டு வற்றிக் காணப்பட்ட உடம்பானது கனத்த உடல்போல்

பூரித்துச் செழித்திருக்கும். தேனில் 40 நாட்கள் சாப்பிட்டு வந்தால் பூரித்த உடம்பு இளைக்கும். பித்தத்தோடு பாண்டுநோய் தீர்வதற்கு புளிக்காத எருமைமோரில் சாப்பிட்டு வரவும்.

*ஊட்டடா எலிக்கடிக்கிப் பசுவின் நீரில்*
*ஒடுங்காத சிறியவிசந் தேளுக்குவேப் பெண்ணெய்*
*பூட்டடா உட்கொண்டு மேலும் பூச*
*பொல்லாத யீளையோடு சோகை தீர*
*மூட்டடா வெள்ளாட்டு நீரி லேதான்*
*மிகுந்தபெரும் பாட்டுக் கெள்ளெண்ணெய் வெல்லம்*
*நீட்டடா விரியனுக்கு வெந்நீரி லூட்டு*
*நிகலவே பூசிடவே நின்று போமே* **(70)**

இந்தச் சூரணத்தைக் கோமியத்தில் வழங்கிட எலிக்கடி, விஷம் நீங்கும். சிறு விசக்கடிகளுக்கும், தேளுக்கும் வேப்பெண்ணெயில் கலந்து கொடுக்கலாம். மேலுக்கும் பூசலாம். ஈளையோடு சோகை தீருவதற்கு வெள்ளாட்டு மூத்திரத்தில் வழங்கலாம். பெரும்பாட்டிற்கு நல்லெண்ணெயிலும், வெல்லத்திலும் வழங்கலாம். விரியன் கடிக்கு வெந்நீரில் ஊட்டலாம்.

## பலாசு சூரணம்

*ஆமப்பா பலாசு சூரணத்தை*
*யரையக் கேளு புலத்தியனே*
*ஆமப்பா முந்திரிகை பேரீந்து*
*மக்கிரா அதிமதூரம் கோஷ்டம்*
*கொத்தமல்லி யமுக்கிரா வேர்*
*சடாமாஞ்சி யாமில மிலவங்க*
*பத்திரி பட்டை யரத்தை யெட்டே*

----------------------------------- **(71)**

பலாசு சூரணம் சொல்கிறார். முந்திரிகை, பேரீச்சம்பழம், அக்கிராகாரம், அதிமதூரம், கோட்டம், கொத்துமல்லி, அமுக்குரா வேர்,

சடாமாஞ்சில், புளியாரை, இலவங்கம், இலவங்கப்பத்திரி, இலவங்கப் பட்டை, அரத்தை இவற்றையெல்லாம் வகைக்கு **5கி** சேகரித்துக் கொள்ளவும்.

*எட்டாஞ் சாதிக் காய்பத்திரி*
*கிராம்பு இருசீ ரகமோடு*
*எட்டா திரிபாலை திரிகடுகு*
*இனிய தாளிச பத்திரியும்*
*எட்டாத சிறுநா கப்பூ*
*விலாமிச்சு வேர்வால் மிளகு*
*எட்டாஞ் செவ்வியம் நன்னாரி*
*கீழ்க்காய் நெல்லி நெற்பொரியே.* **(72)**

சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, நற்சீரகம், பெருஞ்சீரகம், திரிபலை, திரிகடுகு, தாளிசபத்திரி, சிறுநாகப்பூ, விலாமிச்சுவேர், வால்மிளகு, செவ்வியம், நன்னாரிவேர், கீழ்க்காய்நெல்லி, நெற்பொரி போன்றவற்றையும் வகைக்கு **5கி** சேகரித்துக் கொள்ளவும்.

*பொரிசித் தரத்தை நல்கெந்தம்*
*புகழ்சேர் வெட்டி வேர்தகர*
*மரிதார திப்பிலி மூலமொடு*
*யசம தாகங் குரோசாணி*
*விரிவா மாதுளம் பழத்தோடு*
*மென்மை பெறுதக் கோல மல்லால்*
*நெரிதல் கூகைநீறு முத்தக் காசுஞ்*
*சமனாய் சேர கழஞ்சே* **(73)**

சித்தரத்தை, தூய்மையான சந்தனம், வெட்டிவேர், தகரம், அரிதாரம், திப்பிலிமூலம், அசமதாகம், குரோசாணி, மாதுளம்பழத்தோல், தக்கோலம், கூகைநீறு, முத்தக்காசு இவற்றையெல்லாம் வகைக்கு **5கி.** வீதமெடுத்துக் கொள்ளவும்.

*சேர கழஞ்சாய்க் காயவைத்து*
*இடித்துத் தூளாய் வடிசெய்து*
*கார முடைய வங்காளச் சீனி*
*சமனாய்க் கலந்த பின்பு*
*சார முடனே புதுக்கலசந்*
*தன்னி லடக்கி யனுபானம்*
*நேர மறிந்து தேனிஞ்சாறு*
*மருந்த நோய் ஓடிடுமே* **(74)**

இவற்றையெல்லாம் இடித்துத் தூளாக்கி மெல்லிய துணியிலிட்டுச் சலித்துக் கொண்டு அதே அளவிற்கு வங்காளச் சீனி சேர்த்துக் கொண்டு ஒன்றாகக் கலந்து ஒரு புதிய கலசத்தில் அடக்கி வைத்துக் கொள்ளவும். இதைச் சாப்பிடுவதற்கு அனுபானமாகத் தேனும், இஞ்சிச் சாறும் கொள்ளலாம்.

*இடுமே லந்திசந்தி வெருகடியாய் மண்டல மிணங்கக்*
*கொடுயதினாற் குணங்கேளு குமட்டுவாந்தி நெஞ்செரிப்பு*
*விடுமே அத்திசுர மேகந்தானு நாட்டமுதல்*
*படுமே ஈளை இருமலோடு சூடும் பனைப்பும் பறந்திடுமே*
**(75)**

வேளைக்கு மூவிரலளவு, காலை, மாலை இரண்டு வேளை தொடர்ந்து **40** நாட்கள் உட்கொண்டு வர வாந்தி, நெஞ்செரிப்பு, அத்தி சுரம், மேகம், ஈளை, இருமல், உடல்சூடு போன்ற அனைத்து நோய்களும் நீங்கிவிடும் என்பதாம்.

## இரசப் பதங்கம்

*வாங்கிவைத்து சுருக்குமெத்த ரசகற் பூரம்*
*வைப்பறிந்தால் வாதியவன் மானுட்டே யில்லை*
*தாங்கியிந்த கற்பூரம் நோய்கட் கீந்தால்*
*தணுகாது வாயுகட் டாது கெற்பம்*

*தாங்கியாய் செய்தவரை வைத்தியஞ் செய்வான்*
*பாரதினில் சொல்லுகிறோம் பகலப் போக்கு*
*பொங்கிநின்ற ரசமதுதான் பலமோ ரெண்டு*
*முற்றகெந்தி அரிதாரம் வெள்ளை வீரம்* (76)

இரசப்பதங்கம் சுருக்குக் கொடுத்து பயன்படுத்துகின்ற இரசகற்பூர வைப்பு அறிந்தால் அவன் இரச வாதியாவான். இம்மருந்தைப் பயன்படுத்துவதால் நோய்கள் அணுகாது, வாயு சேராது. இம்மருந்தின் மகிமை அறிந்தவன் மருத்துவம் செய்வான். இரசம் 70 கி எடுக்கவும். கெந்தகம், அரிதாரம், வெள்ளைப் பாடாணம், வீரம் இவை வகைக்கு 10 கி. சேகரிக்கவும்.

*வெள்ளையென்ற வீரமுடன் துருசு காந்தம்*
*வேசமஞ்சள் கௌரிலிங்கம் மனோசிலையும் நேராய்க்*
*கொள்ளையப்பா பத்துவகை மருந்தொன் றுக்கு*
*கூறுவேன் கழஞ்சிரெண்டாய் நிறுத்திக் கல்வம்*
*பிள்ளையுந்தாய் பொருந்தினாப்போல் தாளிரே உப்பில்*
*மான்தாளி யொன்றிலுப் பரைத்துச் சேர்மின்*
*உள்ளைவிர வஞ்சதுதான் சேர்மினடு மைய்ய*
*முத்தமனே கல்வந்த தொட்டுமருந் தரையே* (77)

துருசு, காந்தம், மஞ்சள், கௌரிலிங்கம், மனோசிலை என்ற 10 வகை மருந்துகளையும் ஒவ்வொன்றையும் 10 கி எடுத்துக் கொள்ளவும். இவற்றையெல்லாம் சுத்தம் செய்து கல்வத்திலிட்டு அரைத்தெடுத்துக் கொள்ளவும். உப்பு சேர்த்தரைத்த இந்தப் பற்பத்தை உப்புச் சேர்த்துச் சாப்பிட்டு வரவேண்டும்.

*அரைக்கவுமோ வெண்கருவை அரைக்க லொன்றிவிட்டு*
*அரக்கம்பால் துளிவிட்டால் தெளிந்துசில மாகுங்*
*கரைக்கவோ கல்வத்திலிட்டாட்டிக் குகையுஞ் சில்லுங்*
*கனமாகச் செய்துலர்த்தி உப்பில்நடுவில் வைத்து*

*துரைக்கவோஞ் சூதமதை யதினிலிட்டு தூரந்*
*தீராமல் சில்லுமூடி தூசியில்லா துப்பை*
*நிரைக்க மணியாய் கொளித்தி நின்ற*
*குகைமேலே யெட்டங்குலம் நீகவிழ்த்தி மூடே* **(78)**

இதனைக் கல்வத்திலிட்டு அரைக்கும் போது முட்டை வெண் கருவை இட்டு அரைக்கவும். எருக்கம்பால் துளி சேர்த்தால் இது தெளிந்து நீர்போலாகும். மீண்டும் நன்றாகக் கல்வத்திலிட்டு ஆட்டிக் குகை செய்து கனமாக சில்லுமூடிக் கொள்ளலாம். உப்பைக் கொட்டி உப்பின் நடுவில் இதை வைத்து உப்பை மேலே கொட்டி சில்லுமூடி எட்டு அங்குலம் வரை வைத்து மூடிக் கொள்ளவும்.

*மூடுகின்ற கார்கரிப்பான் சாறு பூசி*
*முறையாக அஞ்சுதர மூலத்தில் நன்றாய் மூடி*
*சாடிப்புகைந் தெரிந்திடாமல் சந்து வாய்க்கு*
*மண்ணைச் சவ்வாதுபோல் மண்ணைப் பூசி*
*உலர்த்தியெடு வாவடுப்பி லேற்றி ஆனிஆடி*
*ஆவணி புரட்டாசி மாசியு மாகும்*
*அப்பனே எடுத்துமுரைக்கிது மாதம் நாலே*

*நாலெனவே சாமமெரி முத்தீயு மட்டா*
*நன்றாக கற்பூரங் கழுநீர் போலாம்*
*பாலெனவே வெண்மை சிவப்பாகும் நிரபதனமா*
*விரக்கிப் பன்றிமூடி யினாலே வழித்துக்*
*காலனையுங் கசக்கி மெள்ளக் குடித்துவிடும்.*
*காலாந்த கௌரிரசம் கற்பூரங் கழஞ்சே* **(79)**

குகையின் மீது கார்கரிப்பான் சாற்றைப்பூசி 5 முறை தனித் தனியே நன்றாக மூடிக்கொள்ளவும். வெளியே புகை வராமலிருக்கு மாறு சந்து வாய் மூடி சீலை மண் செய்து மூடிக் கொள்ளவும். உலர்த்தி எடுத்த பின் அடுப்பிலேற்றி எரித்து இறக்கி ஆடி முதல் மாசி வரையிலான ஒன்பது மாதங்கள் விட்டுப் பின்னர் ஒரு விறகு,

இருவிறகு, மூன்று விறகினால் 3 மணி நேரம் எரித்துக் கொள்ள கற்பூரம் கழுநீர்ப் போலாகும். வெண்மையான இரசகற்பூரம் சிவப்பாக மாறும். அதனை எடுத்துப் பத்திரப்படுத்திக் கொள்ளவும். இதனுடன் கௌரிரசம், கற்பூரம் 5 கி. சேர்க்கவும்.

*கழஞ்சிரெண்டு யெடுத்துமைப்போ லாட்டி தேனிற்*
*கறுப்புக்கட்டி சர்க்கரையாம் வெண்ணெய்பொரி மாவில்*
*சலந்திரண்டு பொடுவருந்த வகையாய்ப் பூசசூலை*
*தாருமாறா வெடித்தகுட்டந் தள்ளி விட்டால்*
*வளைஞ்சவில் போல்கூன் முடக்கு வயிற்றுவலி*
*குன்மம்வாத விசநீரால் தடிப்புப் பற்றுதிரியும்*
*விளைஞ்சுதடா நோய்தீர்க்கும் விவர மெத்த*
*விளையான வயித்தியர்க்கு விதித்த நூலே* **(80)**

இம்மருந்தில் 10 கி எடுத்து மைபோலாட்டி அதில் 488 மி.கி அளவெடுத்து தேன், கருப்பட்டி, சர்க்கரை இவை ஏதேனும் ஒன்றில் கலந்து சாப்பிடவும். வெண்ணெய், பொரிமா, இவற்றுடன் தண்ணீர் சேர்த்துப் பூசி வர சூலை, வெடித்த குட்டப்புண் ஆறும். கூன் போடுதல், வயிற்றுவலி, குன்மம், வாதம், தடிப்பு போன்ற பல நோய்கள் நீங்கும் என்பது மருத்துவ நூலோர் சொன்னதாகும்.

## நீலகண்ட வாலை பதங்கம்

*திறமான பதங்கியொன்று சொல்லக் கேளு*
*சித்தர்செய்வார் ரிசிகள்செய்வார் மற்றோர் காணார்*
*நிறமான லிங்கமது குப்பி யாக*
*நிறுத்திடுவாய் நாலுபலம் நறுக்கிக் கட்டி*
*அறமான முலைப்பாலைச் சுக்குத் தாக்கு*
*அனல்முகத்தில் கால்படியு மான பின்பு*
*கரமான தாளிரெண்டி லொன்றுக் குள்ளே*
*தனில்மூலச் சித்திரமென்று சாறு பூசே.* **(81)**

நீலகண்ட வாலை எனும் பதங்கத்தை இனிச் சொல்வேன். சித்தர்கள் செய்வார்கள்; ரிஷிகள் செய்வார்கள்; மற்றோர் அறியார். லிங்கத்தைக் குப்பியாக நிறுத்தி **140** கி. எடுத்துக் கொள்ளவும். இதனைத் தாய்ப்பால் விட்டு சுருக்குக் கொடுத்து அனல் முகத்தில் காட்டவும். **325** மி.லியும் எரித்தவுடன் கொடிவேலிச் சாற்றைப் பூசவும்.

*பூசிடுவாய் ஏழுதிரம் பொட்டில் லாமல்*
*புத்தோடு முப்புச்சம னிடித்து மைபோல்*
*வாசிபெற தாளிக்குள் கோதைந்து செம்மி*
*வலுவான சித்திரமூலிப் பொடியுந் தூவி*
*காசிபுக ளினச்சரக்கு அரிதாரம் வீரங்*
*கடியகெந்தி மனோசிலையுங் கற்பூரம் ரெண்டு*
*தோசியனா வயித்தியற்குச் சொல்லப் போமோ*
*துருசுவெள்ளை கெளரிசீன துத்த நாகம்* **(82)**

இவ்வாறு ஏழுதரம் பூசி, முப்பு இதே அளவு சேர்த்து இடித்து மைபோலாட்டி தாளிக்குள் வைத்து சித்திர மூலிப்பொடியை மேலே தூவவும். அரிதாரம், வீரம், கெந்தி, மனோசிலை, கற்பூரம், துருசு, வெள்ளை, கெளரி, சீனம், துத்தநாகம் இவற்றைச் சேகரித்துக் கொள்ளவும்.

*நாகமுடன் வங்கவெடி யுப்புஉவ ருப்பு*
*நலமான சூடன்பதி னஞ்சு மொக்க*
*பாகமுடன் சரிசமனாய் கழஞ்சி ரெண்டாய்*
*பழச்சாற்றி லாட்டிமெள்ளப் பருமணியா யுலர்த்தி*
*வேகமுடன் சுருக்கெரித்த லிங்கத்தில் விரவி*
*வெத்தி பெருந்தாளியுப்பில் வேர்பொடியின் மேலே*
*தாகமுடன் பரத்திநன்றாய் தனியுப்பை மணியாய்*
*தைவளைச் சாற்றால் விரவித்தாளி கொண்டு மூட்டே*
**(83)**

நாகம், வங்கம், வெடியுப்பு, உவருப்பு, சூடன் ஆகிய

பதினைந்தையும் வகைக்கு **10** கி எடுத்துக் கொண்டு எலுமிச்சம் பழச்சாற்றாலாட்டி எடுத்து மணியளவு உருண்டைகளாகச் செய்து நிழலில் உலர்த்தி, நாம் முன்சொன்ன லிங்கத்துடன் சேர்க்கவும். பெருந்தாளியுப்புப் பொடியைத் தைவேளைச் சாற்றில் ஆட்டி தாளியில் பூசிக் கொள்ளவும்.

*மூட்டுவாய் முன்பூசி யுலர்ந்த தாளி*
*மூவிரண்டு மொன்றுமண் செய்துலர்த்திக் கொண்டு*
*காட்டுவாய் அடுப்பேற்றி காடாக்கியா மிரண்டு*
*சமையாக கமலமிரண்டு தீப மிரண்டு*
*போட்டிடுவாய் அடுப்போடே யெரித்த சாமம்*
*பூசைபண்ணி திறந்துபார் நீலகண்ட வாலை*
*கூட்டிடுவாய் பன்றிமுடிக் கருஞ்சி வப்பாங்*
*குருவிதுதான் செனியாது குழம்பைக் கேளே* **(84)**

பூசியபின் தாளியை உலரவிட்டு எடுத்து **6** சீலை மண் செய்து கொண்டு அடுப்பேற்றி, மூன்று விறகினால் **6** மணி நேரம் எரித்துப் பின்னர் இரண்டு விறகினால் **6** மணி நேரமும், ஒரு விறகினால் **6** மணி நேரமும் எரித்து முடிந்த பின்னர் ஆறவிட்டுப் பூசை செய்து எடுத்துப் பார்க்க நீலகண்டவாலை கருஞ்சிவப்பாய்க் காணப்படும். அதனைப் பன்றி முடியினால் ஆன முடிச்சால் திரட்டிப் பரணில் வைக்கவும். குருவைப் போற்றி நான் இனிச் சொல்லும் குழம்பைக் கேட்டுக் கொள்வாயாக.

## குழம்பு

*குழம்பென்ன சேங்கொட்டை பரங்கிப் பட்டை*
*கூர்முளையாம் பிரப்பம்வேர் வகையொன் றுக்கு*
*விளம்பினேன் பலமொன்று இடித்து மைப்போல்*
*விட்டுரைப்பாய் ஆவிநெய்யை மெழுகது போலே*
*தளம்பினமாம் பச்சரி திரித்துக் கொண்டு*
*தாரணியில் நோயாளிக் கீயும் போது*

*பழங்கனிந்த போலாகுங் குழம்பு காகப்*
*பாருநீ வெற்றிலையில் வைத்து மாவே* **(85)**

சேங்கொட்டை, பரங்கிப்பட்டை, பிரப்பம்வேர் இவை வகையொன்றிற்கு 35 கி. வீதமெடுத்து இடித்துத் தூளாக்கிக் கொள்ளவும். ஆவின் நெய்விட்டு மெழுகு பதத்தில் காய்ச்சிக் கொள்ளவும். உலகத்தில் நோயாளிகளுக்கு வழங்கும்போது பழங்கனிந்திருந்தது போலுள்ள இக்குழம்பை வெற்றிலையில் வைத்து வழங்கவும்.

*மாவுமொரு காசிடைதான் பணவிடைதான் கற்பூர*
*மத்தித்து நாக்குநா லெடுத்துக் கொண்டு*
*பாவுபோல் பத்தியங்கார் புளியு முப்பும்*
*பகும்ரத்தம் வென்னீரைப் பருகிக் கொண்டு*
*நாவிரங்க ஆவிநெய்யும் மோரும் பாலும்*
*நலமான வென்னீரு மன்னப் பாலும்*
*தூவிதிர மனைத்துளிபோல் வாசங் கொண்டு*
*சூட்டயிலே பத்தியங்கேள் உப்பைக் கூட்டே* **(86)**

இம்மருந்தை வேளைக்கு 488 மி.கி வீதம் கற்பூரத்தில் மத்தித்துக் கொண்டு உட்கொள்ள வேண்டும். மருந்துண்ணும் காலத்தில் உப்பு, புளி நீக்கவும். சுடுநீரை அதிகமாகச் சாப்பிட்டு வரவும். பசுவின் பால், மோர், வென்னீர், சோறு வடி கஞ்சி இவற்றைச் சேர்க்கலாம். பத்தியம் முடியும்போது உப்பைக் கூட்டலாம்.

*கூட்டுவது கற்பூரம் வெந்த உப்பை*
*கொடுமையடா காரமேற சுண்ண மாச்சு*
*காட்டுவது கறிவகைக்குக் காலதிட்ட மாமே*
*கசண்டாளம் புகையிலையும் புளியுந் தள்ளி*
*பூட்டுவது வயித்தியனே ஆனால் கேளு*
*யுத்தபிரம் மாவென்றே நூல்கள் சொல்லும்*

*ஏட்டில்வைத்து செய்யனால் மகஷ்த்தாப்பாவ*
*மென்னசென்ம விதியாளிக்கே விதியைப் பாரே* **(87)**

கற்பூரத்தில் வெந்த உப்பானது காரங்கூடிய சுண்ணமாச்சு. கறிவகைகளும் அறிந்து நீக்கிக் கொள்ளவும். புகையிலையும், புளியும் தள்ளி இம்மருந்தை உட்கொள்ளலாம். மருத்துவனே ஆனாலும் எல்லாரும் இதைச் சொல்ல மாட்டார்கள். நான் வியாதிக்கு விதி சொன்னேன் கண்டுணர்வாயாக.

*வள்ளமருந்துக்குத் தீருநோயை வயிற்றி லடங்காது*
*வருநூலென்று பேரான வியாதி யென்ன*
*பெருநீரெரி பித்தவாதஞ் சிலேற்பனமு மதற்குள்*
*வீழ்ந்துசேராத தசையெலும்பு ரத்தம் வெந்து*
*தீச்சுட்டால் போல்விரல்கள் புண்ணு மாகி*
*தீராத வியாதியென்பான் நோய்க ளெல்லாந்*
*திமிரெரிப் புணர்ச்சையற்று தடிப்பு வீழ்ந்தே*
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . **(88)**

இந்த மருந்து தீர்க்கும் நோய்கள் அனேகமாகும். பெரு நீரெரிச்சல், பித்தவாதம், சிலேற்பனம், தசை, எலும்பு, இரத்தம் இவை வெப்பமடைந்து தீச்சுட்டது போல் விரல்கள் புண்ணாதல், திமிர், எரிப்பு, தடிப்பு போன்றவை நீங்கும்.

*தடித்திடத்தில் சொறிவெடுக்கும் புண்ணாம் பின்பு*
*தலைமுறையாங் குட்டமென்பார் கிரந்தி யென்பார்*
*வெடித்தசூலை பதினெட்டுக்குங் குட்டம்பதி னெட்டும்*
*விரிபத்து வெள்ளையோடு கருப்பு மெட்டும்*
*படித்துரைக்கு அடிபிடித்து லருளை போலே*
*பஞ்சிட்டுப் பாரம்வைத்தாற் போலாம் நோய்கள்*
*அடிப்பட்டையில் தண்ணீர்நின்று நீருற் றேற்று*
*அழகான சுவற்விழுந்த லாறு தானே.* **(89)**

தடித்த இடத்தில் சொறிவெடுக்கும்; அவற்றில் புண்ணாகும். அதனைக் குட்டம், கிரந்தி என்பர். சூலை பதினெட்டும், குட்டம் பதினெட்டும், வெண்குட்டம் பத்தும், கருங்குட்டம் எட்டும் போன்ற அனைத்தும் பஞ்சை வைத்து அதன் மேலே பாரத்தை வைத்தது போன்று நோய்கள் அகலும் என்பதாம்.

## கற்பூரச்சூரணம்

*தானென்ற மருந்துகொள்ளும் நோய்க ளெல்லாம்*
*தவிடுபொடி யாக்கிவிடு கற்பூ ரங்கள்*
*தேனென்ற கற்பூரங் கூட்டிக் கொள்ள*
*திறமான சூரணத்தைச் செப்பக் கேளு*
*பானென்ற பட்டைபத்து லேசாய் வாங்கி*
*பச்சையிஞ்சி சாறதனி லூறப் போட்டு*
*கானென்ற கற்பூர வள்ளிச் சாறும்*
*கரந்தைகுப்பை மேனியோடு தைவேளையின் சாறே* **(90)**

பலவகையான நோய்களைத் தவிடு பொடியாக்கி விடும் தன்மை கொண்ட கற்பூர சூரணத்தைச் சொல்கின்றார். மெல்லிய பட்டையாக இருக்கின்ற கற்பூரத்தை 10 எடுத்து பச்சை இஞ்சிச் சாற்றிலும், கற்பூரவள்ளிசாற்றிலும், கரந்தைச்சாற்றிலும் குப்பைமேனிச் சாற்றிலும், தைவேளைசாற்றிலும் ஊறவிட்டெடுத்துக் கொள்ள வேண்டும்.

*சாறென்ற தஞ்சுவகைக் கரைப்படியாய் விட்டு*
*தனித்தனியே யுலர்ந்தபின்பு மிளகுபலம் பத்து*
*வாறென்ற அமுரியோடு கோமூத்திர கரைப்பான்*
*வரிக்குமட்டி வெள்ளாட்டின் நீருடனே யஞ்சும்*
*பாரென்ன ரெண்டுவகைக் கிப்படியே யரைப்பாய்*
*வெவ்வேறேப் பருமிளகு விட்டுவர பருவமானால்*
*வேறென்றேன் சித்திரமூலியின் சங்கு கச்சல்*
*வீழிசங்கங் குப்பியோடு வகைக்கு அஞ்சே* **(91)**

மேற்சொன்ன சாறுகள் ஐந்தையும் வகைக்கு **650** மி.லி வீதமெடுத்து, உலர்த்தி பின் மிளகு **350** கி சேர்த்துக் கொள்ளவும். சிறுநீர், கோமியம், வரிக்கும்மட்டி, வெள்ளாட்டு நீர், கரிசாலை இவற்றால் முறையே தனித்தனியே அரைத்துக் கொள்ளவும். நல்ல பக்குவம் அடைந்த பின்னர் சித்திரமூலி, சங்கு, கச்சல், சுக்கு, வீழி, சங்கங் குப்பி இவை வகைக்கு ஐந்து பங்காக எடுத்துக் கொள்ளவும்.

*அஞ்சாமல் தரித்திடித்து உலர்த்தி வெவ்வேர்,*
*அதிமதுரந் திப்பிலியு மக்கிரா காரம்*
*பஞ்சாத சடாமாஞ்சி அரத்தை யேலம்*
*பத்திரியுஞ் சாதிக்காய் கிராம்பு ஓமம்*
*துஞ்சாதே வால்மிளகு நறுக்கு மூலம்*
*துடருமிரு சீரகமுஞ் சுக்கு நேராய்*
*மிஞ்சாமல் வகைக்கிக்கால் பலமே கூட்டி*
*மேலான மருந்துரெண்டு யிடித்துத் தூளே* **(92)**

இவற்றைத் தரித்து இடித்து உலர்த்திப் பொடித்துக் கொள்ளவும். அதிமதுரம், திப்பிலி, அக்கிராகாரம், சடாமாஞ்சில், அரத்தை, ஏலம், பத்திரி, சாதிக்காய், கிராம்பு, ஓமம், வால்மிளகு, நறுக்குமூலம், நற்சீரகம், பெருஞ்சீரகம், சுக்கு இவை வகைக்கு **9** கி வீதம் கூட்டி இடித்துத் தூளாக்கிக் கொள்ளவும்.

*தூளாக யிடித்துவடி கட்டிக் கொண்டு*
*துய்யாவின் நெய்கழஞ்சு சூரணத்தைச் சேரு*
*தாளாதே வெருகடியைப் பிரட்டிப் பூரந்*
*தனிப்பழம்போல் வைத்துலர்த்தி கொண்டா யானால்*
*பாளான வியாதியெல்லாம் பறந்து போகும்*
*பரப்பிரம்ம யிட்டவியாதி யெல்லாம் வேறு*
*கோளாவ தொன்றுமில்லை குட்டம் சூலை*
*குடிகெடுத்த குன்மம்வாய்வு முற்றும் போமே.* **(93)**

இடித்ததை மெல்லிய துணியில் சலித்துக்கொண்டு பசு நெய் 5 கி சேர்த்துப் பிசைந்து மூவிரலளவு உருண்டைகளாக உருட்டித் தனித்தனியே உலர்த்திக் கொள்ளவும். இதனை முறைப்படி உண்டு வர, பலவிதமான நோய்கள் நம்மை விட்டகலும். குட்டம், சூலை, குன்மம், வாயு போன்றன நீங்கும்.

*போகுமே வாதமென்ற முடக்குத் தீரும்*
*பொல்லாத கிரந்திபுகை கரப்பான் வண்டு*
*சாகுமே நீராம்ப லிங்கச் சூலைத்*
*தணியாத மகோதரமும் யோனிப் புற்றும்*
*வேகுமே பீனசமும் மந்தார காசமெட்டும்*
*விறுவிறுத்து யுணர்ச்சியற்று விசநீ ரெல்லாம்*
*மேகமே யெண்ணிறந்த கோடி நோய்கள்*
*யெத்தினையோ யானுரைப்ப னிந்த னூலை* **(94)**

முடக்குவாதம், கிரந்தி, புகைகரப்பான், வண்டுகடி, நீராம்பல், இலிங்கச் சூலை, மகோதரம், யோனிப்புற்று, பீனசம், எட்டுவகை மந்தாரகாசம், உணர்ச்சியற்று ஒழுகுகின்ற விசநீர் போன்ற அனேகமான நோய்கள் இதனால் நீங்கும்.

*இந்தவளி கற்பூரம் மூன்றும் சொன்னோ*
*மேறாத கற்பூர மினிமேல் கேளு*
*மந்தகெதி யாகாது வயித்தியர்க்குப் பாலில்*
*வந்துஅழைத் தாலும் மலைவீழ்ந் தாலும்*
*எந்தனையே நினைந்துநித்தஞ் சாபம் நீக்கி*
*யெடுத்திடுவாய் மருந்துவகை யெல்லாம் சித்தி*
*வந்தனைசெய் நினைந்துதுதிப் பூசை பண்ணி*
*வடமாலை வயிரவர்க்குச் சாற்று வாயே* **(95)**

*கற்பூரத்தில் மூன்றைச் சொன்னோம். இனியும்*
*கற்பூரம் பற்றிச் சொல்வேன்! கேட்பாயாக!*

*மருத்துவனை எமன் வந்து அழைத்தாலும்*
*மலையே வீழ்ந்தாலும் என்னை நினைத்து*
*மருந்தினை உட்கொள்ள சாபம் நீங்கி மருந்து*
*வகையெல்லாம் சித்தியாகும் இறைவனை நினைந்து*
*துதித்துப் பூசை செய்து வடை மாலையை*
*வயிரவர்க்குச் சூட்டுவாயாக!* **(96)**

*சாற்றுவோ மேறாத குப்பி பன்றி*
*தளத்தில்நின்று பதங்கித்து வெள்ளை யாகிச்*
*கூற்றனார் வந்தாலும் எதிர்த்து நின்று*
*கோவித்து வியாதிகளைப் பிடுங்கித் தின்றும்*
*பார்த்துநீ யின்னூலை மருந்து செய்தால்*
*பழுதொன்று வாராது சாப மில்லை*
*தோற்றுமே முன்னுரைத்த நூற்றம் பதில்*
*தொடுகுறிபோல் சக்கரமும் சிவமும் பாரே.* **(97)**

மருந்தேறாத குப்பியிலும் மருந்தையேற்றி உரிய இடத்தில் நின்று பதங்கித்து வெள்ளையாக மாற வழிவகை செய்து, எமன் வந்தாலும் எதிர்த்து நின்று இந்நூற்படி மருந்து செய்தால் பிழை வராது. சாபம் ஏதும் உண்டாகாது. முன் சொன்ன நூற்றைம்பது பாடல்களில் சக்கரமும் சிவமும் பார்ப்பாயாக.

## இலேகியக் குழம்பு

*தானென்ற லேகியமாக் குழம்பைக் கேளு*
*தனியாவி னீரதுதான் தூணி வாங்கிக்*
*கானென்ற கருத்தாட்டி நீரே தூணிக்*
*கலந்துசமன் தேற்றானே அரைத்துக் கொண்டு*
*பானென்ற பானையொன்றில் வேடு கட்டி*
*பாலகனே அஞ்சுதிர மறுவடிதான் கொண்டு*

*தானென்ற நீரையெல்லாம் பாண்டத்தி லூற்றி*
*திரண்டமிள கொருபடிதா னிடித்துத் தூளே* **(98)**

இலேகியக் குழம்பைச் சொல்வேன். கேட்பாயாக. தனியாக கோமியம் **20** லி சேர்த்து ஆதொண்டை நீர் **20** லி எடுத்து இரண்டையும் கலந்து அதே அளவு தேற்றான் கொட்டையை எடுத்து அரைத்துப் பானையொன்றிலிட்டு வேடுகட்டி சிலநாள் கழித்து ஐந்து முறை வடிகட்டிக் கொள்ளவும். நீரைப் பானையில் ஊற்றி **1.3** லி மிளகிடித்துச் சேர்க்கவும்.

*ஒருபடியாங் கடுக்காய்த்தூள் கொட்டைத் தள்ளி*
*உத்தமனே திப்பிலியும் இந்துப்புச் சுக்கும்*
*நிறுபடிதான் வகைக்கிப்பல மூன்றும் நன்றாய்*
*நிறைத்தூளா யிடித்துக்கோ சலத்தில் போட்டு*
*மறுபடிதான் சட்டிகொண்டு வாயை மூடி*
*மண்செய்து அடுப்பேற்றித் தீயை மூட்டிச்*
*சிறுபடியாய் தீயெரிநீச் சாமம் மைய்யாத்*
*திரும்பியொரு சாமம்எரி கமல மாமே* **(99)**

கொட்டை நீக்கி இடித்த கடுக்காய்த்தூள், திப்பிலி, இந்துப்பு, சுக்கு இவை வகைக்கு **105** கி வீதமெடுத்துத் தூளாயிடித்துக் கோமியத்தில் போட்டுக் கொள்ளவும். சட்டியினால் வாய்மூடி சீலைமண் செய்து அடுப்பேற்றித் தீமூட்டி ஒரு விறகினால் **3** மணி நேரம் தொடர்ந்து எரிக்கவும். மீண்டும் **3** மணி நேரம் இரு விறகினால் எரித்தெடுக்கவும்.

*ஆமப்பா காடாக்கினியாய் ரெண்டு சாமம்*
*அனலெரித்து வற்றிநன்றாய் புகைந்து தீய்ந்து*
*வேமப்பா மருந்தெல்லாம் பிட்டுப் போலாம்*
*வெந்துள்ளே செயமாக கருகி மேலே*

*போமப்பா பாலைகுடம் போடு போடு*
*புகைந்துமறு முகம்பிடிக்கப் போகா நேரந்*
*தாமப்பா பாளையைக் கீழிறக்கி சட்டி*
*திறந்தாறி அம்மி மருந்தைக் கொட்டே* **(100)**

தொடர்ந்து 6 மணி நேரம் மூன்று விறகினால் எரிக்கவும். இப்போது தண்ணீர் வற்றி மருந்து புகைந்து, தீய்ந்து பிட்டு போலாகிவிடும். உள்ளே வெந்து மேலே கருகிக் காணப்படும். இதில் பால் தேவையான அளவு ஊற்றும் போது அந்தப் புகைந்த வாடையைப் முகம்பிடிக்க முடியாது. அதனால் கீழே இறக்கி வைத்து அரைப்பு மருந்தை அதில் கொட்டவும்.

*கொட்டிநன்றா யரைக்கையிலே நிகழ்ந்து மைந்தாக்*
*குழம்புபோல் வரும்பருவம் அடைத்துக் கொண்டு*
*கட்டியென்ற வாய்வுவெப்புக் கெண்டை குன்மங்*
*கசமால மகோதரமும் பாண்டு வீக்கம்*
*மட்டியாம் முதல்சூலை பெருவயிறு மிரத்த*
*மைந்தனே மலக்கோர்வை சயக்கோர்வை கூட*
*கெட்டியாய் தீர்க்குமிது காமாலை கிரந்தி*
*குட்டந் தீருந் தானே* **(101)**

ஒன்றாகச் சேர்த்து அரைத்தெடுக்கவும். குழம்பு பதமாகும் போது எடுத்து இறக்கிக் கொண்டு குப்பியிலடைத்துக் கொள்ளவும். வாய்வு, வெப்பக் கட்டிகள், குன்மம், மகோதரம், பாண்டு, வீக்கம், சூலை, பெருவயிறு, மலக்கட்டு, நீர்க்கட்டு, காமாலை, கிரந்தி, குட்டம் இவை தீரும்.

## சாதிலிங்கச்செந்தூரம்

*பிளைத்துப்போம் சாதிலிங்கச் செந்தூரங் கேளும்*
*பேசாதே சாம்பிராணி கூட னுந்தான்*

*பலத்துக்கு வகையொன்றாய் வாங்கி மைந்தா*
*பற்றவே கல்வத்தி லரைக்கும் போது*
*பெலத்திறுகி மெழுகுபோல் பிடித்துக் கொள்ளும்*
*பின்பிடித்துப் பத்துண்டை யாகச் செய்து*
*குலத்திலே குப்பிவைப்பு சாதி லிங்கம்*
*குறையாமல் கட்டியொன்று பலந்தா னொன்றே.* **(102)**

சாம்பிராணி, சூடம் இரண்டும் வகைக்கு 35 கி வீதமெடுத்து கல்வத்திலிட்டு அரைக்க அது மெழுகுபோல் படிந்து கொள்ளும். அதனை வழித்தெடுத்து பத்து உருண்டைகளாகச் செய்து கொள்ளவும். குப்பியில் வைக்கின்ற அளவு சாதிலிங்கக் கட்டி ஒன்றை எடுத்துக்கொள்ளவும்.

*ஒன்றான கட்டியிலே மெழுகொன்றைப் பூசி*
*உத்தமனே மேற்சீலை சுத்தித்தீயைக் கொளுத்தி*
*நன்றாக வெந்துவது ஆறி பின்பு*
*நழுகாமல் மறுகட்டி மெழுகைப் பூசிக்*
*குன்றாமல் வெந்துவது ஆறி னாக்கால்*
*குணமாக மெழுகுதனைத் திரும்பப் பூசப்*
*பன்றாகப் பத்துவிசை யிப்படியே செய்து*
*பார்மகனே சீலைசுத்தி யெரித்தி டாயே* **(103)**

அந்தக் கட்டியில் அரைத்தெடுத்த மெழுகை நன்றாகப் பூசி மேற்சீலை சுத்தித் தீயைக் கொளுத்தி வேக வைக்கவும். வெந்து ஆறிய பின் எடுத்துக் கொள்ளவும். இவ்வாறே பத்துமுறை மெழுகைப் பூசி சீலையைச் சுற்றி எரித்துக் கொள்ளவும்.

*எரித்துலிங்கங் கட்டிப்போம் யென்ன சொல்வேன்*
*இயல்பான திரிகடுகு வகைக்கிக் கால்தான்*
*பொரிந்த கட்டிதனில் வறுத்துப் பொடிக்கும் போது*
*புகழான சாதிலிங்கம் கட்டி னத்தைப்*

*பரிந்துநீ கூடவைத்து மையைப்போ லாட்டி*
*பதனமாய் செப்பதனில் வைத்துக் கொண்டு*
*கரிந்தவெல்லம் கருப்பட்டி தன்னி லேதான்*
*கண்மகனே பணவெடைதான் வைத்துக் கொள்ளே*
**(104)**

எரித்தெடுத்துப் பார்த்தால் லிங்கம் மாறியிருக்கும். திரிகடுகு 8 கி எடுத்துப் பொரிந்த லிங்கத்துடன் சேர்த்து வறுத்துப் பொடிக்கவும். சாதிலிங்கத்தைத் தனியாக எடுத்து மை போலாட்டி செப்பில் அடைத்து வைக்கவும். பனைவெல்லம் அல்லது கருப்பட்டியில் வேளைக்கு **488** மி.கி வீதம் சாப்பிட்டு வரவும்.

*கொள்ளுமடா கிரந்திகுட் டங்க ளேது*
*குன்மமோடு வாய்வுநின்ற வலிக ளேது*
*தள்ளுமடா பதங்கியோடு கரப்பான் புண்ணைத்*
*தழுதணயும் வண்டுகடி தடிப்பு வெள்ளை*
*கொள்ளுமடா தாகத்திற் தண்ணீர் போல*
*கொடியதாம் நீர்ச்சோகை பாண்டு வெப்பை*
*கள்ளமென வந்ததொரு தோஷஞ் சன்னி*
*கதித்தமந்தம் வாயடைப்பு யிஞ்சிச் சாறே* **(105)**

கிரந்தி, குட்டம், குன்மம், வாயுவால் ஏற்பட்ட வலிகள், கரப்பான் புண்கள், படர்தாமரை, படர்தேமல், தடிப்பு, வண்டுகடி, தீராத தாகம், நீர்க்கோவை, சோகை, பாண்டு, தோஷம், சன்னி, மந்தம், வாயடைப்பு ஆகிய நோய்கள் நீங்குவதற்கு இஞ்சிச் சாற்றை அனுபானமாகக் கொள்ளலாம்.

*சாத்திவிட பணவெடைதான் நெஞ்ச டைப்பு*
*சத்திபாண்டு பித்தவாய்வு வயிற்றெரிவுங் கூட*
*ஆத்திவிடு வியாதிகண்டு கிசாயம் வைத்து*
*அதிற்பணந்தான் போட்டருந்த அனேக நோய்கள்*

*தீத்துவிடும் லிங்கமடா சுருக்கு மெத்த*
*தீராத வியாதியெல்லாந் தீர்ந்து போகும்*
*கூத்துவனாம் நோய்க்கிதுதான் கால னாகும்*
*குணமிதுலே கோடிகவ ருண்டு காணே* **(106)**

நெஞ்சடைப்பு, சத்திபாண்டு, பித்தவாயு, வயிற்றெரிவு போன்ற பல வியாதிகளும் நீங்கும் என்பதை உணர்ந்து குடிநீர் செய்து, அதில் 488 மி.கி செந்தூரத்தைக் கலந்து குடித்துவர தீராத வியாதிகள் எல்லாம் தீரும். நோய்களுக்கு இந்த மருந்தே எமனாக நிற்கும் என்பதாம்.

## பிரம்ம கண்டவலி

*காணப்பா லோகத்தில் மானுடர்க் கெல்லாம்*
*கடினமடா வலியஞ்சுஞ் சன்னி யாறும்*
*வீணப்பா குமரகண்டன் விழுந்த மூக்கும்*
*பிரமகண்டன் காக்கை யோடு......*
*ஆமப்பா முசல்வலி அஞ்சு நோய்க்கு*
*மடங்காத பிரமகண்டன் சாத்தியந் தானு*
*தோணப்பா கண்டறிய வேணும் பார்த்து*
*தொடுகுறிபோல் சொல்லுகிறோம் குணத்தைக் கேளே*
**(107)**

இந்த உலகத்தில் மானிடர்க்குச் சிரமமானது வலிவகை ஐந்தும், சன்னி ஆறுமாகும். குமரகண்டவலி, மூக்குவலி, பிரமகண்ட வலி, காக்கை வலிப்பு, முயல் வலி போன்ற நோய்களுள் அடங்காத பிரமகண்ட வலியைத் தடுக்க வழியுண்டு. அதை ஆழ்ந்து அறிந்து கொள்ள வேண்டும்.

## இரசப் பதங்கம்

*கூத்தாடும் நோய்களுக்கு இரச பதங்கம்*
*கூறுகிறோம் புலத்தியனே கூர்ந்து கேளு*

*பத்தான தோண்டிரெண்டு சமனாய் வாங்கி*
*தோண்டிக் கரைவாசி யுப்பே யிட்டு*
*மாத்தான கெந்தியோடு, பற்ப டாகம்*
*மாஞ்சியோடு வெள்ளைப் பாசாணம் மூன்று*
*நித்தாக வகைக்கிரு கழஞ்சி வீதம்*
*நீயரைத்து வெற்றிலைச்சாற் நிமிர ஊட்டே* **(108)**

மக்களுக்குத் துன்பத்தை உண்டாக்குகின்ற நோய்களைக் களைகின்ற இரச பதங்கம் சொல்வேன் கேட்டுணர்வாயாக. சமமாக இரண்டு தோண்டி வாங்கி, அதில் ஒன்றில் அரைப்பகுதி நிரப்புமளவு உப்பினை போட்டுக் கொள்ளவும். கெந்தகம், பற்பாடகம், சடாமாஞ்சில் வேர், வெள்ளைப்பாசாணம் இவற்றை வகைக்கு **10** கி வீதமெடுத்துக் கல்வத்திலிட்டு வெற்றிலைச்சாற்றுடன் சேர்த்தரைக்கவும்.

*ஊட்டியே கல்வத்தி லரைத்துக் கொண்டு*
*உத்தமனே யகில்போலே பிடித்து லர்த்தி*
*நாட்டியே யிரண்டுபல ரசத்தை விட்டு*
*நவபாண்ட யுப்பின்மேல் சீலை செய்து*
*தீட்டியே அடுப்பிலிட்டு யெட்டு சாமம்*
*தீயெரித்து ஆறவிட்டு திறந்தி டாயே* **(109)**

அரைத்தெடுத்துச் சிறு சிறு உருண்டைகளாக உருட்டி உலர்த்திக் கொள்ளவும். இதனுடன் **70** கி இரசத்தைச் சேர்த்து மேற்சொன்ன தோண்டியிலிடவும். மற்றொரு தோண்டியைக் கவிழ்த்து சீலை மண் செய்து அடுப்பில் வைத்து **24** மணி நேரம் எரித்து, இறக்கி வைக்கவும்.

*ஆறவிட்டு மேல்தோண்டிக் குள்ளே பாரு*
*அப்பனே ரசபதங்க மேறி நிற்கும்*
*ஆறவிட்டு பண்டிமூடி யதினால் மெள்ள*
*வாங்கியே பீங்கானி லடைத்துக் கொண்டு*

*சாறுவிட்டு பனைவெல்லம் நல்ல வெல்லம்*
*சர்க்கரைவாழைப் பழத்தில்தா னுண்பீ ராகில்*
*ஊரைவிட்டு ஓடிப்போம் நாளே மூக்குள்*
*உண்டான பரங்கிமுதல் சூலை போமே* **(110)**

ஆறிய பின்னர் மேல்தோண்டிக்குள்ளே இரசபதங்கம் குமுறி நிற்கும். ஆறவிட்டெடுத்துப் பீங்கானில் அடைத்துக் கொள்ளவும். பனைவெல்லம், நல்லவெல்லம், சர்க்கரை, வாழைப்பழம் இவற்றில் ஏதேனும் ஒன்றில் பொதிந்து வைத்து உண்டு வர பரங்கி முதல் சூலை முதலான நோய்கள் நீங்கும் என்பதாம்.

*சூலைபோம் பானையிலே கருவேலம் பட்டை*
*துடியாக இடித்த னைப் போட்டுக் காய்ச்சி*
*காலையிலும் மாலையிலு முறவாய் ஊற்றக்*
*கார்க்கவே கொப்பளிப்பாய் வீக்கம் தீரும்*
*மூலமுதல் கடுப்புரத்த மிகுந்து தானால்*
*மூட்டுவாய் பால்கஞ்சி யிளஞ் சூடாக*
*பாலகனே மாதருட சய்யோ கத்தில்*
*பதறாதே மூன்றுதிங்கள் பத்தியமு மாமே.* **(111)**

தூளாக இடித்த கருவேலம் பட்டையைப் பானையிலிட்டுக் காய்ச்சி காலை, மாலை இரண்டு வேளை வாய் கொப்பளிக்க வாய் வீக்கம் நீங்கும். மூலம், கடுப்பு, இரத்தப்போக்கு இவை அதிகமானால் இளஞ்சூட்டில் பால்கஞ்சி சாப்பிடவும். இம்மருந்துண்ணும் போது 3 மாதங்கள் பத்தியம் காத்து பெண் போகமும் நீக்க வேண்டும்.

## மூதண்டக்கிருதம்

*போமப்பா அருகன்வேர் கிருதம் நூலில்*
*புகலவில்லை இன்னூலில் புகழ்ந்து சொல்வேன்*

*நாமப்பா சொல்லுகிறோம் அருக மூலம்*
*நன்றாக ஒருதுலாம் நறுக்கிக் கொண்டு*
*வாமப்பா இடித்ததனைப் பாண்டத் திட்டு*
*மகத்தான நூறுபடி சிலந்தான் விட்டு*
*சேமப்பா நான்குபடி யாகக் காய்ச்சி*
*உத்தமனே வடிகட்டி யிறுத்துக் கொண்டு*
*தாமப்பா ஆவின்நெய் நாழி விட்டு*
*தடையறவே மதுரமரைப் பலந்தா னாமே* **(112)**

அருகம்புல் வேர்க்கிருதம் வேறு எந்த நூலிலும் சொல்லப்பட வில்லை. இதை நான் முறைப்படி சொல்வேன். அறிவீராக! **3.5** கி.கி அருகம்புல் வேரை நறுக்கி இடித்துப் பாண்டத்திலிட்டு **1300** லி. நீர்விட்டு **5.2** லிட்டராய்ச் சுருங்கக் காய்ச்சி வடிகட்டி இறுத்துக் கொண்டு, பசுநெய் **1.3** லி, அதிமதுரம் **18** கி இவற்றைச் சேர்க்கவும்.

*பலமொன்று தாமரைசெங் கழுநீர் மூலம்*
*பாச்சுவா யிருகழஞ்சு மைய்போ லாட்டி*
*பிலமென்ன மாதுளையின் பழச்சாற் நாழி*
*பிறழாமல் கலக்கியே நெய்யில் விட்டு*
*சிலமென்ன தாகமட்டுங் கமலம் போலே*
*தீயெரித்துப் பதம்வரும்போ தறிந்து கொண்டு*
*குலமென்ன மூலத்தில் அத்திய சூடுங்*
*கொடிதான கிரீச்சரங்கள் கிராணி போமே* **(113)**

தாமரைக்கிழங்கு, செங்கழுநீர்க்கிழங்கு வகைக்கு **10** கி வீதமெடுத்து அரைத்து **1.3** லி. மாதுளம் பழச்சாற்றில் கலக்கி நெய்யுடன் சேர்த்துக் கொள்ளவும். தண்ணீர் சுருங்க இரண்டு விறகினால் தீயெரித்துப் பதத்தில் இறக்கிக் கொள்ளவும். இதனை உட்கொண்டு வந்தால் மூலத்தில் உண்டான அத்தி சூடும், கிரீச்சரங்கள், கிராணி இவையும் நீங்கும்.

*கிராணிபோம் பிரமியமும் கபாலச் சூடுங்*
*கிறுகிறுப்பு தீருமடா பத்து நாள்கொள்*
*திராணியாய்க் கொண்டகர்ப்பம் முறிவுந் தீரும்*
*சிவனாரு சடைமீதில் தரித்த கற்பம்*
*பிராணிகளுக் காகஇந்த கிருதஞ் சொன்னேன்*
*பிழைக்கவென்றால் செய்துகொண்டு பெரியோ ராவார்*
*இராணிசெல மாதர்களைச் சய்யோகஞ் செய்திடு*
*யுளைவு கடுப்புவலி யெல்லாம் போமே* (114)

கிராணி, பிரமியம், கபாலச்சூடு, கிறுகிறுப்பு இவை நீங்குவதற்கு இம்மருந்தைப் பத்து நாட்கள் உட்கொள்ள வேண்டும். இது கர்ப்ப முறிவு உண்டாகாமல் தடுக்கும். சிவன் தனது சடையில் தரித்த கற்பம் போன்ற இக்கற்பம் விலங்குகளுக்கும் பயன்படுமாறு சொன்னேன். இதைப் பயன்படுத்திப் பிழைத்துப் பெரியோராகலாம். பெண்போகம் நீக்கினால் உளைவு, கடுப்புவலி போன்றவை நீங்கும்.

## கிரந்தி, சூலைக்குப் புகை

*போமப்பா கிரந்திக்குப் புகையொன்று சொல்வோம்*
*புகழான சூதமொரு கழஞ்சி வாங்கி*
*வாமப்பா காரீயங் கால்க ழஞ்சி*
*மாட்டிடும் யிரண்டுமொன்றாய்ப் பொடியாய்த் தாக்கி*
*தாமப்பா எருக்கலம்வேர் கரியில் சேர்த்து*
*தாளவில்லா மூன்றுதினம் புகைபி டிக்க*
*சோமப்பா கிரந்தியோடு சூலை போகுந்*
*துடியான மருந்தொன்று சொல்லு றேனே* (115)

கிரந்தி நோய்களுக்கான புகையொன்றைச் சொல்வேன். சூதம் 5 கி, காரீயம் 5 கி எடுத்து இரண்டையும் சேர்த்துப் பொடியாய் அரைத்து எருக்கம் வேர் எரித்த கரியுடன் கலந்து மூன்று நாட்கள் புகைபிடித்து வந்தால் கிரந்தி, சூலை இவை நீங்கும்.

# பூரண இலேகியம்

*திடமான பூரணலே கியந்தா னொன்று*
*செப்புகிறேன் புலத்தியனே திடமாய்க் கேளு*
*நலமான சடைக்கஞ்சா பழுது பார்த்து*
*நன்றாகப் பதினஞ்சு பலந்தா னப்பா*
*குடமான பாண்டத்தி லிடித்துப் போட்டு*
*குளிர்ந்தசலம் பதினாறு படியும் விட்டு*
*விடமாகக் காய்ச்சியே யெட்டொன் றாக்கி*
*மேலான கிசாயமதை இறுத்தி டாயே* **(116)**

பூரண லேகியம் ஒன்றைச் சொல்வனே். புலத்தியனே கேட்பாயாக. சுத்திசெய்த சடைக்கஞ்சா **525** கி எடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 20 லி தண்ணீர் வார்த்து எட்டிலொன்றாகக் காய்ச்சி கசாயமாக வடித்திறக்கிக் கொள்ளவும்.

*இறுத்திட்ட கிசாயத்தில் தேங்காய்ப் பாலும்*
*இளநீரும் கருப்பஞ்சாற் ஆவின் பாலும்*
*அறுத்திட்ட வகைக்குவொரு படியும் விட்டு*
*வளமான ஆவின்நெய் படியும் விட்டுச்*
*சிறுத்திட்ட கமலம்போ லெரிக்கும் போது*
*திரண்டுவரும் பதந்தனிலே வடித்துக் கொண்டு*
*பருத்திட்ட ஆல்விரையு மருவி வித்து*
*பருத்திவிரைப் பருப்புடனே ஆவிரையின் வித்தே.* **(117)**

இந்தக் கசாயத்தில் தேங்காய்ப் பால், இளநீர், கரும்புச்சாறு, பசும்பால் இவை வகைக்கு **1.3** லி., பசு நெய் **1.3** லி சேர்த்து இரண்டு விறகினால் எரித்துத் திரண்டு வரும் பதத்திலிறக்கிக் கொள்ளவும். ஆலம்விதை, அரசம்விதை, பருத்தி விதை, ஆவரை வித்து இவற்றையும் சேர்த்துக் கொள்ளவும்.

*வித்தான முருங்கைவித்து பூனைக் காலி*
*வித்துடனே அமுர்த சர்க்கரை கிராம்பு*
*பத்தான சாதிக்காய் பத்திரி யேலம்*
*பருமிளகு வால்மிளகு லவங்க பத்திரி*
*மகத்தான குரோசாணி கோஷ்ட மாஞ்சி*
*வாலுளுவை சிறுநாகம் குங்கு மப்பூ*
*சத்தான திரிகடுகு திரிப லாதி*
*தாளிசை சீரகம் வெந்தயமுந் தானே* **(118)**

முருங்கை வித்து, பூனைக்காலி வித்து, அமிர்தசர்க்கரை, கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, ஏலம், மிளகு, வால்மிளகு, லவங்க பத்திரி, குரோசாணி, கோட்டம், சடாமாஞ்சில், வாலுளுவை, சிறு நாகப்பூ, குங்குமப்பூ, திரிகடுகு, திரிபலாதி, சீரகம், வெந்தயம் இவற்றையெல்லாம் சேகரித்துக் கொள்ளவும்.

*வெந்தயமும் நிலைப்பனைவேர் பூமிச் சர்க்கரை*
*வெட்டிவே ரிலாமிச்சவேர் முந்திரிகைபே ரீந்து*
*சந்தையமாய் நினையாதே சாரப் பருப்பு*
*சதிரான குரோசாணி கசக சாவு*
*மிந்தவகைக் கோர்கழஞ்சி வறுத்துத் தூளாய்*
*இடித்துமே வடிகட்டி வைத்துக் கொண்டு*
*முந்தியதோர் பனங்கள்ளு படிரெண் டுக்குள்*
*மூட்டுவாய் பனைவெல்லம் நல்ல வெல்லம்* **(119)**

நிலப்பனைவேர், பூமிசர்க்கரைக்கிழங்கு, வெட்டிவேர், விலாமிச்சு வேர், முந்திரிகை, பேரீந்து, சாரப்பருப்பு, குரோசாணி இவை வகைக்கு 5 கி வீதமெடுத்து வறுத்துத் தூளாக்கிச் சலித்துக் கொள்ளவும். பனங்கள் 2.6 லி எடுக்கவும்.

*வெல்லமென்றால் வகையொன்று பலம்ரெண் டாக*
*விடத்திலே கரைத்திடுவாய் அடுப்பில் ஏற்றி*

*சொல்லவென்றால் பாகுபத மாகும் போது*
*சூரணித்துக் கெட்டிலொன்று கஞ்சாத் தூளு*
*மல்லென்ற புடங்கிரந்த பொடியே சேர்த்து*
*வளமான பாகினிலே தூவிக் கிண்டி*
*வெல்லவென்று முன்னுரைத்த கஞ்சாநெய் விட்டு*
*வாகாகக் கால்படியு மிஞ்சா வாறே* **(120)**

வெல்லம், பனைவெல்லம் இவை வகைக்கு 70 கி சேர்த்தெடுத்துப் பனங்கள்ளில் கரைத்து, அடுப்பேற்றிக் காய்ச்சவும். , இது பாகுபதமாகும் போது, எட்டிலொருபாகம் கஞ்சாத்தூள், முன் பொடி செய்த தூளையும் தூவி, முன் சொன்ன சடைக்கஞ்சாநெய் 375 கி அளவு சேர்த்து வார்க்கவும்.

*மிஞ்சாமல் தேனு மாகாணி விட்டு*
*வெள்ளைநிறம் கோழிமுட்டை அஞ்ச வித்து*
*மஞ்சான உட்கருவை உதிர்த்துத் தூவி*
*வளர்பஞ்ச தாரையஞ்சு பலமும் போட்டு*
*பஞ்சான மெழுகுபோ லெடுத்துப் பீங்கான்*
*பத்திரமாய் சுண்டைக்கா யளவு கொள்ளு*
*நெஞ்சான போகத்தை முடிக்கும் லேகியம்*
*நீட்டினால் மேகமெல்லாம் நீங்கிப் போமே* **(121)**

1/16 தேன் சேர்த்து, 5 கோழி முட்டைகளை வேகவைத்து மஞ்சட் கருவை உதிர்த்து அதன்மேல் தூவிக் கிண்டி, பஞ்சதாரை 175 கி. சேர்த்துக் கிண்டி மெழுகு பதமாக வரும் பதத்தில் எடுத்துப் பீங்கானில் அடைத்துக் கொள்ளவும். வேளைக்குச் சுண்டைக் காயளவு உண்டு வர மேகநோய்கள் எல்லாம் நீங்கும்.

*நீங்குமே மூலமுதல் வாய்வு பித்தம்*
*நிமிடத்தில் சுரமாறல் நின்று போகும்*

*பாங்குபெற தேகமே காந்தி யுண்டாம்*
*பாழிலே போகாமல் விந்தை கட்டுந்*
*தீங்கில்லா திம்மருந்தை யோகத் துக்குத்*
*திடமாக வாதநூ லெண்ப துக்குள்*
*ஆங்கிரமாய்ப் பூரணலே கியத்தைச் சொன்னேன்*
*அறுநூற்றில் காமகே சரியெனுந் தானே* (122)

மேலும் இம்மருந்தை மூலம், வாய்வு, பித்தம், மாறல் சுரம், தேககாந்தி போன்றவற்றிற்கு வழங்கி குணம் பெறலாம். தீதில்லாத இந்த மருந்தினை யோகத்திற்கும் வழங்கலாம். வாத நூற்களான 80 நூல்களில் இந்த வகையான பூரண லேகியத்தை நான் கூறியுள்ளேன்.

## சீனவல்லாதி

*தெளிவான சீனமென்ற பட்டை யோடு*
*சேங்கொட்டை வெள்ளுள்ளி பேரீச் சங்காய்*
*சளிவான யெள்ளுவகை பலந்தா னொன்று*
*சொல்லுகிறேன் மேல்மருந்து சுக்கு ஓமம்*
*நெளிவான குரோசாணி மிளகு மஞ்சள்*
*நீண்டமர மஞ்சள்சிற் றரத்தை மல்லி*
*ஒளிவான குங்குமப்பூச் சித்திர மூலம்*
*உயர்தேசா வரங்கிராம்பு சாதிக் காயே* (123)

பரங்கிப்பட்டை, சேங்கொட்டை, பூண்டு, பேரீச்சங்காய், எள் இவை வகைக்கு 35 கி வீதமெடுத்து மேல்மருந்தாகச்சுக்கு, ஓமம், குரோசாணிஓமம், மிளகு, மஞ்சள், மரமஞ்சள், சிற்றரத்தை, கொத்துமல்லி, குங்குமப்பூ, சித்திரமூலம், தேசாவரம், கிராம்பு, சாதிக்காய் இவற்றையும் சேகரித்துக் கொள்ளவும்.

*சாதியென்ற பத்திரியுங் கடுக்காய் சீரகந்*
*தான்கரிய சீரகமுந் தாணிக் காயும்*

*மாதியென்ற சிறுதேக்கு கஸ்தூரி தானும்*
*மாவின்கோ ரோசனயும் வகையொன் றுக்கு*
*நீதியென்ற விராகனெடை யிரண்டு தூக்கி*
*நேராக யிடித்துவஸ்திர காயஞ் செய்து*
*ஆதியென்ற சேங்கொட்டை சுத்தி கேளு*
*வகையான சுண்ணாம்புக் கல்லில் நீத்தே* **(124)**

சாதிபத்திரி, கடுக்காய், சீரகம், கருஞ்சீரகம், தான்றிக்காய், சிறுதேக்கு, கஸ்தூரி, கோரோசினை இவை வகைக்கு 8 கி வீதமெடுத்து எல்லாவற்றையும் இடித்துத் தூளாக்கி மெல்லிய துணியில் சலித்துக் கொள்ளவும். இதனுடன் சேங்கொட்டை சுத்தி செய்து சேர்க்க வேண்டும்.

*நீத்துவது காடிவிட்டு நீற்றிக் கொண்டு*
*நினவாகக் குளிர்ந்தசலத் தலம்பிப் போட்டு*
*ஆத்துவது மேதியுட சாணிப் பாலிற்*
*விடவான புளியிலையின் கிசாயந் தன்னில்*
*மாத்துவது புரசம்பூ கசாயத் தோடு*
*வகைஓமங் கசாயத்தி லாவின் பாலில்*
*கொத்துவது கசாயம்பால் கொதிக்கையிலே யிட்டு*
*குளிர்ந்தபின்பு கழுவியெடு சுத்தி ஆச்சே* **(125)**

சேங்கொட்டையைச் சுத்தி செய்வதற்குச் சுண்ணாம்புக் கல்லில், காடியில் நீற்றி எடுக்கலாம். அதனைப் பின் குளிர்ந்த தண்ணீரில் அலம்பிக் கொள்ளலாம். எருமைச்சாணிச்சாறு, புளியிலைக்கசாயம், புரசம்பூகசாயம், ஓமக்கசாயம் இவற்றிலிட்டுக் கொதிக்கவிட்டு ஆறியபின்பு எடுத்துக் கழுவிக் கொள்ளவும்.

*சுத்திசெய்து வறுத்துக்கல் லுரலி லிட்டுத்*
*துடியாக யிடிக்கையிலே முன்பொடியைத் தூவி*
*வெத்தியுள்ள பனைவெல்லம் பலந்தான் பத்து*
*வெள்ளுள்ளி யெள்ளுடனே பேரீச்சங் காயும்*

*பத்தியது மாவின்நெய் படிகா லப்பா*
*பரிவான தேனதுவும் படிகா லாகும்*
*முத்தியதில் விட்டிடித்துப் பணம் போலே*
*மூத்தோன்முன் வைத்துப் பூசை செய்யே* **(126)**

சுத்தி செய்தபின் வறுத்துக் கல்லுரலில் இட்டு நன்றாக இடித்து முன்பொடியையும் மேலே தூவி அதனுடன் 350 கி பனைவெல்லம் சேர்த்துப் பூண்டு, எள், பேரீச்சங்காய் இவற்றுடன் பசு நெய் 325 மி.லி, தேன் 325 மி.லி சேர்த்துக் கிண்டி இறக்கி முன்னோர் முன் வைத்துப் பூசை செய்து கொள்ளவும்.

*பூசைசெய்து மண்டலந்தான் நெல்லிக்காய் வீதம்*
*புகலாக அந்திசந்தி கொள்ளும் போது*
*தேசமேத்த மருந்திதுதான் பத்தியத்தைக் கேளு*
*சிறுபயிறு பசுவின்பால் தயிர்நெய் யாகும்*
*பாசமொத்த துவரையுட பருப்பு மாகு*
*மைந்தனே புடலங்கா யவரைக் காயாம்*
*நேசமுத்த முருங்கைக்காய் சிறுகீரை யாகும்*
*நெல்லிக்காய் தூதுவளை நேராம் பாரே* **(127)**

இதனை நெல்லிக்காய் அளவு உருண்டைகளாக உருட்டி காலை, மாலை, இரண்டு வேளை, 40 நாட்கள் உட்கொண்டு வர பலவகையான நோய்கள் நீங்கும். சிறுபயிறு, பசும்பால், தயிர், நெய், துவரம்பருப்பு, புடலங்காய், அவரைக்காய், முருங்கைக்காய், சிறுகீரை, நெல்லிக்காய், தூதுவேளை இவை பத்தியமாகும்.

*நேரான வெள்ளாட்டுச் சுறாமீன் காடை*
*நெடியவிரா லுடும்புடனே முசலு மாகும்*
*வாரான கரைப்பானாம் வஸ்து வாகா*
*மங்கையரைக் கூடாதா முளகாமாத்து*
*பேரான சூலைபதி னெட்டும் போகும்*
*பெருங்கிரந்தி பதினெட்டு குட்டம் போகும்*

*யேரான கரப்பானது யிருபத் தொன்றும்*
*மேகத்தி லூறலெல்லாம் வெகுண்டு போமே* **(128)**

வெள்ளாட்டுக்கறி, சுறாமீன், காடை, விரால், உடும்பு, முயல் இவை ஆகும். கரப்பான் பண்டங்கள் ஆகாது. பெண்போகம் கூடாது. இம்மருந்தால் சூலை பதினெட்டும் போகும். கிரந்தி, பதினெட்டு வகைக் குட்டங்கள், கரப்பான் இருபத்தொன்று, மேகத்தினால் உண்டாகின்ற ஊறல் எல்லாம் நீங்கும்.

*போமென்ற பவுத்திரங்கள் ருத்திர வாய்வு*
*பொல்லாத குட்டமுடன் பிளவை புற்று*
*ஆமென்ற வாதமெல்லா மகன்று போகு*
*மப்பனே தேகமது யிறுகும் பாரு*
*நாமென்றே பராபரனா ருமைக்குச் சொன்னார்*
*நாட்டோர்க்கு நாமுரைத்தோம் நயந்து பாரே* **(129)**

மேலும் மூல பவுத்திரங்கள், ருத்ரவாயு, குட்டம், பிளவை, புற்று, வாதம் எல்லாம் இம்மருந்தால் நீங்கும். வாதனோய்கள் நீங்கும். உடல் பலம்பெறும். பராபரன் உமையாளுக்குச் சொன்னார். அதை நாம் உள்வாங்கி மக்களுக்காக உரைத்தோம்.

## அமிர்தகெந்தி குக்கில் வல்லாதி

*பாரப்பா அமிர்தகெந்தி குக்கில்வல் லாதி*
*பாடுகிறேன் கெந்தகந்தான் பலமோ யெட்டு*
*வாரப்பா பாண்டத்தி லமுரி தன்னை*
*வாய்தனிலே வேடுகட்டி கெந்தி பரப்பி*
*நேரப்பா மேல்மூடி சீலை செய்து*
*நேரப்பா குழியில்வைத்து வாய மட்டும்*
*சீரப்பா மண்ணிட்டு மேல்புடத்தைப் போடு*
*சீதளமாக் குளிர்ந்தபின்பு எடுத்துக் கொள்ளே.* **(130)**

கெந்தகம் 280கி எடுத்துக் கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் மூத்திரத்தைச் சேகரித்து அப்பாத்திரத்திற்கு வேடுகட்டி அதன் மேல் கெந்தகத்தை வைத்து மேல் மூடி சீலை மண் செய்து குழியில் வைத்துவிட்டு வாய்வரை மண்ணிட்டு மூடி குழிப்புட மிட்டுக் குளிர்ந்த பின்பு எடுத்துக் கொள்ளவும்.

*எடுத்ததனைக் குளிர்ந்தசலத் தலம்பிப் போட்டு*
*ஈருள்ளி சாற்றில்முன் புடத்தைப் போடு*
*அடுத்ததனை ஆவின்பால் தன்னிற் போடு*
*ஆனைகுட்டித் தக்காளிச் சாற்றில் போடு*
*விடுத்ததனைச் சிறுகீரைச் சாற்றில் போடு*
*விளங்குமயி லாஞ்சியரைத் தயிரில் சேர்த்துக்*
*கடுத்ததனை முன்போலே புடத்தைப் போடு*
*கனம்போல் கெந்தகந்தான் சுத்தி யாச்சே* **(131)**

அதனை எடுத்துக் குளிர்ந்த நீரில் நன்றாகக் கழுவி எடுக்கவும். வெங்காயச் சாற்றில் முன்போல புடம் போடவும். பின்னர் அதனை ஆவின் பாலில் போட்டு, பின்னர் மணத்தக்காளிச் சாற்றில், பின் சிறுகீரைச்சாற்றில், தயிரில் முன்போல புடம் போட்டெடுக்கவும். கெந்தகம் சுத்தியாகும்.

*ஆச்சப்பா குக்கிலது பலந்தா னெட்டு*
*அழகான வேம்புமுதற் பட்டை தன்னை*
*காச்சப்பா கசாயத்தில் குக்கில் முடிந்திட்டுக்*
*கட்டும் ஆவின் மூன்றுந் தாழவை*
*பாச்சப்பா பின்பெடுத்துக் குளிர்ந்தசலம் விட்டு*
*பதறாமல் பிசைந்துநன்றா யிறுத்துப் போடு*
*வீச்சப்பா ஆவின்மோர் படிதா னொன்று*
*விளங்கும்பழச் சாறரைதான் காடி கூட்டே* **(132)**

குக்கில் 280 கி, எடுத்துக் கொள்ளவும். வேம்பின் முதற்பட்டையை எடுத்துக் கசாயமிட்டு அதில் குக்கிலை முடிந்து போட்டுக் கழுவிக் கொள்ளவும். பசும்பாலில் மூன்று முறை கழுவிக் கொள்ளவும். பின்னர் அதனை எடுத்து குளிர்ந்த நீர்விட்டுப் பிசைந்து நன்றாக இறுத்துக் கொள்ளவும். பசுமோர் 1.3 லி. எடுத்து அதனுடன் எலுமிச்சம் பழச்சாறு 650 மி.லி. விட்டு நன்றாகக் கழுவி எடுத்துக் கொள்ளவும்.

*காடிபடி யொன்றப்பா நாளே ழூறில்*
*கசப்பெல்லாம் வாங்குமடா கழுவிப் போட்டு*
*நாடியே யாவின்பால் படியிற் போட்டு*
*நலமாகக் கொதிக்கவைத்து உலர்த்திப் போடு*
*தேடியே ஆவினுட நெய்தான் விட்டு*
*சிவக்கவறுத் தெடுத்திடுவாய் பலமும் நான்கு*
*நாடியே அமிர்தசர்க் கரைதா னான்கு*
*நல்லசுத்தி சேங்கொட்டை வறுத்து நாலே* **(133)**

1.3 லி. காடியில் ஏழு நாள் ஊறவிட்டு எடுக்க கசப்பெல்லாம் நீங்கும். கழுவியெடுத்துப் பசும்பால் 1.3 லி. ஊற்றிக் கொதிக்க வைத்து உலர்த்தி ஆவின் நெய் சேர்த்துச் சிவக்க வறுத்தெடுக்கவும். அமிர்த சர்க்கரை 140 கி சேர்த்துக் கொள்ளவும்.

*நாலுபலங் கழுவியெடுத் துலர்ந்த வெள்ளு*
*நல்லசுவ கெந்தியது சுத்தி செய்து*
*பாலுநிற மானதொரு பரங்கிப் பட்டை*
*பாச்சடா வகையிரண்டு பலந்தான் மூன்று*
*மேலுவகை யெள்ளுக்கும் பலமுப்ப தாச்சு*
*மேல்மருந்தைச் சொல்லுகிறேன் விரைந்து கேளு*
*கோலமெனுங் கொடுவேலி வேரின் பட்டை*
*குறையாமல் பலமிரண்டு கூறக் கேளே* **(134)**

வறுத்தெடுத்த சேங்கொட்டை 140 கி, சுத்தி செய்த

அசுவகெந்தி, வெள்ளையான பரங்கிப்பட்டை இவ்விரண்டும் வகைக்கு **105** கி, எள் **1050** கி இவற்றுடன் மேல்மருந்தாக கொடுவேலி வேர்ப்பட்டை **70** கி சரியாக நிறுத்தெடுத்துச் சேர்த்துக் கொள்ளவும்.

*கேளப்பா வாலுளுவை யரிசி கோஷ்டம்*
*கெடியான வால்மிளகு பேரீச் சங்காய்*
*வேளப்பா சடாமாஞ்சி சிவனார் வேம்பு*
*வெட்டிவேர் வெள்ளறுகு சங்கங் குப்பி*
*தாளப்பா பத்திரிகடுகு சிறுநா கப்பூ*
*தக்கோலஞ் சீரகந் தாளிச பத்திரி*
*நீளப்பா நன்னாரி நெரிஞ்சி முள்ளி*
*நிலப்பனையுந் தண்ணீர்விட்டான் கொத்துமல்லி யாமே*
**(135)**

வாலுளுவைஅரிசி, கோட்டம், வால்மிளகு, பேரீச்சங்காய், சடாமாஞ்சில், சிவனார்வேம்பு, வெட்டிவேர், வெள்ளறுகு, சங்கங்குப்பி, பத்திரி, கடுகு, சிறுநாகப்பூ, தக்கோலம், சீரகம், தாளிசபத்திரி, நன்னாரி, நெருஞ்சி, முள்ளி, நிலப்பனை, தண்ணீர்விட்டான், கொத்துமல்லி இவற்றையெல்லாம் சேகரிக்கவும்.

*ஆமடா கல்மதமுங் கல்நா ரேலம்*
*அப்பனே திரிபலையுங் கருவாப் பட்டை*
*ஓமடா கரியபோளஞ் சிற்ற ரத்தை*
*யுற்றகருஞ் சீரகமும் வகையொன் றுக்கு*
*தூமடா பலமொன்று சூரணமே செய்து*
*தாக்கடா கல்லுரலில் சாமம் நாலு*
*நாமடா பனைவெல்லம் பலத்தைக் கேளு*
*நாற்பத்து நாளிட்டு யிடித்துக் கொள்ளே* **(136)**

மேலும் கல்மதம், கல்நார், ஏலம், திரிபலை, கருவாப்பட்டை,

கரியபோளம், சிற்றரத்தை, கருஞ்சீரகம் இவை வகைக்கு 35 கி எடுத்து உலர்த்தி 12 மணிநேரம் இடித்துச் சூரணமாக்கி பனை வெல்லம் 35 கி சேர்த்து நாற்பது நாட்கள் நன்றாக இடித்தெடுத்துக் கொள்ளவும்.

*இடிக்கயிலே தேன்வாரு பலந்தா னெட்டு*
*என்மகனே மயனம்போ லெடுத்துக் கொண்டு*
*இடிக்கயிலே தான்றிக்கா யளவு கொள்ளு*
*பிசகாது மண்டலத்தில் தீரும் நோய்கள்*
*படுக்கயிலே கிடந்தகைகால் முடக்க மெல்லாம்*
*பறக்குமடா சூலைகுட்டம் சூலை வாய்வு*
*எடுக்கயிலே புண்புரைகள் வாத மென்ற*
*தெண்பதுடன் பவுத்திரங்க ளேகுந் தானே.* (137)

அதில் தேன் 280 கி சேர்த்து நேராக இடித்துக் கொள்ளவும். ஒரு வேளைக்குத் தான்றிக்காய் அளவு 40 நாட்கள் உட்கொண்டு வர பின்வரும் நோய்கள் நீங்கும். படுக்கையிலேயே படுக்க வைத்து விட்ட கைகால் முடக்கம், சூலைகுட்டம், சூலைவாயு, புண் புரைகள், 80 வகையான வாதங்கள், பவுத்திரங்கள் யாவும் நீங்கும் என்பதாம்.

*ஏகுமே உள்குத்து மார்ப டைப்பு*
*யென்னசொல்வேன் கரப்பனோடு யோனிப் புற்று*
*சாகுமே நாசிகா கிராணி குன்மந்*
*தீராத கெர்ப்பத்தில் எழுந்த ரோகம்*
*போகுமோ கண்ணோசை கண்ட மாலை*
*பொல்லாத அரையாப்பு ருத்திர வாய்வு*
*வேகுமே நாசிகா பீடையு மல்லாமல்*
*விப்புருதி பிளவையும் விட்டோடுந் தானே* (138)

இம்மருந்தினை உட்கொள்வதால் உள்குத்து, மார்படைப்பு, கரப்பான், யோனிப்புற்று, நாசிகாகிராணி, குன்மம், கெர்ப்பத்தில்

எழுந்த நோய்கள், கண்ணில் சதை வளருதல், கண்டமாலை, அரையாப்பு, ருத்திரவாயு, நாசிகாபீடை, விப்புருதி, பிளவை ஆகிய நோய்கள் நீங்கும் என்பதாம்.

## கெந்தக வல்லாதி

*நாடியே யின்னமொன்று நவிலக் கேளு*
*நல்லகெந்தி வல்லாதி நாடி காணுங்*
*தேடியே கெந்தகந்தான் பலமூன் றப்பா*
*சிறப்பான சேங்கொட்டை பலமோ ரண்டு*
*சூடியே செண்பகப்பூ பரங்கிப் பட்டை*
*சேர்சாதிப் பத்திரியுங் கடுக்காய் ஓமம்*
*ஆடியே சங்கன்வேர் சிறுகி ளாவேர்*
*ஆடுண்ணா மூலிசங்கங் குப்பி வேரே* **(139)**

105 கி கெந்தகம், சேங்கொட்டை 70 கி, செண்பகப்பூ, பரங்கிப்பட்டை, சாதிபத்திரி, கடுக்காய், ஓமம், சங்கன்வேர், சிறுகிளாவேர், ஆடுதீண்டாப்பாளை, சங்கங்குப்பி வேர் இவற்றை யெல்லாம் சேகரித்து வைத்துக் கொள்ளவும்.

*வேரான நிலாவரையுங் கரந்தை தானு*
*மிளகரணை அசுவகெந்தி லவங்கப் பட்டை*
*பேரான தலைச்சுருளி மிளகு சுக்கு*
*பெருமரத்துப் பட்டைபிராயம் பட்டை கோஷ்டம்*
*சீரான காட்டுமல்லி கொல்லங் கோவை*
*சீரகமுஞ் சிற்றரத்தை சாதிக் காயும்*
*தாரான நெல்லிமுள்ளி லவங்கப் பத்திரி*
*தவசியென்ற முருங்கைவேர் தாணிக் காயே* **(140)**

நிலாவரை, கரந்தை, மிளகரணை, அசுவகெந்தி, இலவங்கப் பட்டை, தலைச்சுருளி, மிளகு, சுக்கு, பெருமரத்துப்பட்டை, பிராயம்வேர், கோட்டம், காட்டுமல்லி, கொல்லங்கோவை, சீரகம்,

சிற்றரத்தை, சாதிக்காய், நெல்லிமுள்ளி, இலவங்கப்பத்திரி, தவசி முருங்கைவேர், தான்றிக்காய் இவற்றையும் சேகரித்துக் கொள்ளவும்.

*காயான திப்பிலியுஞ் சித்திர மூலங்*
*காராவின் கோரோசனையுங் கரிய சீரந்*
*தீயான சிறுசெருப் படியின் வேரும்*
*செப்புவேன் வனமூலி பலமொன் றப்பா*
*ஓயாதே உலர்த்தியதை நிறுத்துக் கொண்டு*
*உத்தமனே கடைமருந்து பலமரைய தாகும்*
*சாயாதே யிடித்துவஸ்திர காயஞ் செய்து*
*தவறாம லிடித்திடுவாய் சாமம் நாலே.* **(141)**

திப்பிலி, சித்திரமூலம், காராம்பசுவின் கோரோசனை, கருஞ்சீரகம், சிறுசெருப்படியின்வேர், காட்டுத்தும்பை இவை வகைக்கு 35 கி வீதம் உலர்த்தியதை நிறுத்துக் கொண்டு, முன் சொன்ன கடைச்சரக்குகளை வகைக்கு 18 கி வீதம் சேர்க்கவும். இவற்றை ஒன்றாகக் கலந்து 12 மணி நேரம் இடித்துத் தூளாக்கவும்.

*சாமமது யிடிமயன மாகும் போது*
*சர்க்கரைதான் நான்குபத்து பலமே போடு*
*சேமமது தேன்படிதா னொன்று விட்டுச்*
*சேரவே யெடுத்துப் பீங்கானில் வைத்து*
*நேமமது நெல்லிக்காய் வீத மாக*
*நிமலர்க்குப் பூசைசெய்து மண்டலமே கொள்ளு*
*ஏமமது போலாகுந் திரேகந் தானும்*
*என்னசொல்வேன் நோய்போற போக்குத் தானே* **(142)**

மை போன்று தூளாகும் பதத்தில் சர்க்கரை 1400 கி சேர்த்து கூடவே தேன் 1.3 லி சேர்த்து இளக பதம் வரும்வரை கிண்டி பீங்கானில் அடைத்துக் கொள்ளவும். வேளைக்கு நெல்லிக்காய் வீதம் 40 நாட்கள் தொடர்ந்து உண்டு வந்தால் உடல் நல்ல உரம்பெறும், வளம்பெறும்.

*போக்குமே திமிர்வாதம் மண்டைச் சூலை*
*புற்றுடனே வெடிசூலை கபாலச் சூலை*
*தீர்க்குமே அரிகிரந்தி கரப்பான் குட்டம்*
*திரண்டெழுந்த பிளவையுடன் சீழூ லங்கள்*
*நீக்குமே பலவிரணங் கண்ட மாலை*
*நீங்காத வாதமோடு கரப்பன் சூலை*
*கேட்குமே அரையாப்பு பவுத்தி ரத்தைக்*
*கேள்தண்டு சூலையோடு லிங்கப் புற்றே* **(143)**

திமிர்வாதம், மண்டைச்சூலை, வெடிசூலை, கபாலச்சூலை, அரிகிரந்தி, கரப்பான், குட்டம், பிளவை, சீழ்மூலங்கள், பலவகையான புண்கள், கண்டமாலை, நீங்காமல் தொல்லைதரும் வாதங்கள், கரப்பான், சூலை, அரையாப்பு, பவுத்திரம், லிங்கப்புற்று ஆகிய நோய்கள் யாவும் நீங்கும்.

*லிங்கத்தி லெழுந்ததொரு ரோக மெல்லாம்*
*நிலையாத பத்தியத்தை நிசமாய்க் கேளு*
*சங்கொத்த உப்புதனை வறுத்துக் கூட்டு*
*தவறாத துவரையுடப் பருப்பு நெய்யும்*
*நங்கொத்த மாங்கிசங்க ளாகா தொன்றும்*
*நாடாதே கரப்பனென்ற பதார்த்தந் தன்னை*
*சிங்கத்தை வெல்வதற்குப் பிலனுண் டாகுந்*
*தீராத நோய்பலவுந் தீருந் தானே* **(144)**

லிங்கத்தில் உண்டான நோய்கள் நீங்குவதற்கு கீழ்க்கண்ட பத்தியத்தைக் கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டும். உப்பை வறுத்துக் கூட்ட வேண்டும். துவரம்பருப்பு, நெய், மாமிசங்கள் இவை ஆகாதன. கரப்பானை உண்டாக்கும் பதார்த்தங்களை நீக்கவும். அவ்வாறு நீ கடைப்பிடித்தால் நோய்கள் நீங்கி சிங்கத்தை வெல்வதற்குண்டான பலம் உனக்குக் கிட்டும்.

## சாரத்துலாதி குளிகை

*கூறினேன் வாய்வென்ற தனைத்துப் போக்குங்*
*கொடிய சாரத்துலாதி குளிகை தன்னை*
*மீறியதோர் பெருங்காயம் கழஞ்சி யொன்று*
*மேலான சீரகமுங் கழஞ்சி ரண்டு*
*தேறியதோர் வாய்விளங்கம் கழஞ்சி மூன்று*
*செப்பரிய கொத்துமல்லி கழஞ்சு நாலு*
*ஆறியதோர் செவியமைந்து சுக்க தாறு*
*அப்பனே மிளகேழு திப்பிலியெண் கழஞ்சே* **(145)**

வாயுக்கள் அனைத்தையும் நீக்குகின்ற சாரத்துலாதி மாத்திரை சொல்கிறார். பெருங்காயம் 5 கி, சீரகம் 10 கி, வாய்விளங்கம் 15 கி, கொத்துமல்லி 20 கி, செவ்வியம் 25கி, சுக்கு 30 கி, மிளகு 35 கி, திப்பிலி 40 கி என்ற அளவில் இச்சரக்குகளை எல்லாம் சேகரித்துக் கொள்ளவும்.

*கழஞ்சொம்பான் கோட்டமது கடுக்காய் பத்து*
*கடுஞ்சித்திர மூலமது பதினொான் றாகும்*
*விளஞ்சபீ நாடா ஓமந் தானு*
*மிதமாகச் சூரணஞ்செய் யிதற்கு ரெட்டி*
*தழஞ்சவெல்லஞ் சேர்த்துநீ உரலி லிட்டுத்*
*தானிடித்து மைபோலே சாற்றக் கேளு*
*குழஞ்சபுன்னைக் காய்போல உருட்டிக் கொண்டு*
*கூசாம லந்திசந்தி கொடுத்தி டாயே* **(146)**

இவற்றுடன் கோட்டம் 45 கி, கடுக்காய் 50 கி, சித்திரமூலம் 55 கி, ஓமம் 60 கி இவற்றை மிதமாகச் சூரணம் செய்து இந்தப் பொடிக்கு இரண்டு மடங்காக வெல்லம் சேர்த்து மைபோலாட்டி புன்னைக்காயளவாக உருட்டி காலை, மாலை இரண்டுவேளை 40 நாட்கள் சாப்பிட்டு வர வேண்டும்.

*கொடுத்திடவே வாய்வென்ற திருபத் தாறும்*
*குண்ணவே உயிர்பறிக்கும் குன்ம மெட்டும்*
*எடுத்திடவே மாரடைப்பு ருத்திர வாய்வு*
*யென்சொல்வேன் தமரகமும் யேகும் பாரு*
*அடுத்திடவே பத்தியந்தா னிச்சா பத்திய*
*மாகாத வாய்வென்ற பதார்த்த மெல்லாம்*
*கடுத்திடவே சாரத்துலாதி குளிகை தன்னைக்*
*காண்மக்காள் சொல்லுகிறேன் கருதிக் கேளே.* **(147)**

இம்மருந்தை முறைப்படி சாப்பிட்டு வந்தால் **26** வகை வாயு நோய்களும், வந்தால் மிகுந்த துன்பந்தருகின்ற குன்மம் எட்டும், மாரடைப்பு, ருத்ரவாயு, தமரகவாயு போன்ற நோய்கள் யாவும் நீங்கும். பத்தியம் இச்சாபத்தியம். வாயு பதார்த்தங்கள் நீக்கவும்.

## அயனாதி வடகம்

*கேளப்பா அரப்பொடிதான் பலமோ ரெண்டு*
*கெடியான பழச்சாற்றில் சுத்தி செய்து*
*நாளப்பா மாதுளையின் பழச்சாற்றி லிட்டு*
*நாள்மூன்று நிழலில்வைத்து ரவியிற் போட்டு*
*கேளப்பா குமுறியது நீறிப் போகும்*
*குறிப்பான கருநாவல் பட்டைச் சாற்றில்*
*ஆளப்பா மூன்றுநா ளூறப் போட்டு*
*அப்பனே அரைத்துவில்லை ரவியிற் போடே* **(148)**

இரும்பு அரப்பொடி 70கி, எடுத்துப் பழச்சாற்றில் சுத்தி செய்து, பின் மாதுளம் பழச்சாற்றில் ஊறவிட்டு நிழலில் உலரப்போட்டு வெயிலில் வைத்தெடுக்க இது குமுறிப்போகும். கருநாவல் பட்டைச் சாற்றில் மூன்றுநாள் ஊறப்போட்டுப் பின்னர் அரைத்து வில்லை செய்து வெயிலில் காயப்போடவும்.

*போடப்பா கெசபுடந்தா னாற விட்டு*
*புகழான கரிசாலைச் சாற்றி லிட்டு*
*தேடப்பா கொதிக்கவைத்து மயனம்போல் வாங்கித்*
*திறமான மிளகுபல மிரண்டி னோடு*
*நாடப்பா ஓமமது பலந்தான் றெண்டு*
*நலமான தென்னங்காய்க் குள்ளே விட்டு*
*சூடப்பா ரிப்பாலை நிரம்ப விட்டு*
*துவாரத்தி லாப்பரைந்து சீலை செய்யே* **(149)**

இந்த வில்லைகளை முறைப்படி 1000 வறட்டியில் புடம் போடவும். புடத்தை ஆறவிட்டு கரிசாலைச் சாற்றிலிட்டு கொதிக்க வைத்து மை போல் அரைத்தெடுக்கவும். 70 கி மிளகை 70 கி ஓமத்துடன் சேர்த்திடித்துத் தேங்காய்க்குள் வைத்து தேங்காய்ப் பாலூற்றி அடைத்து சீலை மண் செய்து கொள்ளவும்.

*செய்துமே குக்குடந்தான் புடத்தைப் போட்டு*
*சிரட்டைவெந்த பதத்தெடுத்துக் கல்வத் திட்டு*
*வெய்துமே முன்முருந்தைக் கூடப் போட்டு*
*விளங்குகரிப்பான் சாற்றில் நாலு சாமம்*
*நய்யவே அரைத்துருட்டிச் சுண்டைக் காய்போல்*
*நலமாக நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு*
*யெய்தவே ஒருகுளிகை மேதியுட தயிரில்*
*யேழுநா ளந்திசந்தி கொடுத்தி டாயே* **(150)**

இப்போது இதனைப் பத்து வறட்டியில் புடமிட்டு எடுத்துக் கொள்ளவும். வெந்த பதத்தில் எடுத்துக் கல்வத்திலிட்டு முன் சொன்ன மருந்தையும் கூடச் சேர்த்து அதனைக் கரிசலாங்கண்ணிச் சாற்றில் பனிரெண்டு மணி நேரம் அரைத்துச் சுண்டைக்காயளவாக உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு காலை, மாலை ஏழு நாள் தொடர்ந்து சாப்பிடவும்.

*கொடுத்திடவே யெருமைமோ ருப்பி டாமல்*
*தானருந்து யேழுநாள் தாண்டிப் பின்பு*
*கடுத்திடவே யெட்டாநாள் வறுத்துப்புக் கூட்டு*
*கனமான ஒன்பதிலே தலையை மூழ்கு*
*திடுக்கிடவே வெகுநீரா யிறங்கும் பாரு*
*தினமேழு சென்றபின்புந் தீர்ந்து போமே* (151)

இம்மருந்தை ஏழுநாட்களும் எருமைத் தயிரில் கலந்து சாப்பிடவும். அவ்வேழு நாட்களும் உப்பில்லாமல் மோர் சாப்பிட்டு வரவும். எட்டாம் நாள் உப்பு வறுத்துக் கூட்டலாம். ஒன்பதாம் நாள் தலை மூழ்க வேண்டும். அப்போது கட்டுப்பட்டிருந்த நீர் இறங்கும். ஏழு நாட்கள் சென்றபின் நோய்கள் நீங்கும்.

## திரிலோக வடகம்

*போமென்ற திரிலோக வடகந் தன்னைப்*
*புகலுவேன் மாணாக்காள் புகழ்ந்து கேளு*
*தாமென்ற காந்தமோடு இரும்பின் கிட்டம்*
*தன்னோடு அரப்பொடியுஞ் சமனாய்க் கூட்டி*
*நாமென்ற பழச்சாறு காடி மோரில்*
*நலமாகச் சுத்திசெய்து கல்வத் திட்டு*
*ஊமென்ற காட்டா மணக்கஞ் சாற்றில்*
*உறுதியாய் இருசாம மரைத்தி டாயே* (152)

திரிலோக வடகத்தைச் சொல்வேன் கேட்பீராக. காந்தம், இரும்பின் கிட்டம், அரப்பொடி இவற்றைச் சமனாய்க் கூட்டி எலுமிச்சம் பழச்சாறு, புளித்தமோர் இவற்றைச் சேர்த்துச் சுத்தி செய்து பின்னெடுத்துக் கல்வத்திலிட்டு காட்டாமணக்குச் சாற்றில் 6 மணி நேரம் அரைத்துக் கொள்ளவும்.

*அரைத்துநீ வில்லைதட்டிக் காயப் போட்டு*
*அப்பனே ஓட்டில்வைத்துப் புடத்தைப் போடு*

*விரைந்துநீ யிப்படியே ஆறுபுடம் போடு*
*விதமான செந்தூர மாகும் பாரு*
*நிரைந்துநீ திரிகடுகு விளங்க வோமம்*
*நேரான வெள்ளுள்ளி பலங்கால் வீதந்*
*திரைத்துநீ கள்ளிப்பால் கழஞ்சி நாலு*
*திரிலோகம் பலமொன்று சேர்த்து ஆட்டே* **(153)**

அரைத்தவிழுதை வில்லை தட்டி காயப்போட்டு ஓட்டில் வைத்துப் புடம்போட்டெடுக்கவும். இவ்வாறு ஆறு புடம் போடவும். செந்தூரமாகியிருக்கும். திரிகடுகு, வாய்விடங்கம், ஓமம், வெள்ளைப் பூண்டு இவற்றை வகைக்கு **9** கி எடுத்து **20** கி கள்ளிப்பால், திரிலோகம் **35** கி சேர்த்து ஆட்டிக் கொள்ளவும்.

*ஆட்டிநீ யிருசாம கரிப்பான் சாற்றி*
*லப்பனே தூதளங்கா யளவ தாக*
*நாட்டியே குளிகைகட்டி யுலர்த்திப் போடு*
*நலமான மிளகிலிடு வென்னீரி லூட்டு*
*மாட்டுமே சுக்குநீ ரிஞ்சி நீரில்*
*வகையான பாண்டாறுங் குன்ம மெட்டும்*
*நீட்டுமே காமாலை சோகை பற்றும்*
*நீராம்பல் மகோதரமுங் கவுசி போமே.* **(154)**

தொடர்ந்து **6** மணி நேரம் கையாந்தகரைச் சாற்றில் ஆட்டி மைய எடுத்து தூதுளங்காய் அளவாக குளிகைகள் உருட்டி உலர்த்திக் கொண்டு மிளகிலிட்டு வெந்நீரிலிடவும். மேலும் சுக்குத் தண்ணீர், இஞ்சித் தண்ணீர் இவற்றிலும் வழங்கலாம். இதனால் பாண்டு வகைகள் ஆறு, குன்மம் எட்டு, காமாலை, சோகை, நீராம்பல், மகோதரம், கவுசி இவை நீங்கும்.

*போகுமது மிகுந்தவர்க்கு நாபிச் சூடாய்*
*புண்ணாகி கமலத்தில் வெந்து சீயா*

*மாகமதிற் கிரந்தி பதினெட்டு முண்டா*
*மடங்காத சூலையறு மூன்று மாகி*
*மேகமது மூவெழு கிரீச்சரங் களாலும்*
*வெந்து வருகின்ற கெந்ததாளி மூன்றுந்*
*தாகமே பெருத்த பீனசங்க ளாறு*
*தலைநோவு பிடரிவலி சயங்க ளைந்தே* **(155)**

நாபி சூடாகி புண்ணாகி வயிறு வெந்து தோன்றும். பதினெட்டு வகை கிரந்தி நோய்களும் நீங்கும். பதினெட்டு வகை சூலைகள், 21 வகை கிரீச்சர நோய்கள், கெந்ததாளி நோய்கள், ஆறுவகைப் பீனசங்கள், தலைநோய், பிடரிவலி, சயங்கள் எல்லாம் நீங்கும் என்பதாம்.

*சயகாசஞ் சிலேற்பனங்கள் தொண்ணூற் றாறுந்*
*தசையடைப்பு நீரடைப்புத் தேக காந்தல்*
*பயமொப்பாய் நொந்தளிந்து தாது நட்டம்*
*பனைத்தெழுந்த சுரங்களறு பத்தி னாலுந்*
*துயந்தஅந்திர வாய்வோடு ரத்த பித்தந்*
*துடிவாதந் திமிர்வாதந் தீரு தற்கு*
*தயவுவந்து சொன்னனடா தயில மொன்று*
*நெல்லிமுள்ளி லேகியந்தான் சொல்லக் கேளு* **(156)**

சயம், காசம், சிலேற்பனங்கள் தொண்ணூற்றாறு, தசையடைப்பு, நீரடைப்பு தேககாந்தல், உடம்பெல்லாம் வலி ஏற்படல், தாதுநஷ்டம், சுரங்கள் அறுபத்துநான்கு, அந்திரவாயு, இரத்தபித்தம், துடிவாதம், திமிர்வாதம் போன்றன நீங்குவதற்கு நெல்லிமுள்ளி லேகியத்தைச் சொல்வேன் கேட்பாயாக.

## நெல்லிமுள்ளி லேகியம்

*புனிதமென்ற நெல்லிமுள்ளி தைலம் தன்னை*
*புகலவென்றால் னெல்லிமுள்ளி பலமிருப தாகுங்*

*குனிதமென்ற ஆற்றுநீர் படியெண் ணான்கு*
*குறுக்கியே நாலுபடி வடித்துக் கொண்டு*
*வனிதமென்ற சர்க்கரையும் பல மிருபதஞ்சு*
*மாட்டுப்பா பாகுவரும் பருவந் தன்னில்*
*கனிதமென்ற அதிமதுரம் கூகை நீறும்*
*கானமுந்திரிப் பழமதுதான் கருதி டாயே* (157)

நெல்லிமுள்ளி பலம் 700 கி, ஆற்று நீர் 4160 லி. விட்டு 5.2 லி ஆகச் சுருக்கிக் கொண்டு சர்க்கரை 875 கி விட்டு அடுப்பேற்றிக் கிண்டி பாகுபதத்தில் இறக்கிக் கொள்ள வேண்டும். அதிமதுரம், கூகைநீறு, கானமுந்திரிப்பழம் இவற்றையும் அதனுடன் சேர்த்துக் கொள்ளவும்.

*கருதியே வகைக்கு ரெண்டுபலம் தாக்க*
*கனத்த பெரித்துனோடு திப்பிலியும் கேளு*
*விருந்திடு ணாடுவகை யொன்றுபல மூன்றப்பா*
*மெல்லினமாய்ப் பொடிபண்ணி பாகில் தூவி*
*பெரிதுவிடு தேன்படிதான் அரையும் கூட்டி*
*பேசாதே கிண்டியே புன்னைக்காய் போல*
*அறிந்துகொடு அந்திசந்தி தீரும் நோய்கள்*
*அப்பனே வாந்திபித்தம் அகலுந் தானே* (158)

மேல்மருந்துகளை வகைக்கு 70 கி வீதமெடுத்துத் திப்பிலி 105 கி சேர்த்துச் சூரணமாய் செய்து முன் சொன்ன பாகில் தூவித் தேன் சேர்த்துக் கிண்டி புன்னைக்காயளவு உருட்டி நோயின் வன்மை மென்மை அறிந்து அந்தி, சந்தி சாப்பிட்டு வந்தால் வாந்தி, பித்த நோய்கள் நீங்கும் என்பதாம்.

*அகலுமே கபாலப் பித்தம் பாண்டு*
*அழற்சியுடன் வறட்சிதிமிர் வாய்வு சோகை*

*புகலுமே நீர்ச்சுருக்கு பித்த குன்மம்*
*போகுமே உடம்பெரிவு போகுங் கண்டாய்*
*இகலுமே புளியோடு கசப்பு தள்ளு*
*இருபதுநாள் கொள்ளவெல்லா மிடரும் தீரும்*
*சகலுமே பிராணிதனக் குபசா ரங்கள்*
*செய்தா லகலும்வினை தவிருந் தானே.* **(159)**

கபாலப்பித்தம், பாண்டு, அழற்சி, வறட்சி, திமிர்வாயு, சோகை, நீர்ச்சுருக்கு, பித்தகுன்மம், உடம்பெரிச்சல் போன்ற நோய்கள் நீங்கும். புளி, கசப்பு இவற்றை நீக்கவும். தொடர்ந்து இருபது நாட்கள் இம்மருந்தை உட்கொண்டு வரவேண்டும். விலங்கினத்திற்கு நம்மாலான உதவி செய்ய வினை நீங்கும்.

## சண்ட மாருத மெழுகு

*சன்னியோடு சிலேற்பனங்கள் சூலை வாய்வு*
*தான்தீர சண்டமாருத மெழுகு கேளு*
*பன்னுரச கற்பூரம் லிங்கம் வீரம்*
*பரிவான கெந்தியோடு தாளகமும் சிலையு*
*முன்னதனைச் சுத்திசெய்து வைத்துக் கொண்டு*
*முதகவிடு உள்ளும்பா லாவியில் வைத்து*
*குன்னியது வற்றவற்ற மேல்பால் விட்டுக்*
*கொடுரவியி லேழுநாள் வைத்து வாங்கே* **(160)**

சன்னி, சிலேற்பனங்கள், சூலை, வாயு இவை நீங்குவதற்கான சண்டமாருத மெழுகைச் சொல்வேன் கேட்பாயாக. இரச கற்பூரம், லிங்கம், வீரம், கெந்தி, தாளகம், மனோசிலை இவற்றை முன்னதாகவே சுத்தி செய்து வைத்துக் கொள்ளலாம். இவற்றை யெல்லாம் பாலாவியில் வேகவிட்டு மேலேயும் பாலை ஊற்றி மதிய வெயிலில் ஏழு நாட்கள் தொடர்ந்து காயவைத்தெடுக்கவும்.

*தேங்கியே மூன்றுதினம் சென்ற பின்பு*
*தீயிலே வாட்டியெடு கடிகை ரெண்டு*
*ஓங்கியே வில்வக்காய் நொறுக்கி யிட்டு*
*உத்தமனே குழித்தைல மாக வாங்கித்*
*தாங்கியே சுருக்கிடுவாய் நாலு சாமம்*
*தப்பாமல் வகையொன்று கழஞ்சு வொன்றே.* **(161)**

மூன்று நாட்கள் கழிந்த பின்னர் 48 நிமிடங்கள் தீயில் வாட்டி எடுக்க வேண்டும். வில்வக்காய் நொறுக்கி அதில் சேர்த்துக் கொள்ள வேண்டும். பின்னர் குழி வெட்டி, குழித் தைலமாக இறக்கிக் கொள்ளவும். பின்னர் அதனை 12 மணி நேரம் சுருக்கி எடுத்துக் கொள்ளவும்.

*ஒன்றாக நிறுத்தப்பா கல்வத் திட்டு*
*உற்றகரு நாவியது கழஞ்சு மூன்று*
*குன்றாமல் திரிகடுகு வகைஒன் றுக்குக்*
*கூட்டுவாய் முக்கழஞ்சி கூட்டி யாட்டி*
*சென்டுவைங் கோலத் தயிலம் விட்டு*
*வேர்த்தரைக்கால் சாம மெழுகாம் பாரு*
*நின்றாடத் தேன்விட்டுச் சாம மாட்டி*
*நீகொம்புச் சிமிள்தன்னி லடைத்துக் கொள்ளே* **(162)**

இவற்றை ஒன்றாக நிறுத்தெடுத்துக் கல்வத்திவிட்டு கருநாபி 15 கி, திரிகடுகு ஒவ்வொன்றும் (சுக்கு, மிளகு, திப்பிலி) வகைக்கு 15 கி. கூட்டி ஒன்றாக ஆட்டியெடுத்துக் கொள்ளவும். பின் ஐங்கோலத் தைலம் சேர்த்தரைத்து மெழுகு பதமாகும்போது இறக்கித் தேன் சேர்த்து 3 மணி நேரம் ஆட்டியெடுத்துச் சிமிளில் அடைத்துக் கொள்ளவும்.

*கொள்ளடா மண்டலந்தான் சன்னி போகும்*
*கொடியசுரம் சூலையோடு சன்னி போகும்*

*அள்ளடா வாதமோடு அரையாப்புக் கிரந்தி குட்ட*
*மண்டத்தின் பிளவைபுற்றுப் பவுத்தி ரங்கள்*
*விள்ளடா அனுபான மறிந்து செய்தால்*
*விரட்டுமடா குன்றியெடை வேக மெத்த*
*தெள்ளடா தினந்தோறு மந்தி சந்தி*
*தீட்டடா நோயனைத்தும் தீருந் தானே*
*தீருமே புகையோடு புளியும் தள்ளு*
*தேகபலன் நோயறிந்து மருந்தை யூட்டு* **(163)**

இதனை 40 நாட்கள் தொடர்ந்து உட்கொண்டு வந்தால் சன்னி, கொடியசுரம், சூலை, வாதம், அரையாப்பு, கிரந்தி, குட்டம், அண்டப்பிளவை, புற்று, பவுத்திரநோய்கள் போன்ற பலநோய்கள் அனுபானம் அறிந்து செய்ய நல்ல பலனைப் பெறலாம். வேளைக்கு 130 மி.கி அளவு காலை, மாலை இரண்டுவேளை 40 நாட்கள் உட்கொள்ள எல்லாவகையான நோய்களும் நீங்கும். புகை, புளி தள்ளவும்.

## சீனிச்சூரணம்

*கண்டிட்டா சீனிசூ ரணத்தைக் காணு*
*ரசம்சுத்தி செய்து பலமுங் கால்தான்*
*விண்டிட்டா கெந்தியொரு பலந்தா னப்பா*
*மேலான அரிதாரம் பலந்தான் ரெண்டு*
*பண்டிட்ட நற்பரங்கிப் பட்டைபலம் நாலு*
*பாரடா கொடிவேலி வேரின் பட்டை*
*துண்டிடவே ஒன்றரைதான் பலமே போடு*
*சொல்லாதே வெட்டிவிரை பலந்தா னொன்றே.* **(164)**

இரசத்தைச் சுத்திசெய்து 9 கி நிறுக்கவும். கெந்தி 35 கி, அரிதாரம் 70 கி, பரங்கிப்பட்டை 140 கி, கொடிவேலி வேர் பட்டை

**52** கி, வெட்டிவேர் **35** கி, இவற்றையெல்லாம் ஒன்றாகச் சேகரிக்க வேண்டும்.

*பலத்தாலே நிறுத்துக் கல்லுர லிட்டுப்*
*பகருஞ்சேங் கொட்டையைந்து வறுத்துப் போடு*
*பிலத்தாலே யிடித்துச் சூரணமே செய்து*
*பேணியே அந்திசந்தி யிளவென் னீரில்*
*நலத்தாலே ஒருபொழுதுக் கரைக ழஞ்சு*
*நல்கிடவே பத்தியத்தை நாட்டக் கேளு*
*குலத்தாலே முருங்கைக்கா யிலையு மாகுங்*
*கோழியோடு துவரையுமாங் குருவி யாமே* **(165)**

நிறுத்து எடுத்தவற்றையெல்லாம் கல்லுரலிலிட்டு இடித்துப் பின்னர் சேங்கொட்டை ஐந்து சேர்த்து வறுத்தெடுக்கவும். வறுத்ததை மீண்டும் இடித்துச் சூரணம் செய்து காலை, மாலை இரண்டு வேளை இளவெந்நீரில் சாப்பிட்டு வரவும். ஒவ்வொரு வேளைக்கும் **2.5** கி உட்கொள்ளவும். முருங்கைக்காய், முருங்கைக்கீரை, கோழிக்கறி, துவரை, குருவிக்கறி இவற்றைச் சேர்த்துக் கொள்ளலாம்.

*ஆகாது புளியுப்பு புகையு மூன்றும்*
*அப்பனே பதினைந்து தினமு மட்டு*
*மேகாத பிணியகலும் வகையைக் கேளு*
*எழுமூலங் கருங்குட்ட மண்ட வாதம்*
*போகாத செங்குட்டம் வெண்குட் டங்கள்*
*புருடருட கிரந்திதண்டு பிளவைப் புண்கள்*
*சாகாது அரையாப்புச் சூலை யெல்லாந்*
*தான்கெட்டோ மென்றுபோகுந் தான்கண் டீரே* **(166)**

புளி, உப்பு, புகை மூன்றையும் நீக்க வேண்டும். இவ்வாறு

பத்தியங் காத்து பதினைந்து நாட்கள் மருந்தை உட்கொண்டு வந்தால் பிணிகள் அகலும். எழுமூலம், கருங்குட்டம், அண்ட வாதம், செங்குட்டம், வெண்குட்டம், கிரந்தி, ஆண்களுக்கு வரும் தண்டுப் பிளவை, புண்கள், அரையாப்பு, சூலை எல்லாம் நீங்கும்.

## இரசாதி மெழுகு

*புகலரிய வீரமொடு இரசகற் பூரம்*
*புதியதொரு சாதிலிங்கம் வகைதான் மூன்று*
*செகமரிய வகைக்கிரெண்டு கழஞ்சு தூக்கிச்*
*சேரடா ஆறுபங்கு மேதி நெய்யை*
*பகல்முழுது மரைத்துநீ குளிர்ந்த சலத்திட்டு*
*பாரடா அதையெடுத்து நீரை வாங்கி*
*இகமதனில் மானிடர்க்குப் புண்ணி லிட்டா*
*லெழுந்தபல விரணமெல்லா மேகுந் தானே* **(167)**

வீரம், இரசகற்பூரம், சாதிலிங்கம் ஆகிய மூன்றும் வகைக்கு 10 கி வீதமெடுத்து 60 மி.லி. எருமை நெய் சேர்த்து பகல் முழுமையும் நேகாக அரைத்துக் குளிர்ந்த தண்ணீரில் போடவும். அதனை எடுத்து ஆறாத இரணங்களுக்கு போட்டு வந்தால் அவை எளிதில் ஆறி விடும்.

## இரசபற்பம்

*அறையக்கேள் சுத்திசெய்த சூதந் தானு*
*மப்பனே நாலுபலம் நிறுத்துக் கொண்டு*
*பறையக்கேள் அடிகனத்த பாண்டந் தன்னில்*
*பாச்சடா கறியுப்பு பலந்தா னாலு*
*துறையக்கேள் கொடிவேலி விளைந்த வேரை*
*சோமென்ற நாதநீர் அண்ட நீரால்*
*முறையக்கேள் சாமமொன்று ஆட்டி வாங்கி*
*மூசைசெய்து சூதத்தை யதற்குள் சேரே.* **(168)**

முறையாகச் சுத்தி செய்யப்பட்ட சூதம் 140 கி, எடுத்து அடிகனமாகவுள்ள பாத்திரத்தில் வைக்கவும். கறியுப்பு 140 கி, கொடிவேலி நன்கு முற்றியது 140கி எடுத்து இதனை நாதநீர் அல்லது முட்டைவெண்கருவால் மூன்று மணி நேரம் ஆட்டி எடுத்துக் கொள்ள வேண்டும்.

*சேரப்பா உப்பின்மேல் குகையை வைத்து*
*திறமான பாண்டத்தில் பொருந்த மூடிக்*
*காரப்பா வச்சிரமாச் சீலை செய்து*
*கனமான வாலுகையில் நாலு சாமந்*
*தீரப்பா வேம்பினுட விறகு போட்டு*
*தீயதுதான் காடாக்கினி யாயெ ரித்து*
*ஆரப்பா வெடுத்துப்பார் மேற்பாண் டத்து*
*ளானவிந்து பற்பமதா யிருக்குந் தானே* **(169)**

மூசைசெய்து சூதத்தை அதற்குள் வைக்கவும். பாத்திரத்தில் உப்பினையிட்டுக் குகையை வைத்து மற்றொரு பாத்திரத்தால் பொருந்த மூடி வலுவான சீலைசெய்து வாலுகையில் ஏற்றி பனிரெண்டு மணி நேரம் வேப்பம் விறகினை மும்மூன்றாக வைத்தெரித்து ஆறியபின் பார்த்தால் மேற்பாத்திரத்தில் பற்பம் படிந்திருக்கும். அதனைச் சேகரித்துக் கொள்ள வேண்டும்.

*இருக்குமந்த பற்பமதை யெடுத்து நீயு*
*யேமமென்ற வயிரவன்முன் வைத்துப் போற்று*
*உரைக்கிரை கருநாகப் பத்துக் கொன்று*
*ஊட்டவே ஒன்பதரை உப்புக் கேகா*
*விரைக்கின்றேன் வெள்வங்கம் நீரை வாங்கும்*
*மேலான வித்தையிது வெகுபதன மப்பா*
*நிரைக்கின்றேன் வஞ்சமுற்ற சண்டா ளர்க்கு*
*நீகருவைக் காட்டாதே நிசஞ்சொன் னோமே* **(170)**

சேகரித்தெடுத்த பற்பத்தை வைரவன்முன் வைத்துப் பூசை செய்து கருநாகத்திற்குப் (கருவங்கம்) பத்திற் கொன்றும், உப்பிற்கு ஒன்பதரைக்கு ஒன்றும் வழங்கலாம் என்பதாம். இதனை வெள்வங்கத்துடன் சேர்க்க வெள்வங்கத்தின் நீரை வாங்கி விடும். இந்த வேதை வித்தை மிகக் கவனமாகக் கையாளப்பட வேண்டும்.

*சொன்னதொரு சூலை பதினெட்டுந் தீரும்*
*துடியான கிரந்தியரை யாப்புஞ் தீரும்*
*வன்னமுள்ள பொன்போலே திரேக மாகும்*
*வச்சிரம்போல் மேனியது வலுத்துப் போகும்*
*வின்னமொரு பத்தியத்தைச் சொல்லக் கேளு*
*மேதியுட நெய்பாலும் மோரு மாகா*
*பின்னமுருங்கைப் பூவுடனே புளிப்பு மாற்று*
*பிசகாமல் பத்தியமா யுண்டு தேரே.* **(171)**

இம்மருந்துண்பதால் பதினெட்டுவகை சூலை நோய்களும், கிரந்திநோய், அரையாப்பு நோய் இவை நீங்கும். மேனி பொன்னாகும். உடல் வயிரம்போல் வலுப்பெறும். இதற்குப் பத்தியம் எருமை நெய், பால், மோர் ஆகாது. புளிப்பிற்கு மாற்றாக முருங்கைப்பூவைப் பயன்படுத்தலாம்.

*உண்டுவரில் வாய்சூலைக் கட்டித் தாலும்*
*உத்தமனே யேரண்டத் தெண்ணெய்த் தேய்த்து*
*மண்டலத்தி லொன்றைவிட்டு ஒருநாள் மூழ்க*
*வாய்ச்சூலை வாங்குமடா கசாயங் கேளு*
*கண்டுபாராங் கருவேலுங் காசுக் கட்டி*
*களிப்பாக்கும் வெற்றிலையும் மருதம் பட்டை*
*சுண்டிடவே யேற்றிறக்கி கசாயந் தன்னை*
*சுகமாகக் கொப்பளிக்க சுகம தாமே* **(172)**

ஏரண்டத்தெண்ணெய் தேய்த்து 40 நாட்களுக்கு ஒரு நாள்

விட்டொரு நாள் தலைமுழ்கி வர வாய்ச்சூலை, கட்டி நீங்கும். கண்டுபாரங்கி, கருவேல், காசுக்கட்டி, களிப்பாக்கு, வெற்றிலை, மருதம்பட்டை இவற்றையெல்லாம் ஒன்றிரண்டாக இடித்து முறைப்படி குடிநீர் வைத்திறக்கி வாய்க்கொப்பளித்து வந்தால் வாய்ச்சூலை நீங்கும் என்பதாம்.

## இரசக் களிம்பு

*பாரப்பா கிரந்திமுதல் சூலைக் கெல்லாம்*
*பக்குவமாய்க் களிம்புவகை யொன்று கேளு*
*ஆரப்பா அறிவார்கள் காசுக் கட்டி*
*அப்பனே துத்தமுடன் ரசமுங் கூட்டி*
*வீரப்பா வெள்ளைக்குங் கிலியம் செய்து*
*விபரமுள்ள சுண்ணமது கூட்டி ஆட்டி*
*நேரப்பா யெண்ணெயிதில் ரெட்டிப் பிட்டு*
*நெகிழநன்றாய் அரைத்ததனை வழித்து வைய்யே.* **(173)**

கிரந்தி முதல் சூலைவரை உள்ள நோய்கட்கெல்லாம் பக்குவமான களிம்பு வகை ஒன்றைச் சொல்வேன். எல்லோரும் அறிந்த காசுக்கட்டி துத்தம், இரசம், வெள்ளைக்குங்கிலியம், சுண்ணாம்பும் சேர்த்து ஆட்டி இரண்டு மடங்கு நல்லெண்ணெயில் அரைத்து வழித்து வைக்கவும்.

*வழித்த களிம்பதனைச் சிமிழில் வைத்து*
*வாகாகப் புண்புரைகள் தனக்கு மைந்தா*
*கிழித்த துணிதனில் தடவிப் போட்டுபாரு*
*கேடுகெட்ட சூலைமுதல் பவுத்தி ரங்கள்*
*சுழித்தகண்ட மாலையோடு பிளவை வாளை*
*சுருக்கான கண்ணோசி லிங்கப் புற்று*
*தெளித்ததொரு சிலந்திமுத லிதுக ளெல்லாம்*
*நேர்மையுள்ள களிம்பதற்குந் தீருந் தானே.* **(174)**

பக்குவமாக வழித்திறக்கிய களிம்பைச் சிமிழில் அடைத்துக் கொள்ளவும். அதனை முறைப்படி புண்புரைகளுக்குத் தடவி வர முற்றிய சூலை முதல் பவுத்திரங்கள், கண்டமாலை, பிளவை, கண்ணில் சதை வளர்தல், இலிங்கப்புற்று, சிலந்தி முதலான எல்லாம் ஆறும் என்பதாம்.

## வாலை ரசக்குளிகை

*காணாத காட்சியெல்லா மிந்த நூலில்*
*கருதினே னின்னமொரு குளிகை கேளு*
*தோனாத வாலைரசம் வைக்கும் மார்க்கம்*
*சொந்தமுடன் சொல்லுகிறேன் சூட்ச மாக*
*வேனதொரு சாதிலிங்கம் தன்னை வாங்கி*
*விதமாகத் தான்பொடித்துத் தோண்டிக் கேற்றி*
*நானாத் நினசூரி வேர்தான் கொஞ்சம்*
*நன்மையுடன் பொடிசெய்து கூடப் போடே* (175)

வாலைரசம், செய்யும் வழியைச் சொல்வேன். கவனமாகக் கேட்டுக்கொள்வாயாக. சாதிலிங்கத்தை பொடித்துத் தோண்டியில் போட்டுக் கொள்ளவும். கொடிவேலிவேர் அதே அளவெடுத்துப் பொடித்து இரண்டையும் ஒன்றாகக் கலந்து கொள்ளவும்.

*போட்டுமே மருந்தோண்டி தன்னை நீயும்*
*புனிதமுடன் தான்மூடி பொருந்த வைத்து*
*நாட்டுமே சீலைமண் ஏழு செய்து*
*நலமாக வுலர்ந்தபின்பு நன்மை யாக*
*ஆட்டுமே கணபதிக்குப் பூசை செய்து*
*அப்பனே வாலுகையில் ஏற்றி மைந்தா*
*காட்டுமே காடாக் கினியாகத் தானும்*
*கனமாக ஒருசாம மெரித்தி டாயே* (176)

மருந்துள்ள பாத்திரத்தை வேறொரு பானை கொண்டு பொருந்த மூடி ஏழுமுறை சீலைமண் செய்து உலர விடவும். உலர்ந்த பின் எடுத்து கணபதிக்குப் பூசை செய்து வாலுகா எந்திரத்தில் ஏற்றி மூன்று விறகடுக்கி, மூன்று மணி நேரம் தொடர்ந்து எரித்துக் கொள்ளவும்.

*எரித்தஅனல் தானவித்து இறக்கி மைந்தா*
*இன்பமுட னாறவிட்டு அவிழ்த்து நீயும்*
*தரித்ததொரு மேல்தோண்டி தன்னை நீயும்*
*தன்மையுள்ள வராகமுடி தன்னால் நீயும்*
*தெரித்துமிக போகாமல் துடைத்து நீயும்*
*திறமாக பார்க்கயிலே சூதம் போல*
*பொரித்துமிக யிருந்ததொரு வாலை தன்னைப்*
*புத்தியுடன் குடுக்கையிலே யடைத்து வைய்யே* **(177)**

எரித்து அவித்து இறக்கிக்கொண்டு ஆறியபின் அவிழ்த் தெடுத்து மேலே மூடிய பானையில் உள்ளதைக் கவனமாக வெடித்து விடாமல் பன்றி முடியால் துடைத்தெடுத்துக் கொள்ள வேண்டும். சூதம் போல் இருந்த இந்த மருந்தை எடுத்துப் பத்திரமாக குடுக்கையில் அடைத்து வைக்கவும்.

*வைத்ததொரு வாலைபண வெடைகால் மைந்தா*
*தன்னை மார்க்கமுடன் விடத்தலைவேர் சந்த னத்தி*
*மெய்த்திட்ட மாகவேநீ பத்துக் குள்தான்*
*மென்மையுட னந்திசந்தி யீந்தா யானால்*
*கைத்ததொரு புகையுடனே புளியும் தள்ளு*
*கனமான இருபதுநாள் கழித்த பின்பு*
*செய்திட்டந் தவறாமல் ஓமம் தேய்த்துச்*
*சிவசிவா தலைமுழுகிப் புளியைக் கூட்டே* **(178)**

இந்த வாலை மருந்தினை 130 மி.கி அளவு எடுத்துக் கொண்டு விடத்தலை வேரில், சந்தனத்தில் இம்மருந்தை உட் கொண்டால் காலை, மாலை இரண்டுவேளை, 10 நாட்கள் உட்கொள்ளவும். மருந்துண்ணும் காலத்தில் புளி, புகை தள்ளவும். இருபது நாட்கள் கழித்து ஓமம் தேய்த்து தலைமுழுகி புளியையும் சேர்க்கலாம்.

*கூட்டவே தீருகிற வியாதி கேளு*
*கூறுகெட்ட சொறிசிரங்கு கிரந்தி நோயும்*
*நாட்டவே புண்புரைகள் வயிற்றி ரைச்சல்*
*நலமான பேதியுடன் காய்ச்சல் தீரும்*
*மூட்டவே திரேகமதில் காந்தி மீறும்*
*புனிதமுடன் தாதுவிர்த்தி பிலமுண் டாகும்*
*விட்டமா யின்னமொரு அனுபா னங்கேள்*
*மைந்தனே வாலைரசம் விராகன் ரெண்டே* **(179)**

இம்மருந்து சாப்பிடுவதால் சொறி, சிரங்கு, கிரந்தி, புண் புரைகள், வயிற்றிரைச்சல், கழிச்சலுடன் கூடிய காய்ச்சல் நீங்கும். உடல்காங்கை அகலும், தாதுவிருத்தி உண்டாகும். உடல் பலம் பெறும். இதற்கு இன்னுமொரு அனுபானம் சொல்வேன்.

*விராகனெடை ரெண்டப்பா பரங்கிப் பட்டை*
*வீரான திப்பிலியும் லவங்கம் ரெண்டும்*
*விராகனெடை நாலப்பா கறுப்பு வெல்லம்*
*விசையடங்க தானரைத்து உண்டை கேளு*
*விராகனெடை முக்காலா யுருட்டிக் கொண்டு*
*வீறுகெட்ட மானிடர்க்கு ஏழு நாள்தான்*
*விராகனிடை முக்காலா யந்தி சந்தி*
*விபரமுடன் தான்குடுத்து மேலும் கேள்.* **(180)**

வாலைரசம், பரங்கிப்பட்டை வகைக்கு 8 கி., திப்பிலி,

இலவங்கம் இவை வகைக்கு 16 கி, வேண்டிய அளவு கறுப்பு வெல்லம் சேர்த்து இவற்றைக் கூட்டி அரைத்து 3 கி எடையுள்ள உருண்டைகளாக உருட்டிக் கொள்ளவும். காலை, மாலை இரண்டு வேளை ஏழு நாட்கள் உட்கொண்டு வர பின்வரும் நோய்கள் நீங்கும்.

*கேளப்பா பத்தியந்தா னுப்பா காது*
*கிருபையுடன் பசும்பாலும் கூட்டிக் கொள்ளு*
*நாளப்பா பதினஞ்சா நாளி லேதான்*
*நன்மையுடன் தலைமுழுகிட மிளகால் வாறு*
*கேளப்பா ஒன்றுமில்லைக் கோழிச் சாறுங்*
*கூட்டியே பத்தியத்தை முறித்துப் போடு*
*வேளப்பா வாயெல்லாம் வெந்து காணும்*
*விதமாகக் தான்தானே யாறும் பாரே* **(181)**

உப்பு பத்தியமாகும். பசும்பால் சேர்த்துக் கொள்ளவும். 15 ஆம் நாள் எண்ணெயில் மிளகிட்டுக் காய்ச்சித் தலை முழுகவும். கோழி இறைச்சிக் குடிநீர் (சூப்) வைத்துச் சாப்பிட்டுப் பத்தியத்தை முறித்துக் கொள்ளவும். இம்மருந்தால் வாய் வெந்து புண்ணாகும். அது மெதுவாகத்தான் குணமாகும்.

*தாந்தானே யாறயிலே தீரும் நோய்கேள்*
*தன்மையில்லா மேகவெள்ளை தடிப்புப் புண்கள்*
*சேர்ந்ததொரு அழிகிரந்தி குழிகி ரந்தி*
*தீராத அரையாப்பு தேக சூலை*
*போந்தானே கால்முடக்கு கைமு டக்குப்*
*பொல்லாத நோய்களெல்லாம் போகும் சொன்னேன்*
*நான்தானே வாலையுடக் கருணை யாலே*
*நன்மையில்லா வியாதியெல்லாம் நலம தாமே* **(182)**

அந்த வாய்ப்புண் ஆறுகின்ற காலத்தில் மேகவெள்ளை, தடிப்பு, புண்கள், அழிகிரந்தி, குழிகிரந்தி, அரையாப்பு, தேகசூலை,

கால்முடக்கு, கைமுடக்கு, வாதங்கள் போன்ற துன்பந்தருகின்ற நோய்கள் நீங்கும்.

## தாது விருத்திக்குக் குளிகை

*நலமான இன்னமொரு குளிகை கேளு*
*வண்மையுள்ள வாலைரசம் கழஞ்சி மூன்று*
*குலமான சாதிலிங்கம் கழஞ்சி ஒன்று*
*கூறுகிறோம் வெண்காரம் கிராம்பு கஞ்சா*
*தலமான முருங்கைவிரைச் சாதிக் காயும்*
*தண்மையுள்ள சாதிபத்திரி முத்தக் காசு*
*பிலமான அபினிப்பூ னைக்காலி வித்து*
*புண்ணிய சாரத்தின் பருப்புங் கூட்டே* **(183)**

நான் இன்னுமொரு குளிகை சொல்வேன். வாலை ரசம் 15 கி, சாதிலிங்கம் 5 கி, வெண்காரம், கிராம்பு, கஞ்சா, முருங்கை விதை, சாதிக்காய், சாதிபத்திரி, கோரைக்கிழங்கு, அபினி பூனைக்காலிவித்து, சாரப்பருப்பு இவற்றையெல்லாம் கூட்டிக் கொள்ளவும்.

*கூட்டுவாய் பூமிச்சர்க் கரைக்கி ழங்கு*
*குணமான வகைக்கிவகை அரைப்பலமாய்க் கூட்டு*
*நாட்டுவாய் பொடிசெய்து தேங்காய்க் குள்ளே*
*நன்மையுடன் தானடைத்துச் சாண மேற்றி*
*போட்டுவிடு பத்தெருவில் புடந்தா னப்பா*
*புண்ணியனே சிரட்டையது வேகும் போது*
*ஆட்டுவாய் ஆறினபின் சிரட்டை நீக்கி*
*அப்பனே முருங்கைப்பூ சாற்றி னாலே* **(184)**

இவற்றுடன் பூமிச்சர்க்கரைக்கிழங்கையும் சேர்த்து வகைக்கு 18 கி எடுத்துக் கொள்ளவும். இவற்றை ஒன்றாக்கிப் பொடித்துக்

கொள்ளவும். தேங்காயில் சிறு துளையிட்டு அதில் பொடியைக் கொட்டி வாய்மூடி பத்தெருவில் புடமிட்டுச் சிரட்டையை வேக வைத்து ஆறியபின் எடுத்து முருங்கைப்பூச்சாற்றினால் அரைத்துக் கொள்ளவும்.

*முருங்கைப்பூச் சாற்றாலே மூன்று சாமம்*
*முக்கியமுடன் தானரைத்துக் கிளச்சிக் காய்போல்*
*நெருங்கவே உருட்டியதை உலர்த்திக் கொண்டு*
*நின்மகனே ஒருஉருண்டை நினவாய்க் கேளு*
*நருங்கவே பொடிசெய்து சர்க்கரையி லுண்ண*
*நன்மையுள்ள புளிதள்ளிச் சாதம் உண்ணு*
*முருங்கையென்ற பசுவின்பால் சர்க்கரை கூட்டி*
*குணமாகத் தானறிந்து கூட்டு வாயே* **(185)**

முருங்கைப்பூச்சாற்றினால் தொடர்ந்து 3 மணி நேரம் அரைத்தெடுத்து கழற்சிக்காய் அளவாக உருண்டைகள் செய்து உலர்த்திக் கொண்டு, வேளைக்கு 1 உருண்டை வீதம் சர்க்கரையில் பொடித்துண்ணவும். புளி நீக்கிச் சாப்பாடு சாப்பிடவும். பசுவின் பாலில் சர்க்கரை சேர்த்துச் சாப்பிடலாம்.

*கூட்டுவாய் பெண்களுடன் போகஞ் செய்யில்*
*குணமான விந்துதம் பனமே ஆகும்*
*நாட்டுவா யிடுப்புவிட மாட்டா தப்பா*
*நாறியர்கள் சோபமதாய் நடுங்கு வார்கள்*
*தேடுவா யிடுப்புவிட மாட்டா தாகில்*
*திறமான குளிகையுட திரத்தி னாலே*
*ஓடாது உனதுவிந்து விழுந்தி டாது*
*உத்தமனே பெண்களெல்லாம் உறவா வாரே.* **(186)**

பெண்கலவியின் போது விந்து உடனடியாக வெளிப்பட்டு விடாமல் நிதானம் காக்க இதை உண்ணலாம். இடுப்பு வலி

மிகுதி உண்டாகும். அவ்விடுப்புவலி நீங்காதிருக்குமானால் இந்தக் குளிகையைப் பயன்படுத்தலாம். விந்து உடனடியாக வெளிப்படாமல் நிதானம் செய்வதால் பெண்கள் உன்னைப் பெரிதும் விரும்புவர் என்பதாம்.

## சாம்பிராணிப் பதங்கம்

*போமப்பா யின்னமொரு குளிகை கேளு*
*புண்ணியனே சாம்பிராணி முத்தரமாய்ப் பார்த்து*
*நாமப்பா பளிங்குபோல் நாலுபலம் வாங்கி*
*நன்றாகப் பொடிசெய்து சட்டிக்குள் ளிட்டு*
*ஓமப்பா மேல்சட்டிக் குள்ளே நீயும்*
*உத்தமனே காயிதத்தை யுருளிபோல் வெட்டி*
*தாமப்பா மேல்மூடிச் சீலை செய்து*
*தன்மையுள்ள அடுப்பேற்றித் தீபமாய் வைய்யே* **(187)**

இனி இன்னுமொரு குளிகையைச் சொல்வேன். நல்ல தரமான சாம்பிராணியாகப் பார்த்துத் தேர்ந்தெடுத்துக் கொண்டு **140** கி. நிறுத்தெடுக்கவும். அதனைப் பொடித்துச் சட்டிக்குள் வைத்து இன்னுமொரு சட்டியில் தாள்களைச் சுருள் சுருளாக வெட்டிப் போட்டு அந்தச் சட்டிகொண்டு மூடி சீலை மண் செய்து அடுப்பேற்றி எரிக்கவும்.

*வைத்தாக்கால் பசுநெய்யால் விளக்கு மேற்றி*
*மைந்தனே அடிச்சட்டித் தூரில் சூடு*
*தைத்தாக்கால் நால்சாமம் சென்ற பின்பு*
*தன்மையுடன் தானிறக்கிப் படுக்கப் போடு*
*செய்த்ததொரு சீலைமண் அவிழ்த்து மெல்ல*
*திறமான மேல்சட்டிக் காயி தத்துள்*
*நெய்த்ததொரு அப்பிரக பற்பம் போலே*
*நன்மையுள்ள வாசமதாய் மணக்கும் பாரே.* **(188)**

பசு நெய்யில் விளக்கேற்றி அதன் மீது சட்டியைக் கவனமாக வைத்து அடிச்சட்டித்தூரில் சூடு ஏறியவுடன் 12 மணி நேரம் எரியவிடவும். பின்னர் இறக்கி ஆற விடவும். சீலைமண் அவிழ்த்து மேல் சட்டியில் படிந்த பற்பத்தை வழித்தெடுக்கலாம். இது அப்பிரக பற்பம் போல் வாசனையுடன் காணப்படும்.

*பாரப்பா அப்பூவை எடுத்து நீயும்*
*பாங்கான வெற்றிலைப்பாக்கு அருந்தும் போது*
*நேரப்பா மிளகளவு தின்று வந்தால்*
*நேர்மையுள்ள தாதுவிர்த்தி நிலைக்கும் பாரு*
*காரப்பா அப்பூவுங் கழஞ்சு ரெண்டு*
*கனமான கிராம்புமோர் கழஞ்சி மூன்று*
*கூரப்பா கோரோசினை கழஞ்சி யொன்று*
*கூட்டியரை வெற்றிலையின் சாற்றி னாலே* **(189)**

பூப்போல் படிந்ததை எடுத்து வெற்றிலைப் பாக்கு அருந்தும் போது மிளகளவு வீதம் சாப்பிட்டு வந்தால் தாது விருத்தியடையும், விந்து நிலைக்கும். 10கி சாம்பிராணிப் பதங்கத்துடன் கிராம்பு 15 கி, கோரோசினை 5கி இவற்றைக் கூட்டி வெற்றிலையின் சாற்றால் அரைத்தெடுத்துக் கொள்ளவும்.

*சாற்றினா லிருகடுகை யரைத்து மைந்தா*
*தன்மையுள்ள குன்றிபோல் குளிகை கட்டி*
*ஆற்றினால் நிழல்தனிலே பதனம் பண்ணு*
*அப்பனே தேனிலோர் குளிகை யீய்ந்தால்*
*போர்த்தியே மூன்றுநா ளாறு போதில்*
*பொல்லாத சூதகத்தின் சுரங்கள் தீரும்*
*பார்த்திபனே நெய்மிளகி லீய்ந்தா யானால்*
*பறந்துபோம் சூதகத்தின் சயங்கள் பாரே* **(190)**

மேற்சொன்னவற்றுடன் சிறுகடுகையும், நாய்க்கடுகையும்

சேர்த்தரைத்து 130 மி.கி. அளவுள்ள உருண்டைகளாகச் செய்து கொள்ளவும். அதனை நிழலில் உலர்த்திப் பத்திரப்படுத்தவும். இதைத் தேனில் இழைத்து வேளைக்கு ஒன்று வீதம் மூன்று நாட்கள் ஆறுவேளை கொடுத்து வந்தால் சூதக சுரங்கள் நீங்கும். நெய், மிளகுக்குடி நீரில் வழங்கினால் சூதக சயநோய்கள் நீங்கும் என்பதாம்.

*சயமான சர்க்கரையி லேழு நாள்தான்*
*தன்மையுடன் தான்கொடுக்க தயவாய்க் கேளு*
*மயமான சூதகத்தின் வாய்வி னோடு*
*மைந்தனே உதிரத்தின் கட்டுந் தீரும்*
*நயமான வெற்றிலையில் மென்று தின்ன*
*நன்மையில்லா சுகசன்னி நாடா தோடும்*
*பயமென்ன பத்தியத்தின் பயமோ யில்லை*
*பரமான பூரணத்தின் பதிவு தானே* **(191)**

இக்குளிகையுடன் சர்க்கரை கலந்து 7 நாட்கள் உட்கொண்டு வர சூதக வாயு, உதிரக்கட்டு இவை தீரும். இக்குளிகையை வெற்றிலையில் மென்று தின்றால் சுகசன்னி நோய் நீங்கும். இதற்குப் பத்தியம் வேண்டாம்.

## கபாடக் குளிகை

*தானென்ற யின்னமொரு குளிகை கேளு*
*தன்மையுடன் சாதிக்காய் சாதி பத்திரி*
*மானென்ற மாசிக்காய் கிராம்பு கோஷ்டம்*
*மதுரமுடன் அதிவிடையம் லவங்கப் பட்டை*
*தேனென்ற யிலவுடனே விளாம்பிசினு மொன்றி*
*சேர்த்தரைத்து மாதுளங்காய்க் குள்ளே செம்மிக்*
*கோனென்ற வெண்சீலை பொதிந்து சுற்றி*
*குழம்பாக வதின்மேலும் சாணம் அப்பே* **(192)**

நான் இன்னுமொரு குளிகை சொல்வேன். சாதிக்காய், சாதிபத்திரி, மாசிக்காய், கிராம்பு, கோட்டம், அதிமதுரம், அதிவிடையம், இலவங்கப்பட்டை, இலவம்பிசின், விளாம்பிசின் இவற்றை எல்லாம் ஒன்றாகச் சேர்த்தரைத்து மாதுளங்காய்க்குள்ளே திணித்து வெள்ளைச் சீலையால் நன்றாகச் சுற்றி அதன்மேல் சாணத்தை அப்பிக்கொள்ளவும்.

*அப்பியே காட்டெருவில் புடத்தைப் போடு*
*அண்டயிலே காத்திருநீ காய்வே காமல்*
*தப்பியே சாணமது வெந்து பற்றித்*
*தான்காயில் வேகையிலே தள்ளிக் கொண்டு*
*ஒப்பியே சீலையொடு கவசம் நீக்கி*
*உத்தமனே கல்வத்தி லரைக்கும் போது*
*செப்பினோங் கஞ்சாவின் சாற்றா லாட்டி*
*சிறுசுண்டைக் காயளவு உருட்டு வாயே* **(193)**

மாதுளங்காய் வெந்துவிடாமல் காட்டெருவில் புடமிட்டெடுக்கவும். காய்வேகாமல் சாணம் வெந்ததும் காயை எடுத்துக் கவசம் நீக்கி சுத்தம் செய்து, காயை எடுத்துக் கல்வத்திலிட்டுக் கஞ்சாவின் சாற்றால் அரைத்துக்கொள்ளவும். அதனைச் சுண்டைக்காயளவு உருண்டைகளாகச் செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும்.

*உருட்டியே நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு*
*உண்மையுடன் வடிதயிரி லீய்ந்தா யானால்*
*திருட்டிபோல் ரெத்தமுடன் காப்புஞ் சீயும்*
*தீராத மூலரத்தம் தீரும் சொன்னேன்*
*மிரட்டியேடு தனிலிட அதிசார பேதி*
*மீளுமடா பத்தியமோ புளியு மாகும்*
*சுருட்டிமிக மிளகாயே கூட்டி டாதே*
*துடிமெத்த ரெத்தமடா துணிந்து பாரே.* **(194)**

உருண்டைகளை எடுத்துப் பத்திரப்படுத்திக் கொள்ளவும். இதனைத் தயிர்த் தண்ணீரில் சாப்பிட்டு வந்தால், இரத்தத்துடன் கடுப்பும் சீழும் வரும் மூல இரத்தம் தீரும். பாலேட்டில் கொடுத்தால் அதிசாரபேதி நீங்கும். புளி இதற்குப் பத்தியமாகும். மிளகாய் சேர்த்துக் கொண்டால் இரத்தப்போக்கு அதிகமாகும் எனவே பயன்படுத்தலாகாது.

## கிரந்திக்கு இரசகற்பூரக் குளிகை

*பாரப்பா யின்னமொரு குளிகை கேளு*
*பதிவான முலைப்பாலில் மூன்று நாள்தான்*
*நேரப்பா ஊறினதோர் கற்பூர மெடுத்து*
*நினவாக விராகனெடை அஞ்சு கூட்டி*
*காரப்பா முளைநீக்கி வெள்ளைப் பூண்டு*
*கணக்காக வராகனெடை யிருபதுமே கூட்டி*
*சாரப்பா மிளகுமே விராகனெடை கேளு*
*தன்மையுடன் முப்பதுமே தயவாய்க் கூட்டே* **(195)**

இன்னுமொரு குளிகை சொல்வேன்; கேட்டுக் கொள்வாயாக. தாய்ப்பாலில் 3 நாட்கள் ஊறிய கற்பூரம் 20 கி சேகரித்து முளை நீக்கிய வெள்ளைப்பூண்டு 80 கி, மிளகு 120 கி சேர்த்துச் சுத்தம் செய்து கொள்ளவும்.

*கூட்டிடுவாய் வெற்றிலையி னெடைதான் கேளு*
*குணமாக நாற்பதெடை கூட்டிக் கொண்டு*
*நாட்டிடுவாய் பூரமதை நன்றா யாட்டு*
*நன்மையுள்ள சரக்கெல்லாம் நன்றாய்க் கூட்டி*
*ஆட்டிடுவாய் வெற்றிலையின் சாற்றி னாலே*
*அப்பனே யஞ்சாமம் நன்றா யாட்டி*
*போட்டிடுவாய் சுண்டைக்காய் போலு ருட்டி*
*புனிதமுட னிழல்தனிலே வுலர்த்திக் கொள்ளே* **(196)**

வெற்றிலை 160 கி, எடுத்துக் கொள்ளவும். இவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து வெற்றிலைச் சாற்றால் 15 மணி நேரம் அரைத்துச் சுண்டைக்காய் அளவினதாக உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

*கேளப்பா அந்திசந்தி யேழு நாளும்*
*கிருபையுடன் தான்முழுங்கி பத்தியமே காக்கப்*
*பாளப்பா உப்புடனே புளியா காது*
*பாங்காக ஒருவேளை பசுபாலுக் கூட்டு*
*நாளப்பா யேழுநாள் சென்ற பின்பு*
*நன்மையுடன் வறுத்தவுப்புத் துவரை கூட்டு*
*கேளப்பா பதினஞ்சு நாளில் தானும்*
*குணமாகத் தலைமுழுகி புளியே கூட்டு* (197)

இந்த உருண்டையைக் காலை, மாலை, இரண்டு வேளை, ஏழு நாட்கள் சாப்பிட்டுப் பத்தியம் காக்க வேண்டும். மருந்துண்ணும் காலங்களில் உப்பு, புளி நீக்கவும். பசும்பாலை ஒரு வேளை மட்டும் சேர்க்கலாம். ஏழு நாட்கள் ஆன பின்பு வறுத்த உப்புக் கூட்டவும். துவரம் பருப்பைச் சேர்த்து கொள்ளலாம். 15 ஆம் நாள் தலைமுழுகி புளியைக் கூட்டிக் கொள்ளலாம்.

*புளிகூட்டு ஓமநீர் விட்ட பின்பு*
*புண்ணியனே யெண்ணெயிட்டு மூழ்கும் போது*
*வளிகிட்ட அழிகிரந்தி லிங்கப் புற்று*
*வகையான சொறிகிரந்தி யோனிப் புற்று*
*குழிபட்டு ரெணமாகும் குழிக்கி ரந்தி*
*கூறியதோர் கிரந்தியெல்லாம் குணம தாகும்*
*பழிவிட்டுச் சொன்னதொரு பூர ணத்தைப்*
*பார்தனிலே விள்ளாதே யின்னங் கேளே* (198)

ஓமக்குடி நீரைச் சேர்த்துக் கொண்ட பின்னர் எண்ணெய்

சேர்த்து முழுகலாம். அவ்வாறு செய்தால் அழிகிரந்தி, லிங்கப்புற்று, சொறிகிரந்தி, யோனிப்புற்று, குழிக்கிரந்தி போன்ற அனைத்துக் கிரந்தி நோய்களும் நீங்கும். இக்குளிகையை யாரிடமும் சொல்லாதே.

## மூலங்களுக்கு வாலை இரசபற்பம்

*பாரப்பா யின்னமொரு பற்பம் கேளு*
*பரிவான வாலைரசங் கழஞ்சி மூன்று*
*நாரப்பா அந்தெடைக்கு வெள்வங் கத்தை*
*நேர்த்தியாய்த் தொந்தித்துக் கல்வத் திட்டு*
*சாரப்பா கற்பூர சிலா சத்துதான்*
*தயவாக கழஞ்சியது மூன்றுங் கூட்டி*
*காரப்பா யரைத்திடுவாய் சுண்ண நீரால்*
*கருவாக வில்லைதட்டிக் காயப் போடே* **(199)**

இன்னுமொரு பற்பத்தைச் சொல்வேன். வாலைரசம் 15 கி, அதே அளவு வெள்வங்கத்தையும் சேர்த்துக் கல்வத்திலிட்டு அரைத்து, கற்பூரசிலாசத்து 15 கி சேர்த்துச் சுண்ணாம்பு நீரால் அரைத்து வில்லைதட்டிக் காயப்போடவேண்டும்.

*காய்ந்தபின்பு ஓட்டிலிட்டுச் சீலை செய்து*
*கருணையுடன் முப்பதெரு புடத்தைப் போடு*
*ஆய்ந்துநன்றாய் ஆறினபின் னெடுத்து மைந்தா*
*அப்பனே முன்னீரால் ரெண்டு சாமம்*
*பாய்ந்துநன்றா யரைத்துகல் லுரலில் போடு*
*பாங்கான ஓட்டிலிட்டுச் சீலை மண்செய்*
*மாய்ந்துவிடு மம்பதெருப் புடத்துக் குள்ளே*
*மல்லிகைப்பூ நிறம்போல் வெண்மை யாமே* **(200)**

வில்லைகளைக் காய வைத்து ஓட்டிலிட்டு ஓடு மூடி சீலை மண் செய்து முப்பது எருவில் புடத்தைப் போடவும். நன்றாக ஆறிய

பின்பு எடுத்து மீண்டும் சுண்ணநீரால் ஆறுமணிநேரம் அரைத்து மீண்டும் சட்டியிலிட்டு சீலைமண் செய்து 50 எருவில் புடம் போடவும். ஆறியபின்னர் எடுத்துப் பார்க்க மல்லிகைப் பூவின் நிறம்போல் பற்பமாகி இருக்கும்.

*வெண்மையென்ற வெள்வங்க பற்பம் தன்னை*
*விதமாகப் பணவெடைதா னனுபா னங்கேள்*
*வண்மையென்ற மாதுளை யிதழ்தான் மைந்தா*
*மார்க்கமுடன் ரெண்டுபலம் நிறுத்துநிழ லுலர்த்தி*
*நன்மையென்ற சீரகமவ் வீதங் கூட்டி*
*நலமாகச் சூரணந்தான் பணவெடைகால் கூட்டி*
*உண்மையென்ற பசுநெய்யில் யிரண்டு வேளை*
*உண்டிடவே மண்டலத்தி லுள்மூலந் தானே* (201)

இந்த வெண்மை நிறமாக உள்ள வெள்வங்கபற்பத்தை வேளைக்கு 488 மி.கி. வீதம் உண்ண அனுபானம் சொல்வேன். 70 கி மாதுளை இதழ் சேர்த்து நிழலிலுலர்த்தி அதே அளவு சீரகம் சேர்த்து இடித்துச் சூரணம் செய்து கொள்ளவும். இதில் 120 கி சூரணத்தைப் பசு நெய்யில், இரண்டு வேளை, நாற்பது நாட்கள் உண்டு வர பின்வரும் நோய்கள் நீங்கும்.

*உள்மூலம் புறமூலம் ரெத்த மூலம்*
*உண்மையில்லா மேகநோ யெலும்பு ருக்கி*
*வெளிமூலஞ் சீமூலம் மேக மூலம்*
*ரத்தமூலம் மாமூலம் ஒன்பதுமே தீர்ந்து*
——— ——— ——— ———
*நல்ல நாடிகளுந் தான்வலுத்து தாது முண்டாம்*
*வெள்வங்க பற்பமடா பத்தியந்தான் வேண்டாம்*
*விதமான உளுந்துமொச்சை பூசணிக்காய் நீக்கே.*
(202)

உள்மூலம், புறமூலம், இரத்தமூலம், வெளிமூலம், சீழ்மூலம், மேகமூலம், மாமூலம் போன்ற ஒன்பது வகை மூலமும் மேகநோய், எலும்புருக்கி நோய்களும் நீங்கும். நாடிகள் வலுப்பெறும். தாதுபுஷ்டி உண்டாகும். வெள்வங்க பற்பத்திற்குப் பத்தியம் ஏதுமில்லை. உளுந்து, மொச்சை, பூசணிக்காய் இவற்றை நீக்கவும்.

*ஈளையோடு மந்தாரக் காசம் போகும்*
*நின்பமுடன் கரிசாலைச் சாறு நாழி*
*கோளையென்ற பசுவின்பால் படிதான் ரெண்டு*
*கூட்டியதில் சர்க்கரையும் பலம்பத் தாகும்*
*பேளையென்ற மெழுகுபதம் வருதல் கண்டு*
*பிலமான மிளகுபலம் பதினா றப்பா*
*வாளப்பா பொடித்திட்டு லேகியம்போல் கிண்டி*
*மைந்தனே நெய்யுழக்கு தேன்தான் பாதி* (203)

ஈளை, மந்தாரக்காசம் இவை நீங்கும். நிம்பச்சாறு, கரிசாலைச் சாறு வகைக்கு 1.3 லி எடுத்து, பசுவின் பால் 2.6 லி சர்க்கரை 350 கி சேர்த்துக் காய்ச்சி, மெழுகு பதம் வரும்போது மிளகு 560 கி பொடித்துச் சேர்த்துக் கிண்டி, லேகிய பதத்தில் நெய் 325 மி.லி தேன் 160 மி.லி சேர்க்கவும்.

*பாதியிட்டுக் கிண்டியதில் லேகியம் பாக்கிடைக்கி*
*பாங்கான செந்தூரம் பணவெடைகால் கூட்டி*
*சாதியா யிருவேளை மண்டலந்தான் கொள்ள*
*சகலநோய் தீருமடா தாம்பிரத்தின் வேகம்*
*ஆதியாய் புளிப்புகையு மந்தவரத்து நல்ல*
*அன்பான பசுநெய்யும் வெள்ளாட்டுக் கண்டம்*
*ஓதியதோர் சிறுபயறு துவரை யாகு*
*முத்தமனே வழுதலையும் முருங்கைப் பிஞ்சே* (204)

கிண்டியெடுத்த இந்த லேகியத்தில் ஒரு பாக்களவாக எடுத்துக்

கொண்டு, அதனுடன் முன் சொன்ன செந்தூரம் 122 மி.கி சேர்த்துக் காலை, மாலை இரண்டுவேளை, 40 நாட்கள் சாப்பிட சகல நோய்களும் தீரும். தாமிரவேகத்தைக் குறைக்கும். புளிப்பு, புகையைத் தள்ளவும். பசு நெய், வெள்ளாட்டுக் கண்டம், சிறுபயிறு, துவரை, வழுதலை, முருங்கைப்பிஞ்சு இவற்றை நீக்கவும்.

## தேற்றான் விதை லேகியம்

*சாந்தமா யின்னமொரு லேகியங் கேளு*
*சமத்தாக பலமஞ்சு தேற்றான் கொட்டை*
*சேர்ந்ததொரு திரிகடுகு திரிப லாதி*
*சிற்றரத்தை சீரகமும் வகைக்கரை பலமாம்*
*பாந்தமாய்ப் பொடிசெய்து வைத்துக் கொண்டு*
*பஞ்சதாரை பலம்நாலு படியாவின் பாலில்*
*தோய்ந்திடவே கலக்கியதைப் பாகு சேர்த்துத்*
*துரிதமுடன் தூள்கொட்டிக் கிளறு வாயே* (205)

இனி இன்னுமொரு இளகம் சொல்வேன். 25 கி தேற்றாங் கொட்டை, திரிபலாதி, திரிகடுகு, சிற்றரத்தை, சீரகம் இவை வகைக்கு 18 கி, இவற்றைப் பொடியாக இடித்துக் கொள்ளவும். 140 கி பஞ்சதாரையை, 1.3 லி பசும்பாலில் தோய்த்துக் கலக்கிப் பாகு காய்ச்சி அதில் இப்பொடியைத் தூவிக் கிண்டிக் கொள்ளவும்.

*கிளறயிலே பசுவின்நெய் படிகால் வாரு*
*கிண்டிறக்கி தேன்பாதி விட்டுக் கிண்டி*
*தாளயிலே பாக்களவு லேகி யத்தில்*
*தருவான நாகபற்பங் கூட்டித் தின்னு*
*ஆளயிலே யிருவேளை யிருபதுநாள் கொள்ளு*
*அப்பனே மூலநோ யகலும் பாரு*
*இளறவே சயமுடனே அத்திசுரம் வாதம்*
*மிதமான அக்கினியா மந்த மாமே* (206)

கிளறும்போது பசுநெய் **325** மி.லி சேர்க்கவும். கிண்டி வரும் போது **160** மி.லி தேன் சேர்த்துக் கிண்டிக் கொள்ளவும். பாக்களவு லேகியத்தை எடுத்து, தக்க அளவுடன் நாகபற்பம் கூட்டிச் சாப்பிடவும். தினம் இருவேளை, இருபது நாட்கள் உண்டு வர மூலநோய் நீங்கும். சயமுடன், அத்திசுரம், வாதம், அக்கினி மந்தம் இவை நீங்கும்.

*மந்தமுடன் மூலத்தில் வாய்வு தீரும்*
*மைந்தனே புளிப்புகையும் மாற்றச் சொல்லு*
*அந்தமுடன் வகைக்கிமரைப் பலமே வாங்கி*
------ ------ ------
*விந்தையதாய்ச் சுத்திசெய்து சூர ணித்து*
*விதமான பனைவெல்லம் பலந்தா னஞ்சே* **(207)**

மந்தம், மூலவாயு இவை நீங்கும். புளியையும் புகையையும் தள்ளிவிடவும். முன்சொன்ன பொருட்களை வகைக்கு **18** கி வீதமெடுத்துச் சுத்தி செய்து சூரணித்துப் பனைவெல்லம் **175** கி சேர்த்துக் கொள்ளவும்.

*அஞ்சாகு பாகுபோல் காய்ச்சிக் கொண்டு*
*அப்பனே சூரணத்தைப் பாய்ச்சிக் கிண்டி*
*மிஞ்சாதே நெய்யுழக்கு அரைகால் தேன்தான்*
*விட்டுமதை லேகியமாய்க் கிண்டி வாங்கி*
*கொஞ்சமாய் கொட்டப் பாக்களவு மைந்தா*
*குணமாக இருவேளை யிருபதுநாள் கொள்ள*
*நெஞ்சாரத் தீருகிற வியாதி கேளு*
*நிலையான வாதமோடு வாய்வும் போமே* **(208)**

இதனைப் பாகுபதம் வரும்வரைக் காய்ச்சிக் கொண்டு சூரணத்தைத் தூவிக் கிண்டி அதனுடன் **325** கி நெய் சேர்த்து, **160** கி தேன் கூட்டிக் கிண்டி லேகிய பதத்தில் இறக்கிக் கொள்ளவும். இதில் கொட்டைப் பாக்களவு காலை, மாலை இரண்டு

வேளை, இருபது நாட்கள் உட்கொண்டு வர வாதங்களும், வாயு நோய்களும் நீங்கும்.

*வாய்வோடு உஷ்ணமும் பித்த வாய்வு*
*வயிற்றுவலி கடுப்புளைவு யெரிச்சல் பேதி*
*தேய்வுவென்ற அக்கினியா மந்த வாந்தி*
*தீராத அத்திசுரம் வெட்டை*
*பாயிரதோர் பொருமலென்ற வாய்வு கிராணி*
*பறக்குமடா லேகியத்தி லயச்செந் தூரம்*
*பயமின்றி பணவெடைதான் கூட்டி யுண்ண*
*பிலமான வாய்வெல்லாம் பிரண்டுப் போமே.* **(209)**

வாயுவோடு உஷ்ணம், பித்தவாயு, வயிற்றுவலி, கடுப்பு, உளைவு, எரிச்சல், பேதி, தேய்வை உண்டாக்கும் அக்கினி மாந்தம், வாந்தி, அத்திசுரம், வெட்டை, பொருமல், வாயு, கிராணி போன்ற பல நோய்கள் நீங்கும். இவ்விலேகியத்துடன் 488 கி அயச் செந்தூரத்தைக் கலந்து சாப்பிட்டு வர பலமான வாயுக்கள் யாவும் நீங்கும்.

## திப்பிலி இரசாயனம்

*தயவாக யின்னமொரு ரசாயனங் கேளு*
*காட்டுகிறேன் திப்பிலியும் பலம்பத் தாக*
*கருவான மிளகுடனே சுக்குபல மஞ்சே*
*பலமொன்று யிருசீரக மிரண்டு ஓமம்*
*பாங்கான அரத்தைரெண்டு திரிப லாதி*
*நலமான வங்கமுடன் லவங்கப் பத்திரி*
*நன்மையுள்ள யிலவங்கம் தாளிச பத்திரியும்*
*பலமான கொடிவேலி யேல மப்பா*
*பேசியதோர் பதினஞ்சு பலமோ வொன்று*

*தலமாக இளவறுப்பாய்ச் சூர ணித்து*
*தன்மையுட னந்தெடைக்கிச் சீனி சேரே.* **(210)**

350 கி திப்பிலி, மிளகு, சுக்கு வகைக்கு 175 கி, பெருஞ் சீரகம், நற்சீரகம் வகைக்கு 35 கி, ஓமம், குரோசாணிஓமம் வகைக்கு 35 கி, சிற்றரத்தை, பேரரத்தை, திரிபலாதி, வங்கம், இலவங்கப்பத்திரி, இலவங்கம், தாளிசபத்திரி, கொடிவேலி, ஏலம் இவை வகைக்கு 35 கி எடுத்து இவற்றையெல்லாம் இளவறுப்பாக வறுத்துச் சூரணம் செய்துகொண்டு அதே அளவு எடைக்குச் சீனி சேர்த்துக் கொள்ளவும்.

*சேர்த்துமே தேன்விட்டுப் பிசைந்து மைந்தா*
*திறமான பீங்கானில் பதனம் பண்ணி*
*காத்துமே தாம்பூர செந்தூரங் கூட்டி*
*கனமாக வுண்டிடவே காச ரோகம்*
*போத்துமே மந்தாரக் காசங் கூடப்*
*புலத்தியனே சயமிரும லிளைப்பு கக்கல்*
*ஆத்துமே சேற்றுமநோய் தொண்ணூற் றாறு*
*மகலுமடா மண்டலத்தி லறிந்து பாரே* **(211)**

இவற்றைத் தேன்விட்டுப் பிசைந்தெடுத்துப் பீங்கானில் பத்திரமாக அடைத்துக் கொள்ளவும். அளவறிந்து தாமிரச் செந்தூரங் கூட்டிச் சாப்பிட்டு வர மந்தாரக்காசம், சயமிருமல், இளைப்பு, கக்குதல், சேற்றுமநோய் தொண்ணூற்றாறும் நீங்கும். தொடர்ந்து நாற்பது நாட்கள் சாப்பிட்டு வரவேண்டும்.

## தேற்றான் விதைச்சூரணம்

*ஒன்றான யின்னமொரு சூரணமும் கேளு*
*உத்தமனே சந்தனமு மகில்கட்டை யேலம்*
*நன்றான லவங்கமோடு கிராம்பு சோம்பு*
*நன்மையுள்ள யதிமதுரம் கார்போகி வித்து*

*சென்றதொரு வெப்பாலை தேற்றான் வித்து*
*திறமான அறுகன்வேர் சிற்றா முட்டி*
*பன்றான வேருடனே பன்னி ரெண்டும்*
*பாலகனே வகைக்கிமரை பலமாய் வாங்கி* **(212)**

இதனை அடுத்து இன்னுமொரு சூரணமும் சொல்கிறார். சந்தனம், அகில்கட்டை, ஏலம், இலவங்கம், கிராம்பு, சோம்பு, அதி மதுரம், கார்போகரிசி, வெட்பாலை அரிசி, தேற்றான் விதை, அறுகன் வேர், சிற்றாமுட்டி வேர் ஆகிய 12 வகை வேர்களையும் வகைக்கு 18 கி. வீதம் சேகரித்து எடுத்துக் கொள்ளவும்.

*வாங்கியே வெயிலுலர்த்திச் சூரணமும் செய்து*
*வண்மையுட னந்தெடைக்கிக் கற்கண்டு கூட்டி*
*தேங்கியே வெருகடிதா னந்தி சந்தி*
*திறமாக பசுவெண்ணெய் மண்டலமே கொள்ளு*
*ஓங்கியே ஓடுகிற வெள்ளை தீரும்*
*உத்தமனே நீரெரிப்பு முடனே தீரும்*
*பாங்கியே பத்தியமோ கார மாக*
*பரிவான புலத்தியனே பாக மாமே* **(213)**

இவற்றை வெயிலில் உலர்த்திச் சூரணம் செய்து, 175 கி கற்கண்டு கூட்டி, காலை, மாலை இரண்டு வேளை, மூவிரலளவு சாப்பிடவும். இதனைப் பசுவெண்ணையில் குழைத்து, நாற்பது நாட்கள் சாப்பிட பெண்களுக்குப்படுகிற வெள்ளை நீங்கும். நீரெரிப்பும் உடனே தீரும். இதற்குப் பத்தியமாக காரம் நீக்கிச் சாப்பிட வேண்டும்.

## இஞ்சிச்சூரணம்

*பாகமா யின்னமொரு சூரணங் கேளு*
*பாங்காக யிஞ்சிபலம் பத்து வாங்கி*

*சோகமாத் தோல்போக்கி வில்லை யாக்கி*
*சுத்தமாய்ப் பொன்வறுப்பாய் பசுநெய் யாலே*
*ஏகமாய்ப் பொடிசெய்து வைத்துக் கொண்டு*
*யேலமொடு திரிகடுகு கிராம்பு ஓமம்*
*தாகமாம் வாலுளுவை சாதிக் காயுந்*
*தருவான யானைத்திப்பிலி சீரகமு மாமே* **(214)**

இஞ்சி **350** கி எடுத்துத் தோல் நீக்கி வில்லைகளாக நறுக்கிப் பசு நெய்யிட்டுப் பொன் வறுவலாக வறுத்துப் பொடி செய்து கொள்ள வேண்டும். ஏலம், திரிகடுகு, கிராம்பு, ஓமம், வாலுளுவை, சாதிக்காய், யானைத்திப்பிலி, சீரகம் இவற்றை யெல்லாம் சேகரித்துக் கொள்ளவும்.

*ஆமப்பா அதிமதுரம் குரோசாணி ஓமம்*
*அக்கிரா கசகசா லவங்கப் பத்திரி*
*நாமப்பா மோடியுடன் கொத்து மல்லி*
*நலமான பேரீந்து முந்திரிகை யொக்க*
*தாமப்பா வகைக்கிக்கால் பலமே வாங்கி*
*தருவான யிளவறுப்பாய்ச் சூரணமே செய்து*
*ஓமப்பா சீனிபலம் பத்துங் கூட்டி*
*உத்தமனே மூன்றுமொன்றாய் விரவிக் கேளே* **(215)**

அதிமதுரம், குரோசாணிஓமம், அக்கிராகாரம், கசகசா, இலவங்கப்பத்திரி, கொத்துமல்லி, பேரீச்சை, முந்திரிகை இவற்றை வகைக்கு **9** கி வீதம் சேர்த்து இளவறுப்பாய் வறுத்துச் சூரணம் செய்து கொள்ளவும், **350** கி, சீனி கூட்டி இம்மூன்றையும் ஒன்றாகக் கலந்து கொள்ளவும்.

*விரவியே வெருகடிதா னந்தி சந்தி*
*விபரமுடன் மண்டலமே கொண்டா யானால்*
*பாவியென்ற மந்தமுட னக்கினி மந்தம்*
*பாங்கான உஷ்ணத்தின் வாய்வுங் கூட*

*காவியே பித்தமொடு பித்த வாய்வு*
*காணாதே ஓடுமடா தீபனமுண் டாகும்*
*பிறவியென்ற வாதமெல்லா மொடுங்கி நல்ல*
*பிலமுண்டா மின்னமொரு விபரங் கேளே* **(216)**

இந்தச் சூரணத்தை மூவிரலளவு, காலை, மாலை இரண்டு வேளை, நாற்பது நாட்கள் உட்கொண்டு வந்தால், மந்தம், அக்கினி மந்தம், பித்தம், பித்தவாயு, உஷ்ணவாயு இவை நீங்கும். பசி எடுக்கும். உடலில் உண்டாகின்ற வாதம் யாவும் ஒடுங்கி விடும். உடம்பிற்கு நல்ல பலமுண்டாகும்.

## அயக்காந்தச் செந்தூரம்

*கொள்ளவே அயக்காந்தச் செந்தூரம் கேளு*
*குறிப்பாக ரெண்டையுந்தான் சுத்தி செய்து*
*கொள்ளவே சமனாக ரெண்டுங் கூட்டி*
*நலமாக சாதிலிங்கம் சமனாய்க் கூட்டி*
*தள்ளவே வெங்காரம் கால்தான் கூட்டி*
*தயவாக ரசம்கால்தான் கெந்திசம னப்பா*
*விள்ளவே சுத்திசெய்து கல்வத் திட்டு*
*விருதான பழச்சாற்றால் சாமம் நாலே.* **(217)**

இரும்புத்தூளையும், காந்தத்தையும் சுத்தி செய்து இரண்டையும் சம அளவாக எடுத்து அதே அளவு சாதிலிங்கம் சேர்த்துக் கொள்ளவும். அதில் கால் பங்கு வெங்காரம், இரசம் கால் பங்கு சேர்க்கவும். கெந்தகத்தை இரும்பு, காந்தத்தின் அளவாகக் கூட்டிச் சுத்தி செய்து கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாற்றால் நன்றாக அரைத்துக் கொள்ளவும்.

*நாலாக முப்பூவுங் கழஞ்சி ரெண்டு*
*நலமாகப் பொற்றலையால் சாமம் நாலு*

*காலாக அரைத்துவில்லை ரவியில் காய்ந்தால்*
*கருவான ஓட்டில்வைத்து ஓடு மூடிச்*
*சாலாக முப்பதெருப் புடத்தில் போடு*
*தப்பாது செந்தூர மருணம் போலாம்*
*மாலாகப் பணவெடைதான் அனுபா னத்தில்*
*மைந்தனே கொண்டுவரத் தீரும்நோய் கேளே.* **(218)**

இவற்றுடன் முப்பு 10 கி சேர்த்து பொற்றலைக்கையாந்த கரைச் சாற்றால் 12 மணிநேரம் அரைத்து வில்லை செய்து வெயிலில் காயவைத்து ஓட்டில் வைத்து ஓடு மூடி முப்பதெருவில் புடம் போடவும். அருணன் போல் சிவந்து காணப்படும். இச்செந்தூரத்தை வேளைக்கு 488 மி.கி. வீதம் தேனில் உட்கொண்டு வர பின்வரும் நோய்கள் நீங்கும்.

*கேளப்பா பாண்டாறு கிராணி யாறு*
*கிருபையாய் பித்தமது நாற்ப துவும்போம்*
*நாளப்பா வாய்வோடு வாத மெல்லாம்*
*நாடாது அக்கினியா மந்தம் போகும்*
*மருளப்பா தாதுவெல்லா முறுக்கு மேறுஞ்*
*சுகமாக வெளுத்தசடம் வண்டு போலாம்*
*ஆளப்பா சுயதேனில் கொண்டா யானா*
*லணுகாது பாண்டுவென்ற ரோகம் போமே* **(219)**

ஆறுவகையான பாண்டு, ஆறுவகையான கிராணி, நாற்பது வகைப்பித்தங்கள், வாயு, வாதம், அக்கினிமந்தம் இவை நீங்கும். தாது விருத்தியடையும், வெளுத்த உடம்பு வண்டுபோல் கறுத்துக் காணும். சுத்தமான தேனில் உட்கொண்டு வந்தால் பாண்டு நோய்கள் யாவும் நீங்கிவிடும்.

*போமப்பா சூலையோடு வாய்வ தெல்லாம்*
*பொல்லாத கெர்ப்பநோய் சொல்லா தோடும்*

*நாளப்பா வாந்தியோடு பொருமல் விம்மல்*
*நாடாது உட்டிணமாம் வாய்வு தீரும்*
*தாமப்பா சேட்டுமங்க ளெல்லாந் தீரும்*
*தலைமயக்கம் வாயூறல் சாந்த மாகும்*
*வேமப்பா பத்தியங்காற் பித்த மெல்லாம்*
*வெகுசுருக்காய்த் தீருமடா யின்னங் கேளே* **(220)**

சூலை, வாயு, கெர்ப்ப நோய் இவை நீங்கும். வாந்தி, பொருமல், விம்மல், உஷ்ண வாயு இவை நீங்கும். சேட்டுமங்கள் எல்லாம் தீரும். தலைமயக்கம், வாயூறல் இவை இரண்டும் மட்டுப்படும். மேலும் பித்தத்தால் வந்த நோய்கள் விரைவில் குணமாகும் என்பதாம்.

## மண்டூரச் செந்தூரம்

*கேளடா ஆயிரந்தான் வருஷஞ் சென்ற*
*கெடியான கிட்டமது கொண்டு வந்து*
*தாளடா ஆவினீர் தன்னி லேதான்*
*தளமாகக் காய்ச்சியே தோய்த்து தோய்த்து*
*வேளடா பத்துவிசை தோய்த் தெடுத்து*
*விருதான கல்வத்தில் பொடியாய்ச் செய்து*
*நாளடா பத்திலொன்று கெந்தி சூதம்*
*நலமான லிங்கமுப்பூ வெங்காரங் கூட்டே* **(221)**

ஆயிரம் ஆண்டுகள் கடந்த அயக்கிட்டத்தைக் கோமியத்தில் காய்ச்சி பத்துமுறை தோய்த்தெடுக்கவும். பின்னர் அதனைக் கல்வத்திலிட்டுப் பொடித்து அதற்குப் பத்தில் ஒன்று கெந்தகம், இரசம், லிங்கம் எனும் சாதிலிங்கம், முப்பு, வெண்காரம் இவற்றைக் கூட்டிக் கொள்ளவும்.

*கூட்டியே பழச்சாற்றால் புடந்தான் பத்து*

――― ――― ―――

*ஆட்டியே செருப்படிச்சாற் புடந்தான் பத்து*
*அப்பனே பொற்றலைச்சாற் புடந்தான் பத்து*
*நீட்டியே அரசினுட பட்டைச் சாற்றில்*
*நேராகப் புடமைந்து போட்டெ டுத்து*
*காட்டியே செந்தூரம் பொடிதான் செய்து*
*கனமாகப் பரணிதனி லடைத்துக் கொள்ளே.* **(222)**

இதனை எலுமிச்சம் பழச்சாற்றால் நன்றாக அரைத்தெடுத்துப் பத்து புடமிடவும். பின்னர் செருப்படிச்சாற்றாலும் பொற்றலைக் கையாந்தகரைச்சாற்றாலும் தனித்தனியே அரைத்துப் பத்து புடமிடவும். அரசம்பட்டைச் சாற்றால் அரைத்து ஐந்து புடம் போடவும். இப்போது இதனை மீண்டும் பொடித்து, அந்தச் செந்தூரத்தைப் பரணில் அடைத்துக் கொள்ளவும்.

*கொள்ளவே திரிகடுகு தேனி லேதான்*
*கூசாதே பணமிரண்டு கூட்டிக் கொள்ள*
*விள்ளவே விஷப்பாண்டு காமாலை யாறும்*
*விருதான பாண்டுவகை குடிபோ கும்பார்*
*தள்ளவே பித்தமெல்லாம் கீழே சாடுந்*
*தளமான சிலேட்டுமநோய் தொண்ணூற் றாறும்*
*கள்ளவே -------- -------- --------*
*கண்டாயோ வெண்பாண்டும் கரும்பாண்டு மாமே*
**(223)**

திரிகடுகுத்தூள், தேன் இவற்றில் இந்த மருந்தை 976 மி.கி. கலந்து உட்கொண்டு வர விஷப்பாண்டு, காமாலை, பாண்டு வகைகள் போன்றவை நீங்கும். பித்தம் தொடர்பான நோய்கள், தொண்ணூற்றாறு வகை சிலேட்டும நோய்கள், வெள்ளைப்பாண்டு, கருப்புப்பாண்டு போன்ற பல நோய்கள் நீங்கும்.

*ஆமப்பா அரோசியங்க ளன்னத் துவேச*
*மகலாத வாந்திவிக்க லகன்று போகும்*

*நாமப்பா வாயுவென்ற தெல்லாம் போகும்*
*நலமான நீர்தோஷம் நாடா தோடும்*
*காமப்பா லூறுமடா தேக மின்னுங்*
*கல்லத்தே தேகமது இறுகிப் போகும்*
*நாமப்பா கண்டபடி சொன்னோ மின்னம்*
*நலமான அப்பிறவகை சொல்லு வோமே* **(224)**

அரோசியங்கள், அன்னத்துவேஷம், வாந்தி, விக்கல் இவை நீங்கும். அனைத்து வகையான வாயுக்கள் நீங்கும். சலதோஷம் நீங்கும். உடல் கட்டுக்கோப்பாக இருக்கும். ஒளிபெறும். அறிந்து உணர்ந்ததைச் சொன்னோம். அப்பிரேக வகையை இனிச் சொல்வோம்.

## சிந்தாதி லேகியம்

*கேளப்பா ஆறுமாத மாச்சென்ற காடி*
*கிருபையாய் படிபத்து புளித்த மோரு*
*நாளப்பா படிபத்து கூட விட்டு*
*நலமான புளியிலை தூக்கிடித்துப் போட்டு*
*கொள்ளப்பா துருப்பிடித்த யிரும்பிடைதான் போட்டு*
*கொதிக்கவைத்து யெட்டொன்றா யிறுத்துக் கொண்டு*
*வேளப்பா கைய்யான்சாற் படிதான் ஒன்று*
*விருதான இஞ்சிச்சாற் படிதான் ஒன்றே* **(225)**

ஆறுமாதமான புளிப்புக்காடி, புளித்த மோர் இவை வகைக்கு 13 லி எடுத்துக் கொள்ளவும். அதனுடன் புளியிலையை 1.7 கி.கி அளவு இடித்து சேர்த்து, அதே அளவு துருப்பிடித்த இரும்பைச் சேர்த்துக் கொதிக்க வைத்து எட்டிலொன்றாக்கி இறுத்துக் கொள்ளவும். அதனுடன் கையாந்தகரைச்சாற்றையும் இஞ்சிச் சாற்றையும் வகைக்கு 1.3 லி சேர்க்கவும்.

*ஒன்றான பழச்சாறு படிதா னொன்று*
*உத்தமனே நெரிஞ்சிச்சாற் படிதா னொன்று*
*சென்றான சிறுகீரை படிதா னொன்று*
*செருப்படிதான் படியொன்று தென்னம் பூச்சாற்*
*பண்டான படியொன்று கீழக்காய் நெல்லிப்*
*பதறாமல் படியொன்று பாங்காய்ச் சேர்த்து*
*கன்றான ஆவின்பால் படிதா னாலு*
*கனமான பனைவெல்லம் பலந்தான் பத்தே* **(226)**

எலுமிச்சம்பழச்சாறு, நெருஞ்சிச்சாறு, சிறுகீரைச்சாறு, செருப்படிச்சாறு, தென்னம்பாளைச்சாறு, கீழாநெல்லிச்சாறு, வகைக்கு **1.3** லி, பசும்பால் **5.2** லி, பனைவெல்லம் **350** கி எடுத்துச் சேகரித்துக் கொள்ளவும்.

*பத்தாக கரைத்துவிடு பாகாய்க் காய்ச்சி*
*பக்குவத்தில் கடைச்சரக்கு திரிகடுகு ஓமம்*
*நத்தான திரிபலையும் கோஷ்ட மாஞ்சில்*
*நலமான சீரகம்வால் மிளகு யேலம்*
*கத்தாக கிராம்பு தாளிச பத்திரி*
*கருவான லவங்கத்தோல் ஆனைத் திப்பிலி*
*ஒத்தாக பலமொன்று தூக்கிக் கொண்டு*
*உறவாக யிளவறுப்பாய்ச் சூரணஞ் செய்யே.* **(227)**

வெல்லத்தைப் பாகாகக் காய்ச்சிக் கொண்டு அதில் திரிகடுகு, ஓமம், திரிபலை, கோட்டம், சடாமாஞ்சில், சீரகம், வால்மிளகு, ஏலம், கிராம்பு, தாளிசபத்திரி, இலவங்கப்பட்டை, ஆனைத்திப்பிலி இவற்றை வகைக்கு 35 கி வீதம் சேகரித்துக் கொள்ளவும். இவற்றை ஓட்டிலிட்டு இளவறுப்பாய் வறுத்துச் சூரணம் செய்து கொள்ளவும்.

*செய்யப்பா முன்பாகில் தூவிக் கிண்டி*
*சிறப்பாக ஆவின்நெய் படிதான் வாரு*

*கொய்யப்பா தேனதிலே படிதான் வாரு*
*குழம்பாக லேகியத்தைப் பதனம் பண்ணு*
*பைய்யப்பா யிருகழஞ்சி யிருநேரம் கொள்ளு*
*பருவமுடன் பாண்டுவகை யெல்லாந் தீரும்*
*மைய்யப்பா பித்தவெட்டை பித்த வாய்வு*
*மயக்கமோடு அக்கினியா மந்தந் தானே* **(228)**

இந்தச் சூரணத்தை முன்சொன்ன பாகில் தூவிக் கிண்டி ஆவின் நெய் **1.3** லி, தேன் **1.3** லி சேர்த்துக் காய்ச்சிக் கொண்டு குழம்பாகும் பக்குவத்தில் இளகமாகக் கிண்டி இறக்கிக் கொள்ளவும். வேளைக்கு **10** கி வீதம், காலை, மாலை இரண்டு வேளை உட்கொண்டு வர பாண்டு வகை நோய்கள், பித்த வெட்டை, பித்த வாயு, அக்கினி மந்தம் நீங்கும்.

*மந்தமோடு வெளுப்பான தேக மெல்லாம்*
*வண்டுபோல் கருக்குமடா மண்ட லத்தில்*
*அந்தரமா மகோதரங்கள் பீலிகையாம் வாய்வு*
*அப்பனே கையோடு கிராணி மூலம்*
*பெந்தமா முடம்பெரிவு ஈளை யெரிப்பு*
*பொருமலுடன் பீனசங்கள் இரைச்சல் தீரும்*
*பந்தமாம் பத்தியங்கள் கார்த்து தின்னு*
*பக்குவமா மண்டலத்தில் சொல்லக் கேளே* **(229)**

வெளுத்த தேகம் வண்டுபோல் கருப்பாகும். நாற்பது நாட்கள் தொடர்ந்து உட்கொண்டு வந்தால் மகோதரங்கள், பீலிகை வாயு, கிராணி, மூலம், உடம்பெரிவு, ஈளை, எரிச்சல், பொருமல், பீனசங்கள், இரைச்சல் இவை நீங்கும். முறைப்படி பத்தியம் காத்து நின்றால் நோய்கள் விரைவில் குணமாகும்.

## திரிதிராட்ச சூரணம்

*வாதமெல்லாம் பறக்குமடா திராட்ச சூரணம் கேள்*
*தண்ணீரில் முந்திரிகை பேரீச்சம் பழந்தான்*
*தளமான அதிமதுரம் முக்கா வேளை*
*நன்னீராம் நெல்பொரியும் முத்தக் காசு*
*நலமான யேலமொடு கிராம்பு கூட்டே* **(230)**

வாத நோய்களை நீக்குகின்ற திராட்ச சூரணம் ஒன்றைச் சொல்கின்றார். முந்திரிகை, பேரீச்சம்பழம், அதிமதுரம், முக்காவேளை, நெற்பொரி, முத்தக்காசு, ஏலம், கிராம்பு.

*கூட்டுவாய் கொத்துமல்லி மிளகு வேலி*
*கூறான திப்பிலியும் கூகை நீறும்*
*நாட்டுவாய் சாதிக்காய் சாதி பத்திரி*
*நலமான வால்மிளகு லவங்கப் பத்திரி*
*ஆட்டுவாய் வகையொன்று பலமொன் றாக*
*அப்பனே சூரணித்துச் சர்க்கரையே கூட்டி*
*வேட்டுவாய் வெருகடிதான் தேனில் கொள்ள*
*விருதாகத் தீரும்நோய் விளம்பக் கேளே* **(231)**

கொத்துமல்லி, மிளகு, வெட்டிவேர், திப்பிலி, கூகைநீறு, வால் மிளகு, இலவங்கப்பத்திரி, சாதிக்காய், சாதிபத்திரி இவை வகைக்கு 35 கி சேர்த்துச் சூரணித்து, அதே அளவு சீனியும் சேர்த்துக் கொள்ளவும். மூவிரலளவு காலை, மாலை இரு வேளைக்கும் தேனில் உட்கொண்டு வர பின்வரும் நோய்கள் நீங்கும்.

*கேளப்பா அந்திரவாய்வு பாண்டு ரோகம்*
*கெடியான தாபசுரம் மயக்கம் தூக்கம்*
*வாளப்பா பித்தவகை நாற்ப துந்தான்*
*வளமான அரோசியங்க ளன்னத் துவேசம்*

*நாளப்பா உஷ்ணநோய் சேட்டு மங்கள்*
*நலமான அக்கினி மந்த வாய்வு*
*தாளப்பா கையெரிவு காந்த லெல்லாம்*
*தவறுண்டு போகுமடா நெய்யில் கொள்ளே* **(232)**

அந்திரவாயு, பாண்டுநோய், தாபசுரம், மயக்கம், தூக்க மி ன்மை, நாற்பது வகையான பித்த நோய்கள், அரோசிகம் என்ற அன்னத்துவேஷம், உஷ்ண நோய், சிலேட்டுமங்கள், அக்கினி மந்த வாயு, கையெரிவு, காந்துதல் போன்ற நோய்கள் நீங்கும். இதற்குத் துணை மருந்தாக நெய்யைக் கொள்ளலாம்.

## அசுவகெந்தி சூரணம்

*கொள்ளவே அசுவகெந்தி சூரணந்தான் சொல்வேன்*
*குலமான லவங்கமோடு நாகப்பூ வேருந்*
*தள்ளவே யேலம்நாலு மிளகு யெட்டு*
*தளமான திப்பிலியீ ரெட்டு சுக்கு*
*விள்ளவே முப்பத்திரெண்டு கூட்டு கூட்டு*
*விசையான அசுவகெந்தி அறுபத்தி நாலு*
*நள்ளவே சுத்திசெய்து உலர்த்திக் கொண்டு*
*நலமாக யிளவறுப்பாய்ச் சூரணம்தான் செய்யே* **(233)**

இலவங்கம், சிறுநாகப்பூவேர், ஏலம் இவை நான்கு பங்கு, மிளகு எட்டு பங்கு, திப்பிலி பதினாறு பங்கு, சுக்கு முப்பத்திரண்டு பங்கு, அசுவகெந்தி அறுபத்து நான்கு பங்கு எடுத்துச் சுத்தி செய்து கொள்ளவும். பின் அவற்றை உலர்த்திக் கொண்டு ஓட்டிலிட்டு இளவறுப்பாக வறுத்துச் சூரணம் செய்து கொள்ள வேண்டும்.

*செய்யப்பா சமனாகச் சர்க்கரையே கூட்டி*
*திறமான ஆவின்பால் நெய்யில் கொள்ள*
*கைய்யப்பா வெருகடிதான் கொள்ளும் போது*
*கனமான மேகவகை யெல்லாம் போகும்*

*வெய்யப்பா அத்திசுரம் வெட்டை போகும்*
*மேலான சுவாசமொடு யீளை போகும்*
*தைய்யப்பா மேகத்தின் பாண்டு போகும்*
*தளமான ஊறலெல்லாஞ் சாரா தென்னே* (234)

இந்தச் சூரணத்தின் அளவாகச் சீனியைச் சேர்த்துக் கொண்டு பசும்பால் அல்லது நெய்யில் மூவிரலளவு உட்கொண்டு வர தீராத மேகநோய்கள், அத்திசுரம், வெட்டை, சுவாசம், ஈளை, மேகப்பாண்டு இவை நீங்கும். உடல் ஊறலெடுப்பதும் நீங்கும் என்பதாம்.

## கண்டாத்திரி சூரணம்

*சாரவே கண்டாத்திரி சூரணந்தான் சொல்வேன்*
*தருவான யிஞ்சியது பலந்தான் பத்து*
*சேரவே மேல்தோலைப் போக்கிப் போட்டு*
*சிறுகவே நறுக்கியதைப் பழச்சா றூட்டி*
*சாரவே நாளொன்று வூறப் போடு*
*தவறாமல் மறுநாள்தான் ரவியு லர்த்தி*
*ஆரவே சீரகந்தான் பலந்தான் ஒன்று*
*அப்பனே முன்போலே பழச்சாற் றூட்டே* (235)

**350** கி இஞ்சியை மேல்தோல் நீக்கி எடுத்துக் கொள்ளவும். இதனைச் சிறு துண்டுகளாக நறுக்கிப் பழச்சாற்றில் ஊறப் போட்டு ஒருநாள் கழிந்த பின் எடுத்து வெயிலில் உலர்த்திக் கொள்ளவும். **35** கி சீரகத்தையும் முன்சொன்னது போல் எலுமிச்சம் பழச்சாற்றில் ஊறப் போடவும்.

*ஊட்டியே மறுநாள்தான் காய வைத்து*
*உத்தமனே மிளகோடு தாளிச பத்திரி*
*நாட்டியே திப்பிலியும் லவங்கம் கிராம்பு*
*நலமான கோஷ்டமொடு வாய்வி ளங்கம்*

*வாட்டியே யிளவறுப்பாய்ச் சூரணமே செய்து*
*வளமான சர்க்கரைதான் சமனாய்க் கூட்டி*
*நீட்டியே வெருகடிதான் கொண்டா யானால்*
*நீங்கிவிடும் பித்தம்முதல் வாய்வு போமே* **(236)**

ஒரு நாள் ஊறிய பின்னர் மறுநாள் எடுத்துக் காய வைக்கவும். மிளகு, தாளிசபத்திரி, திப்பிலி, இலவங்கம், கிராம்பு, கோட்டம், வாய்விளங்கம் இவற்றைச் சேகரித்து இளவறுப்பாக வறுத்துச் சூரணம் செய்து சர்க்கரை சம அளவாகக் கூட்டி மூவிரலளவு உட்கொண்டு வந்தால் பித்தம் முதலான பத்துவகை வாயு நோய்கள் நீங்கும்.

*போமப்பா அரோசியங்க ளன்னத் துவேசம்*
*புகழான பித்தவெட்டை பொருமல் விம்மல்*
*நாமப்பா வாய்வோடு வாதம் எல்லாம்*
*நாடாத சூலையெல்லாம் நளின மாகும்*
*தோமப்பா வயிற்றிலுள்ள வியாதி யெல்லாம்*
*திறமாகத் தீர்ந்துவிடும் பத்தி யங்காற்*
*நாமப்பா உலகோர்க்கா யிறங்கிச் சொன்னோம்*
*நலமான சூரணத்தை நாட்டிப் பாரே* **(237)**

அரோசியங்கள், உணவில் வெறுப்பு, பித்தவெட்டை, பொருமல், விம்மல், வாயு நோய்கள், வாதம், சூலை ஆகிய நோய்கள் நீங்கும். வயிற்றிலுண்டாகும் நோய்கள் தீர்ந்துவிடும். முறைப்படி பத்தியம் காத்து உணவை உட்கொண்டு வந்தால் நோய்கள் நீங்கி நலம் பெறலாம்.

## தாளிசபத்திரி சூரணம்

*நாட்டியே சொல்லுகிறேன் புலத்தியனே அய்யா*
*நலமான தாளிசபத் திரிசூ ரணந்தான்*

*காட்டியே தாளிசபத் திரிபலந்தான் பத்து*
*கருவான திரிகடுகு திரிப லாதி*
*நீட்டியே கோஷ்டமொடு அக்கிரா காரம்*
*நினவான அத்தித்திப் பிலியும் சீரம்*
*கூட்டியே கொத்தமல்லி வாய்வி ளங்கம்*
*கூரான கிராம்பேலம் சாதிக் காயே* **(238)**

**350** கி தாளிசபத்திரி, திரிகடுகு, திரிபலாதி, கோட்டம், அக்கிராகாரம், அத்தித்திப்பிலி, சீரகம், கொத்துமல்லி, வாய்விளங்கம், கிராம்பு, ஏலம், சாதிக்காய் இவற்றையெல்லாம் மொத்தமாகச் சேகரித்துக் கொள்ளவும்.

*காயோடு பத்திரியும் மாஞ்சில் சோம்பு*
*கருவான மிளகு லவங்கப் பட்டை*
*தாயோடு யிவையெல்லாம் பலமொன் றாக*
*தவறாமல் சூரணித்து வடியே கொண்டு*
*சேயோடு சர்க்கரைதான் சமனாய்க் கூட்டி*
*திறமாகப் பிசைந்துகொண்டு வெருகடிதா னேரம்*
*வாயோடு யிருநேரம் கொண்டா யானால்*
*வாங்குமடா சயகாசம் ஈளை போமே* **(239)**

இலவங்கப்பத்திரி, சடாமாஞ்சில், சோம்பு, மிளகு, இலவங்கப் பட்டை இவை வகைக்கு **35** கி சேகரித்து இளவறுப்பாக வறுத்துச் சூரணித்து மெல்லிய துணியிலிட்டுச் சலித்துக் கொள்ளவும். பிறகு அதே அளவு சர்க்கரையைச் சேர்த்துக் கலந்து, வேளைக்கு மூவிரலளவாக நாளொன்றிற்கு இரண்டுவேளை வீதம் உட்கொண்டு வந்தால் சயகாசமும், ஈளையும் நீங்கும்.

*போமடா அஸ்திசுரம் அஸ்தி வெட்டை*
*பொருக்காத நீர்த்தாகம் புண்ணாகும் நெஞ்சு*
*நாமடா பித்தவெட்டை பித்த பாண்டு*
*நாடாது கிராணிவகை யெல்லாந் தீரும்*

*தாமடா அரோசியங்கள் அன்னத்தின் வேசம்*
*தளராத விம்மலொடு விக்கல் கக்கல்*
*சாமடா கைகாலி லெரிவு காந்தல்*
*சாதகமாய்ப் புளியோடு புகையுந் தள்ளே* **(240)**

எலும்புசுரம், எலும்புவெட்டை, நீர்த்தாகம், நெஞ்சுவலி, பித்த வெட்டை, பித்தபாண்டு, கிராணி வகைகள் எல்லாம் நீங்கும். அரோசியங்கள், உணவில் வெறுப்பு, விம்மல், விக்கல், கக்கல், கைகாலெரிவு, காந்தல் இவையெல்லாம் நீங்கும். மருந்துண்ணும் காலத்தில் புளியும், புகையும் தள்ளவும்.

## வல்லாரைச் சூரணம்

*போமப்பா சூரணமொன்று சொல்லக் கேளு*
*புதுமையாம் வல்லாரை பாலில் போட்டு*
*நாமப்பா அவித்துலர்த்தி காயப் போட்டு*
*நலமாகச் சூரணித்துப் பலம்பத் தானால்*
*தாமப்பா கிராம்பேலம் சாதிக் காயும்*
*தளமான பத்திரியும் மாசிக் காயும்*
*தேமப்பா தாளிசபத்திரி திரிப லாதி*
*திறமாக இளவறுப்பாய்ச் சூரணஞ் செய்யே* **(241)**

வல்லாரையைச் சுத்தம் செய்து பசும்பாலில் போட்டுக் காய்ச்சி அவித்துலர்த்தி எடுத்து வெயிலில் காயப்போடவும். இதனை இடித்துச் சூரணித்து 350 கி எடுத்துக் கொள்ளவும். கிராம்பு, ஏலம், சாதிக்காய், சாதிபத்திரி, மாசிக்காய், தாளிசபத்திரி, திரிபலாதி இவற்றையும் இளவறுப்பாக வறுத்துச் சூரணித்துக் கொள்ளவும்.

*செய்யவே வகையொன்று பலமொன் றாகத்*
*திறமாக ரெண்டுமொன்றாய்ச் சேர்த்துக் கொண்டு*
*பய்யப்பா சர்க்கரைதான் சமனாய்க் கூட்டி*
*பதறாதே வெருகடிதான் நெய்யில் கொள்ள*

*செய்யப்பா மேகமெல்லாம் தவறுண் டேபோம்*
*சரீரத்தில் காந்தலெல்லாம் சாந்த மாகும்*
*கைய்யப்பா மேகத்தால் பிரமி யங்கள்*
*கனமான உஷ்ணநோய் காணா தென்னே.* **(242)**

சூரணத்தின் பின்சொன்ன சரக்குகளை வகைக்கு 35 கி வீதமெடுத்துச் சூரணித்துக் கொள்ளவும். அதே அளவு சர்க்கரை சேர்த்து அதில் மூவிரலளவு எடுத்து நெய்யில் உட்கொண்டு வர மேக நோய்கள் எல்லாம் நீங்கிவிடும். உடல் வெப்பம் குறைந்து சாந்தமாகும். மேகப் பிரமியங்கள், உஷ்ண நோய்கள் இவை குணமடையும்.

*காணாது நீரருகல் நீரிழிவு தானுங்*
*கண்ணெரிவு கண்புகைச்சல் காணா தோடும்*
*தோணாது உடம்பெரிவு நளின மாகும்*
---- ---- -----
*தோணாது தேகமெல்லாம் குளிர்ச்சி காணும்*
---- ---- -----
*காணாது* ---- ------ -------
*கொள்ளுவா யப்பிரேகம் வைத்துக் கொள்ளு கொள்ளே*
**(243)**

இந்த மருந்தை உட்கொள்வதால் நீரருகல், நீரிழிவு, கண்ணெரிவு, கண் புகைச்சல் இவை நீங்கும். உடம்பெரிச்சல் மட்டுப்படும், உடம்பு முழுமையும் குளிர்ச்சியடையும்.

## வல்லாரைக்கிருதம்

*கேளப்பா வல்லாரைக் கிருதஞ் சொல்வேன்*
*கெடியான வல்லாரைச் சாறுபடி யொன்று*
*தாளப்பா காணிச்சாற் படிதான் ஒன்று*
*தளமான பொடுதலைச்சாற் படிதான் ஒன்று*

*நாளப்பா பழச்சாறுபடி யரைதான் விட்டு*
*நலமான ஆவின்நெய் படிதான் ரெண்டு*
*ஆளப்பா ஆவின்பால் படிதான் ரெண்டு*
*அப்பனே கற்கவகை சாதிக் காயே* **(244)**

வல்லாரைச்சாறு, பொன்னாங்காணிச்சாறு, பொடுதலைச் சாறு வகைக்கு **1.3** லி, எலுமிச்சம் பழச்சாறு **650** மி.லி, பசும்பால், பசுநெய் வகைக்கு **2.6** லி இவற்றையெல்லாம் சேகரித்துக் கொள்ளவும். அதில் சேர்க்க வேண்டிய சரக்குகளை இனிச் சொல்வார்.

*காயோடு பத்திரியு மாச்சக் காயும்*
*கருவான சிங்கியோடு காட்டாத்திப் பூவுந்*
*தாயோடு வால்மிளகு யேலங் கிராம்பு*
*தளமான மதுரமோடு வகையொன் றுக்கு*
*பாயோடு யிருகழஞ்சி நிறைதான் தூக்கி*
*பருவமாய் ஆவின்பால் விட்டு ஆட்டி*
*வாயோடு அரைத்துவிட்டு அடுப்பில் ஏற்றி*
*வளமாக மெழுகுபதந் தனில்வ டித்தே* **(245)**

சாதிக்காய், சாதிபத்திரி, மாசிக்காய், கற்கடகசிங்கி, காட்டாத்திப்பூ, வால்மிளகு, ஏலம், கிராம்பு, அதிமதுரம் இவை வகைக்கு **10** கி வீதம் எடுக்கவும். இவற்றைப் பசும்பால் விட்டு நேகாக அரைத்துக் கலந்து அடுப்பேற்றி மெழுகு பதமாகும் போது இறக்கிக் கொள்ளவும்.

*வடித்ததனைச் சீனிரெண்டு பலந்தான் தூக்கி*
*வாகாகப் போட்டதிலே கிண்டிக் கொண்டு*
*கடித்திதனைக் கரண்டிநிறை கொண்டா யானால்*
*கலங்காதே மண்டலத்தில் தீரும் நோய்கேள்*
*தடித்திட்ட மேகவகை யெல்லாந் தீருந்*
*தளமான குளிர்ச்சியாய் சரீர மெல்லாம்*

*வெடித்திட்ட ரிணங்கிரந்தி விழலாய்ப் போகும்*
*விருதான பிரமியஞ்சீ வெட்டை போச்சே* **(246)**

இவற்றுடன் 70 கி சீனி சேர்த்துக் கிண்டவும். இம்மருந்தை வேளைக்கு ஒரு கரண்டி வீதம், நாற்பது நாட்கள் தொடர்ந்து உட்கொண்டு வந்தால், அனைத்து வகையான மேகவகை நோய்கள் நீங்கும். உடம்பு குளிர்ச்சி பெறச் செய்யும். இரணங்கள், இரணக்கிரந்தி, பிரமியம், வெட்டை இவை நீங்கும்.

## இலவண பற்பம்

*செப்பவே லவணவகை பற்பங் கேளு*
*சிறப்பான பஞ்சவகை லவண மெல்லாம்*
*மெய்ப்பான வகைக்கிவகை பலந்தா னொன்று*
*விருதான கல்வத்தி லிட்டு நீயும்*
*செப்பாதே பிரண்டைச்சாற் முருங்கைப்பட்டைச் சாறு*
*செப்பரிய மேனிச்சாற் றொச்சிச் சாறே* **(247)**

ஐந்து வகையான உப்புகளை (இந்துப்பு, வெடியுப்பு, வளையலுப்பு, கல்லுப்பு, கறியுப்பு) வகைக்கு 35 கி வீதமெடுத்துக் கல்வத்திலிட்டுப் பிரண்டைச் சாறு, முருங்கைப்பட்டைச்சாறு, குப்பை மேனிச்சாறு, நொச்சிச் சாறு இவற்றால் தனித்தனியே மூன்று மணி நேரம் அரைத்துக் கொள்ளவும்.

*சாறான குமரிச்சாற் வகைவ கைக்கி*
*சாமமொன்று விட்டரைத்து வில்லைதட்டி*
*வீறாக ரவியுலர்த்தி ஓட்டி லிட்டு*
*மேலோடு மூடியே சீலை செய்து*
*கூறாதே பத்தெருவில் புடத்தைப் போடு*
*கூறுகெட்டு அலையாதே லவண பற்பம்*
*வீறாக யெடுத்ததனைப் பீங்கா னிட்டு*
*விருதான பெருங்காயம் நாலி லொன்றே* **(248)**

குமரி எனும் கற்றாழைச் சாற்றால் மூன்று மணிநேரமும் அரைத்து வில்லையாகத் தட்டி வெயிலில் உலர்த்தி ஓட்டிலிட்டு, மேலோடு மூடி வலுவாகச் சீலைமண் செய்து பத்து வறட்டியில் புடத்தைப் போட்டெடுக்கவும். இந்த பஞ்ச லவண பற்பத்தைப் பீங்கானிலிட்டு அடைத்துக் கொள்ளவும். இம்மருந்துடன் நான்கில் ஒருபாகம் பெருங்காயத் தூளையும் சேர்த்துக் கொள்ளவும்.

*ஒன்றாகச் சேர்த்ததிலே தேனை வாரு*
*உறவுசெய்து மத்தித்து வைத்துக் கொண்டு*
*நன்றாக நாளொன்று கழஞ்சி வீதம்*
*நலமாக யிருநேரம் கொள்ளு கொள்ளு*
*குன்றாதே வாயுவெங்கே வாத மெங்கே*
*குத்தலொடு குடைச்சல்வலிக் கடுப்புச் சூலை*
*வண்டான வாய்வு திரட்டி சூலை*
*வகையான அண்டவாய்வு வெல்லாம் போமே* **(249)**

இப்பற்பக் கலவையுடன் தேவையான அளவு தேனைச் சேர்த்து மத்தித்து வைத்துக் கொள்ளவும். வேளைக்கு 5 கி வீதம், தினம் 2 வேளை, 40 நாட்கள் உட்கொண்டு வந்தால் வாயு, வாதம், குத்தல், குடைச்சல் வலி, கடுப்பு, சூலை, வாயுத் திரட்சி, சூலை, அண்டவாயு எல்லாம் நீங்கும்.

*போமென்ற யெண்பதுமாம் வாத சூலை*
*புகழான வாய்வென்ற திருபத் தாறும்*
*ஆமென்ற அஷ்டகுன்மம் கிராணி யாறும்*
*அந்திரமாம் வாய்வோடு ருத்திர வாய்வு*
*கேமென்ற குண்டலமாம் வாய்வு வோடு*
*குடல்பிரட்டு செரியாமை உப்பிசமும் மந்தம்*
*ஆமென்ற விவ்வகையாம் வியாதி யுள்ள*
*அசையாத மகோதரமும் அகன்று போமே.* **(250)**

எண்பது வகையான வாதங்களும் சூலைகளும், இருபத்தாறு வகையான வாயு நோய்களும், எட்டு வகையான குன்ம நோய்களும், ஆறு வகையான கிராணி நோய்களும், அந்திர வாயு, உருத்திரவாய் வெனும் தமரக வாயு, குண்டல வாயு, குடல் பிரட்டல், செரியாமை, உப்பிசம், மந்தம், மகோதரம் ஆகிய நோய்களும் இதனால் நீங்கும் என்பதாம்.

## சர்வகிராணிக்குக் கபாடச் சூரணம்

*உண்டிடவே யின்னமொரு கபாடச் சூரணந்தான்*
*ஒளியாமல் சொல்லுகிறே னுற்றுக் கேளு*
*சுண்டையுட வற்றல்கரு நிம்பப் பத்திரி*
*சொல்லரிய மாங்கொட்டைப் பருப்போ டோமம்*
*நின்றிடவே மாதுளையின் பழத்தின் தோடும்*
*நெல்லிமுள்ளி வெந்தயத்தோ டேழுங் கேளு*
*கொண்டிடுநீ சமனாக யிளவறுப்பு செய்து*
*---- ---- ----- -----*
*துண்டிடவே சூரணத்தை வைத்துக் கொண்டு*
*துடியாக வெருகடித்தூள் தயிரில் கொள்ளே* (251)

சுண்டை வற்றல், கருவேம்பின் இலை, மாங்கொட்டைப் பருப்பு, ஓமம், மாதுளம் பழத்தின்தோல், நெல்லிமுள்ளி, வெந்தயம் ஆகியவற்றைச் சேகரித்து இளவறுப்பாக வறுத்துச் சூரணமாகச் செய்து கொண்டு வேளைக்கு மூவிரலளவு தயிரில் உட்கொள்ளலாம்.

*கொண்டிடவே கிராணிவகை ஆறு மெங்கே*
*குமுறிநின்ற காய்ச்சலோடு மூல வாய்வு*
*விண்டிடவே சீதமொடு பொருமலுப் பிசமும்*
*வெப்புரத்தக் கடுப்புபல உப்பிசமு மந்த*
*சென்றிடவே யிவ்வகைநோ யெல்லாந் தீரும்*
*குடிலம்விட்டு வெளியாகப் பாடி னேன்நான்*

*பண்டுள்ள நோய்தீர வேணு மென்றால்*

*படித்தவரே யென்னூலைப் பார்த்தி டீரே* **(252)**

இவ்வாறு இம்மருந்தை உட்கொண்டு வந்தால் ஆறு வகையான கிராணிகள், தொடர்ந்தடிக்கும் காய்ச்சல், மூலவாயு, சீதம், பொருமல், உப்பிசம், வெப்பு, இரத்தக்கடுப்பு, உப்பிசத்தால் ஏற்பட்ட மந்தங்கள் ஆகிய நோய்கள் தீரும். கட்டுப்பாட்டை விட்டு வெளியே வந்து உலகம் உய்ய வேண்டும் என்பதற்காக இந் நூலைப் பாடினேன். எனவே கற்றறிந்தோர் இந்நூல் ஆழ்ந்து கற்பீராக.

## பலநோய் போக்கும் தேங்காய் லேகியம்

*பாரேநீ சர்வநோ யெல்லாந் தீரப்*

*பாடுகிறேன் திசைதிசைக்குக் குழம்பு தன்னை*

*காரேநீ முற்றினதோர் தேங்கா யொன்று*

*கண்திறந்து நீர்போக்கி அதனுக் குள்ளே*

*வாரேநீ கொடிக்கள்ளி சதுரக்கள்ளி*

*வகைக்குஒரு கழஞ்சிடைதா னாலு வாங்கு*

*சேரேநீ தேங்காயி னுள்ளே வார்த்து*

*செப்புகிறேன் கடைச்சரக்கைத் தெளிந்து கேளே* **(253)**

நன்றாக முற்றிய தேங்காயொன்றை எடுத்துக் கண்ணைத் திறந்து தண்ணீரை வெளியே விடவும். கண் வழியாகத் தேங்காய்க்குள் கொடிக்கள்ளிப்பால், சதுரக்கள்ளிப்பால் வகைக்கு **20** கி அளவு உள்ளே செலுத்தவும். அதனுள்ளே சேர்க்கவேண்டிய கடைச்சரக்குகள் பின்வருமாறு.

*கேளப்பா கெந்திரசம் காந்த மோடு*

*கெடியான திரிகடுகு காயம் காரம்*

*வாளப்பா கடுகுரோகணி கடுக்கா யிந்து*

*வகைவகைக்கு ஒருகழஞ்சி பொடித்துப் போடு*

*தேளப்பா கொடிக்கள்ளி குச்சி யாலே*
*தேங்காயின் கண்மூடி பொதிந்து சாணி*
*நாளப்பா பெரியதொரு புடத்தில் போட்டு*
*நலமான புடம்மாறி யெடுத்தி டாயே* (254)

கெந்திரசம், காந்தம், திரிகடுகு, பெருங்காயம், அக்கிராகாரம், கடுகுரோகணி, கடுக்காய், இந்துப்பு இவற்றை வகைக்கு 5 கி வீதமெடுத்து பொடித்துப் போட்டு கொடிக்கள்ளிக் கொம்பினால் தேங்காய்க் கண்ணை மூடி பெரிய புடமொன்றைப் போட்டெடுக்கவும். புடம் ஆறிய பின் எடுத்துக் கொள்ளலாம்.

*எடுத்துமே அதனுள்ளே மருந்தை யெல்லாம்*
*இதமான கத்திகொண்டு வழித்து வாங்கி*
*படுத்துமே கல்வத்தி லிட்டு நன்றாய்*
*பனைவெல்லம் காய்ச்சியந்த பாகு பார்த்து*
*வடித்திட்ட மயனம்போ லாட்டி வாங்கி*
*வடித்துஒரு சிமிளில்வைத்து வகைதான் கேளு*
*கடுத்திட்ட காசிடைதா னுள்ளே கொள்ளு*
*கனபேதி யாகுமதற் கய்ய மில்லை*
*எடுத்திட்ட பேதியது அதிக மானால்*
*ஏங்காதே மோரசனம் பண்ணு பண்ணே.* (255)

தேங்காயின் உள்ளே உள்ள மருந்தையெல்லாம் கத்திகொண்டு வழித்தெடுத்து கல்வத்திலிட்டு அரைக்கவும். சேர்த்தரைப்பதற்கு வெல்லப்பாகைப் பயன்படுத்த வேண்டும். நன்றாக மசிந்து மைபோலான பின்பு வழித்தெடுத்துச் சிமிழில் அடைத்துக் கொள்ளவும். வேளைக்கு 488 மி.கி வீதம் உட்கொள்ள கடினமாகப் பேதியாகும். அவ்வாறு பேதி அதிகமானால் மோர்சாதம் சாப்பிடவும்.

*பண்ணவே யில்லாட்டால் வசம்பு சுட்டு*
*பக்குவமாய்க் கிஷாயத்து உண்ணத் தீரும்*

*நண்ணாக சுகபேதி யாகும் பாரும்*
*நலமாகத் தீருநோய் சொல்லக் கேளு*
*பண்ணான பெருவயிறு மகோ தரமும்*
*பீலிகையோடு அகுவைவெப்பு காமாலை சோகை*
*புண்ணான கால்முடக்கு கைமுடக்குச் சூலை*
*பொல்லாத குன்மமோடு புழுக்கிருமி யோடு*
*பண்ணான வாதமோடு வாய்வு வெல்லாம்*
*பாக்குமே பருதிகண்ட பனிபோல் போமே* **(256)**

வசம்பைச் சுட்டுக் கரியாக்கி பக்குவமாக கஷாயத்தில் உட்கொண்டு வர பேதி மட்டுப்படும். இதனால் பெருவயிறு, மகோதரம், பீலிகை, அரையாப்புக்கட்டி, வெப்பு, காமாலை, சோகை, கால்முடக்கு, கைமுடக்கு, சூலை, எட்டுவகைக் குன்மம், புழுக்கிருமி, வாதம், வாயு இவையாவும் இம்மருந்துண்ண நீங்கும் என்பதாம்.

## குக்குட சூரணம்

*பாரேநீ கெண்டையோடு காய்ச்சல் கட்டி*
*பறக்கவே குக்குடசூ ரணந்தான் கேளு*
*பாரேநீ முற்றினதோர் சேவல் வாங்கி*
*கால்தலையு மயிர்போக்கி முதுகைக் கீறி*
*பேரான குடலெல்லாம் போக்கி ------*
*புகட்டுதற்கு மருந்துவகை புகலக் கேளு*
*காரேநீ பெருங்காயம் ஓம மிந்து*
*கனமான திரிகடுகு வெள்ளுள்ளி சீரகமும்*
*பாரேநீ நவச்சாரம் சத்திச் சாரம்*
*பாங்கான கல்லுப்பு வளைய லுப்பே* **(257)**

கெண்டை வலி அதையொட்டி வரும் காய்ச்சல், கட்டி போன்றவை நீங்குவதற்கான குக்குட சூரணம் வருமாறு. நன்றாக

வளர்ந்த முற்றிய கோழியொன்றைப் பிடித்து, கால், தலை, மயிர்போக்கி முதுகுபக்கம் கீறிக் கொள்ளவும். அதில் இன்னும் சேர்க்க வேண்டிய கடைச் சரக்குகள் வருமாறு.

பெருங்காயம், ஓமம், இந்துப்பு, திரிகடுகு, வெள்ளுள்ளி, சீரகம், நவச்சாரம், சத்திச்சாரம், கல்லுப்பு, வளையலுப்பு இவற்றைச் சேகரித்துக் கொள்ளவும்.

*உப்பான சவுட்டுப்பு கறியுப் போடு*
*உற்றதொரு சீரகமும் வாய்வி ளங்கம்*
*செப்பாதே சாதிக்காய் கிராம்பு ஏலம்*
*சிறுநாகப் பூவோடு தாளிசையும் கூட*
*மெய்ப்பாக வகைக்கிரெண்டு கழஞ்சி சொன்னோம்*
*விதமான கல்வத்தி லிட்டுக் கேளு*
*ஒப்பான பிரண்டைக்கொடி வேலிச் சாறு*
*உற்றகொடி வேலிபேய்க் குமட்டிச் சாறு*
*நய்த்தாக வார்த்தரைத்துக் குக்குடத்தி னுள்ளே*
*நாட்டியே யிவ்வகைச்சாற் நாலு மூட்டே* **(258)**

சவுட்டுப்பு, கறியுப்பு, சீரகம், வாய்விளங்கம், சாதிக்காய், கிராம்பு, ஏலம், சிறுநாகப்பூ, தாளிசபத்திரி இவை அனைத்தையும் வகைக்கு **10** கி வீதமெடுத்து கல்வத்திலிட்டுப் பிரண்டைச்சாறு, கொடிவேலிச்சாறு, உத்தாமணி எனும் வேலிப்பருத்திச்சாறு, பேய்க்கும்மட்டிச் சாறு ஆகிய இவற்றை வார்த்தரைத்துக் கோழிக்குள் இடவும். மீதமுள்ள இச்சாறுகளையும் உள்ளே ஊற்றவும்.

*ஊட்டியே சவுரியினால் அதனைத் தைத்து*
*மூடிஒரு தாளிக்குள் ளிட்டதிலே கேளு*
*நாட்டியே கரிசாலை மேனிச் சாறு*
*நலமான கோமியமும் கலந்து ஒன்றாய்*
*பாட்டியே யீராறு படிதான் வாரும்*
*பக்குவமாய் மேல்மூடி சீலை செய்து*

*தாட்டிகமா யடுப்பேற்றி ஒருவிறகு கொண்டு*
*சாறெல்லாம் வற்றுமட்ட மெரித்து வாங்கே* **(259)**

சவுரிக்கொடியால் தைத்து அதனை ஒரு தாளிக்குள் வைத்து, கரிசாலை, குப்பைமேனி இலைச்சாறு, கோமியம் இவற்றைக் கலந்து **15.6** லி அளவு தாளிக்குள் விட்டு மேலே மூடி சீலைமண் செய்து கொள்ளவும். அடுப்பேற்றி ஒரு விறகு மூட்டி சாறுகள் எல்லாம் வற்றும்வரை எரிக்கவேண்டும்.

*வாங்கிடவே அஸ்திகள்தா னகன்று போகும்*
*மைந்தனே அஸ்தியெல்லாம் தள்ளிப் போட்டு*
*ஆங்கியே மத்ததெல்லா பாண்டத் தோடே*
*அப்பனே ரவிவுலர்த்தி யிடித்துத் தூளாய்*
*பாங்கியே கலசத்தி லிட்ட டைத்து*
*பருவமாய் நாளொன்றுக் கந்தி சந்தி*
*வாங்கியே வெருகடித்தூள் கொள்ளு கொள்ளு*
*மண்டலந்தான் கொண்டுவரத் தீரும் நோயே* **(260)**

பின்னர் சாம்பலைத் தள்ளிப்போட்டு மற்றவற்றை எல்லாம் வெயிலில் உலரவிட்டு எடுத்திடித்துத் தூளாக்கிக் கலசத்திட்டு அடைத்துக் கொண்டு பயன்படுத்தலாம். நாளொன்றிற்கு காலை, மாலை இரண்டு வேளை, மூவிரலளவு நாற்பது நாட்கள் தொடர்ந்து, உட்கொண்டு வந்தால் பின்வரும் நோய்கள் நீங்கும்.

*கேளப்பா அஷ்டகுன்மம் காமாலை சோகை*
*குடிகெடுத்த மகோதரமும் பீலி பாண்டு*
*ஆளப்பா நீர்க்கோர்வை அகுவை வெப்பு*
*அப்பனே காய்ச்சல்வரு கெண்டைக் கட்டி*
*நீளப்பா வாயுவோடு வாத மெல்லாம்*
*நில்லாது சொல்லிவிட்டேன் நிசமாம் பாரே* **(261)**

எட்டுவகைக் குன்மம், காமாலை, சோகை, மகோதரம், பீலிகை, பாண்டு, நீர்க்கோவை, அரையாப்புக் கட்டி, வெப்புநோய், காய்ச்சலால் வருகின்ற கெண்டைக்கட்டி, வாயு, வாதம் எல்லாம் நீங்கிடும் என்பதாம். இதனுடன் திரிலோகச் செந்தூரம் கூட்டிச் சாப்பிடலாம்.

## சேங்கொட்டை வல்லாதி

*நோய்தீர வல்லாதி சேங்கொட்டை சொல்வேன்*
*நுணுக்கமாய்ச் சேங்கொட்டை பலந்தான் பத்து*
*முகியவே சாணிப்பால் சுத்தி செய்து*
*மூக்குவெட்டி யின்னமதில் முறையைக் கேளு*
*சாயவே கொடிவேலி பரங்கிப் பட்டை*
*சங்கோடு அமுக்குரா சிவனார் வேம்பு*
*ஓயவே மாவிலங்கப் பட்டை யோடு*
*உத்தமனே வேர்வகைக்கு வொருபலந் தானே* **(262)**

**350** கி சேங்கொட்டையை நிறுத்தெடுத்து சாணிப்பாலால் முறைப்படி சுத்திசெய்து அதனுடன் கொடிவேலி, பரங்கிப்பட்டை, சங்கு, அமுக்கிரா, சிவனார்வேம்பு, மாவிலங்கப் பட்டை, மாவிலங்கம் வேர் இவை வகைக்கு **35** கி வீதம் சேகரித்துக் கொள்ளவும்.

*எண்ணவே கருஞ்சீரகங் கஸ்தூரி மஞ்சள்*
*இடும்திப்பிலி கடுக்காய் வாலுளுவை கோட்டம்*
*சொன்னதொரு யிவையெல்லா மித்திடித்து வேறே*
*சூரணமாய் வைத்திட்டுச் சொல்லக் கேளு*
*உண்ணியே சுத்திசெய்த சேங்கொட்டை தன்னை*
*உரலிலிட்டு கொப்பரையின் தேங்காய் ரெண்டு*
*எண்ணவே யெள்ளுமொரு படியரைதான் போட்டு*
*இடித்துமே அதின்பிறகு சூரணத்தைக் கொட்டே* **(263)**

கருஞ்சீரகம், கஸ்தூரிமஞ்சள், திப்பிலி, கடுக்காய், வாலுளுவை, கோட்டம் இவற்றையெல்லாம் மத்தித்து இடித்துச் சூரணமாக்கிக் கொள்ளவும். சுத்தி செய்த சேங்கொட்டையை உரலிலிட்டு, கொப்பரைத் தேங்காய் இரண்டு, எள் **650** மி.கி அதன் மீது போட்டு, அதன்மீது மேற்சொன்ன சூரணத்தைக் கொட்டவும்.

*கொட்டியே சேர்த்தொன்றாய் இடிக்கும் போது*
*குமுறவே பனைவெல்ல மஞ்சுபலம் போடு*
*திட்டமாய் ரசகற்பூரம் விராக னஞ்சு*
*சேர்த்திடித்து வல்லாதி செய்து கொண்டு*
*நாட்டவே வல்லாதி அந்தி சந்தி*
*நாளொன்று வெருகடிதா னறிந்து கொள்ளு*
*குட்டமாங் கிரந்தியரை யாப்பு சூலை*
*குன்மமோடு வயிற்றுவலி வாய்வு சூலை* **(264)**

எல்லாவற்றையும் மொத்தமாகச் சேர்த்து இடிக்கும் போது பனைவெல்லம் **175** கி, இரசகற்பூரம் **20** கி. சேர்த்திடித்து வல்லாதி செய்து கொண்டு பயன்படுத்தலாம். இதனை அந்தி, சந்தி இரண்டுவேளை, வேளைக்கு மூவிரலளவு உட்கொண்டு வந்தால் குட்டம், கிரந்தி, அரையாப்பு, சூலை, குன்மம், வயிற்றுவலி, வாயு, சூலை இவை நீங்கும்.

*சூலையோடு சூதக வாய்வுந் தீரும்*
*சொல்பெரிய மேகமெல்லாஞ் சொல்லா தோடும்*
*வாலையாம் தேகமது சித்தி யாகு*
*மண்டலந்தான் பத்தியமாய்க் கொண்டு வாநீ*
*காலையே பத்தியந்தான் சொல்லக் கேளு*
*கசப்போடு புளிபுகையும் பெண்ணும் தள்ளு*
*பாலோடு மத்ததெல்லா மிச்சா பத்தியம்*
*பாங்கான உப்பதனை வறுத்துக் கொள்ளே.* **(265)**

மேலும் சூலை, சூதகவாயு இவையும் நீங்கும். மேக நோய்கள் யாவும் நீங்கும். உடல் சித்தியாகும். நாற்பது நாட்கள் முறைப்படி மருந்தை உண்டு வந்து பத்தியமும் காக்க வேண்டும். கசப்பு, புளிப்பு, புகை, பெண்போகம், பால் இவற்றை நீக்க வேண்டும். உப்பை வறுத்துக் கூட்டவும்.

## சில் விசங்களுக்கு அமுக்கிரா சூரணம்

*கண்டிடா யமுக்கிரா சூர ணத்தை*
*கருதியே பலம்பத்து நிறுத்துக் கொண்டு*
*வண்டிடித்து வடிகட்டிச் சூரணமே செய்து*
*வால்மிளகு குரோசாணி பரங்கிப் பட்டை*
*கண்டிடாய் கருஞ்சீரகங் கடுக்காய் சுக்கு*
*கடுகுரோகணி வாலுளுவை அரத்தைத் திப்பிலியும்*
*விண்டிடாய் வகைக்கிவகை பலமே தூக்கி*
*இடித்ததனிற் முன்மருந்திற் சமனாய்ச் சேரே* (266)

அமுக்கிராவை 350 கி நிறுத்தெடுத்து நன்றாக இடித்து மெல்லிய துணியால் சலித்துக் கொள்ளவும். வால்மிளகு, குரோசாணி ஓமம், பரங்கிப்பட்டை, கருஞ்சீரகம், கடுக்காய், சுக்கு, கடுகுரோகிணி, வாலுளுவை, அரத்தை, திப்பிலி இவை வகைக்கு 35 கி வீதமெடுத்து இடித்து மேற்சொன்ன சூரணத்துடன் சம அளவு சேர்த்துக் கொள்ளவும்.

*சமனாகச் சீனியதில் நாலத் தொன்று*
*சாரித்த வெருகடிதான் அந்தி சந்தி*
*அமனாக ஆவின்நெய்யால் சேர்த்துக் கொண்டு*
*அரையாப்பு மேகவெடி கிரந்தி குட்டம்*
*இமனாக வாய்வோடு கடிவிசங்க ளெல்லாம்*
*எலிக்கடியுஞ் சில்விசங்கள் பூரான் செய்யான்*
*கமனான மேகமொடு வாத பித்தம்*
*கண்டுபோம் பத்தியந்தான் கண்டு கொள்ளே* (267)

இந்தச் சூரணத்துடன் நான்கில் ஒரு பங்களவு சீனி சேர்த்து இடித்துக் கொண்டு காலை, மாலை இரண்டு வேளை, வேளைக்கு மூவிரலளவு வீதம் நாற்பது நாட்கள் உண்டு வரவும். துணை மருந்தாக பசு நெய்யைச் சேர்த்துக் கொண்டால் அரையாப்பு, மேகவெடிப்பு, கிரந்தி, குட்டம், வாயு, கடிவிஷங்கள், எலிக்கடி, சில் விஷங்கள், பூரான் கடி, செய்யான் கடி, மேகம், வாதபித்தம் ஆகியன நீங்கும். பத்தியத்தை உணர்ந்து கடைப்பிடிக்க வேண்டும்.

## கறியுப்புத் திராவகம்

*கேளப்பா கறியுப்பு பலமோ பத்து*
*கெணிதமுடன் சுத்திசெய்து எடுத்துக் கொண்டு*
*தாளப்பா வெடியுப்பு சீனக் காரம்*
*தன்மையுள்ள இந்துப்பு வளய லுப்பு*
*தாளப்பா துருசுதுத்தம் காரஞ் சாரம்*
*வளமான சூடனோடு சரியாய்க் கூட்டி*
*கோளப்பா வாராமல் பொடித்துக் கொண்டு*
*கூர்மையுள்ள பழச்சாற்றால் பிசறு வாயே.* **(268)**

கறியுப்பு **350** கி, நிறுத்தெடுத்துச் சுத்திசெய்து கொள்ளவும். வெடியுப்பு, சீனக்காரம், இந்துப்பு, வளையலுப்பு, துருசு, துத்தம், வெங்காரம், நவச்சாரம், சூடன் இவற்றைச் சமமாக எடுத்து இடித்துப் பொடித்து எலுமிச்சம்பழச்சாற்றால் பிசைந்து கலசத்தில் கொள்ளவும்.

*பிசறிநன்றாய்க் கலசத்திட்டு முன்போல் மைந்தா*
*பெருமையுடன் கைபாகஞ் செய்து கொண்டு*
*அசதில்லா தேயிருந்து அடுப்பி லேற்றி*
*அருள்பெருகும் சூரணத்தை அன்பில் வைத்து*
*திசையான தீட்சையினால் மணலை மூட்டி*
*செம்மையுடன் குருபதத்தில் சேர்ந்து நில்லு*

*வசையறவே அனலேறி ஆவி மீறி*
*வருகுமடா திராவகந்தான் வரிசை பாரே* (269)

திராவகம் இறங்குவதற்கேற்றாற் போல வாலை இயந்திரத்தைக் கைபாகமாகச் செய்து கொண்டு அடுப்பேற்றிச் சூரணத்தை அடுப்பிலிட்டு, தீட்சையால் மணலை மூடி குருபதத்தினைப் போற்றிக் கொண்டால் அனலேறி ஆவி மேலேறி திராவகந்தான் வடிந்து நிற்கும்.

## உலோகத் திராவகம்

*இயம்பிடவே உலோகத் திராவ கந்தான்*
*இயல்பான செடிவகைமூன் றுப்புபலந் தானொன்று*
*கயமிரங்கன் ரசபதங்கஞ் சின்னிச் சாம்பல்*
*காய்ச்சுமுன் னுப்பு பலந்தான் ரெண்டு*
*இயம்பிடவே கோரோசனைக ளஞ்சு மிருபத்தேழு*
*மேனிச்சாற் துணிசுத்தி புடத்திலிட்ட சாம்பல்*
*அயம்பிட இவையெல்லாம் மேனிச் சாற்றில்*
*அரைத்துலர்த்தி சுத்திசெய்து சீனமஞ்சு பலமே* (270)

உலோகத் திராவகம் செய்வதற்குச் செடிகளின் உப்பான பிரண்டையுப்பு, நாயுருவியுப்பு, சீந்திலுப்பு இவை வகைக்கு 35 கி, இரசபதங்கம், சின்னிச்சாம்பல் வகைக்கு 70 கி, கோரோசனை 135 கி, குப்பைமேனிச்சாற்றில் நனைந்த துணியைச் சுற்றி புடத்திலிட்ட சாம்பல் எடுக்கவும். இவற்றையெல்லாம் குப்பை மேனிச் சாற்றில் அரைத்துலர்த்தவும். சுத்தி செய்த சீனக்காரம் 175 கி சேகரிக்கவும்.

*பலம்பத்து வெடியுப்பு நாலாங் காய்ச்சல்*
*பகற்சாரம் பூனீறுகல் லுப்பதுவும் பலந்தான்*
*தலமான திராவகம் கைமுறையாய் வாங்கி*
*தானஞ்சுத மரைத்துரவி தனில்வை பற்பம்*

*அலஞ்சகல நோய்தீர திராவ கத்தை*
*அனுபான மறிந்திடப்போ திரட்சிஅஷ்ட குன்மம்*
*கலமான மகோதரமும் பொருமல் நீராமை*
***கண்டாத்தி லேகியத்தில் மண்டலங்கொள் போமே* (271)**

நாலாங்காய்ச்சல் வெடியுப்பு 350 கி, சத்திச்சாரம், பூநீறு, கல்லுப்பு வகைக்கு 35 கி சேகரித்து முறைப்படி திராவகத்தைச் செய்து கொண்டு, சூதத்தை அரைத்து வெயிலில் காயவைத்து பற்பமாக்கிக் கொள்ளவும். திராவத்தை அனுபானமறிந்து வழங்கிட வயிற்றுள்திரட்சி, எட்டுவகைக்குன்மங்கள் தீரும். மகோதரம், பொருமல், நீராமை இவை கண்டாத்திரி லேகியத்தில் இத்திராவகத்தை 40 நாட்கள் உட்கொள்ள நீங்கும்.

## இலவணத்திராவகம்

*ஆதியாம் லவணமென்ற திராவ கத்தை*
*அரையிறேன் மாணாக்கா ளறிந்து கேளு*
*நீதியாய் வெடியுப்பு பலந்தான் பத்து*
*நிலவாமங் கல்லுப்பு பலந்தான் பத்துச்*
*சாதியா மிந்துப்பு பலந்தான் பத்து*
*சமஸ்தான கெந்தியுப்பு பலந்தான் பத்து*
*வாதியாம் வளையலுப்பு பலமும் பத்து*
*பரிவான கறியுப்பு பலமும் பத்தே* **(272)**

இலவணத் திராவகத்தைப் பற்றிச் சொல்கிறேன். வெடியுப்பு கல்லுப்பு, இந்துப்பு, கெந்தியுப்பு, வளையலுப்பு, கறியுப்பு வகைக்கு **350** கி எடுத்துச் சேகரித்துக் கொள்ளவும்.

*பத்தான சவுட்டுப்பு பலமும் பத்துப்*
*பாறையுப்பு பலமும்பத்து நிறுத்துக் கொண்டு*
*கோத்தான நவச்சார பலந்தா னெட்டு*
*குறியான சவுக்காரம் பலந்தா னெட்டு*

*அத்தான சீனமது பல மீறாறு*
*அன்னமென்ற பேதியது பலமி ரண்டு*
*சித்தான றுவியுப்பு அமுரி யுப்பு*
*சிறப்பான தேசியுப்பு வகைக்கு ரெண்டே* (273)

சவுட்டுப்பு 350 கி, பாறையுப்பு 350 கி, நவச்சாரம் 280 கி, சவுக்காரம் 280 கி, சீனக்காரம் 420 கி, அன்னபேதி 70 கி, துவியுப்பு, அமுரியுப்பு, தேசியுப்பு இவை வகைக்கு 70 கி, இவற்றையெல்லாம் சேகரித்துச் சுத்தி செய்து கொள்ளவும்.

*இரண்டான வள்ளையது கால்பலமே போட்டு*
*நேரான தேசிச்சாற் மேனியிலைச் சாறு*
*அன்றான யெருக்கினுட பழுப்புச் சாறு*
*மயனம்போ லறுசாம மாட்டிவில்லை தட்டி*
*நன்றாக உலர்ந்தபின்பு கச்சத் திட்டு*
*நலமான காகமாம் பானை சட்டி*
*கன்றான சந்துவாய் பொருந்தப் பார்த்து*
*கனமான உளுந்தரைத்து சீலை செய்யே* (275)

வள்ளையுப்பு 9 கி, எலுமிச்சம் பழச்சாறு, குப்பைமேனியிலைச் சாறு, எருக்கம் பழுப்புச்சாறு இவற்றையெல்லாம் சேர்த்துப் பதினெட்டு மணி நேரம் மைபோலாட்டி வில்லை தட்டிக் காய வைக்கவும். வாய் பொருந்தக் கூடிய இரண்டு பானைகளை எடுத்துக் கீழ்ப் பானையில் வில்லைகளை வைத்து மற்றொரு சட்டியை மேலே வைத்து வாய் பொருந்த மூடி உளுந்தை அரைத்துச் சீலை செய்யவும்.

*செய்துமே யடுப்பேற்றிக் கமலம் போலே*
*சிறப்பாகத் தீமூட்டி பீங்கானில் வைத்து*
*உய்துமே சட்டியின்மேல் நனைசீலைப் போட்டு*
*உத்தமனே தண்ணீரைக் கொதிக்க வைப்பாய்நீ*

*அய்துமே திராவகந்தா னிறங்கும் பாரு*
*அப்பனே முன்நீரைத் தள்ளிப் போட்டு*
*கொய்துமே பின்னீரை வாங்கி மைந்தா*
*குறிப்பான வாகாக குப்பியிலே வாரே* **(275)**

பீங்கானில் வைத்து, இரண்டு விறகினால் தொடர்ந்து தீ எரிய விட்டு, சட்டியின் மேல் சீலையைப் போட்டு தண்ணீரைக் கொதிக்கவிட்டால் திராவகம் இறங்கும். முன்வரும் நீரை நீக்கி, பின்வரும் நீரை எடுத்துக் குப்பியில் அடைத்துக் கொள்ளவும்.

*வார்த்துமே யடைத்துநன்றாய் ஆயிப் பாதம்*
*வணங்கியே பதனமாய் வைத்துக் கொண்டு*
*போத்துமே பாசாண மிறுத்து வாங்கும்*
*பூட்டிடவே மெழுகாகும் வேதை யாகும்*
*எடுத்துமே சரக்கெல்லாம் கட்டிப் போகும்*
*மிதமான துருசதுவுஞ் சுண்ண மாகும்*
*காத்துமே நவலோகம் கரைந்து நீறும்*
*கடிதான சூதமது மணியு மாமே.* **(276)**

அம்மன் எனும் தாய் பாதங்களைப் போற்றிப் பதனப்படுத்திக் கொண்டு பாசாணங்களை இறுத்து மெழுகாகும் பதம் வரைக் காய்ச்சி வேதையாக்கலாம். இந்த வேதையால் மருந்து சரக்குகள் எல்லாம் கட்டிப்போகும். துருசும் சுண்ணமாகும். நவலோகம் கரைந்து நீற்றுப்போகும். சூதமென்ற பாதரசம் மணியாகும்.

*மணியெடுத்து வாயில்வைக்க கெவுன மோடு*
*மகத்தான வேதையுமா மாட்டிப் பாரு*
*நனியெடுத்து யிரும்பைநன்றாய் காய்ச்சிக் காய்ச்சி*
----- ----- ----- ------
*அணியெடுத்து வறதனால் விண்டு போகும்*
*அப்பனே வாரியொரு குகையி லிட்டுக்*

*கணியெடுத்துக் காரமிட்டு உருக்கிப் பாரு*
*கனமென்ற மாத்தாறுங் காணுந் தானே* **(277)**

மணியை எடுத்து வாயிலிட்டால் ஆகாயத்தில் பறக்கும் கெவுனமார்க்கம் சாத்தியப்படும். வேதைக்கும் பயன்படும். திரும்பத் திரும்ப நன்றாகக் காய்ச்சிக் கொள்ளவும். இரும்பு விட்டுப் போகும். இவற்றை வாரி ஒரு குகையிலிட்டு இரும்பெடுத்துக் காரமிட்டு உருக்கிப் பார்த்து அதற்கான மாற்றைக் கண்டு தேறலாம்.

*தானென்ற உபரசங்கள் சத்து மாகும்*
*தருவான உருக்கினத்துக் காதி யீனம்*
*வேனென்ற திராவகத்தில் வேதை கோடி*
*விரித்திட்டா லண்டங் கொள்ளா தப்பா*
*போனென்ற சூட்சமாய் அடக்கிச் சொன்னேன்*
*புத்திமா னீயானால் விரித்துப் பாரு*
*பானென்ற தீநீரில் பத்துவிசை துவைக்க*
*பரிவான பூரணத்தில் பருகி டாயே* **(278)**

இது தொடர்ந்து, உபரசங்கள் சத்தாகும். உருக்கினத்திற்கு ஆதியானவற்றை உணர்ந்து அறிந்து செயல்பட்டால் திராவகத்தால் நடை பெறுகின்ற வேதைகள் கோடி கோடி என்று அறியலாம். எல்லாவற்றையும் சுருங்கச் சொன்னேன். நீ இதனை விரித்து உணர்ந்து கொள்ளலாம். தீநீரினையும் பத்து முறையும் வகை அறிந்து பரிபூரணத்தில் பருகிடலாம்.

*அருளான பொருளறியார் மடையர் தானும்*
*அடிபணிந்து உன்னைநிதம் பணிந்து போற்றி*
*குருவான சற்குருவே அடியேன் தன்னை*
*கொத்தடிமை கொண்டுசித்தம் வைத்து நன்றாய்*
*கருவான கருவிபரஞ் சொல்லு மென்று*
*கைகட்டி நல்லவன்போல் கேட்பான் மட்டை*

*கிருபமுள்ள மாந்தற்கு கருசொல் லாதே*
*கெந்திரச மெழுகையினி விளம்பக் கேளே* **(279)**

உண்மையான பொருள் எது என்பதை அறிந்திருக்க மாட்டார்கள். அவர்கள் மடையர்களாக இருப்பர். நான் தெய்வத்தை அடிபணிந்து சற்குருவைப் போற்றி அவருக்கு நான் கொத்தடிமை போல் நடந்து கொண்டு கற்றுள்ளேன். இதன் மேல் சித்தம் வைத்து கருவிவரம் அறிந்து கொள்ளலாம் என்று வரும் மடையராம் மாந்தர்க்கு இக்கருவைச் சொல்லாதே. இனிமேல் கெந்திரச மெழுகைச் சொல்வேன்.

## கெந்திரச மெழுகு

*விளம்புநெல்லி கெந்தியிரு பத்து விராகன்*
*மிஞ்சாமல் நிறுத்திருப்புக் கரண்டி கொண்டு*
*களம்பிறவே அடிகனத்த வாய கண்ட*
*கரண்டிதனில் சிறுதீயா யெரித்து மைந்தா*
*வளம்பிறவே குறடுகொண்டு கிண்டிக் கிண்டி*
*வறுக்கையிலே கெந்தகந்தான் தயிலம் போலே*
*தளம்பிறவே உருகிவருந் தருணம் தன்னில்*
*தனித்தேனில் நாலுபலம் ஒன்றில் வாங்கே* **(280)**

நெல்லிக்காய்க் கெந்தகம் 80கி, நிறுத்தெடுத்து வாயகன்ற பாத்திரத்திலிட்டு சிறுதீ எரித்து இரும்புக் கரண்டி கொண்டு கிளறவும். இவ்வாறு தொடர்ந்து குறட்டினால் கிண்டி வந்தால் கெந்தகமானது தயிலம் போன்று உருகிவரும். அவ்வாறு உருகி வரும் வேளையில் 140 கி தேனைச் சேர்த்துக் கொள்ளவும்.

*ஒன்றான தேனதிலே கொஞ்சம் விட்டு*
*உத்தமனே குறடுகொண்டு கிண்டு கிண்டு*
*நன்றான சைவீரம் விராகன் ரெண்டு*
*நல்லரச கற்பூரம் விராகன் ரெண்டு*

*குன்றான சூதமது விராகன் ரெண்டு*
*குறிப்பாக வாங்கியே வீரம் பூரம்*
*முன்னாடுங் கல்வமதில் பொடித்து மைந்தா*
*மன்னுருக்குங் கெந்தியினில் தூவிக் கிண்டே* **(281)**

உருகும்போது சிறிது தேன்விட்டு மீண்டும் மீண்டும் கிண்டிக் கொள்ளவும். சவ்வீரம் 8 கி, இரசகற்பூரம் 8 கி, இரசம் 8 கி, இவற்றுடன் வீரம் 8 கி, பூரம் 8 கி எடுத்துக் கல்வத்திலிட்டு பொடித்துப் போட்டு நெல்லிக்காய்க் கெந்தகத்துடன் சேர்த்துக் கிண்டிக் கொள்ளவும்.

*கிண்டடாநீ கொஞ்சந் தூவித் தூவிக்*
*கெடியான தேனுமதில் சற்றே விட்டு*
*மண்டடா ரசந்தனிலுங் கொஞ்சம் விட்டு*
*மைந்தனே குறடுகொண்டு கிண்டு கிண்டு*
*விண்டடா இப்படியே முற்சரக்கு மென்மேலுந்*
*தூவியதில் தேனும் விட்டு*
*செண்டடா முன்குறடு கொண்டு சுற்றி*
*திருந்தவே பொங்கிவந்தால் ஆற வைய்யே* **(282)**

பின்னர் கொஞ்சம் தேன்விட்டுக் கிண்டி, முன் சொன்ன சரக்குகளையும் மேலும் மேலும் தூவித் தேன் விட்டு முன் சொன்ன குறடு கொண்டு கிண்டவும். சுற்றி பொங்கி வரும் போது இறக்கிக் கொள்ளவும்.

*ஆறவைத்து சிறுதீயா யெரித்து மேலே*
*அயக்கரண்டி யேந்திஅயக் குறட்டால் சுற்றி*
*ஊறவைத்து குறடதனால் கிண்டித் தூக்கில்*
*ஒழுகிவிழுங் கம்பியப்போல் மெழுக தாக*
*தூரவைத்து அப்பதத்தில் இறக்கி நீயும்*
*சுற்றுவாய் குறடுகொண்டு கையோ யாமல்*

*பாரம்வைத்துக் கரடுநின்று போகா மல்தான்*
*பார்த்தீ யாறினபின் பாணி சேரே* (283)

ஆறியபின் எடுத்து, சிறுதீயில் அடுப்பேற்றி எரித்து அயக்கரண்டியில் ஏந்தி எடுத்து அயக்குறட்டால் சுற்றவும். ஊற விட்டுப் பின்னர் குறட்டால் கிண்டி வரவும். கம்பி பதத்தில் மெழுகாகும்போது அந்தப் பதத்திலேயே இறக்கி குறட்டை கொண்டு தொடர்ந்து சுற்றி வரவும். கரடு கட்டாமல் சுற்றிச் சுற்றி ஆறவிட்டு ஆறின பின் நீர் சேர்க்கவும்.

*சேரடா யேகவில்லை சிமிளி லய்யா*
*திரும்பவடிக் கசடிருந்தால் தேனை விட்டுப்*
*பாரடா தீமுகத்தில் கரண்டி யேந்திப்*
*பதமாக இளக்கியமுன் பாணி சேரு*
*வீரடா பொல்லாது பாரோர் தேற்றான்*
*விரையளவு கெந்திரச மெழுகை வாங்கி*
*பேரடா பனைவெல்ல மொருநெல் லிக்காய்*
*பிரமாணம் கசக்கியதில் மெழுகு கூட்டே* (284)

இதனை எடுத்துச் சிமிழில் அடைத்துக் கொள்ளலாம். அதில் கசடிருந்தால் தேனைவிட்டு தீமுகத்திலே கரண்டியை ஏந்திப் பதமாக எடுத்து முன் இறக்கிய நீரைச் சேர்க்கலாம். தேற்றான் கொட்டை அளவு கெந்திரச மெழுகை எடுத்து, ஒரு நெல்லிக்காயளவு இடித்த பனைவெல்லத்தின் உள்ளே வைத்துக் கொடுக்கவும்.

*கூட்டியே ஆறுருண்டை அளவாய்ச் செய்து*
*குணமான புழுங்கல்நெல் மணித்த விட்டில்*
*மாட்டியே பிரட்டியிந்த குளிகை யாறில்*
*மறவாமல் நாளொன்றுக் கிரண்டு வீதம்*
*நீட்டிடுவாய் காலையொன்று மாலை யொன்று*
*நீமகனே நாள்மூன்றில் குளிகை யாறும்*

*பூட்டிடுவேன் பத்தியத்தைப் புகலக் கேளு*
*புளிக்கசப்பு தள்ளாறி நெய்பா லாமே* (285)

தேற்றான் கொட்டை அளவிலான உருண்டைகள் ஆறு செய்து கொள்ளவும். புழுங்கலரிசித் தவிட்டில் உருண்டைகளைப் பிரட்டிக் கொள்ளவும். நாளொன்றிற்கு இரண்டு உருண்டைகள் வீதம் காலை, மாலை 3 நாட்கள் தொடர்ந்து உண்டு வரவும். இதற்குப் பத்தியமாக புளிப்பு, கசப்புச் சுவையை நீக்கி நெய், பாலை உட்கொள்ளலாம்.

*ஆமடா யேழாநாள் தலைநீர் வார்த்து*
*அப்பனே அருந்துவாய் அதன்முன் வேண்டாம்*
*பூரடா நவதினத்தின் மிளகு பாலும்*
*பொருந்தவே காய்ச்சியே முழுகச் சொல்லு*
*நாமடா பதினோராம் நாளி லேதான்*
*நானுகின்ற நிம்பயெண்ணெய் ஆவின் நெய்யும்*
*தேமடா விளக்கெண்ணெய் மூன்று மொன்றாய்*
*சிறக்கவே காய்ச்சிநன்றாய் முழுகு வாயே* (286)

ஏழு நாள் பத்தியமிருந்து ஏழாம்நாள் தலை முழுகவும். ஒன்பதாம் நாளில் தலை முழுகும் போது மிளகும், பாலும் சேர்த்துக் காய்ச்சி முழுகச் செய்யலாம். பதினோராம் நாள் வேப்பெண்ணெய், பசுநெய், விளக்கெண்ணெய் இவற்றைச் சமமாகக் கலந்து தலை முழுகவும்.

*முழுகலாம் இளைத்தஉடல் வேர்க்கும் மைந்தா*
*மோசமடா வாதவுட லோர்க்குக் கேளு*
*முழுகலாம் விளக்கெண்ணெய் நீகதி ரண்டு*
*மோசமில்லை தீரும் வியாதி சொல்வேன்*
*அழுகிவரும் கிரந்திவகை யெல்லாந் தீரும்*
*அப்பனே யோனிப்புற்று லிங்கப் புற்று*

*கொழகொழெனச் சீழ்மொளுகி வீணாத் தண்டைக்*
*கொள்ளையிடும் நரம்புதின்னி கிரந்தி போமே.* **(287)**

இளைத்த உடல் வலுப்பெறும். இந்த உடலில் வியர்க்கும். வாத உடலோர் விளக்கெண்ணையில் முழுகலாம். இதனை நீ உணர்ந்து செயல்பட்டால் தீரும் வியாதிகள் சொல்வேன். அழுகும் நிலையிலுள்ள கிரந்திகள் யாவும் தீரும். யோனிப்புற்று, லிங்கப்புற்று, முதுகுத்தண்டைப் பாழாக்கும் நரம்புதின்னி நோயாம் கிரந்தியும் தீரும்.

*கிரந்திப்புண் மேகத்தில் எழுந்த புற்று*
*கேடுகெட்ட சொறிமுதலாய்க் கரப்பான் புண்ணும்*
*விரிந்துவரும் ஆறாத ரணங்க ளோடும்*
*வெண்குட்ட முதலான பதினெண் குட்டம்*
*இருந்தவிடந் தெரியாம லேகும் பாரு*
*என்மகனே வெடிச்சூலை மேகச் சூலை*
*பரந்துவிடுஞ் சூலையெல்லாம் பச்சை வாதம்*
*பறக்குமடா இளம்பிள்ளை வாதந் தானே* **(288)**

கிரந்திப்புண்கள், மேகத்தில் எழுந்த புரை, புற்றுகள், அனேகத் துன்பங்களைத் தருகின்ற சொறி முதலான கரப்பான் புண்கள், ஆறாமல் பரவிக் கொண்டே செல்கின்ற வெண் குட்டம் முதலான பதினெட்டு வகைக் குன்மங்கள் போன்றவை இருந்த இடம் தெரியாதபடிக்கு விரைவில் குணமாகும் என்பதாம். வெடிச் சூலை, மேகச்சூலை போன்ற சூலைகள், பச்சை வாதம், இளம்பிள்ளை வாதம் முதலான வாதங்கள் யாவும் நீங்கும்.

*தானென்ற வாத மெண்பதுவுந் தீரும்*

----- ----- -----

*நானென்ற வாய்வுவகை யெல்லாந் தீரும்*
*நாட்டிறேன் அனுபானம் நன்றாய்க் கேளு*
*கானென்ற யிஞ்சியரைப் பலமி டித்து*
*கணக்காகச் சாற்பிழிந்து சுரசம் பண்ணே* **(289)**

இவ்வகையிலான வாத நோய்கள் எண்பதும், வாயு வகைகள் யாவும் நீங்கும். இவற்றிற்கு அனுபானமாக இஞ்சி 18 கி எடுத்துத் தோல் போக்கி இடித்துச் சாறு பிழிந்து சுரசம் செய்து கொள்ளவும்.

*பண்ணியே முன்மெழுகில் குன்றி யாறு*
*பங்கிட்டுக் கொடுத்துவிடு பத்தியம் முன்போல்*
*எண்ணியே வியாதிபலன் கண்டொரு வேளை*
*இரண்டுநாள் மூன்று நாளும்*
*நண்ணியே பாசிப்பயிறு முளைக்கீரைத் தண்டு*
*நல்துவரை கத்திரியின் பிஞ்சு மாகும்*
*புண்ணியனே நெல்லவிக்கும் வாடை கோடை*
*புளிக்கிவடித் திடும்வாடை பொருந்தொண் ணாதே*
**(290)**

முன்னர் சொன்ன மெழுகில் 130 மி.கி அளவுள்ள குளிகைகள் ஆறினை எடுத்து வழங்கவும். பத்தியம் முன் சொன்னது போலவே தொடரவும். வியாதிகளுக்கேற்றவாறு மெழுகினை ஒரு வேளை மட்டும் இரண்டு, மூன்று நாட்களுக்குக் கொள்ளவும். அந்நாட்களில் பாசிப்பயிறு, முளைக்கீரைத்தண்டு, துவரம்பருப்பு, கத்திரிப்பிஞ்சு, நெல்லவிக்கும் வாடை, புளியிடிக்கும் மணம் இவை பொருந்தாது. எனவே நீக்க வேண்டும் என்பதாம்.

*பொருந்தாது நல்லெண்ணெய் வாடை யப்பா*
*பொன்போலே இருபதுநாள் போக ஆகும்*
*மருந்தாகும் இந்நூலை வெளி விடாதே*
*வலுவில்லா வாய்வுகளுக்குச் சீனிப் பாகில்*
*திருந்தவே விராகனெடை ரெண்டும் போட்டு*
*தெளிவான உதகம்ரெண்டு படிதான் வார்த்து*
*அருந்தவே யெட்டொன்றாய்க் காய்ச்சி வாங்கி*
*அதின்மெழுகு குன்றிமுன்போல் கரைத்துக் கொள்ளே*
**(291)**

இவர்களுக்கு நல்லெண்ணெய் வாடையும் பொருந்தாது. இவ்வாடை நீங்க இருபது நாட்களாகும். மருந்தாகப் பயன்படும் இந் நூலை அவசியமின்றி யாருக்கும் வெளியிட வேண்டாம். சீனிப்பாகில் 8 கி எடுத்து 2.6 லி தண்ணீர்விட்டு எட்டில் ஒன்றாய்க் காய்ச்சி இம்மெழுகை 130 மி.கி கரைத்துக் கொள்ளவும்.

*கொள்ளவே வாய்வெல்லாங் கெதிகெட் டோடும்*
*கூறாக வாய்சூலைக் கட்டித் தானால்*
*விள்ளவே ஆவின்வெண்ணெய் நெல்லிக் காய்க்கி*
*மேலாக ரெண்டுநாள் முழுங்கத் தீரும்*
*தள்ளவே யின்னமொன்று புழுங்க லென்ற*
*சாதமதில் அரைப்பதத்தில் வடித்தா வின்பால்*
*துள்ளவே கால்படிவிட் டனலில் காய்ச்சி*
*சுகமாகக் குடித்திடுவாய் சூலை போமே* **(292)**

இதனை உட்கொண்டு வர வாயுக்கள் நீங்கும். வாய்ச்சூலை உண்டானால் பசு வெண்ணெயை நெல்லிக்காயுடன் சேர்த்து இரண்டு நாட்கள் விழுங்கத் தீரும். புழுங்கலரிசியை அரைப் பதத்தில் வடித்து 325 மி.கி புழுங்கலரிசியை அரைப்பதத்தில் வடித்து பசும்பால் ஊற்றிக் கஞ்சியாகக் காய்ச்சிப் பருக சூலை நோய்கள் நீங்கும்.

*போகுமடா யின்னமொன்று சீனக் காரம்*
*புண்ணியனே ஒரு சுண்டைக் காய்நே ராக*
*பாகுடனே வாயிலிட்டு ஒதுக்கி ஊறி*
*வரும்புனலைக் குடிக்கவாய் சூலை போகும்*
*மோகமுட னிந்தமுறை ஒருவ ருக்கு*
*மொழியாதே முக்காலும் யெனலா ணைநீ*
*கனகமாரி பொழிந்தார் கேட்டாலும் கூட*
*நினைவுகெட்டு இந்நூலை கொடுத்தி டாதே* **(293)**

சீனக்காரத்தை ஒரு சுண்டைக் காயளவெடுத்துப் பாகு காய்ச்சி வாயிலிட்டு அடக்கிக் கொள்ளவும். அப்போது வரும் உமிழ் நீரைப் பருகி வரவும். அவ்வாறு பருகி வர வாய்ச் சூலை நீங்கும். இதனை எவர்க்கும் சொல்ல வேண்டாம். தங்கத்தைத் தந்தால் கூட இந்நூலை எவர்க்கும் கொடுக்க வேண்டாம்.

## மேக வகைகளுக்கு மருந்து

*எரித்திடும் ரெத்த மேக*
*மிசைந்தசீ மேகந் தண்டில்*
*மரித்திடும் மேகப் புண்ணாம்*
*வருத்திய கிரிச்சி பாளை*
*தரித்திடும் தூளி மேகம்*
*சலக்கட்டு மேகந் தாகம்*
*விரித்திடு மேகந் தீர*
*விளம்பக்கேள் மருந்து தானே* (294)

உடம்பை எரித்திடும் இரத்த மேகம், இசைந்த சீழ்மேகம், உடம்பை நோகச் செய்யும் மேகப் புண்கள், கிரீச்சரங்கள், தூளி மேகம், சலக்கட்டு மேகம், அதிதாகம், விரிமேகம் போன்றன நீங்குதற்குண்டான மருந்தை இனிச் சொல்வேன்.

*விளங்கிய பரங்கிப் பட்டை*
*மேவு கெந்தகஞ் சாதிக்காய்*
*களம்புரி கிராம்பு நாகம்*
*கத்திரி கற்பூரம் சாதிபத்திரி*
*அளம்ப சுவகெந்தி யமுக்கிரா*
*தளர்கொடு வேலி மாஞ்சி*
*இளம்பு சர்க்கரைநெய் வட்டி*
*இதமுடன் உட்கொள் வாயே.* (295)

பரங்கிப்பட்டை, கெந்தகம், சாதிக்காய், கிராம்பு, நாகப்பூ, கத்திரி, கற்பூரம், சாதிபத்திரி, அசுவகெந்தி எனும் அமுக்குரா, கொடிவேலி, சடாமாஞ்சில் இவற்றை இடித்து சர்க்கரை, நெய் இவற்றைக் கூட்டிக் கலந்து சாப்பிட்டு வரவும்.

## மிளகு லேகியம்

*அறிந்துகொள் மிளகு தன்னை*
*அதுநூறு பலந்தான் வாங்கி*
*செரிந்துகொள் தூணி நீரில்*
*சிக்கென்ன யெட்டொன் றாக்கி*
*பரிந்துகொள் கற்கண் டப்பா*
*பலமது பத்துப் போட்டு*
*முரிந்திடக் கிண்டிக் காய்ச்சி*
*பாகுபோல் வாங்கு முன்னே* **(296)**

மிளகு 3500 கி எடுத்து 20 லி தண்ணீர் விட்டு எட்டொன்றாகச் சுருக்கிக் காய்ச்சிக் கொள்ளவும். 3500 கி கற்கண்டைக் கிண்டி காய்ச்சிப் பாகுபதமாக வரும்போது பதமாக இறக்கிக் கொள்ளவும்.

*முன்னது அக்கிரா காரமஞ்*
*சீரக முதிரக் கிராம்பு*
*அன்னது ஏலம் கோஷ்ட*
*மதிகமா மதிர தொன்றான்*
*பன்னது வாய்வி ளங்கம்*
*பத்திரி நறுக்கு மூலம்*
*சொன்னது வகையொன் றுக்குப்*
*பலமது தூக்கி டாயே* **(297)**

அக்கிராகாரம், சீரகம், கிராம்பு, ஏலம், கோட்டம், அதிமதுரம்,

வாய்விளங்கம், பத்திரி, நறுக்குமூலம் இவை வகைக்கு 35 கி வீதம் நிறுத்தெடுத்து அவற்றை எல்லாம் சுத்தி செய்து கொள்ளவும்.

*தூக்கியே பொடித்துக் கொண்டு*
*பாகினில் தூவிக் கிண்டி*
*ஆக்கியே நெய்தான் நாழி*
*யதில்பாதி தேனு மாகும்*
*பாக்கிய மாக விட்டு*
*மெழுகது போலே வாங்கி*
*நோக்கியே வாங்கி வைத்து*
*நுணுக்கத்தைச் சொல்லக் கேளு* **(298)**

இவற்றைத் தூளாகப் பொடித்துக் கொண்டு முன்சொன்ன பாகில் தூவிக் கிண்டி, நெய் 1.3 லி, தேன் 650 மி.லி சேர்த்துப் பாகமாகக் கிண்டி மெழுகுபதம் வரும் போதிறக்கி வைத்து ஆற விடவும்.

*சொல்லக்கேள் தீரு நோய்தான்*
*சிலேற்பனந் தொண்ணூற் றாறும்*
*அல்லக்கேள் கபங்க ளெல்லா*
*மறுத்திடும் நீர்தோ ஷம்போம்*
*சொல்லக்கேள் விசங்கள் தீரும்*
*தீர்ப்புள்ள சுரங்கள் தீரும்*
*வல்லக்கேள் வாதம் தீரும்*
*வாய்வு வாங்குந் தானே* **(299)**

இதனை உட்கொள்வதால் சிலேட்டும நோய்கள் தொண்ணூற்றாறு, கபங்கள் எல்லாம் தீரும். நீர்த்தோஷங்கள், விஷ நோய்கள், சுரங்கள், வாதம், வாய்வு இவை நீங்கும்.

## வெள்ளுள்ளி லேகியம்

*பாருமுன் கடுகு சொன்னேன்*
*பகர்திரி பலையும் சொன்னேன்*
*ஆரும்வெள் ளுள்ளிப் போக்கு*
*அறையிறேன் காயத்தை*
*சீருடன் பலமும் நூறப்பா*
*சிலமது தூணி காய்ந்தால்*
*வாராது யெட்டொன் றாக்கி*
*வடித்திடு மருந்து கேளே* (300)

முன்னர் நான் கடுகு பற்றிச் சொன்னேன். திரிபலையும் சொன்னேன். வெள்ளுள்ளி பற்றி நான் இனிச் சொல்வேன். வெங்காயத்தை 3500 கி எடுத்து 20 லி தண்ணீர்விட்டு அதை எட்டிலொன்றாகச் சுருக்கிக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும்.

*மருந்தது காயம் சுக்கு*
*வால்மிளகு கடுகிந் துப்புந்*
*திருந்திய ஓம மேலம்*
*திப்பிலி மிளகு சீரகம்*
*தருந்திரி பலையும் வெப்பாலை*
*விடையமும் பலம தாகப்*
*பொருந்தும்வாய் விளங்கமுங் கூட்டிப்*
*பொடித்திடுஞ் சீனி போடே* (301)

பெருங்காயம், சுக்கு, வால்மிளகு, கடுகு, இந்துப்பு, ஓமம், ஏலம், திப்பிலி, மிளகு, சீரகம், திரிபலை, வெப்பாலை, விடையமெனும் அதிவிடையம் இவை வகைக்கு 35 கி வீதமெடுத்து வாய்விளங்கத்தையும் அதே அளவெடுத்துப் பொடித்துக் கொள்ளவும். சீனியைத் தேவையான அளவெடுத்துப் பொடித்துக் கொள்ளவும்.

*போட்டிடு நாள தானும்*
*புகழ்பெறப் பாகு செய்து*
*மாட்டிடு சூர ணத்தை*
*வார்த்திடும் பசுவின் நெய்யே*
*நாட்டிடு படிகா லாக*
*நவின்றதோர் மருந்தான் றாக*
*காட்டிடு மெழுகு போலே*
*கண்டிடுப் புன்னைக் காயே* **(302)**

பொடித்த சீனியைப் பாகு செய்து மேற்சொன்ன சூரணத்தைத் தூவி, 325 கி பசுவின் நெய்யும் சேர்த்து ஒன்றாகக் காய்ச்சி மெழுகுபதமாகும் போது இறக்கிக் கொண்டு புன்னைக் காயளவுள்ள உருண்டைகளாகப் பிடித்துக் கொள்ளவும்.

*காயது போலே தின்றால்*
*களறிடும் வியாதி கேளும்*
*நோயது வாய்வு வாத*
*நோயினில் பறந்து போகு*
*மாயிமே குன்ம மெட்டு*
*பகன்றிடு மென்ன சொல்வேன்*
*நீயிது கண்டு கொள்ளு*
*நிச்சயம் சொல்லு றோமே* **(303)**

வேளை ஒன்றிற்கு ஒரு உருண்டை வீதம் சாப்பிட்டு வந்தால் வாயு நோய்கள், வாதங்கள், எட்டு வகையான குன்மங்கள் ஆகிய நோய்கள் நீங்கிடும் என்பதாம்.

## கெந்தகத் தைலம்

*தயிலங்கேள் கெந்தகமும் உப்புமனோ சிலையுந்*
*தருவாகப் பலமொன்று பொடிக்கும் போது*

*அயிலமென்று நவச்சாரம் வீரம் தார*
*மப்பனே அரைக்கழஞ்சு கூடப் போட்டு*
*ஒயிலாக பலம்நாலு பசுவின் வெண்ணெ*
*யுத்தமனே கல்வத்தி லிட்டு ஆட்டி*
*தயிலமப்பா முன்போலே சுடர்த்தயிலம் வாங்கி*
*தருவான பீங்கானில் பதனம் பண்ணே* **(304)**

கெந்தக உப்பு, மனோசிலை இவை வகைக்கு 35 கி வீதமெடுத்துப் பொடித்துக் கொள்ளவும். அவற்றுடன் நவச்சாரம், வீரம், அரிதாரம் இவை வகைக்கு 2.5 கி சேர்க்கவும். 140 கி பசு வெண்ணெய் சேர்த்துக் கல்வத்திலிட்டு அரைத்தெடுத்து, முன் சொன்னது போல சுடர்த் தைலம் இறக்கிப் பீங்கானில் அடைத்துக் கொள்ளவும்.

*பண்ணியே பணவெடைதா னந்தி சந்தி*
*பத்துநாள் சர்க்கரையில் கொள்ளும் போது*
*உண்ணவே பத்தியமோ யில்லை கண்டாய்*
*உத்தமனே தீருகிற வியாதி கேளு*
*நண்ணவே குட்டம்சொறி விரணம் வெள்ளை*
*நலமான கருமேகம் வாதம் வாய்வு*
*திண்ணமே சயரோகம் குன்மவலி கூட*
*தீருமே யின்னமொரு சேதி கேளே* **(305)**

பதனம் பண்ணிய அந்தத் தைலத்தை வேளைக்கு 488 மி.கி வீதம் காலை, மாலை இரண்டு வேளை, பத்து நாட்கள் சர்க்கரை சேர்த்துச் சாப்பிட வேண்டும். இதற்குப் பத்தியம் ஏதுமில்லை. இதனால் குட்டம், சொறி, விரணம், வெள்ளைப்படுதல், கருமேகம், வாதம், வாயு, சயரோகம், குன்மவலி போன்ற பலநோய்கள் நீங்கும்.

## மூலத்துக்கு இளகம்

*தியங்காமல் மூலத்தின் சேதி கேளு*
*சிலமான கடுக்காய்தா னூறு வாங்கி*
*மயங்காமல் வெள்ளாட்டு நீரு விட்டு*
*மயமாக அவித்ததனை வாங்கிக் கொண்டு*
*தயங்காம லுலர்த்தியதை வறுத்துக் கொண்டு*
*சாகதமாய் மெழுகானால் விதையைத் தள்ளு*
*முயங்காமல் சிவதையதில் பலந்தா னொன்று*
*மூலமென்ற கொடுவேலி மூல மொன்று* **(306)**

மூலத்திற்கான மருந்தை இனிச் சொல்வேன். நூறு கடுக்காய் களைத் தேர்ந்தெடுத்து வெள்ளாட்டு மூத்திரம் விட்டு அவித்தெடுத்துக் கொள்ளவும். பின்னெடுத்து உலர்த்தி வறுத்துக் கொண்டு மீண்டும் காய்ச்சி மெழுகுபோலாகும் போது கடுக்காய் கொட்டையை நீக்கிக் கொள்ளவும். சிவதை 35 கி, கொடுவேலி 35 கி இவற்றைச் சேகரிக்கவும்.

*மூலமென்ற மஞ்சளொன்று சுக்க தொன்று*
*முனையான கடுகுரெண்டு திப்பிலிதா னொன்று*
*ஞாலமென்ற மிளகொன்று சேங்கொட்டை யொன்று*
*நலமாகக் காரெள்ளு பலந்தா னொன்று*
*சீலமுள்ள நிலவாகை பலந்தா னொன்று*
*சித்தியாமல் கருணையுடன் பிரண்டை நன்னாரி*
*கிழங்கொன்றாமே* **(307)**

மஞ்சள் 35 கி, சுக்கு 35 கி, கடுகு 70 கி, திப்பிலி, மிளகு, சேங்கொட்டை, காரெள்ளு, நிலவாகை, பிரண்டை, நன்னாரி இவ்விரண்டின் கிழங்கு வகைக்கு 35 கி சேகரித்துக் கொள்ளவும்.

*கிழங்கான வெந்தோன்றி கிழங்க தொன்று*
*தோலமுடன் புளிநடலை கிழங்க தொன்று*

*புதுமையுள்ள சாரணையின் கிழங்க தொன்று*
*வழங்குகின்ற பால்தனிலே சுத்தி செய்து*
*வாகாக யுலர்த்தியே யிடித்துத் தூளாய்*
*கலங்காமற் வடிகொண்டு வெள்ளாட்டின் பால்*
*காய்ந்த ரெண்டு படிதனிலே சூரணத்தைப் பாய்ச்சு*
*இளம்பதமாயப் பாகுசெய்து ஒருபலசர்க் கரையை*
*இயல்பாக தூத்திசெய்து கிண்டு கிண்டே.* **(308)**

வெந்தோன்றிக்கிழங்கு, புளிநடலைக்கிழங்கு, சாரணைக் கிழங்கு இவற்றையெல்லாம் பாலில் சுத்தி செய்து கொண்டு உலர்த்தி இடித்துத் தூளாக்கிக் கொண்டு வஸ்திரகாயம் செய்து கொள்ளவும். 2.6 லி வெள்ளாட்டுப் பாலை அடுப்பேற்றிக் காய்ச்சி அதில் இந்தச் சூரணத்தை போட்டுப் பாகு செய்து கலந்து 135 கி சீனி சேர்த்து தொடர்ந்து கிண்டிக் கொள்ளவும்.

*கிண்டியே வெள்ளாட்டின் நெய்படிதான் வாரு*
*கிருபையுள்ள தேனதிலே கால்படிதான் வாரு*
*சுண்டியே மெழுகதுபோல் பதமாம் நேரம்*
*சுருக்காக பீங்கானில் பதனம் பண்ணு*
*அண்டியே உள்மூலம் பிறமூலத் தோடு*
*ஆறுவகை மூலமெல்லாம் அகல வென்றால்*
*கொண்டுவிடுங் கழஞ்சிரெண்டு நாளொன் றுக்கு*
*கூறாக யிருநேரம் தின்றி டாயே* **(309)**

கிண்டி வரும்போதே வெள்ளாட்டின் நெய் 1.3 லி, தேன் 325 மி.லி இரண்டையும் சேர்த்து மெழுகு பதமாகும் வரை காய்ச்சி இறக்கிப் பீங்கானில் அடைத்துக் கொள்ளவும். இதனை உள் மூலம், புற மூலம் போன்ற ஆறுவகை மூலங்கள் தீர வேளைக்கு 10 கி வீதம் நாளொன்றிற்கு இரண்டு வேளை சாப்பிட்டு வரவும்.

*தின்றிடவே மூலமெல்லாம் தீரும் தீரும்*
*சிலமான சல மிரணந் தீரு*

*மகன்றிடவே மூலத்தின் தினவு புண்கள்*
*கனமான வாய்விரச்சல் கழிச்ச லோடு*
*கொன்றிடவே செரியாத கிராணி மூலம்*
*குருப்பிச்சுப் புறத்தில்நின்ற மூளைமூ லம்தான்*
*வின்றிடவே கிருமியென்ற தெல்லாம் வீழும்*
*விம்மிநின்ற மலமறுக்கும் விரணமுந் தீரும்* **(310)**

இவ்வாறு தொடர்ந்து உண்டு வருவதால் மூல நோய்கள் நீங்கும். அதனால் கழியும் நீர், தினவு, புண்கள், வாயு, இரைச்சல், கழிச்சல், செரியாமல் வயிற்றிற்குக் கேடு தரும் கிராணி மூலம், துருத்திக் கொண்டு புறத்தில் நிற்கும் மூல முளை, கிருமிகள் யாவும் நீங்கும். மலம் வெளிவரத் தடையாயிருக்கும் இரணங்களும் தீரும்.

## இலிங்கக் குழம்பு

*வாளமோடு யிந்துப்பு வகைக்கிரு கழஞ்சு*
*மகத்தான ஏரண்டச் சிறுமுத்துப் பருப்பு*
*வாளத்தினி ரெட்டி வெளங்காம லிங்க*
*வகையொன்றுக் கொவ்வொன்று கழஞ்ச தாக*
*வாளமுத லிதுவெல்லாஞ் சுத்தி செய்து*
*வன்மையுடன் கல்வத்தி லிட்டு ஆட்டு*
*வாளமுன் னிருசாமம் நன்றா யாட்டி*
*மகத்தான செந்தூரக் குழம்பாம் பாரே.* **(311)**

நேர்வாளம், இந்துப்பு இவை வகைக்கு 10 கி, சிற்றாமணக்கின் விதைப்பருப்பு 20 கி, லிங்க வகைகள் ஒவ்வொன்றிற்கும் 5 கி சேகரித்து நேர்வாளம் முதலான எல்லாவற்றையும் சுத்தி செய்து கல்வத்திலிட்டு ஆறு மணி நேரம் தொடர்ந்து ஆட்டி எடுக்க அச் செந்தூரம் குழம்பாகியிருக்கும் என்பதாம்.

*பாரப்பா யிக்குழம்பைச் சிமிளிலிட்டுக் கொண்டு*
*பாங்கான பேதிக்கு குன்றியெடை ரெட்டி*
*நேரப்பா யிஞ்சிதட்டிப் பிழிந்த நீரில்*
*நீயருந்தி யரைகடிகை மேல்வென்னீர் கொள்ளு*
*சீரப்பா யபானத்தின் மலக்கட்டு போகும்*
*சிறுபேதி யாகவேண்டால் மிளகுகிசா யமுமாம்*
*சேரப்பா பனைவெல்லந் தன்னிலையு மருந்து*
*சிறக்கவென் னீரறு மள்ளுக்குக் கொள்ளு* **(312)**

இந்தக் குழம்பைச் சிமிளிலிட்டு அடைத்துப் பக்குவப்படுத்திக் கொள்ளவும். பேதிக்கு இக்குழம்பில் 260 மி.கி வீதமெத்து இஞ்சிச் சாற்றில் பருகி வரவும். பின்னர் 12 நிமிடங்கள் கழித்து வெந்நீர் பருகவும். இதனால் வயிற்றில் தங்கிப்போன பழமலம் வெளியேறும். சிறுக பேதியாக வேண்டுமானால் மிளகுக் குடிநீருடன் பனைவெல்லம், வெந்நீரும் பருக வேண்டும்.

## வாய்வு புத்திரன் குளிகை

*சொல்லுகிறேன் பேதிக்கு வாய்வு புத்திரன்*
*சூதமொன்று லிங்கமொன்று கார மொன்று*
*வெல்லுகிறேன் இந்துப்பு கடுக்காய் ரோகணி*
*வெள்ளகாக்கன் வேரு விராகன் மூன்று*
*நல்லுகிறேன் வாளமென்ன விராக னெட்டு*
*நலமான பிரண்டைச்சாற்றில் அரைப்பாய் சாமம்*
*மல்லுகிறேன் கடலைபோல் உருட்டிக் கொண்டு*
*வாகான இஞ்சிசாற் தன்னில் மாட்டே* **(313)**

பேதிக்குக் கொடுக்கின்ற வாயு புத்திரன் மருந்தைச் சொல்கிறார். சூதம், லிங்கம், வெண்காரம், இந்துப்பு, கடுக்காய், கடுகுரோகணி, வெள்ளைக்காக்கணான் வேர் இவையாவும் வகைக்கு 12 கி வீதம் சேகரிக்கவும். சுத்தி செய்த நேர்வாளம் 32

கி எடுத்து மூன்று மணி நேரம் பிரண்டைச் சாற்றில் அரைத்தெடுக்கவும். இதனை கடலை அளவு உருண்டைகள் செய்து இஞ்சிச் சாற்றில் வழங்கலாம்.

*தன்னிலே ஒருஉருண்டை யீவீ ராகில்*
*சாதகமாய்ப் பேதியது தானே போகும்*
*வென்னீரி லிடலும் பேதி யாகும்*
*மிளகுநீர் யிட்டசனம் வேண்டியுண்ணு*
*உன்னியே வறுவாய்வு சுரநீர்க் கோர்வை*
*உதிரத்தில் பீனசமு மோடிப் போகும்.* (314)

ஒரு உருண்டை கொடுத்தால் பேதி தானே உண்டாகும். வெந்நீர் வழங்க பேதி அதிகமாகும். மிளகுநீர் குடித்துப் பிறகு உணவை உண்ணவும். வாயு, சுர நீர்க்கோவை நீங்கும். வயிற்றில் உண்டாகும் பீனச நோயும் நீங்கும் என்பதாம்.

## சுர ராமபாண உருண்டை

*நின்றுபோம் காதசுரம் மாறல்முத லெல்லாம்*
*நெடுநாளை விடாச்சுரமாம் வியாதிகளைப் போக்கி*
*வின்றுகாண் சுரராம பாண வுருண்டை*
*என்மகனே புலத்தியனே அப்பா கேளு*
*வென்றுதின சூதமோடு வெள்ளைப் பாசாண*
*மிவைரண்டும் விராகனிரண்டு சமனாய்ச் சேர்த்து*
*பொன்றுதலில் லாதபடி சுத்திகளுஞ் செய்து*
*போட்டடா கல்வத்தில் புரளவரைத் திடவே* (315)

மேலும் காதசுரம், மாறல் சுரம் முதலான சுரங்கள், விடாமல் தொடரும் நெடுநாள் பட்ட சுரங்கள் போன்ற பல சுரங்கள் நீங்க ராமபாண உருண்டை சொல்வேன் அறிந்துகொள்வாயாக. இரசம், வெள்ளைப் பாசாணம், இரண்டையும் வகைக்கு 8 கி வீதம் எடுத்து முறைப்படி சுத்தி செய்து கொள்ளவும்.

*அரைத்திடவே பாகலிலைச் சாறு கொண்டு*
*அந்திசந்தி யிருசாம மரைத்த பின்பு*
*திரைத்திடவே யிப்படியே தான மூன்று*
*தினமாட்டி சிறுபயிற்றின் பிரமாணங் குளிகைதனைத் திரட்டி*
*விரைத்திடவே நிழலுலத்தா யுலர்த்திப்பின் னப்பா*
*வீரடங்க பத்துநாள் தானியப்புடம் வைத்து*
*அரைத்திடவே சுரங்களுக்கு யிஞ்சிமுலைப் பாலில்*
*ஒருஉருண்டை அந்திசந்தி யூட்டுதின மூன்றே* **(316)**

இதனைக் கல்வத்திலிட்டுப் பாகலிலைச் சாறூற்றி மூன்று மணி நேரமும் மாலைப் பொழுதில் மூன்று மணி நேரமும் ஆக இவ்வாறு 3 நாட்கள் அரைத்துக் கொள்ளவும். சிறுபயிறு அளவான உருண்டைகள் உருட்டி நிழலிலிட்டு உலர்த்தித் தானியப்புடமாகப் பத்து நாட்கள் வைத்திருந்து, சுரங்களுக்கு இஞ்சிச்சாறு, தாய்ப்பால் இவற்றில் வழங்கலாம். தினம் இருவேளை மூன்று நாட்கள் வழங்கலாம்.

*மூன்றுநாள் மாறலுக்கு மூன்று தினம்*
*மூட்டுமுறை நாலாமாறலுக்கு நாலு தினமூட்டு*
*வென்றமற்ற பலசுரங்கள் கண்டு கண்டே*
*யூட்டுவேன் மகனே தினசு ரத்துக்*
*கொன்றே நாளூட்டு தொன்றாதே ------*
*பறந்தோடும் பத்தியஞ்சிற் றுப்புச்சுடு கஞ்சி*
*வென்னீரராந் தூதுவளங் காயம் -------*
*----- ------ ------* **(317)**

மாறல் சுரத்திற்கு மூன்று நாட்கள், நான்காம் முறை காய்ச்சலுக்கு நான்கு நாட்கள், தின சுரத்திற்கு ஒரு நாள், மற்றுள்ள பல வகையான சுரங்களுக்கு நோயின் தன்மை அறிந்து வழங்கலாம். பத்தியமாக உப்பு சிறிதளவு சேர்க்கலாம். சுடுகஞ்சி பருகலாம். வெந்நீர் அருந்தலாம். தூதுவளங்காய் சேர்க்கலாம்.

## சுரக்குளிகை

*மெய்யாக இன்னமொரு குளிகை கேளு*
*மென்மையில்லா சுரங்களது தீர்வ தற்குத்*
*துய்யமாக் கெவுரியொரு பலந்தான் தூக்கி*
*தூக்கியதில் முலைப்பாலிற் போடே*
*போடப்பா மூன்றுநா ளூறப் போடு*
*புனிதமுடன் தானெடுத்து ஒட்டி லிட்டு*
*நாடப்பா முலைப்பாலால் சுருக்கித் தாக்கு*
*நன்மையுட னாற்சாமம் நயந்து நீயும்*
*தேடப்பா கௌரியது சுத்தி யாகும்*
*திடமாகத் தாளகமோர் பலந்தான் வாங்கி*
*கூடப்பா சுண்ணாம்புக் குள்ளே வைத்து*
*குணமாகச் சுத்தசலந் தன்னை யூற்றே.* **(318)**

சுர நோய்கள் தீர்வதற்கான இன்னுமொரு குளிகையைச் சொல்கிறார். கௌரியை 35 கி எடுத்துத் தாய்ப்பாலிலிட்டு மூன்று நாட்கள் ஊறவிடவும். பின்னர் வெளியில் எடுத்து ஓட்டிலிட்டுத் தாய்ப்பாலால் பனிரெண்டு மணிநேரம் சுருக்குக் கொடுக்கவும். அப்போது கௌரி சுத்தியாகும். 35 கி தாளகத்தைச் சுண்ணாம்பிற்குள் வைத்து சுத்தமான தண்ணீரை ஊற்றவும்.

*ஊற்றியே நீரளவி னெடுத்து நீயும்*
*உத்தமனே யேழுவகை நீறா சுத்தி*
*தோற்றியே ரெண்டுமொன்றாய் கல்வத் திட்டுத்*
*துரிதமுடன் தானரைக்கும் போதி லேதான்*
*தேற்றியே முலைப்பாலால் நாலு சாமம்*
*திறமாகத் தானரைத்து உளுந்து போலே*
*பார்த்திபனே உருட்டியதை நிழலு லர்த்தி*
*பக்குவமா யுலர்த்தியதைப் பதனம் பண்ணே* **(319)**

தாளகத்தை வெளியில் எடுத்து மீண்டும் சுண்ணாம்பு நீரில் ஊறவிடவும். இவ்வாறு ஏழுமுறை சுத்தி செய்யவும். பின் இவ்விரண் டையும் ஒன்றாகச் சேர்த்துக் கல்வத்திலிட்டுத் தாய்ப்பாலில் பனிரெண்டு மணி நேரம் தொடர்ந்து அரைத்தெடுக்கவும். இதனை **65** மி.கி அளவுள்ள உருண்டைகளாக உருட்டி நிழலில் காய வைத்துப் பதனம் பண்ணவும்.

*பண்ணப்பா சுரம்வந் தோர்க்குத் தானும்*
*பாங்கான மாத்திரைதான் ஒன்று கேளு*
*உண்ணப்பா முலைப்பாலில் மூன்று நாளும்*
*உறுதியுட னிருவேளை உண்மை யாக*
*தண்ணப்பா தான்கொடுக்க மூன்று நாளும்*
*தயவான பித்தமெல்லாம் தானே கக்கும்*
*கண்ணப்பா பித்தமெல்லாம் கக்கும் போது*
*கனமான சுரங்களெல்லாம் காணா தென்னே.* **(320)**

வேளையொன்றிற்கு ஒரு மாத்திரை தாய்ப்பாலில் இழைத்துத் தினம் இரண்டு வேளை மூன்று நாட்கள் சாப்பிட வேண்டும். இவ்வாறு சாப்பிடுவதனால் உடலில் சேர்ந்த பித்தங்கள் வெளியேறும். பித்தம், வெளியேறி விட்டால் சுர நோயும் நீங்கிவிடும் என்பதாம்.

*காணாது நாலுநாள் வரைக்கும் மைந்தா*
*கருவாகப் புளிப்புகையும் தள்ளச் சொல்லு*
*தோணாது வரையுடன் கத்திரியின் பிஞ்சு*
*சுகமாகத் தான்கூட்டி உண்ணச் சொல்லு*
*ஆளான அரோசியங்கள் வந்தி டாது*
*அப்பனே பத்தியங்கள் தவறிட் டாலும்*
*வின்னான மிளகுதன்னைக் கசாயம் பண்ணி*
*வீரியமாய்த் தான்கொடுக்க மீளும் பாரே* **(321)**

இம்மருந்துண்ணும்போது தொடர்ந்து நான்கு நாட்கள் புளியும், புகையும் தள்ளிவிட வேண்டும். துவரம் பருப்பு, கத்திரிப்பிஞ்சு இவ்விரண்டும் சேர்த்துச் சாப்பிடலாம். இம்மருந்துண்பதால் அரோசிகம் நீங்கிப்போகும். பத்தியம் தவற விட்டால் மிளகுக் குடிநீர் குடித்து மீண்டும் பழைய நிலையைப் பெறலாம்.

*மீளுமே மிளகதுக்கு முறிவு மாச்சு*
*மிஞ்சாத வாதசுரம் விட்டுப் போச்சு*
*தாளுமே பித்தசுரமுங் குளிருங் கூடத்*
*தயவான அய்யசுரம் மாறல் கூட்டு*
*காளுமே கள்ளசுர மூன்றா மாறல்*
*குடிகெடுத்த காய்ச்சலுடன் குடிலம் தீரும்*
*நாளுமே சுரமுதலாய் தீரு மப்பா*
*நாடோறும் செய்திடவே நன்மை ஆகும்* **(322)**

மேலும் வாதசுரம், பித்த சுரம், சுரத்தால் உண்டாகும் குளிர், ஐய சுரம், மாறல் சுரம், மூன்றாம் மாறல் சுரம், மிகுந்த சிரமத்தை உண்டாக்கும் காய்ச்சல், குடிலமாயை எனப்படும் பிரம்மை போன்றனவும், வேறு பல சுரங்களும் நீங்கிடும் என்பதாம்.

## அரிதாரக் குளிகை

*அடவாகும் சீதசுர மனைத்தும் போக*
*அறையிறேன் அரிதாரக் குளிகை தன்னை*
*திடமாகு மரிதார மெடைதா னைந்து*
*சேரடா துருசிரண்டு சீலை தன்னில்*
*விடமாகுந் தோலாந் திரமாகக் கட்டி*
*விடுகலசந் தன்னில்சுண்ண கல்லுப் போடே* **(323)**

சீத சுரங்கள் அனைத்தும் நீங்குவதற்கான அரிதாரக் குளிகை ஒன்றைச் சொல்கிறார். அரிதாரம் ஐந்து பங்கு, துருசு இரண்டு

பங்கு, இதனைத் தோலாந்திரமாகக் கட்டி சுண்ணாம்பு கல்லுப்பு உள்ள பானையில் தொங்கவிடவும்.

*போடுநீ அமுரிவிட்டு நீற்றி யாற்றிப்*
*புகழ்மூன்று திரம்நீற்றிக் கழுவிக் காய்ந்தால்*
*தேடுநீ கல்சுண்ண மிடைதா னாலு*
*திறமான நாவியெடை ஒன்று போடு*
*நாட்டுநீ கற்றாழைச் சோற்றை யிட்டு*
*நாழிகைதான் மூன்றரைத்து உளுந்து போல*
*வாட்டுநீ உருட்டிநிழ லுலர்த்திக் கொண்டு*
*வட்டோடு தனிலிட்டு மேலு மூடே* **(324)**

இதில் அமுரியை விட்டு நீற்றிக் காயவைக்கவும். இவ்வாறு மூன்றுமுறை செய்யவும். கற்சுண்ணம் நான்கு பங்கு, நாவி ஒரு பங்கு சேர்த்துக் கல்வத்திலிட்டுக் கற்றாழைச்சோறு கொண்டு ஒன்றேகால் மணி நேரம் அரைத்து 65 மி.கி அளவுள்ள உருண்டைகள் உருட்டிக்கொள்ளவும். நிழலில் உலர்த்தி எடுத்துக் கொள்ளவும்.

*மேலோடு யிடுசீலை மண்ணுஞ் செய்து*
*மேலுலர்த்தி குக்குடமாய்ப் புடமிட் டாற்றி*
*சேலோடு கல்வத்தி லிட்டு நாவி*
*சேரப்பா விராகனெடை யிஞ்சிச் சாற்றில்*
*மாலோடு தானரைப்பாய் கடிகை ரெண்டு*
*மாப்பச்சை பயிற்றளவு உருண்டை செய்து*
*நாலோடு நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு*
*நலமான சீரகத்தை வறுத்தி டாயே* **(325)**

இந்த உருண்டைகளை ஓட்டிலிட்டு மேலோடு மூடி சீலை மண் செய்து பத்து வறட்டிகளையடுக்கிப் புடமிடவும். ஆறியபின் எடுத்து கல்வத்திலிட்டுச் சுத்திசெய்த நாவி 4 கி சேர்த்து இஞ்சிச்

சாற்றில் 48 நிமிடங்கள் அரைக்கவும். பின்னர் பச்சைப் பயிறளவு உருண்டைகள் செய்து நிழலிலுர்த்தி எடுத்துக் கொள்ளவும்.

*வறுத்துடனே பொடிபண்ணி குளிகை யாறு*
*வைத்துநீ தேன்விட்டு அரைத்துக் கொண்டு*
*திறத்துடனே மூன்றுநா ளாறு நேரம்*
*செலுத்தினால் சீதசுர மனைத்தும் போகு*
*மறுத்திடுமே விடாசுர மாற லெல்லாம்*
*மைந்தனே விசசுரமும் மாறு கண்டாய்*
*வெறுத்துடனே பத்தியந்தான் பசுவின் பாலும்*
*வென்னீருந் துவரையுட பருப்பு மாமே* **(326)**

சீரகத்தை வறுத்துப் பொடித்துக் கொள்ளவும். ஆறு குளிகைகளை எடுத்துத் தேன்விட்டு அரைத்துத் தினம் இரண்டு வேளை மூன்று நாள் உட்கொண்டு வர, சீத சுரம் அனைத்தும் நீங்கும். விடாச்சுரம், மாறல்சுரம், விஷசுரம் ஆகியவை நீங்கும். பசும்பாலும் வெந்நீர், துவரம்பருப்பு இவற்றைப் பத்தியமாகக் கொள்ள வேண்டும்.

*பருப்பாகும் வறுத்தஉப்பு சற்றே கூட்டு*
*பாங்கான அரைக்கீரை முருங்கைப் பிஞ்சும்*
*விருப்பாகும் பூண்டுள்ளி கடுகு மாக*
*நீரருட்டி பத்தியத்தை நிறுத்திப் போடு*
*திருப்பாகும் பத்தியந்தா னில்லா விட்டால்*
*தீராது சொல்லிவிட்டேன் திரந்தான் காணே* **(327)**

துவரம் பருப்பு, வறுத்த உப்பு, அரைக்கீரை, முருங்கைக் பிஞ்சு, பூண்டு, உள்ளி, கடுகு இவற்றைச் சேர்த்துக் கொண்டு பத்தியத்தை முறித்துவிடலாம். பத்தியம் கடுமையாகப் பயன் கொள்ளவில்லையானால் மருந்தின் பலனைப் பெற முடியாது.

## அரிதார வெள்ளை மாத்திரை

*அருளவே சகலசுர மனைத்தும் போகவென்றா*
*லரிதார வெள்ளை மாத்திரைதான் னெம்பார்*
*வெருளவே அரிதாரம் விராகன் ஐந்து*
*மேலான துருசு ஒன்று நாவி ஒன்று*
*பிறளவே கற்சுண்ணம் விராகனெடை நாலு*
*பேரான கற்றாழைச் சாற்றி லாட்டி*
*மருள்துவரை யளவுண்டை செய்து*
*மைந்தனே நிழலுலர்த்தி வகையைக் கேளே* (328)

அனைத்து வகையான சுரங்கள் நீங்குவதற்கான அரிதார வெள்ளை மாத்திரை வருமாறு. அரிதாரம் 20 கி, துருசு 4 கி, நாவி 4 கி, கற்சுண்ணம் 16 கி இவற்றைச் சுத்தி செய்து கற்றாழைச் சாற்றிலாட்டி துவரை அளவாக உருண்டைகள் செய்து நிழலில் உலர்த்தி எடுத்துக் கொள்ளவும்.

*வகைகேளு ஓட்டிலிட்டு ஓடு மூடி*
*மனஞ்செய்து காடையென்ற புடத்தில் போடு*
*துகைகேளு வூறவிட் டெடுத்துக் கொண்டு*
*சுகமாகச் சீரகம் விராகனெடை மூன்று*
*பகைகேளு வறுத்துநீ பொடிதான் செய்து*
*பாய்ச்சுவா யதிலாறு குளிகை தன்னை*
*முகமாறாத் தேனைவிட்டு மைபோ லாட்டி*
*மூன்றுநாள் அந்திசந்தி யீந்தி டாயே* (329)

குளிகைகளை ஓட்டிலிட்டு ஒடு மூடி சீலைமண் செய்து மூன்று வறட்டியை அடுக்கிப் புடமிடவும். ஆறவிட்டு எடுத்துப் பார்த்து 12 கி சீரகத்தை வறுத்துப் பொடித்துச் சேர்க்கவும். 6 குளிகைகளை இத்துடன் சேர்த்து தேன்விட்டு மைபோலாட்டி மூன்று நாட்கள் காலை, மாலை வழங்கவும்.

*ஈந்திடவே வாதபித்தத் தாலே வந்த*
*இடங்கெட்ட மாறலென்ற சுரமெல் லாம்போம்*
*மாந்திடவே வந்தசுரம் மெல்லாந் தீரும்*
*மாறலுக்கு நாசிகா பரணம் கேளே* **(330)**

இதனை சொன்ன முறைப்படி சாப்பிட்டு வந்தால் வாத பித்தத்தில் வந்த, துன்பம் மிகுதியும் தருகின்ற, மாறல் சுரம் போன்ற எல்லாவகைச் சுரங்களும் தீரும். இனி நான் மாறல் சுரத்திற்கு நாசிகா பரணம் சொல்வேன்.

## குடோரித் தயிலம்

*ஆமப்பா சன்னியென்ற பதிமூன் றுக்கும்*
*அறையிறேன் குடோரியென்ற தயிலம் கேளு*
*வேமப்பா கௌரிவெள்ளை வீரம் பூரம்*
*விபரமுடன் சத்திரசம் துருசு தாரம்*
*நாமப்பா நவிலக்கேள் நாவி தாரம்*
*நண்டான மனோசிலையும் பூர மொக்க*
*வாமப்பா லிங்கமுடன் தீமுறுகல் தானும்*
*வரிசையாய் வகைக்கிவகை சமனாய்த் தூக்கி* **(331)**

பதின்மூன்று வகை சன்னிகளையும் நீக்குகின்ற குடோரித் தைலத்தை இனிச் சொல்வேன். கௌரிப் பாடாணம், வெள்ளைப் பாடாணம், இரசகற்பூரம், கெந்தகம், இரசம், வீரம், துருசு, நாவி, அரிதாரம், மனோசிலை இவற்றைச் சம அளவாக எடுத்துக் கொண்டு, லிங்கம், தீ முறுகல் பாஷாணம் இவ்விரண்டையும் சம அளவாக எடுத்துக் கொள்ளவும்.

*தூக்கியே பழச்சாற்றால் காடி தன்னால்*
*சுகமாக அரைக்கும்போ தொன்று கேளு*
*தேக்கியே பூநாகம் முசுறு முட்டை*
*சிறுக்காதே பலமரைதான் போட் டரைத்து*

*வாக்கியே நார்பட்டிச் சீலை தன்னில்*
*வாகாகச் சுருட்டியே காய வைத்து*
*போக்கியே வேப்பெண்ணெய் இலுப்பெண்ணெய் தானும்*
*புகழாக புங்கெண்ணெய் புகலக் கேளே* **(332)**

இவற்றை எலுமிச்சம் பழச்சாற்றாலும், காடியாலும் தனித் தனியே அரைத்தெடுத்துக் கொள்ளவும். பூநாகம், முசுறு முட்டை இவை வகைக்கு 18 கி வீதம் நிறுத்தெடுத்து அவற்றுடன் சேர்த்த ரைக்கவும். நல்ல கடினமான துணியில் மருந்தைத் தடவி சுருட்டிக் காய வைத்து, திரிபோலாக்கிக் கொள்ளவும். வேப்பெண்ணெய், இலுப்பெண்ணெய், புங்கெண்ணெய் இவற்றையும் சேர்க்கலாம்.

*கேளப்பா நல்லெண்ணெய் விளக்கெண்ணெய் தானுங்*
*கெடியாக அஞ்செண்ணெய் வாங்கிக் கொண்டு*
*வாளப்பா வகைக்கிவகை படிகால் வீதம்*
*வாங்கியே ஒன்றாகக் கலந்து கொண்டு*
*தேளப்பா சிலாகையால் குறடு தானும்*
*திறமாக பிடித்துமே எண்ணெய் வார்த்து*
*மாளப்பா கரண்டியெண்ணெய் வார்த்துக் கொண்டு*
*வாகாக தீக்கொளுத்தி யெண்ணெய் வாரே.* **(333)**

வகைக்கு 325 கி வீதம் நல்லெண்ணெய், விளக்கெண்ணெய் முதலான ஐந்தெண்ணெய்களையும் நிறுத்தெடுத்துக் கொண்டு ஒன்றாகக் கலந்து சிலாகையில் குறடு பிடித்து ஒரு கரண்டி எண்ணெய் வார்த்துத் திரிகொளுத்தி தீயை எரியவிடவும்.

*வார்க்கவே சுடர்விழுகு மறுவில் வாங்கு*
*வாகாக யெண்ணெய்கொஞ்சம் விட்டு வாநீ*
*சேர்க்கவே சுடரெல்லாம் வாங்கிக் கொண்டு*
*சிறுசிறுக யெரித்து வைத்துக் கொண்டு*

*ஆர்க்கவே இசிவுமுதல் சன்னிக் கெல்லாம்*
*அப்பனே காசெடைதான் கொடுநீ மைந்தா*
*பார்க்கவே புளிகசப்பு விட்டு வாநீ*
*பறக்குமடா சன்னிபதி மூன்று பாரே* (334)

சுடர் சுடராக விழும் எண்ணெயினைச் சேகரித்து, சிறுகச் சிறுகத் தீயெரித்து இவ்வாறே எண்ணெய் இறக்கிக் கொள்ளவும். இசிவு முதல் சன்னி ஈறாக உள்ள நோய்களுக்கு வேளைக்கு 488 மி.கி வீதம் வழங்க அவை தீரும். புளி, கசப்பு நீக்கி இம்மருந்தை உட்கொண்டு வந்தால் பதின்மூன்று வகை சன்னி நோய்களும் நீங்கும் என்பதாம்.

*பாரப்பா சரக்கெல்லாம் சுத்தி செய்தால்*
*பண்பான வியாதியெல்லாம் பறந்து போகும்*
*சேரப்பா குடோரியென்ற தயிலத்தின் கூறு*
*திறமாகச் சொல்லிவிட்டேன் வியாதிக் கெல்லா*
*மாரப்பா யிசிவெல்லாம் பறந்தே ஓடும்*
*மகத்தான தயிலமிதை யாரு சொல்வார்*
*வேரப்பா யித்தயிலம் வயித்தி யோர்க்கு*
*விள்ளாதே முறைதானை வெளியாய்த் தானே* (335)

மருந்திற்குப் பயன்படும் சரக்குகளை எல்லாம் முறையாகச் சுத்தி செய்த பின் பயன்படுத்தினால் வியாதிகள் எல்லாம் பறந்து போகும். குடோரித் தைலத்தை உங்களுக்குச் சொல்லி விட்டேன். இதனை முறைப்படி பயன்படுத்தி வந்தால் இசிவு நோய்கள் யாவும் நீங்கும். இப்படிச் சிறப்பான தைலத்தை யாரும் சொல்ல மாட்டார்கள். நான் சொன்னேன். இத்தைலத்தை வயித்தியர் யார்க்கும் சொல்லிவிட வேண்டாம்.

*ஆச்சப்பா உடலிலுள்ள மந்த வாய்வு*
*ஆகாத குன்மமெட்டும் மேகச் சூலை*

*மூச்சப்பா உள்மூலம் புறமூ லம்தான்*
*உயர்ந்துவரும் நோய்முன்னூற் றிருபத் தஞ்சும்*
*போச்சப்பா யிப்படியே அசனம் கொண்டால்*
*போர்க்கம்பு போலிருக்கும் தாது விருத்தி*
*பேச்சப்பா லேகியத்தின் விபர மெல்லாம்*
*பெருமையுடன் சொல்லுகிறேன் வகையைக் கேளே*
**(336)**

உடலில் உண்டாகின்ற மந்த வாயு, எட்டுவகைக் குன்மங்கள், மேக சூலை, உள்மூலம், புறமூலம் போன்ற **325** வகை நோய்களும் இதனை முறைப்படி பயன்படுத்திட நீங்கிவிடும். அடுத்ததாகத் தாது விருத்தியை உண்டு பண்ணுகிற இளகத்தின் வகையை இனிச் சொல்வேன்.

## தாது விருத்திக்கு லேகியம்

*கேளப்பா சாதிக்காய் பலந்தா னொன்று*
*கெடியான யேலமது பலந்தா னொன்று*
*வாளப்பா வால்மிளகு பலந்தா னொன்று*
*வகையான லவங்கப் பூவு பலந்தா னொன்று*
*நீளப்பா கோஷ்டமது பலந்தான் ரெண்டு*
*நலமான அதிமதுரம் பலந்தா னஞ்சே* **(337)**

சாதிக்காய் **35** கி, ஏலம் **35** கி, வால்மிளகு **35** கி, இலவங்கப் பூ **35** கி, கோட்டம் **70** கி, அதிமதுரம் **175** கி இவற்றை அளவுடன் நிறுத்துக் கொண்டு முறைப்படி சுத்திசெய்து ஒன்றாகச் சேர்த்துக் கொள்ளவும்.

*அஞ்சாதே அக்கிராகாரம் பலந்தா னொன்று*
*அடவான பரங்கியின்வேர் பலந்தான் பத்து*
*துஞ்சாதே குங்குமப்பூ அரைக்கால் போடு*
*சுகமான கோரோசனை பலந்தான் காலே*

*மஞ்சாகும் பசுவின்நெய் யுலையாய் வைத்து*
*வகையோடே மெழுகதுபோல் தூவிக் கிண்டே* **(338)**

மேற்சொன்னவற்றுடன் அக்கிராகாரம் **35** கி, பரங்கிப் பட்டைவேர் **350** கி, குங்குமப்பூ **4** கி, கோரோசனை **9** கி எடுக்கவும். பசு நெய்யை அடுப்பேற்றிக் காய்ச்சி வரும்போது மேற்சொன்ன பொருட்களை எல்லாம் பொடித்துத் தூவி மெழுகு பதமாகும் வரை கிண்டி இறக்கிக் கொள்ளவும்.

*கிண்டயிலே பழச்சாற்றில் சர்க்கரையே போட்டு*
*கிருபையுடன் கலக்கியதை வார்த்து வார்த்து*
*பண்டாறு பதமாக யிளகொட் டாமல்*
*பதமேல் கலசத்தி லிட்டுக் கொண்டு*
*வண்டாறும் பூங்குழலாள் மாது பூசை*
*வகையோடே செய்தபின்பு உண்டு வாநீ*
*தாண்டாறு தாய்பதத்தை மறந்தா யானால்*
*தவறிவிடும் வித்தையெல்லாஞ் சாத்து றேனே* **(339)**

இவ்வாறாகக் கிண்டி வரும்போது எலுமிச்சம் பழச்சாறும் சர்க்கரையும் சேர்த்துக் கலக்கி இளகிய பதத்தில் இறக்கி ஆறிய பின்னெடுத்துக் கலசத்தில் அடைத்துக் கொள்ளவும். சக்தி தாயைப் பூசை செய்து பின் மற்றவற்றைத் தொடரலாம். தாய் பதத்தைப் போற்றத் தவறினால் நமக்கு எதுவும் நிறைவு பெறாது என்பதாம்.

## விந்தாதி லேகியம்

*தேறவே விந்தாதி லேகியம்கேள் திரிகடுகு*
*சாதிக்காய் பத்திரி கிராம்பு யேலம்*
*ஆறவே வல்லாரைஅபின் அமிர்தசர்க் கரையும்*
*ஆவின்கோ ரோசனையும் வகைக்கழஞ்சு யாறு*
*மூறவே ஆனந்த மூலிபொடி பத்து*
*முருங்கையும் பூனைக்காலி அரசா லத்தி*

*பார்விதை வகைக்கழஞ்சி சர்க்கரையும் பாதி*
*பசுவின்நெய்தேன் பாகுமுன்போ லேகியந்தான் செய்யே*
**(340)**

திரிகடுகு, சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, ஏலம், வல்லாரை, அபின், அமிர்தசர்க்கரை, பசுவின் கோரோசனை இவை வகைக்கு **30** கி வீதமெடுத்து இவற்றுடன் **50** கி ஆனந்த மூலியைப் பொடித்துச் சேர்க்கவும். முருங்கை, பூனைக்காலி, அரசு, ஆல், அத்தி இவை வகைக்கு **5** கி வீதமெடுத்து, மொத்த சரக்குகளில் பாதி சர்க்கரை சேர்த்து பசுவின் நெய், தேன் இவை கலந்து முன்போல் இளகம் செய்யவும்.

*செய்துமே ரவிதனிலே நவநாள் வைத்து*
*சிறுகஉட லறிந்து கழஞ்சியரை கொள்ள*
*பய்துகமே வாதபித்த சிலேற்பனத்தின் வாய்வு*
*பதிந்தோடும் பிரமேகம் ரெத்தம் தீரும்*
*தய்துமே மண்டலங்கொள் தாது புஷ்ட்டி யதிகந்*
*தற்கால சாந்தியிலும் வீரியங்க ளதிகங்*
*கய்துமே பாலுஞ் சோறுண்டு சேர்ந்தால்*
*கதிப்பாகித் தாதுபுஷ்டி யதிகந் தானே* **(341)**

செய்து முடித்துவிட்ட இந்த இளகத்தை ஒன்பது நாட்கள் வெயிலில் வைத்து நோயினன் உடலின் தன்மை, மென்மை அறிந்து வேளைக்கு **2.5** கி வீதம் காலை, மாலை, தொடர்ந்து நாற்பது நாட்கள் உட்கொண்டு வர, வாதம், பித்தம், சிலேற்பன வாயு, பிரமேகம், இரத்தம் வீழ்ச்சி நீங்கும். தாது புஷ்டி அதிகமாகும். வீரியங்கள் அதிகமுண்டென்பதால் பாலுஞ்சோறும் உண்ணலாம்.

*தானென்ற ராசவயித் தியந்தா னாகும்*
*தாக்கான பத்தியங்க ளில்லை பாரு*
*கானென்ற சய்யோகத் தசதி யில்லைக்*
*காந்தலுஷ்ணம் பித்தங்கள் கொதிப்பு மில்லை*

*வேனென்ற தாதுபுஷ்டி யில்லா தார்க்கு*
*விந்தாதி லேகியத்தில் விந்து ஊறும்*
*தேனென்ற பித்தம்போம் காந்தல் தீரும்*
*தேகத்தில் கரப்பன்நீர்த் தடிப்பு போமே* **(342)**

இது இராஜவைத்தியமாகும். இதற்குப் பத்தியங்கள் யாதுமில்லை. உடல் வெப்பம், பித்தக் கொதிப்பு இவை நீங்கும். தாது புஷ்டியாகும். இந்த இளகம் சாப்பிட்டு வந்தால் விந்து ஊறும். பித்தம் போகும். காந்தல் தீரும். கரப்பான், நீர்த்தடிப்பு இவை நீங்கும்.

## மருந்தீட்டிற்கு மருந்து

*மாதர் மயங்கி மருந்தீட்டால்*
*வந்தே யிருமல் பிலனாகும்*
*சேத மிகுந்து பயித்தியமும்*
*செரியாமல் தெரித்து ஏப்பமிடும்*
*பேத பசிக்க ஒட்டாது*
*பொருந்தும் தாது வர்த்தினையாம்*
*நீதிபயம் வருசோகங் கொண்டுமிக*
*நீண்டே பசக்கிக் கொண்டிடுமே.* **(343)**

மருந்தீட்டினால் மாதர் மயங்கி சிரமப்பட்டால் அதற்கு மருந்து இதுவாம். இருமல் அதிகமாகும். பித்தம் மிகும். செரியாதிருந்து ஏப்பம் மேலிடும். சரியாகப் பசியெடுக்காது. தாது வறட்சி உண்டாகும். பயம், சோகம் ஏற்படும். இந்த மருந்தீட்டால் மிகுந்த சிரமங்கள் உண்டாகும் என்பதாம்.

### இதற்குச் சோதனை மருந்து

*கண்டங் கத்திரி கரந்தை*
*பொன்னா வரை சுண்டக்காயின்*
*விண்டை முழுங்கிட வன்ட*
*காணுகுழல் வஞ்சியல் வஞ்சினை*

*உண்டை காடனே மயங்குமே*

——— ——— ——— (344)

இதற்குச் சோதனை மருந்தாக இம்மருந்தை முயற்சி செய்து பார்க்கலாம். கண்டங்கத்திரி, கரந்தை, பொன்னாவரை, சுண்டைக்காய் இவற்றையெல்லாம் அரைத்து உருண்டையாகச் செய்து முறைப்படி சாப்பிடலாம். இதனால் மருந்தீடு நீங்கும் என்பதாம்.

## பேதி மாத்திரை

*சுக்குடன் கழஞ்சி அஞ்சி*
*சொன்னநேர் வாளம் ஆறு*
*மிக்க கெந்தகம் மூன்று*
*மிளகுமே மூன்ற தாகும்*
*தக்கவெண் காரம் நாலு*
*தானமா மதிர மூன்று*
*சிக்கண்ண யிலையின் கள்ளி*
*சாற்றினில் அரைத்துச் சேரே* (345)

சுக்கு 25 கி, நேர்வாளம் 30 கி, கெந்தகம் 15 கி, மிளகு 15 கி, வெண்காரம் 20 கி, அதிமதுரம் 15 கி இவற்றை இலைக்கள்ளிச் சாற்றால் நேக அரைத்துச் சேர்த்துக் கொள்ளவும்.

*அரைத்தோர் மருந்துக் கெல்லாம்*
*அளவது குன்றி போல*
*பெரித்திடு லாகா தென்று*
*பேசிய முனிவர் சொன்னார்*
*கரைத்திடு பொன்னீர் தன்னில்*
*காய்ச்சலும் குளிரும் போமே* (346)

அரைத்த இந்த மருந்தினை 130 மி.கி அளவுள்ள சிறு

உருண்டைகளாக உருட்டிக் கொண்டு பத்திரப்படுத்திக் கொள்ளலாம். முன்னோராம் முனிவர்கள் சொன்னபடி இதனை வெந்நீரில் கரைத்துப் பருகி வந்தால் சுரமும், சுரத்தால் உண்டாகும் குளிரும் நீங்கிவிடும் என்பதாம்.

## கண்ணிற்கு மாத்திரை

*இந்திரன் குதிரை வாலும்*
*இரைக்கடல் தன்னில் வேரும்*
*முந்தாநாள் அடித்த காற்றும்*
*முழுநரி வேருக் கொம்பும்*
*அந்தமாய் சேர்த்து ஆயிளை*
*தன்பாலி லரைத்திட*
*மந்தமாய் யிருந்த கண்ணும்*
*மாசற தீருங் கண்டாய்* **(347)**

இதில் மருந்துகள் மறைபொருளில் கூறப்பட்டுள்ளதால் பாடல் மட்டும் தரப்பட்டுள்ளது.

## நாடி பார்க்கும் முறை

*சித்திரை வைகா சிக்கும்*
*செழுங்கதிர் உதையந் தன்னில்*
*அத்தமா ஆனி ஆடி*
*ஐப்பசி கார்த்தி கைக்கும்*
*மத்தி யானத்தில் பார்க்க*
*மார்கழி தையும் மாசி*
*வித்தகன் கதிரோன் மேற்கே*
*விளைகின்ற நேரம் பாரே* **(348)**

சித்திரை, வைகாசி மாதங்களில் சூரியோதயத்திற்கு முன்னாலும், ஆனி, ஆடி மாதங்களில், ஐப்பசி, கார்த்திகை

மாதங்களில் மதிய நேரத்திலும், மார்கழி, தை, மாசி மாதங்களில் சூரியன் மறையும் மாலை வேளையும் நாடி பார்த்து அறிய பொருத்தமானதாகும்.

*தானது பங்கு னிக்கும்*
*தனதுநல் ஆவ ணிக்கும்*
*வானமாம் புரட்டா சிக்கும்*
*மத்தராத் திரிக்குப் பார்க்க*
*தேனெனும் மூன்று நாடி*
*தெளியவே காணு மென்று*
*காணவே முனிவன் சொன்னான்*
*கண்டநீ யறிந்து கொள்ளே* **(349)**

பங்குனி மாதத்திற்கும், ஆவணி, புரட்டாசி மாதங்களுக்கும் இரவு நேரத்தில் நாடி பார்க்க உகந்ததாம். இவ்வாறு இந்தக் கணக்கீடு களைச் சரியாக மேற்கொண்டால் வாத, பித்த, சிலேட்டுமம் ஆகிய மூன்று நாடிகளும் தெளிவாகத் தெரியும் என்பது முன்னோர் சொன்ன மொழி.

## கரப்பான் புண்ணிற்குத் தைலம்

*கேளென்று கரப்பன்வகை சிரங்கு புண்கள்தீர*
*கெந்திலிங்கம் துருசுரச கற்பூரம் தாரம்*
*காளென்ற வகைக்கி அஞ்சு கழஞ்சி*
*கருஞ்சீரகம் கஸ்தூரிமஞ்சள் சாயவேர் வேம்பாடம் பட்டை*
*வாளென்ற புழுக்கொல்லி மூலி வேரும்*
*வகைக்காறு கழஞ்சியெள் ளெண்ணெய் நாழி*
*நாளென்ற ஆடுதின்னாப் பாளை தனிசாற்*
*நாளிட்டு மருந்தையெல்லா மரைத்துப் போடே* **(350)**

கரப்பான் வகை, சிரங்கு, புண்கள் தீர்வதற்கு கெந்தி, லிங்கம்,

துருசு, இரசகற்பூரம், அரிதாரம் இவை வகைக்கு **25** கி, கருஞ் சீரகம், கஸ்தூரி மஞ்சள், சாயவேர், வேம்பாடம்பட்டை, புழுக்கொல்லி, மூலிவேர் இவை வகைக்கு **30** கி, நல்லெண்ணெய் **1.3** லி இவற்றை ஆடுதின்னாப் பாளை சாறுவிட்டு அரைத்துக் கொள்ளவும்.

*போடவே கோரோசனை கழஞ்சி ரெண்டு*
*புகலாக ரவிதனிலே மூன்றுநாள் வைத்து*
*மாளவே ஒருவிறகால் தயிலம் காய்ச்சி*
*பத்தரளிப் பூபோட்டு முறுகாமல் வடித்து*
*ஆடவே மூன்றுநாள் தயிலம் பூசி*
*அரப்பிட்டு முன்போலே முழுகச் சொல்லு*
*மாடவே சிரங்குபுண்கள் தினவு மண்டைப்*
*புண்சூலை விசநீர்ப்புண் குட்டப்புண் போமே* **(351)**

கோராசினை **10** கி, எடுத்து வெயிலில் மூன்று நாட்கள் காயவிட்டு முன்னவற்றுடன் சேர்த்து அடுப்பேற்றி ஒரு விறகால் தைலம் காய்ச்சி அதில் அரளிப்பூ போட்டு முறுகிவிடாமல் வடித்துக் கொள்ளவும். இந்தத் தைலத்தைப் பூசி மூன்று நாட்கள் கழித்து அரப்புத் தேய்த்து முழுகி வந்தால் சிரங்கு புண்கள், தினவு, மண்டைப்புண், சூலை, விஷநீர், புண்கள், குட்டப்புண்கள் இவை நீங்கும் என்றவாறு.

◆◆◆◆◆

# பாடற் முதற்குறிப்பு


| | | |
|---|---|---|
| அகலுமே | – | 210 |
| அஞ்சாகு | – | 259 |
| அஞ்சாதே | – | 403 |
| அஞ்சாமல் | – | 144 |
| அடவாகும் | – | 388 |
| அப்பியே | – | 244 |
| அருளவே | – | 393 |
| அருளான | – | 344 |
| அரைக்கவு | – | 130 |
| அரைத்திடவே | – | 381 |
| அரைத்துநீ | – | 204 |
| அரைத்ததோர் | – | 411 |
| அறிந்து கொள் | – | 58,361 |
| அறிவாலறிய | – | 119 |
| அறையக்கேள் | – | 219 |
| ஆக்கிய | – | 106 |
| ஆகாது | – | 217 |
| ஆச்சப்பா | – | 183,401 |
| ஆட்டிநீ | – | 205 |
| ஆட்டியதோர் | – | 36 |
| ஆதியாம் | – | 337, 438 |
| ஆமடா | – | 187, 351 |
| ஆமப்பா | – | 42, 123, 151, 266, 277, 396 |
| ஆமே | – | 120 |
| ஆறவிட்டு | – | 161 |
| ஆற வைத்து | – | 348 |
| ஆறாக | – | 27 |
| இடிக்கயிலே | – | 188 |
| இடுமே | – | 127 |
| இதங்கேள் | – | 88 |
| இந்தவளி | – | 147 |
| இந்திரன் | – | 412 |
| இயம்பிடவே | – | 335 |
| இரண்டான | – | 339 |
| இருக்குமந்த | – | 221 |
| இருந்திட்ட | – | 168 |
| இலிங்கமொடு | – | 85 |
| ஈந்திடவே | – | 395 |
| ஈளையோடு | – | 254 |
| உடைத்தெடுத்த | – | 7 |
| உண்டிடவே | – | 305 |
| உண்டுவரில் | – | 223 |
| உண்ணியே | – | 62 |
| உண்ணுவது | – | 86 |
| உப்பான | – | 312, |
| உருட்டியே | – | 245 |
| உலர்த்திய பின் | – | 2 |
| உள்மூலம் | – | 253 |
| ஊட்டடா | – | 122 |
| ஊட்டியே | – | 160, 289, 313 |
| ஊற்றியே | – | 384 |
| எட்டாஞ் | – | 124 |
| எடுத்ததனை | – | 182 |
| எடுத்துமே | – | 309 |
| எண்ணவே | – | 317 |
| எரித்து அனல் | – | 228 |
| எரித்திடும் | – | 359 |

எரித்துலிங்கங் – 155
ஏத்தி நன்றாய் – 5
ஏகுமே – 189
ஒருபடியாங் – 150
ஒவ்வாத – 35
ஒன்றாக – 213, 303
ஒன்றான – 59,154, 263, 279, 346

கண்டங் – 409
கண்டா – 105
கண்டிட்டா – 215
கண்டிடா – 322
கருதியே – 209
கழஞ்சி – 132
கழஞ்சுடனே – 3
கழஞ்சொம்பான் – 197
காடிபடி – 184
காணப்பா – 9, 158
காணாத – 226
காணாது – 296, 386
காந்த – 107
காய்ச்சியே – 63
காய்ந்த பின்பு – 251
காயது – 368
காயான – 192
காயோடு – 292, 298
கிண்டடாநீ – 347
கிண்டயிலே – 404
கிண்டிய – 115
கிண்டியே – 374
கிரந்திப்புண் – 353
கிராணிபோம் – 165
கிழங்கான – 373
கிளறயிலே – 257
கிளிபோலக் – 19
குழம்பென்ன – 137
கூட்டிடுவாய் – 247
கூட்டியே – 25, 275, 350

கூட்டு – 103
கூட்டுவது – 139
கூட்டுவாய் – 235, 237, 284

கூட்டவே – 230
கூத்தாடும் – 159
கூறினேன் – 196
கேளடா – 274, 324
கேளப்பா – 28, 186, 199, 232, 248, 268, 272, 278, 285, 297, 308, 315, 330, 398, 402

கேளீர் – 102
கேளென்ற – 334
கேளென்று – 419
கொட்டிநன்றா – 152
கொட்டியே – 318
கொடுத்திடவே – 198, 202
கொண்டிடவே – 306
கொள்ளடா – 214

| | | | |
|---|---|---|---|
| கொள்ளவே | – 270, 276, 286, 357 | செய்யவே | – 295 |
| கொள்ளுமடா | – 156 | சேர்த்த | – 101 |
| சமனாகச் | – 323 | சேர்த்துமே | – 262 |
| சயகாசஞ் | – 207 | சேர | – 126 |
| சயமான | – 242 | சேரடா | – 41, 349 |
| சன்னியோடு | – 211 | சேரப்பா | – 220 |
| சாத்திவிட | – 157 | சேராத | – 84 |
| சாதியென்ற | – 175 | சொல்லக்கேள் | – 118, 364 |
| சாந்தமா | – 256 | சொல்லுகிறேன் | – 378 |
| சாமமது | – 193 | சொன்னதொரு | – 222 |
| சாற்றினா | – 241 | தடித்திடத்தில் | – 141 |
| சாற்றுவோ | – 148 | தயவாக | – 261 |
| சாரவே | – 208 | தயிலங்கேள் | – 369 |
| சாறான | – 45, 302 | தன்னிலே | – 379 |
| சாறுவிட்டு | – 60 | தாந்தானே | – 233 |
| சாறென்ற | – 143 | தானது | – 414 |
| சித்திரை | – 413, 416 | தானென்ற | – 142, 149 243, 343, 354, 407 |
| சீர்பெறுகு | – 415 | | |
| சீனியிட்டு | – 89 | திடமான | – 167 |
| சுக்குடன் | – 410 | தியங்காமல் | – 371 |
| சுத்திசெய்து | – 177 | திறமான | – 133 |
| சுரம்போகு | – 29 | தின்றிடவே | – 375 |
| சூரணமாச் | – 121 | தீர்ந்துபோம் | – 61 |
| சூரணமாஞ் | – 117 | துடங்குவாய் | – 21 |
| சூலைபோம் | – 162 | தூக்கியே | – 363, 397 |
| சூலையோடு | – 319 | தூவிக் | – 104 |
| செப்பவே | – 301 | தூளாக | – 145 |
| செய்தபின்பு | – 6 | தெளிவான | – 174 |
| செய்துமே | – 201, 340, 406 | தேங்கியே | – 212 |
| | | தேற்றாவிரை | – 100 |
| செய்யப்பா | – 281, 287 | தேறவே | – 405 |

நொந்தித்த – 116
நலமான – 234
நாகமுடன் – 135
நாட்டியே – 291
நாடியே – 190
நாலாக – 271
நாலுபலங் – 185
நின்றுபோம் – 380
நீங்குமே – 173
நீந்துவது – 176
நேரான – 179
நோய்தீர – 316
பகரக்கேள் – 87
பண்ணப்பா – 385
பண்ணவே – 310
பண்ணியே – 355, 370
பத்தாக – 280
பத்தான – 338
பத்திரியும் – 109
பத்திரியோ – 114
பருப்பாகும் – 392
பலத்தாலே – 216
பலம்பத்து – 336
பலமொன்று – 164
பறந்திடு – 111
பாகமா – 265
பாதியிட்டு – 255
பாரப்பா – 18, 39, 40, 108, 181, 240, 224, 246, 250, 377, 400
பாருமுன் – 365
பாரே நீ – 307, 311 320
பிசறி நன்றாய் – 331
பிளைத்துப்போம் – 153
புகலரிய – 218
புளிகூட்டு – 249
புனிதமென்ற – 208
பூசிடுவாய் – 134
பூசைசெய்து – 178
பூட்டடா – 22
பொருந்தாது – 356
பொரி – 125
போக்குமே – 194
போகின்ற – 90
போகுமடா – 358
போகுமே – 8, 146
போட்டிடு – 367
போட்டுமே – 227
போடப்பா – 200
போடவே – 420
போடு நீ – 389
போகுமது – 206
போமடா – 44, 293
போமப்பா – 23, 26, 43, 163, 166, 238, 273, 290, 294
போமென்ற – 37, 180 203, 304
போய்விடுமே – 24

மகிமைக்கு – 112
மணியெடுத்து – 342
மந்தமுடன் – 258
மந்தமோடு – 282
மருந்தது – 366
மறையாத – 99
மாட்டுவாய் – 113
மாதர் – 408
மாவுமொரு – 138
மிஞ்சாமல் – 172
மீளுமே – 387
முத்தான – 1
முருங்கைப்பூ – 236
முழுகலாம் – 352
முன்னது – 362
மூட்டுவாய் – 136
மூடப்பா – 20
மூடுகின்ற – 131
மூலமென்ற – 372
மூன்றுநாள் – 382
மெய்யாக – 383
மேலோடு – 390
லிங்கத்தி – 195
வகைகேளு – 394
வடித்ததனை – 299
வழித்த – 225
வறுத்துடனே – 391
வள்ளமருந்துக்கு – 140
வாங்கி வைத்து – 128
வாங்கிடவே – 314
வாங்கி நீ – 10
வாங்கியதோர் – 38
வாங்கியே – 264
வாய்வென்ன – 110
வாய்வோடு – 261
வார்க்கவே – 399
வார்த்துமே – 341
வாளமோடு – 376
வித்தான – 169
விந்தைதிகழ் – 4
விரவியே – 267
விராகனெடை – 231
விளங்கிய – 360
விளம்புநெல்லி – 345
வெண்மையென்ற – 252
வெந்தயமும் – 170
வெல்லமென்றால் – 171
வெள்ளையென்ற – 129
வேரான – 191
வைத்தொரு – 229
வைத்தாக்கால் – 239

